A

MANUAL

OF THE

ENGLISH LAW OF EVIDENCE,

APPLICABLE TO INDIA.

IN TAMIL

BY

POODOOCOTAH SAMIAH,

VAKEEL IN THE DISTRICT MOONSIFF'S COURT OF SHEALY

ZILLAH—NEGAPATAM.

"A knowglede of the Laws is of the highest importance;
Ignorance of Law is no excuse for crime."

MADRAS:

PRINTED AT THE SCOTTISH PRESS,

GRAVES AND CO.

1862.

[Copy right and right of translation reserved.]

உ.

இண்டியாவுக்கு

உபயோகமாகும்படியான

இங்கிலீஷ் லா-அப்-இவிடன்ச்யெனகிற

ருசு சாஸ்திரத்தின்

சங்க்ஷேபபுஸ்தகம்.

இஃது

நாகபட்டணம்ஜில்லா சீர்காழிதாலூக்கா முன்சீப்கோர்ட்டு வக்கீலாகிய

புதுக்கோட்டை சாமி ஐய்யரால் யெழுதப்பட்டது.

"லாவின் ஞானம் இக்காலேயில் அநிவாரியமானது. லா-தெரியாதென்கிற நிமித்தத்திற்காக க்ஷமைகிடைக்காது."

1862ஞு மார்ச்சுமாதத்தில் சென்னபட்டணம் இஸ்காடிஷ்

அச்சுகூடத்தில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இந்த புத்தகத்திற்கு இனி காப்பிபோடுகிற பாத்தியத்தையும் தர்ஜமாசெய்கிறபாத்தியத்தையும் நான் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

PREFACE.

It having appeared to me that none of the existing standard English Law Books, applicable to India, has been published in any of her vernacular languages for the use of the Native Pleaders and Judicial officers, who are not acquainted with the English language, I have humbly attempted, notwithstanding my limited attainments, to compile a Manual in Tamil, chiefly on the Law of Evidence. How far this attempt to supply the deficiency has been successful, the Public must determine. Throughout this work, the authorities, upon which the compilation has been based, are quoted for reference, wherever such citations were necessary. Should it receive sufficient encouragement, I propose to translate the same into the other vernacular languages of India.

I have to acknowledge the great obligations, I am under to T. Rungasawmy, Pillay Principal Sudder Ameen of Salem, for his kindness in having revised this work, and given me advice upon some important matters in connection with its compilation.

முகவுரை.

இண்டியாவுக்கு உபயோகமான இங்கிலிஷ் லா-புஸ்தகங்களில் எதையும், இங்கிலிஷில் பரிசயமில்லாத நேட்டிவ் வக்கீல்களுக்கும், ஜுடிசியால் ஆபீசர்களுக்கும் உபயோகமாகும்படி இத்தேசத்தின் எந்தப் பாஷையிலும் பிரசித்தஞ்செய்யப்பட வில்லையென்று எனக்குத் தெரிய வந்தபடியால், என்னுடைய படிப்பு மிகவும் சுவல்பமாகவிருந்தாலும் முக்கியமாய் ருசுசாஸ்திரத்தைக்குறித்துத் தமிழ்ப்பாஷையில் இந்த ஸங்க்ஷேப புஸ்தகத்தைச் சேர்த்தெழுத வணக்கமாய் எத்னித்தேன். என்னுடைய பிரயாசையானது எத்தனைதூரம் உபயோகப்பட்டதென்பதை உலகத்தார் தீர்மானிக்கவேண்டும். இந்தப்புத்தகத்திற்கு ஆதாரமாகவிருக்கின்ற பிரபலமான இங்கிலிஷ் லா-புஸ்தகங்களை இது முழுதிலும்அவசரமாகவிருக்கின்ற இடங்களில்குறித்திருக்கிறேன். நான்இதை எழுதிப் பிரசித்தஞ் செய்ததைப்பற்றி உலகத்தார் தயவுடன் என்னை தைரியப்படுத்துகிறபக்ஷத்தில் இப்புஸ்தகத்தை இத்தேசத்தின் மற்றப் பாஷைகளிலும் தர்ச்சுமா செய்கிறேன். சேலம் ஜில்லா பிரன்சிபில் சதறமீனாகிய இரங்கசாமிபிள்ளையவர்கள் என்பேரில் பிரிதிவைத்து இந்தபுஸ்தகத்தை திருத்தியதும் தவிர இதைச் சேர்த்தெழுதியதைக் குறித்து முக்கியமான சில அம்சங்களில் எனக்கு ஆலோசனையும் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நான் மிகவும் கிருதஞ்ஞனாகவிருக்கிறேன்.

TABLE OF CONTENTS.

அதிகார அட்டவணை.

	Page. பக்கம்.
Introduction. சிறப்புப்பாயிரம்....	1
PART. I. பார்ட் அல்லது பகுதி க.	11
Fundamental Principles. முக்கிய சூத்திரங்கள், ...	,,
CHAPTER I. அத்தியாயம் க.	,,
General view. போது, ...	,,
CHAPTER II. அத்தியாயம் உ.	27
Secondary Evidence, மத்தியம நருசு, ...	,,
CHAPTER III. அத்தியாயம் ந.	30
Hearsay Evidence. கேழ்விநுசு,...	,,
CHAPTER IV. அத்தியாயும் ச.	34
Admissions against Interest in Civil matters. சிவில் வழக்குகளில் தன் லாபத்திற்கு விரோதமாய் ஒருவன் ஒப்புக்கோள்ளுதல், ...	,,
CHAPTER V. அத்தியாயம் ரு.	36
Confessions. கிரிமினல் வழக்குகளில் ஒப்புதல்கள், ...	,,
CHAPTER VI. அத்தியாயம் சு.	48
Estopples. முன்னுக்கு விரோதமாய்ப் பின்சொல்லும் வாயை மூடுகிற தடை அல்லது இஷ்டாபல், ...	,,
CHAPTER VII. அத்தியாயம் எ.	60
Matters Judicially decided. ஜூடிசியால் அதிகாரிகளால் தீர்ந்துபோன சங்கதிகள், ...	,,
PART II. பார்ட்டு உ.	65
Instruments of Evidence. நருசுவின் ஆயுதங்கள், ...	,,

CHAPTER I. அத்தியாயம் க. 66

Witnesses. சாக்ஷிகள், ... ,,

SECTION I. பிரிவு க. ,,

Who are competent. சாக்ஷிசொல்லத்தகுந்தவர்கள் யார்,... ,,

SECTION II. பிரிவு உ. 69

Who are compellable to give Evidence and who are not. சாக்ஷிசொல்லக்கட்டாயப்படுத்தப்படவேண்டியவர்கள் யார், செய்யப்படக்கூடாதவர்கள் யார்,... ... ,,

SECTION III. பிரிவு ௩. 72

Securities of truth. நிஜத்திக்கிருக்கின்ற பெந்தோபஸ்துகள், ,,

SECTION IV. பிரிவு ச. 75

Mode of weighing human Testimoney. மனிதர்களுடைய வாக்குமூலத்தை மதிக்கின்றவிதம், ... ,,

SECTION V. பிரிவு ரு. 78

The testimoney of single witness. யேககக்ஷியின் ருசு, ... ,,

SECTION VI. பிரிவு சு. 82

Examination of Witnesses. சாக்ஷிவிசாரணை, ... ,,

SECTION VII. பிரிவு எ. 91

Opinion Evidence. அபிப்பிறயசாக்ஷி, ... ,,

CHAPTER II. அத்தியாம் உ. 94

Documents. ஆதாரவுகள், ... ,,

SECTION I. பிரிவு க. 95

Division of Documents. ஆதாரவுகளின் பிரிவினை, ... ,,

SECTION II. பிரிவு உ. 97

What writings are to be actually proved. எந்தஆதாரவுகளை வாஸ்தவத்தில் ருசுப்படுத்தவேண்டும், ... ,,

SECTION III. பிரிவு ௩. 98

Legal and illegal writings. நியாஸ்தலங்களிற்செல்லும்படியான கிரமமான ஆதரவுகள் யாவை அக்கிரமமானதுகள் யாவை, ... ,,

SECTION IV. பிரிவு ச. 104

Peculiar mode of proving writings. ஆதாவுகளை நசுப்படுத்துகிறவிதம், ... ,,

SECTION V. பிரிவு ரு. 106

Interpretation of deeds and instruments, including ambiguity. "அம்பிகுட்டி" யென்கிற சந்தேகம் அல்லது துவந்து வார்தபேதங்கள் உள்பட லிகிதமூலமான ஆதறவுகளுக்கு வியாக்கியானம்செய்தல், ... ,,

SECTION VI. பிரிவு சு. 111

Proof of hand writing. கையெழுத்தடயாள நசு, ... ,,

CHAPTER III. அத்தியாயம் ௩. 113

Real Evidence. ஸ்தாவர நசு, ... ,,

SECTION I. பிரிவு க. ,,

Definition and division of Real Evidence. ஸ்தாவர நசுவின் இலக்கணமும் பிரிவினையும், ... ,,

SECTION II. பிரிவு உ. 115

Utility and abuse of real Evidence. ஸ்தாவர நசுவின் உபயோகமும் கெடுதியும்,. ..., ... ,,

PART III. பார்ட்டு ௩. 117

Presumptions. ஊகங்கள், ... ,,

CHAPTER I. அத்தியாயம் க. ,,

Definition and division of Presumptions. ஊகங்களுடைய இலக்கணமும் பிரிவினையும்,... ... ... ,,

CHAPTER II. அத்தியாயம் உ. 121

Irrebuttable Presumptions of Law. எதிர்க்கக்கூடாத லாவினுடைய ஊகங்கள், ... ,,

CHAPTER III. அத்தியாயம் ௩. 124

Rebuttable Presumptions of Law and Fact. லாவிலிருந்தும் சங்கதிகளிலிருந்தும் உண்டாக்கும் எதிர்க்கக்கூடிய ஊகங்கள், ... ,,

PART IV. பார்ட்டு ச. ,,

Onus Propandi, or Burden of Proof. நசு பேரு ... 136

ABBREVIATION.—சுருக்கம்.

(B-320)............... பெஷ்ட்துரையவர்களுடைய, இரண்டாவது ப்திப்பு ருசுசாஸ்திர புத்தகத்தின் 320 வது பிரிவுயென்றும்,

(N-25)................ நார்ட்டன்துரையவர்களுடைய இரண்டாவது பதிப்பு ருசுசாஸ்திர புத்தகத்தின் 25 வது பிரிவு யென்றும்,

(Stark-71)............ ஸ்டார்கிதுரையவர்களுடைய நான்காவது பதிப்பு ருசு சாஸ்திர புத்தகத்தின் 71 வது பக்கமென்றும்,

(S-M-H-L-177)...... ஸ்திரஞ்சு துரையவர்களுடைய ஸங்க்ஷேப இந்து சாஸ்திர புத்தகத்தின் 177 வது பிரிவு யென்றும்,

(S-L-C-8)............. ஸ்மித்துரையவர்களுடைய. "லா-ஆப்கந்திராக்ட்" யென்கிற வியாபாரசாஸ்திர புத்தகத்தின் 8 வது பக்கமென்றும்,

(B-L-M-615)......... "புரும்"துரையவர்களுடைய மூன்றுவதுபதிப்பு "லீகல்" "மாக்ஸிம்" யென்கிற சாஸ்திரபுத்தகத்தின் 615 வது பக்கமென்றும்,

Br. V-D-5)............ பிரான்சன்துரையவர்களுடைய "வக்கில்ஸ்டைஜஸ்ட்டு" என்கிற புத்தகத்தின் 5 வது பக்கமென்றும்,

(இதின் 41)............ இந்த புஸ்தகத்தின் 41 வது பிரகாணமென்றும்,

(1853-ஞூ-43-நெ.).. சதர்கோர்ட்டு 1853-ஞூ விசேஷ அப்பில் 43 நெம்பர் தீர்ப்பு யென்றும் அரியவேண்டியது.

INTRODUCTION.

Evidence what.

§ 1. ருசுவென்பது, ஒருகாரியம் நடந்ததுண்டென்றுமில்லையென்றும் விவாதப்படுகிறபொழுது, அந்த சங்கதி நடந்துதென்கிற அல்லது நடக்கவில்லையென்கிற ஞானத்தையொருவனுக்குக் கொடுப்பதாம். மேலும் எதான்து பிரத்தியக்ஷமாக, தெளிவாக, அல்லது பிரசித்தமாக விருக்கின்றதோ அதை ருசுவெனலாம். எந்த சங்கதியின் பிரயோஜனம், சார்வு அல்லது உத்தேசமானது மற்றொரு சங்கதி இருக்குதென்கிற அல்லது இல்லையென்கிற ஞானத்தையொருவன் மனதில் உண்டாக்குமோ அது ருசுவென்று நினைக்க வேண்டியது. (B-11.) உ-ம்.

Definition of.

A யை B கொன்றானா இல்லையாவென்கிற விவாதத்தில் கொன்றானென்று நம்பக்கூடிய இரண்டு சாட்சிகளுடைய வாய்மொழிவந்தால் அது ருசுவெனப்படும். அப்படியே B கையினால் மனப்பூர்வமாயெழுதப்பட்ட ஒரு காகிதத்தில் அவன் A யை கொன்றதாகவெழுதப்பட்டிருந்தால் அதுவும் A யை B கொலைசெய்துக்கொண்டிருக்கையிலேயே பார்த்தால் அதுவும் ருசுவெனப்படும்.

Division of.

Distinction between natural and artificial evidence.

§ 2. ருசுவானது சுவபாவருசுவென்றும் சூடிசியால் அல்லது கிரித்திரிம ருசுவென்றும் பிரிக்கப்படும். லாவின் சகாயமன்றியில்தானே ஒருவன் தன் புத்தியைக்கொண்டுஞ் செல்வாக்கைக்கொண்டும் தன்னிஷ்டர்களிடத்திலிருந்து பெறும் ருசு சுவபாவ ருசுவாம். உ-ம் என்னுபயோகத்துக்கென்று என்வேலைக்காரன் ஒருகடைக்காரனிடத்தில் சில சரக்குவாங்கினதாயும் அதின்கிரயம் வரவேணுமென்றும் அந்தக் கடைக்காரன் என்னைக்கேட்டால் அவன் சொல்லுகிறபடி நடந்ததுண்டாவென்று என்வேலைக்காரனையுடனே கேழ்பேன் இதுசுவபாவம். இதுவிஷயத்தில் அந்தவேலைக்காரனுடைய ருசு சுவபாவ ருசுவெனப்படும். அப்படியே என் குமாரரிருவரில் பெரியவன் சிறியவனையடித்ததாகப் புகாரு

வந்தால் அப்பொழுதுகூட யாரிருந்தார்களென்று கேழ்பேன். வேலைக்காரர்களும் பெந்துக்களுங்கூட இருந்ததாகச் சொல்லுவார்கள். அவர்களையுடனே அழைத்துக்கேழ்பேன். இச்சமயத்தில் அவர்களுடைய வாக்குமூலம் சுவபாவ ருசுவாம். சூடிசியால் அல்லது கிரித்திரிம ருசுவானது கட்டாயமாய் சுவபாவ ருசுவைவிட வேறையேயல்லா. ஆகிலுமொவ்வொரு வழக்கிலும் ஜனங்களுக்குச் சிலவுதொந்தரவு தாமதம் பட்சபாதம் இதுகள் நேரிடாமலிருக்கும்பொருட்டு ஏற்பட்டிருக்கும் நூல்களுக்குட்பட்டுப் பெருகிற ருசுவுக்கு சூடிசியால் ருசுவென்றுசொல்லலாம். இதுவிஷயத்தில் பெஷ்டு துரையவர்கள் சொல்லுகிறதாவது, "கிரித்திரிம ருசுவைப்பத்தி இருக்கிற நூல்கள் எல்லாம் சாதாரணமான விவேகத்தையுடைய ஒருமனிதன் 'சகஜவியாபாறங்களில் நிஜந்தெரிந்துகொள்ளச்செய்வதுபோலவேயே இருக்கின்றது. சந்தேகமுள்ளதும் விவாதமுள்ளதுமான சங்கதிகளை மனிதர்கள் எவ்விதமாய் விசாரித்து நிஜந்தெரிந்துகொள்வார்களோ அப்படியே கோர்ட்டில்வருகிற வியாச்சிய சங்கதிகளையும் விசாரிக்கலாகும். ஆனல் கோர்ட்டுத்தீர்ப்பு நிஷ்பக்ஷபாதமாயுந் தெளிவாயுமிருக்கும்பொருட்டு வேண்டிய நூல்களைக் கிரித்திரிம ருசுசாஸ்திரத்தில் சேர்த்திருக்கின்றது."

இதைப்பத்தியே நார்ட்டன்துரையவர்கள் சொல்லுகிறதாவது, "ஒரு விவேகியாயிருக்கிற தகப்பனைவன் அவனுடைய கிரக கிருத்தியத்தைச்சேர்ந்த சண்டைகளைத் தீர்ப்பதற்காக என்னவிதிகளையேற்படுத்துவானே அதுகளாகவே ருசுசாஸ்திர விதிகளுமிருக்கின்றது. ஆனல் சிலவு தொந்தரவு தாமதம் இதுகளைவிலக்கும்பொருட்டு வேண்டிய நூல்களை யேற்படுத்துகிறதுமட்டும் லாவின்காரியமாகவிருக்கின்றது." (B-2-N-25.)

Definition of the Law of Evidence.

§ 3. சூடிசியால்ருசு பலானதென்று மேலேசொல்லியாகிவிட்டுது. ருசுவாகவேண்டியசங்கதி பலானதென்பதையும், அதைருசுப்படுத்துகிற விதத்தையும், ருசுவினங்கிகாரத்தையும்மதித்தலையுங் குறித்துச்சொல்லப்படுகிறவிதிகளுக்கு ருசுவின் சாஸ்திரமென்றுபேர். இந்த ருசுசாஸ்திரமேற்படாவிட்டால் ஒவ்வொரு வழக்கிலும் ஒவ்வொரு கட்சிக்கார

னும் சொல்லுகிற சங்கதி அல்லது கட்சி ருசுவாச்சுதென்றுவது இல்லையென்றுவது எல்லா ஜட்ஜிகளும் கவுன்சல்களும் ஒருமைப்பாடாய் அபிப்பிருயப்படும்படிக்கு இராது. அடியில்வருகிற ரூல்களை யேற்படுத்தி அதினால் பலான சங்கதி பலானவிதமா யிருந்தால் ருசுவாச்சுதென்றும் வேறேவிதமாயிருந்தால் ருசுவாகவில்லையென்றும் எல்லாரும் ஒரோவாக்காய்ச் சொல்லும்படி செய்யாவிட்டால், பலஜட்ஜிகளும் கவுன்சல்களும் கட்சிக்காரர்களும் தங்கள்மனசுக்கு வந்தபடி சங்கதிகள் ருசுவாச்சுதென்றுமில்லையென்றும் வீண்வாதங்களைச்செய்துகொண்டு முடிவில்லாத விதமாய் தர்க்கித்துக்கொண்டிருப்பார்கள். ஆனதால்ருசுசாஸ்திரமொன்று அவசரமாச்சுது. மேற்கண்டபடி ருசுசாஸ்திரத்தின் நாலுகாரியங்களில் எந்தச்சங்கதியை ருசுப்படுத்தவேணுமென்பது. 1. எவ்விதமாய் ருசுப்படுத்தவேணுமென்பது. 2. இதுகளை இதினடியிலுடனே எழுதுகிறேன். ருசுவின் அங்கிகாரமும் மதித்தலும் இந்தச்சாஸ்திரத்துக்கு முக்கியமான காரணங்களானபடியால் அதுகளை இந்தப்புஸ்தகம் முழுதிலுந் தடிக்கலப்பாகவே யெழுதவேணும். அப்படியே எழுதப்பட்டுமிருக்குது. ஆகிலும் அதின்முதலாவது பார்ட்டு (Part I.) லேயும் இரண்டாவதுபார்ட்டு சாட்சிப் பிரகரணத்திலும் விசேஷமாய் எழுதியிருக்குது.

Necessity for a law of Evidence.

§ 4. மேலுமுபயகட்சிக்காரர்களும் நிஜஞ்சொல்லிப்போட்டால் ருசுசாஸ்திரப் படிப்பில்லாமலே ஜட்ஜிகள் தீர்மானிக்கலாம். லா-பயிண்டுகள் என்னவென்பதுமட்டும் மீந்திருக்கும். லா-வானது ஜட்ஜிகளுக்கே தெரிந்ததானதால் கோர்ட்டில்வருகிற வழக்குகள் மெத்தவுஞ்சுலுபமாய்த் தீர்ந்துபோகும். அப்படிக்கில்லாமல் மனிதர்கள் காமக்குரோதாதிகளின் அதிகாரத்துக்குட்பட்டுப்போய் அதினால் பொய்சொல்லும்படி மனமுள்ளவர்களாகிறபடியால் நிஜந்தெரிந்துகொள்ளும்பொருட்டு மகாபுத்திமான்களால் ருசுசாஸ்திரமொன்று ஏற்பாடாகும்படி நேரிட்டுது. இந்த தத்துவத்தை யுலகம்முழுதிலும் ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். ஆனால் இங்கிலிஷ்தேசத்தில் மனிதர்களுடைய ருசுவை நிறுக்க நிதானமான திருசாக அல்லது பொய்யைக்கண்டுபிடிக்க

Natural springs in human mind producing a necessity for the artificial rules of evidence.

மகாசக்தியுள்ள ஆயுதமாக லா-ஆப்-இவிடன்சு என்கிற ருசு சாஸ்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (B-79.)

To suspect human testimony is not repugnant to the policy of the presumption in favor of right &c.

§ 5. மனிதர்களுக்கு நிஜஞ்சொல்லுங்குணஞ் சுவபாவத்திலிருக்குதென்று இதற்கடியில் (Securities of truth) என்கிற பிரகரணத்திலும் மனிதர்கள் நாணையமாகவே நடக்கிறார்களென்று (Presumptions) என்கிற பிரகரணத்திலுஞ் சொல்லலாகும். இந்த அர்த்தத்துக்கு இந்தப்பிரிவும் இதற்குமுந்திய பிரிவும் விரோதம்போல் பார்வையில் தோற்றும். ஆனாலந்த் முதல் பிரகரணத்தில் மனிதர்கள்பொய்யுஞ்சொல்லுகிற வழக்கமுண்டென்றும், இரண்டாம் பிரகரணத்தில் மனிதர்கள் நிஜஞ்சொல்லுகிறார்களென் றாகிப்பதற்குப் பிரதிகதமான ருசுவிடலாமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனதால் மனிதர்கள் பொய்சொல்லுகிற வழக்கமுண்டென்று சொல்லலாம். ஆனதினால் மனிதர்களுடைய ருசுவை சந்தேகப்படுவதைக்கொண்டு மனிதர்கள் நாணையமாகவே நடக்கிறார்களென் றாகிப்பதற்கு விரோதமில்லை.

What is to be proved.

§ 6. ஆனதாலும் எந்தவிவாதத்திலும் உபயபக்கத்து சங்கதிகள் அல்லது கட்சிகளில் பலானது நிஜமென்று ஜட்ஜி அல்லது ஜூறியின்புத்தியில்பட்டாலொழிய பரிஷ்காரமான ஒரு தீர்ப்பைச்செய்யக்கூடாதாகையிலும், ஒவ்வொருகட்சியும் ருசுவின்மூலமாய் ஸ்தாபிக்கப்படவேணும். (B-94.)

What the parties are not required to prove but what the Courts shall take Judicial notice of.

§ 7. அப்படிக்கு ஒவ்வொருசங்கதி அல்லது கட்சியும் ருசுவாகவேண்டியதாகவிருந்தாலும் அடியிற்கண்ட சங்கதிகளை கட்சிக்காரர்கள் ருசுப்படுத்தவேண்டியதில்லை. அதுகளைக் கோர்ட்டாரே தெரிந்துகொள்ளுவார்கள். அப்படித்தெரிந்துகொள்வது கோர்ட்டாருடைய கடமை. அவைகளாவன, பெங்காளம், சென்னபட்டண்ம, பாம்பே முதலான கவர்ன்மெண்டுகளுடைய 1834௵ எப்பிரல்௴ 22௳ வரையிலுள்ள சட்டங்களையும், அதற்குப்பிந்திய பெங்காளம், லிஜிஸ்லேட்டிவ் ஆக்ட்டுகளையும், பார்லியமெண்டினுடைய பப்பளிக்கு ஆக்ட்டுகளையும், ஜூடிசியால் நோட்டீசு செய்யும்படி பார்லியமெண்டாராற்சொல்லப்பட்டிருக்கின்ற சமஸ்தானங்களுடைய ஆக்ட்டுகளையும், ஒவ்வொரு பப்பளிக்கு ஆபீசரும், தன்னுடைய மெம்பர்களையும், ஆபீசர்க

ளையும், டிப்ட்டிகளையும், உதவிகளையும், தன் கட்டளைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகஸ்தர்களையும், அட்வோகேட்டுகளையும், அட்டர்ணிகளையும், வக்கீல்களையும், பிளீடர் முதலானவர்களையும், கவர்னர்ஜெனறல், கவர்னர், லெப்ட்டன் கவர்னர், டிப்ட்டி கவர்னர், செக்கிரட்டேரி, கமாண்டரின்சீப், பிஷப், கவர்னருடைய மெம்பர்கள், லிஜிஸ்லேட்டிவ் கவுன்சலர்கள், சூப்பிரீம்கோர்ட்டு, சதர்கோர்ட்டுமுதலானதுகளுடைய ஜட்ஜிகளையும், காலப்பிரிவினையையும், பூகோளசாஸ்திரப்படி உலகம் பிரிந்திருப்பதையும், பிரிட்டிஷ் இராசாங்கத்தாருடைய தேசங்களையும், மேற்படி இராசாங்கத்தாருக்கும் வேறே இராசாங்கத்தாருக்குமிருந்த சண்டைகளுண்டான தேதி, நடந்ததேதி, முடிந்ததேதி, இதுகளையும் பிரிட்டிஷ் இராசாங்கத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற இராசாங்கங்களின் கொடிகளையும், எல்லா பப்பளிக்கு ஆபீசர்களும் தாங்களாகவேதெரிந்துகொள்ளவேண்டியது. (1855ஆு II-வது ஆக்ட்டு-2-3-4-5-6-வது-பிரிவுகள்-B-246-247-380.)

§ 8. யாதொருகோர்ட்டு அல்லது பப்பளிக்கு ஆபீசினுடையதீர்ப்பு உத்தரவு அல்லது அதுகளின் நகலென்றுகண்டு ஆபீசருடைய சயன்மொகருடன் தயார்செய்யப்பட்டிருக்கிற எந்த தஸ்தாவேஜையும் சரியான ருசுவாக அங்கிகரிக்கலாம். (B-469-470.) இதுகளை அவர்களாக சூடிசியால் கோட்டீசுசெய்யத் தடையில்லை.

What are not required to be formally proved but by the production of an anthenticated extract from public offices.

§ 9. அரசனுடைய அச்சுக்காரனல் அச்சிடப்பட்டதென்றுகண்டிருக்கிற பார்லியமெண்டு பிறைவேட்டு ஆக்ட்டுகளின் நகலை யெதிர்க்கக்கூடிய நல்ல ருசுவாக அங்கிகரிக்கலாம். அப்படியே பிரிட்டிஷ் இராசாங்கத்தாருக்குட்பட்ட தேசங்களின் கவரன்மெண்டுகெஜிட்டையும், அந்த கெஜிட்டில்கண்டிருக்கிற பப்பளிக்கு சுவபாவத்தையுடைய எல்லாச்சங்கதிகளையும் அந்தகெஜிட்டுகளைக்கொண்டுவந்து தாக்கல்செய்த மாத்திரத்தில் எதிர்க்கக்கூடிய நல்லருசுவாக அங்கிகரிக்கலாம். மேலும், கவரன்மெண்டுமுதலான அதிகாரிகளுடைய ஆக்கினையினல் செய்யப்பட்டதாயும் யாதொரு விவாதசங்கதியைப்பத்தி உத்தேசித்திராததாயுமிருக்கிற யாதொரு பப்ப

What are primâ facie good evidence.

ளிக்கு படங்கள் சித்திரங்கள் இதுகளை எதிர்க்கக்கூடிய நல்லருசுவாக அங்கிகரிக்கலாம். (1855ஸு) II-வது ஆக்ட்டு 7-8-13.)

Division of the work.

§ 10. கட்சிக்காரர்கள் ருசுப்படுத்தாமலே கோர்ட்டார் தெரிந்துகொள்ள வேண்டியதையும் எக்ஸ்திருக்ட்டுபெத்துவந்து தாக்கல் செய்தமாத்திரத்தில் ருசுப்படுத்திப் போடுகிறதையும் இதற்குமுன் சொல்லியாகிவிட்டுது. சூடிசியால் ருசுவையும், ருசுவாகவேண்டிய சங்கதிகளையும் பிரஸ்தாபத்துக்கு சுலுபமாயிருக்கும் பொருட்டு சங்கேதவார்த்தைகளாய் பிரித்திருக்கின்றது. அந்தப்பிரிவினைகளை இதினடியில் உடனே சொல்லிப்போட்டுப் பின்பு இந்தப்புஸ்தகத்தை ஆரம்பிவித்து எழுதுகிறேன். இந்தப்புஸ்தகத்தை நாலு பார்ட்டு அல்லது நாலுபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளையந்தவரிசைப்படிக்கேயெழுதுகிறேன். அந்தப்பிரிவினைகளின் விபரம். I. (Fundamental Principles) என்கிற முக்கியசூத்திரங்கள். II. ருசுவின்ஆயுதங்கள். III. (Presumptions) பிறசம்ஷன், என்கிற ஊகங்கள். IV. ருசுப்பெளு.

இவ்விதமாகப்பிரிக்கப்பட்டிருப்பதாலந்த வரிசைப்படிக்கே எழுதலாகும்.

Illustration of facts to be proved.

§ 11. நியாயஸ்தலங்களில் விவாதத்தில்வருகிறஒவ்வொரு சங்கதி யல்லது கட்சியும், ருசுவின் மூலமாய் ஸ்தாபிக்கப்படவேணுமென்று இதின் 6-வது பிரிவிலும், சிலசங்கதியை கோர்ட்டாரே தெரிந்து கொள்வார்களென்று, 7-வது பிரிவிலும், சிலசங்கதிகளை பப்ளிக்கு எக்ஸ்திருக்ட்டு பெத்துவந்து தாக்கல் செய்தமாத்திரத்தில் ருசுவாகிவிட்டுதென்று 8-வது பிரிவிலும் சொல்லியாகிவிட்டுது. ஆனல் 6-வது பிரிவில் கண்டிருக்கிற சங்கதிகளை ருசுப்படுத்துகிறதுமட்டுந்தான் தொந்தரவானது-லா-ஆப்-இவிடன்சுமுழுதிலும் விசேஷமாயப்படிக்கொத்த சங்கதிகளுக்குத் தானுபயோகமாகின்றது. சங்கதிகளை ருசுப்படுத்துகிற மார்க்கமறியும்பொருட்டு அடியிலொரு உதாகரணமெழுதுகிறேன். ஒவ்வொரு சங்கதியையும் அடியில்கண்டவிதங்களில் எதின்படிக்காவது ருசுப்படுத்தலாம். எப்படியென்றால், A யென்பவன்

தான் B க்கி சுவிகாரபுத்திரனென்றும், B யின் விபக்தசகோதரனுடையவிதவையான C சந்ததியன்னியில் இறந்துபோனபடியால் C யினுடைய X என்கிற கிருமத்திலிருக்கிற Z என்கிற ஒரு மலேயுட்பட உள்ள சொத்துகளே யாதொரு பாத்தியமுமன்னியில் அனுபவித்துவருகிற புறக்குடியாகிய D என்பவனிடத்திலிருந்து தனக்கு வாங்கிக்குடுக்க வேணுமென்றும் A வழக்குசெய்கிறுன். D ஆன்சரில் Cயின்சொத்து B க்கி கிடைக்கவே நியாயமில்லே யென்றும் B,க்கி A சுவிகாரபுத்திரனல்ல வென்றுஞ் சொல்வதுடன் X என்கிற கிருமத்தில் Z என்கிறமலே கிடையாதென்றும், A க்கித் தகுந்த வயசுவரவில்லேயென்றுஞ் சொல்லுகிறுன். இவ்வழக்கிலிருக்கின்ற விவாதங்களாவன.—1. இந்துக்களில் விபக்தசகோதரனுடையசொத்து சந்ததியற்ற அவனுடையவிதவையின்வசத்திலிருந்து அவள் இறந்தபின்பு அவள்புருஷனுடைய விபக்த சகோதரனுக்குக்கிடைக்குமா. 2 A யை B சுவிகாரஞ் செய்துகொண்டதுண்டா. 3. X என்கிற கிருமத்தில் Z என்கிற மலேயிருக்குதா.—4. Aக்கித் தகுந்த வயசு வந்துவிட்டுதா இதுகள்தான். இதுகளே A ருசுப்படுத்தவேணும். ஆனல் முதல்பயிண்டு சாஸ்திரத்தைச் சேர்ந்ததானதால் அதை வாதி ருசுப்படுத்தவேண்டியதில்லே. (இதின்-7.) A யைதான் சுவிகாரஞ்செய்துகொண்டதுண்டென்று B யானவன் ஒரு கோர்ட்டில் ஒரு வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டிருந்தால் அந்த வாக்குமூலத்துக்கு எக்ஸ்திருக்ட்டு பெற்றுவந்து தாக்கல்செய்தால், உ-ம். பயிண்டு திருப்தியாய் ருசுவாகிவிடும். 3-ம் பயிண்டை இரண்டு சாட்சிகளின் வாய்மொழியால் ருசுப்படுத்தலாம். அல்லது X-யில் Z-இருக்குதென்று D கைனல் எழுதியிருக்கிற ஒரு தஸ்தாவேசைக் கொண்டாவது, (B-209.) அல்லது ஜட்ஜீ அல்லது அவர்களுடைய கம்மிஷனர்களே மேற்படி மலேயினிடத்திலழைத்துப்போயாவது, X-ல் Z இருக்குதென்கிற கட்சியை ருசுப்படுத்தலாம். அப்படியே A க்கி வியாச்சியகாலத்தில் தகுந்தவயசுவந்துவிட்டுதென்கிற கட்சியையும் சாட்சிகளேக்கொண்டாவது, ஜாதகத்தைக்கொண்டாவது, அல்லது A யை கோர்ட்டார் பார்வையில் கொண்டுவந்துவிட்டாவது ருசுப்படுத்தலாம்.

Division of facts.

§ 12. சங்கதிகள் (Physical) பிரத்தியட்சம், என்றும் (Psychological) மன்னார்கமென்றும் பிரிக்கப்படும். உ-ம். A யை B கூஷாத்திரமாய் கொலைசெய்தானென்கிற வழக்கில் கொலைசெய்ததுபிரத்தியட்ச சங்கதியாம். ஆனால் "எனக்கு சர்க்காரில் தண்டனையுண்டாகும்படி நீ செய்ததால் உன்னைக் கொல்லுகிறேன்" என்கிற வார்த்தைகளை B உச்சரித்தது கூஷாத்திரமானதால் அது மன்னார்கசங்கதியாம்.

Physical.

Psychological.

Factum probandum and factum probans.

சங்கதிகள் ருசுவாகவேண்டிய அல்லது முக்கிய சங்கதி என்றும் ருசுப்படுத்துகிற சங்கதியென்றும் பிரிக்கப்படும். உ-ம். A யை B கூஷாத்திரத்தால் கொன்றானென்கிற வழக்கில் கூஷாத்திரம் முக்கியசங்கதியும் இந்தக் கொலை நடப்பதற்குமுன் "உன்னைக்கொன்றுபோடுவே"னென்று A க்கி B சொன்னது கூஷாத்திரமிருப்பதை ருசுப்படுத்துகிற சங்கதியுமாம்.

Affirmative and Negative facts.

சங்கதிகளுக்கு மறுபடியுமொரு பிரிவினையிருக்கின்றது. அதாவது, சங்கதிகள் (Affirmative) உறுதிச்சொல் சங்கதியென்றும், (Negative) மருப்புச்சொல் சங்கதியென்றும் பிரிக்கப்படும்.

Division of Evidence.

Direct.

Indirect.

§ 13. ருசுவானது நேர்ருசுவென்றும், பரோக்ஷருசுவென்றும் பிரிக்கப்படும். கடன்சீட்டுப்படி பணம்வரவேணுமென்று வந்தவழக்கில் பிரதிவாதிக்கு வாதி அந்தப் பத்திரத்துகையைக் கடனாகக்கொடுத்ததைப்பார்த்தோமென்றுசொல்லுகிற சாட்சிகளுடைய ருசு பிரத்தியட்ச ருசுவாம். பத்திரசாட்சிகள் ஒருவரும் ஆஜராகாமற்போனபோதிலும் பிரதிவாதி பத்திரமெழுதிக்கொடுத்ததுண்டென்றும், ஆனால் பணம் பத்தவில்லையென்றும் சொல்லும்பொழுது, பணம் பத்தினாலொழிய பத்தினதாய்க்கண்டு பிரதிவாதி பத்திரமெழுதிக் கொடுத்திருக்கமாட்டானென்கிற நம்பிக்கையைக் கொடுப்பது பரோக்ஷ ருசுவாம். (B-27.)

Presumptive or circumstantial.

பரோக்ஷ ருசுவானது (Presumptive) ஊகார்க் அல்லது (Circumstantial) சங்கதிக்குத்தக்க பரோக்ஷ ருசுவென்று பிரிக்கப்படும்.

Primâ facie and conclusive.

இந்த ஊகார்க் அல்லது சங்கதிக்குத்தக்க பரோக்ஷ ருசுவானது முடிவாகாத அல்லது எதிர்க்கக்கூடிய ஊகார்க்

பரோக்ஷ ருசுவென்றும், முடிவான ஊகார்க் பரோக்ஷ ருசு வென்றும் பிரிக்கப்படும். உ-ம். A யை B தூஷித்து ஒரு நியூஸ்பேப்பரில் எழுதியிருந்தால் க்ஷாத்திரம் பரோக்ஷமா யூகிக்கப்படும். ஆனல் B தன்னுடைய டிபென்சில் தான் A க்கி எஜமானனுகையால் அந்தத்தோறணையில் A யின் நடத்தை எப்படிப்பட்டதென்பதை டைரியில்எழுதவேண் டியது தன்கடமையாயிருந்துதென்றும், ஆனதால் தன் டை ரியை நியூஸ்பேப்பர்காரர்கள் பிரசித்தஞ்செய்தது தப்பல்ல வென்றும் சொல்லியதினல் முதலில் ஊகிக்கலாயிருந்த க்ஷாத்திரத்தை யெதிர்க்கலாம். இதற்கு முடிவாகாத எதி ர்க்கக்கூடிய பரோக்ஷ ருசுவென்று பேர். (B-27.) பிறசவித் தது புருஷசம்பந்தமிருந்த சங்கதிக்கு முடிவான ஊகார்க் ருசுவாம். (ஷி)

ருசுவானது உத்தமருசுவென்றும்,மத்தியம் ருசுவென்றும் பிரிக்கப்படும். உ-ம். A க்கி B எழுதிக்கொடுத்ததாய்ச் சொல்லப்படுகிற ஒருபத்திரப்படி பணம் வரவேணுமென்று வந்தவழக்கில் ஷி பத்திரத்தை தாக்கல்செய்து பத்திரசாட் சிகளைக்கொண்டு ருசுப்படுத்துகிறதற்கு உத்தம ருசுவென் றும், அந்தப்பத்திரத்தை தாக்கல்செய்யாமலே அதுபிறந்த து தங்களுக்குத்தெரியுமென்று சாட்சிகள் சொல்வதற்கு மத்தியம்ருசுவென்றும் பேர். (B-29.) Primary and secondary Evidence.

அந்தப்பத்திரம் பிறந்ததென்று தாங்களுபயவாதிகளாலா வது, வேறேயாராலாவது கேழ்விப்பட்டதாய்ச் சாட்சிகள் சொல்லுகிற ருசுவுக்குக் கேழ்வி ருசுவென்று பேர். Hearsay.

உத்தமமான ருசுவென்கிற வார்த்தைக்குத் தப்பர்த்தமு ண்டாகாமலிருக்கும்பொருட்டு சொல்லுகிறதாவது, எந்தச் சங்கதியை ருசுப்படுத்த எந்தக்காரியம் ஆதியில் ஏற்பட்டி தோ, அல்லது எந்த நடவடிக்கைக்கு முந்தி யாதொரு நட வடிக்கையும் நடக்கவில்லையோ. அல்லது எந்த நடவடிக் கையானது மைற்ற நடவடிக்கைகளைவிட உயர்ந்தவிதத்தில் பெலமாயிருக்குமோ. அல்லது எது தன்வழக்குக்கு ஆதி காரணம். அல்லது ஆதி ஆதரவென்று ஒரு கட்சிக்காரன் சொல்லுவானே அது உத்தம ருசுவெனப்படும். உ-ம். X என்கிற கிருமமுனக்கு அரசனல் இனமாய்க்கிடைத்திருந் Best evidence explained.

து அதின்படி கிருமம் வரவேணுமென்று நீ ஷ கிருமத்தை துருகிருதமாய்ப் பிடுங்கிக்கொண்டவன்பேரில் செய்கிற வழக்கில் அந்த தானசங்கதியை ருசுப்படுத்த ஆதியிலுனக் குக்கிடைத்த சிகாசனது உத்தமமான ருசுவாகும். ஷ கிரு மமுனக்கு இனுமாகக்கிடைத்ததற்குத் தானம் நடந்ததை விட அதற்குமுன் உனக்கான பரிட்சை, பேர்பதிவுமுதலான எந்த நடவடிக்கையும் தானசங்கதியை ருசுப்படுத்தக்கூடிய தாயிருந்தாலும் அது உத்தம ருசுவாகமாட்டாது. தானஞ் செய்ததாகக்கண்டுகொடுக்கப்பட்ட சிகாசனதுதான் உத்தம மான ருசுவாகும்.

FUNDAMENTAL PRINCIPLES.

PART I.

FUNDAMENTAL PRINCIPLES. முக்கியசூத்திரங்கள்.

CHAPTER I. அத்தியாயம் க.

GENERAL VIEW. பொது.

§ 14. ஒவ்வொருவழக்கின்சுவபாவத்துக்கும் எதுஉத்தமமான ருசுவாகுமோ அதைக்கொண்டுவரும்படி நியாயாதிபதிகள் கட்டாயஞ்செய்யவேண்டும். (N-முகவுரைகாகிதம்-B-455.) உத்தமமான ருசுவைக்கொண்டுவராமல் மறைக்கிறவன் விஷயத்தில் அந்த உத்தமமானருசுவந்தால் அது அவன் கட்சிக்கு விரோதமாயிருக்குமானதால் அவனதைக் கொண்டுவரவில்லையென்று கோர்ட்டார் நினைக்கவேணும். (B-L-M-843.) (N-716-789.) The best evidence should be exacted.

§ 15. ஒருவன் தான் நேராகவாவது தான் யாரை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிறானோ அவனாவது சம்பந்தப்படாமலிருந்த எந்த வியாபாரம் அல்லது காரியத்தினாலும் யாதொரு பொல்லாங்கையுமடையக்கூடாது. (B -L--M-857-N-85-B-581-488.) Transactions between third parties.

§ 16. இங்கிலிஷ்-லா-வில்-எந்தமனிதனும்நொந்துபோகாமலிருக்கும்பொருட்டும் நியாயாதிபதிகளின் அதிகாரம் பதப்படும்பொருட்டும்-லா-வானது யாதொரு தடையுமன்றியில் நிறைவேறும்பொருட்டும் பெரிதான விதிகள் சிலது ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைக் கோர்ட்டுகளில் மிக்வும் கெவுறவத்துடன் அநுஷ்டிக்கவேணும். அவைகளாவன, பிரமாணத்தின் யோக்கியதையை அறியத்திறமையற்ற·எ-வயசுக்குட்பட்ட பாலர்களும் பயித்தியக்காரர்களும் அரசனுந்தவிர மைற்றஎல்லாமனிதர்களும் பிரபுக்களும்கோர்ட்டு முன்பாகக் கட்டாயமாய் சாட்சிசொல்ல ஆஜராகவேண்டும். (B-124.) ஆனால் இண்டியாவில் பிரதிஷ்டையுள்ள The characteristic features of the English law. The compulsory presence of witnesses in open Court.

இந்துமகம்மது ஸ்திரிகளும் அப்படியே விலக்குக்கு உட்படுவார்கள். (1859௵ VIII-வது-ஆக்ட்டு-21-பிரிவு.)

Judges and Jurymen shall not use their own private knowledge of facts as legal Evidence.

ஜட்ஜிகளும் ஜூரிகளும் விவாதப்படுகிற சங்கதிகளைப்பத்தி தங்களுக்குச் சொந்தத்தில் தெரிந்திருக்கும் ஞானத்தை ரூடிசியால் ருசுவாக உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடாது. தங்களுடைய சொந்த அனுபவத்தைக்கொண்டுமாத்திரம் லாவின் சகாயமன்னியில் நிஜந்தெரிந்துக்கொள்வது ஜட்ஜீயின் கடமையல்லா. (B-37.) அந்தக்கடமையை அவர்களுக்குக்கொடுத்திருந்தால் அவ்வளவு பளுவான அந்த உத்தியோகத்தையொருவனும் அங்கிகரிக்கமாட்டான். மற்றொரு பட்சத்தில் விவாதசங்கதிகளில் பலானது நிஜமென்றும், பலானது பொய்யென்றும், ஜட்ஜீகளுடைய சொந்த ஞானத்தினால் நிதானிப்பது சரியென்று றூல் சொல்லிப் போட்டால் சமஸ்தமான பிரஜைகளுடைய பாக்கியமும், சுவதந்தரமும், தேகமும் நியாயாதிபதி உத்தியோகத்தைப் பெறுகிற மனிதர்களுடைய கடாட்சத்தில் மடிந்துபோகும்.—அவர்களுடையகையில் அந்த அதிகாரம் பொல்லாங்கான ஆயுதமாகவிருக்கும். (B-594.)

The practice of preconceiving an opinion in favor of any one party by Judges condemned.

நிஷ்பட்சபாதமான பார்வையுடன் நீதியின்தருசைநிறுத்துப்பார்ப்பதற்குப் பதிலாய் சில ஜட்ஜீகள் பலான கட்சி நிஜமென்றும், பலானகட்சி பொய்யென்றும் தாங்களாகவே முன்னாடி தப்பாய்க்கொள்ளுகிற அபிப்பிராயத்தைத் தானே ஸ்தாபிக்கும்பொருட்டு எல்லாக்கட்சிகளும்பேசி எல்லாமுயர்ச்சிகளும் செய்கிற வழக்கமுண்டு. இந்தச்சமயங்களில் அவர்களுடைய நடத்தையானது இரண்டு கட்சியையும் சமமான நியாயதிருஷ்ட்டியுடன் பார்க்கவேண்டிய ஒரு நியாயாதிபதியின் நடத்தையாக இராமல் ஒரு கட்சியில் சார்ந்திருக்கின்ற ஒரு லாயருடைய நடத்தையைப் போல் இருக்கின்றது. இது ஜட்ஜீகளிடத்திலிருந்து நிவர்த்தியாக வேண்டியகாரியம். விசேஷமாய் ஒரு ஜூரியின் அதிகாரத்தையும் ஜட்ஜியின் அதிகாரத்தையும் வகித்திருக்கின்ற இண்டியாவின் ஜட்ஜீகள் ஒருக்காலும் அப்படி செய்யக்கூடாது.

Judges should be only instruments of the Law.

(N 673.) இதுமாத்திரமல்லா ஜட்ஜீகளுடைய அதிகாரம் பதப்படவேண்டியதற்கு இங்கிலிஷ் லாவானது அவர்கள்பேரில் வேறேயொரு நிர்ப்பந்தத்தையும் வைத்திருக்

கின்றது. அதாவது, "எது லாவோ அதைமட்டுந்தான் ஜட்ஜிகள் நிறைவேற்றவேணும்" என்பதாம். (B - 36) "லாவையே நிறைவேற்றுகிறோமென்றும், அதைவிட வேறே யொன்றையுஞ் செய்கிறதில்லையென்றும், ஒருவனுக்கொருதயவு செய்யவேண்டியது தங்கள் மனச்சாட்சிக்கும் சுவபாவத்துக்கும் ஒத்திருந்தாலும் அப்படிச்செய்வது லாவுக்கு விரோதமாயிருந்தால் அதைச்செய்கிறதில்லை" யென்றும், பிரமாணஞ் செய்தாலொழிய ஜட்ஜீவேலையை ஒருவனுக்கும் இங்கிலிஷ் கவரன்மெண்டார் கொடுக்கிறதில்லை. (ஜட்ஜீ உத்தியோகத்தின் பிரமாணபத்திரிகை இதற்குத்திருஷ்டாந்தரம்.) மேலும், "ஒரு தடியனான பய்யனிடத்தில் ஒருசிறியசொக்காயும், மெலியபய்யனிடத்தில் பெரியசொக்காயுமிருந்தது. தடியன் பெரியசொக்காயை மெலியவனிடத்திலிருந்து பலாத்காரமாய்ப் பிடுங்கிக் கொண்டான்." மெலியவன் ஜட்ஜி "ஸைறசு" இடத்தில் செய்த பிறுதையவர் தள்ளி மெலியவனுடைய பெரியசொக்காய் பெரியவனுக்கும், பெரியவனுடைய சிறியசொக்கய் சிறியவனுக்கும் சரியாகவிருப்பதால், பெரியவன்செய்ததே சரியென்று தீர்ப்பில் சொன்னார். ஆனால் அப்பீலில் கோர்ட்டார்சொன்னதாவது, எந்தப்பய்யனுக் கெந்தச்சொக்காய் சரியாகவிருந்துதென்பது விவாதமல்லவென்றும், அப்படி யோசித்துத்தீர்ப்பது லாகோர்ட்டு ஜட்ஜிகளுடைய அதிகாரமல்லவென்றும், எந்தப்பய்யனுக்கு எந்தச் சொக்காய் சொந்தமென்று யோசிப்பதுமட்டும் கோர்ட்டில் விவாதமென்றும் சொன்னார்கள். (B-36-37-38.)

Example.

ஜனங்களுக்குச் சரியான நியாயங்கிடைப்பதற்காக ஏற்பட்டிருக்கின்ற விதிகளில் அதிகப்பிரபலமான விதியை இங்கேயெழுதலாகும். அதாவது, எந்த ருசுவை அங்கிகரிக்கலாமென்பதையும், எந்த ருசுவை அங்கிகரிக்கக்கூடாதென்பது முதலானதையும் தீர்மானிப்பதும், இதுமுதலான மற்றும் எல்லா-லாபயிண்டுகளையும் தீர்மானிப்பதும் ஜட்ஜீயின் அதிகாரத்துக் குட்பட்டதேதவிர அதிகமில்லை. ஆனால் சங்கதிகள் ருசுவாச்சுதென்றுவது இல்லையென்றுவதுசொல்வதும் பலான ருசுவை நம்பலாமென்றும், பலான ருசுவை நம்பக்கூடாதென்றும் சொல்லுகிற அதிகாரம் ஜூரியைச்சே

The admissibility of Evidence is the province of the Judge and the weight and credibility that of the Jury.

ர்ந்தது. இதில் ஜட்ஜீக்கி யாதொருபாத்தியமுங் கிடையாது. (B-L-M-99-B-80.)

Rules of Evidence the same in civil as in criminal.

§ 17. ருசுவைப்பத்திய றூல்கள் எல்லாம் சிவிலிலும் கிரிமினாலிலும் ஒன்றுதான். (B-94.)

Judgments in criminal not evidence in civil and vice versâ.

§ 18. ஒரு கிரிமினால் தீர்ப்பானது ஒருசிவில்வழக்கில் ருசுவாகவாவது, ஒரு சிவில் தீர்ப்பானது கிரிமினால் வழக்கில் ருசுவாகவாவது அங்கிகரிக்கப்படமாட்டாது. (N - 489.) எப்பொழுதும் ருசு சுவல்பம் துர்ப்பலமா யிருந்தாலும், ஒரு சிவிலில் தீர்ப்புக்குப்போதும். ருசுமெத்த பலமாயிருந்தாலும் தெண்டனைசெய்ய ஜட்ஜீகள் மெத்தஉஷாருயிருக்கவேண்டும். (B-95.) விடுதலைசெய்தது பிசகானாலும் தோஷமில்லை. தெண்டனைசெய்வது தப்பாகவிருக்கக்கூடாது. (N-300.)

No man to be Judge in his own case.

§ 19. தன்னுடைய வழக்குக்கு எவனும் ஜட்ஜீயாகவிருக்கக்கூடாது. (N-490-B-L-M-111.)

Judges the instruments of Law.

§ 20. எது லாவோ அதைமட்டுந்தான் ஜட்ஜீகள் நிறைவேற்றவேண்டும். (B-36-f-நோட்டு.)

Fraud vitiates every thing.

§ 21. மோசம் எந்த நடவடிக்கையையும் றத்துசெய்துவிடும். அது சர்வோத்தமமான நியாயசபைகளின் தீர்ப்பையும் றத்துசெய்துவிடும். (B-L-M-307-288-703-N-641.)

No right of action arises from.

மோசத்திலிருந்து யாதொருவியாச்சியம்செய்கிற பாத்தியமும்உண்டாகமாட்டாது. (N-641-S-M-H-L-395-396.)

No right of action arises from a naked agreement.

§ 22. நிறைவேற்றும்படியான யாதொரு வக்கணையுமில்லாத ஆதரவிலிருந்து யாதொருவியாச்சியம்செய்கிற பாத்தியம் உண்டாகமாட்டாது. (N-646-S-M-H-L-395.)

One's own writing not to bind another as debtor.

§ 23. ஒருவன் தனக்குப் பிறத்தியான் கடன்கொடுக்கவேணுமென்று எழுதிவைத்துக்கொண்டிருந்தால் அதை நம்பக்கூடாது. (N-190.)

No right of action from immorality or illegality.

§ 24. நீதிக்கு விரோதமானகாரியங்களிலிருந்துயாதொரு வியாச்சியம் செய்கிற பாத்தியம் உண்டாகமாட்டாது.— (N-646-S-L-C-201.)

§ 25. கட்சிக்காரர்கள்செய்துகொள்ளுகிற உடம்படிக்கைகளும் அதுகளில் அவர்கள் என்சம்மதியாய்ச் செய்துகொள்ளும் ஏற்பாடுகளும் இதின்-21-24-பிரிவுகளுக்கு விரோதமல்லாதவனாயில் லாவைவிட அதிக சலாவணியாகும்.—(B-L-M-615.)

Legal contracts overrule the Law.

§ 26. இரண்டு கட்சிக்காரர்களுடைய பாத்தியம் சமமாக இருக்கும்பொழுது விவாதசொத்தைக் கிரமமாயனுபவிக்கிறவனுடைய பாத்தியம் அதிக சலாவணியாகும். (B-L-M-638.)

Where the rights are equal, that of the party in possession better.

§ 27. ஒருவனொரு காரியத்தைப் பிறத்தியானைக்கொண்டு செய்தால் அந்தக்காரியத்தையவன் தான் நேராகவேசெய்ததாக எண்ணப்படுவான். (B-L-M-734.)

Acts through agents acts by principal.

§ 28. தான் பால்லியனாகவிருந்தபொழுது செய்தகாரியங்களையாவது, தன்னுத்தரவுப்படி செய்யவேண்டியகாரியங்களை உத்தரவன்னியில் அன்னியர்கள்செய்து அதுகளையாவது, தகுந்த வயசுவந்தபின்பு பாலியனும் பின்பட்ட காலங்களில்மைற்றவர்களும்ஒப்புக்கொண்டால்அந்தப் பின்னொப்புதலானது பாலியன்விஷயத்தில் தகுந்தகாலத்தில் செய்தகாரியங்களுக்கும் மைற்றவர்கள் விஷயத்தில் முதலில்தானே உத்தரவுகொடுத்த காரியங்களுக்கும் சமமாகும். (B-L-M- 775.)

A subsequent ratification becomes equal to a prior order or consent.

§29. ஒவ்வொரு வியாபாரமும் எதின்மூலமாக ஒருவனை பெத்தப்படுத்திற்றதோ அதின்மூலமாகவே றத்தாகவேணும். (B-L-M-785-N-629.)

Contracts how dissolved.

§ 30. எப்பொழுதும் விவாதங்களை விருத்திசெய்யவாவது தைரியப்படுத்தவாவது கூடாதென்று லாவின் ஆசையிருக்கின்றது. (S-L-C-193-N-98-352.)

Litigations to be not encouraged &c.

§ 31. சுறுசுறுப்பாயிருக்கிற கட்சிக்காரனுக்கு மட்டும்-லா சகாயஞ்செய்கின்றதே யொழிய தங்களுடைய பாத்தியதையின்பேரில் தூங்கிறவர்களுக்கல்லா. (B-L-M-799-N-686.)

To whom the Laws assist.

§ 32. ஒருமனிதன்செய்த தப்பிதமானகாரியங்களுக்காக அவனுடையதேகத்தின்பேரில் செய்யப்படுகிற வழக்குகள்

Suits abating by death of Defts.

அவன் தேகத்துடனே இறந்துபோகும்-நஷ்ட்டவழக்குகள் இதற்குத்திருஷ்டாந்திரம். (B-L-M-811.)

Usage the best Interpreter.

§ 33. ஒவ்வொரு சங்கதியையும் வழக்கத்தைக்கொண்டு வியாக்கியானஞ்செய்வது உத்தமம். (B-L-M-821-N-660.)

Credit given to professional opinion.

§ 34. ஒவ்வொருமனிதனும் தன்னுடையசுவவிருத்தியைச்சேர்ந்தகாரியங்களைக்குறித்துச் சொல்லும்பொழுது அவனுடைய வாக்குமூலத்தை விசேஷமாய்நம்பவேணும். B-L-M-837-N-383.)

Presumption in favor of right.

§ 35. ஒவ்வொருகாரியமும் நியாயமாகவுஞ் சரியாகவும் செய்யப்பட்டிருக்குதென்றெண்ணப்படும். (B-L-M-847.)

For what nature of suits Laws made.

§ 36. அடிக்கடி வழக்கில்வரும்படியான சுவபாவத்தையுடைய வியாச்சியங்களுக்காகமட்டும் லா செய்யப்பட்டிருக்கின்றதேதவிர அருதாய்வருகிற சுவபாவமுடைய வழக்குகளுக்கல்லா. (B-L-M-41.)

Laws to be prospective, not retrospective.

§ 37. ஒருசட்டமானது அது பிறந்ததேதிமுதல்கோசரிக்கவேணுமேதவிர அதின்தேதிக்கு முன்பட்ட காரியங்களுக்குக்கூட கோசரிக்கக்கூடாது. (B-L-M-33.)

Laws virtually cancelled.

§ 38. ஒரு புதுசட்டத்தின் வக்கணையானதுபழயசட்டத்தின் வக்கணைக்கு விரோதமாயிருந்தால் அந்தப்பழயசட்டம் றத்தானதாக எண்ணப்படும். (B-L-M-26.)

Contracts on Sunday void, except acts of necessity, mercy, and charity.

§ 39. ஞாயிற்றுக்கிழமையிற் செய்யப்படும்ஒவ்வொரு லவுகீக காரியங்களும் அசித்தியானதுகள். ஞாயிற்றுக்கிழமையில் ஒரு பிரதிவாதிபேரில் ஒரு சம்மனைச் செலுத்தியிருந்தால் அந்தச் சம்மன்படிக்குப் பிரதிவாதி நடக்காவிட்டாலும், அந்தப் பிரதிவாதிக்கு ஒரு பொல்லாங்கு வரக்கூடாது. ஞாயிற்றுக்கிழமையில் கையெழுத்தான சம்மன்கள் அசித்தியானதுகள்தான். (B-L-M-22.) ஆனல், ஜரூர் கிருபை தர்மம் இதுகளுக்காகச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யலாம். அதற்குத் தடையில்லை. அதுகளைப்பற்றி ஏதாவது நடவடிக்கைகள் நடந்தால், அதுகள் யாவற்றும் செலாமணியுள்ளதுதான். (S-L-C-233.) வர்த்தகர்களாவது, தொழிலாளிகளாவது, வேலைக்காரர்களாவது, கூலிக்காரர்முதலான மைற்றவர்களாவது ஞாயிற்றுக்கிழமையில்

பிரபஞ்சத்தைச்சார்ந்த எந்த வியாபாரத்தையும் செய்தால் அதுகள் நியாயஸ்தலங்களில் சலாவணி யாகமாட்டாது. ஆனால் அப்படிப்பட்ட வியாபாரங்களை ஞாயிற்றுக்கிழமையிற்செய்தவர்கள் அதைக்கொண்டு நியாயஸ்தலங்களிற்சகாயமொன்றும் பெறக்கூடாதேதவிர அந்தவியாபாரத்துக்குச் சம்பந்தப்படாத ஒருவன் அந்த வியாபாரத்தால் சகாயம் அடையத் தடையில்லை. உ-ம். கூட்டாளிகளான A யும் B யும் ஞாயிற்றுக்கிழமையிற் செய்துகொண்ட கணக்குத் தீர்ப்பு அவர்களிருவருக்குள் செலாவணியாகக்கூடாது.— ஆனால் D க்கி அவர்களிருவரும் ரூ-3000-கொடுக்கவேண்டியிருப்பதைக் கண்டிருந்தால், A-B-பேரில் D-செய்கிறவழக்கில் தன் வியாச்சியத்தின் உண்மையை ரூபிக்கும்பொருட்டு அந்தக்கணக்கருப்ன்ப D-யின்பட்சத்தில் ருசுவாக அங்கிகரிக்கலாம். (B-L-M-23.)

Acts of criminal nature not criminal acts, when committed under self-defence, obedience, or by act of God or of strangers.

§ 40. தன்னைக் காப்பாத்திக்கொள்வதிலும் கீழ்ப்படிதலிலுமுண்டான கட்டாயத்தினாலும், தைவகிருத்தியத்திலிருந்தாவது,பிறருடைய கிருத்தியத்திலிருந்தாவதுண்டாகிற கட்டாயத்தினாலுஞ்செய்கிற தப்புகள் தப்புகளல்லா. மேற்சொல்லிய ஆத்மசவரட்சணமானது விவாதப்படுகிற தப்புசெய்தாலொழிய லபிக்கமாட்டாததாக இருக்கவேண்டும். அல்லது தான் தப்பித்துக்கொள்ள ஒரு குற்றஞ்செய்தாலொழிய வேறே மார்க்கமிருக்கக்கூடாது. வேறே மார்க்கமிருக்கையில் தப்புச்செய்தால் அது ஆத்மசவரட்சணமல்லா. பதில்ப்பழி வாங்குதலாகும்.

Illustration of self-defence.

எந்தக் குற்றத்தைச்செய்ய இவனுக்கு மனமில்லாவிட்டாலும், செய்யாவிட்டால் தப்பமாட்டானோ, அது க்ஷமையைக்கொடுக்கும். எந்தக் குற்றத்தைச் செய்யாவிட்டாலுந் தப்ப இடமிருக்கின்றதோ அதைச்செய்தால், அது தெண்டனையைக் கொடுக்கும்.— உ-ம். ஒரு மனிதன் நம்மைக் கொலைசெய்ய வந்தாலும், அவனையந்தக் குற்றஞ்செய்வதிலிருந்து தடுக்கப் போதுமான ஜனங்களாவது, போலீசு ஜனங்களாவது, தகுந்த சமீபத்தில் இருந்தால் அவர்களுக்குச்சொல்லி சகாயம் பெற்றுக்கொள்ளாமலே நம்மைக் கொல்லவந்தவனை நாம் கொன்றால் அது க்ஷமிக்கத்தக்க குற்றமல்லா.

Illustration of criminal acts under obedience.

சட்டப்படிக்குக் கொலைக்காகத் தூக்கிப்போட வேண்டியவனைக்

கோர்ட்டுக் கட்டளைப்படி ஷெரிப் அல்லது நாஜர்தூக்கினால் அதுதான் கீழ்ப்படிதலுக்காகச் செய்கிற குற்றச் சுவபாவமுள்ள காரியமாம். அதை க்ஷமிக்கத்தான்வேணும். பயித்தியம்பிடித்தவன் அந்தக் கண்மூடித்தனத்தால் குற்றஞ்செய்தால், அதுதான் சுவாமியின்காரியத்தால் செய்கிற குற்றம். இவ்வகை விவாதங்களில் பயித்தியம்பிடித்திருந்த சங்கதி ருசுவாகவேண்டியது மிகவும் முக்கியம். என் கையில் ஒரு கத்தியை நான் வைத்துக்கொண்டிருக்கையில் நீ பெலாத்காரமாய் என் கையைப் பிடித்துக்கொண்டு மைற்றொருவனை நீ வெட்டிப்போட்டால், அதுதான் அன்னியருடைய காரியத்தால் நடக்குங் குற்றமாம். அதிலுமெனக்கு க்ஷமையுண்டு. (B-L-M-12-முதல்-17-வரைக்கும்.)

By act of God.

By act of strangers.

Support by civil and natural relations in self-defence.

ஆத்மசவரட்சண விஷயங்களில் எஜ்மான், சேவுகன், புருஷன்பெண்சாதி, தாய்தந்தை, குழந்தை, இவர்களில் ஒருவருக்குநேரிடும் துன்பத்தை நிவர்த்திசெய்ய மைற்றொருவர் துன்பஞ் செய்கிறவர்களைத் துன்பஞ்செய்தால் அதுவும் ஆத்மசவரட்சணத்தில் சேரும். ஆனதால் அது குற்றமல்லா. இதுவிஷயத்திலும் அந்தக் குற்றஞ்செய்தாலொழிய ஆத்மசவரட்சணங் கிடைக்க வேறே கெதியில்லாமலிருக்கவேணும். (B-L-M-11.)

No man condemned unheard.

§ 41. எந்தமனிதனையும் யாதொருகுற்றத்துக்காகத் தெண்டிக்கிறதாயிருந்தால், அப்படியேன் தெண்டிக்கக்கூடாதென்பதைக் காட்டும்படி அவனைக்கேட்டு அவன்சொல்லுகிறதைக் கவனியாமல் அவனைத் தெண்டிக்கவேகூடாது.—(B-L-M-128.)

No man prejudiced by act of Court.

§ 42. கோர்ட்டாரால் யாதொருதாமதம்முதலானது நேரிட்டால், அதினால் எந்தக் கட்சிக்காரனும் யாதொருநஷ்டத்தையும் அடையக்கூடாது. (115-ibid.)

The law works no wrong in it's executive capacity.

§ 43. லாவானது அதினுடையநிறைவேறுகிறவரிசையில் ஒரு தப்பைச்செய்யமாட்டாது. உ-ம். ஒரு தீர்ப்புக் கடனாளியைப் பிடிக்கும்பொருட்டு தீர்ப்புப்பெற்றவனும் கோர்ட்டுச்சேவுகனும் மாறுவேஷம்போட்டுக்கொண்டுபோய்பிடித்தால், அப்பொழுது லா-வின் பெயரைச்சொல்லி அவர்கள் தப்பு செய்கின்றார்கள். இப்படிப்பட்டகாரியங்களைச் செய்

யும்படி லா-இடங்கொடுக்கவேயில்லே. அப்படிப் பிடித்த பொழுதெல்லாம் அந்தப் பிடிப்புப் பிடிப்பல்லா. (B-L-M-124-N-643.)

§ 44. ஒருவன்செய்த தப்பிதத்தால் லாபமடையவேண்டியகட்சிக்காரன் அந்தத்தப்புக்கு ஒருவிசை சம்மதித்துவிட்டால், பின்பு அந்த லாபத்தை அடையவேகூடாது. உ-ம். என்னுடைய ரூ-100-பெறுமான பயிரை உன் அஜாக்கிரதையினுல் உன்மாடு அழித்தால், அதைப்பத்தி நான் உன் பேரில் நஷ்ட்டவழக்கு செய்யாமல் அந்த மாட்டையுன்னிடத்தில் நான்கொண்டுவந்துவிட்டு இனி இப்படிச்செய்யாதேயென்று உனக்குக் கண்டித்துப்போட்டுப்போய்விட்டால், பின்பு அந்த நஷ்ட்டத்துக்காக மறுபடியும் நான்உன் பேரில் வழக்குச்செய்யக்கூடாது. (B-L-M-129.)

Acquiescence in a wrong bars remedy.

§45. சுவல்பவிஷயங்களைலா-லட்சியஞ்செய்யமாட்டாது. உ-ம். ஒன்று அல்லது இரண்டுநாள்களுடைய வட்டிக்காக மெத்த நுணுக்கமாய்ப் பார்க்கவேண்டியதில்லே. பத்திரம் எந்தத்தேதியில் பிறந்ததென்பது முக்கியமானபயிண்டாக இருந்தால், அப்பொழுது மிகவும் நுணுக்கமாய்ப் பார்க்க வேண்டியதுதான். ஒரு வழக்குக்குக் காலநிர்ணய சட்டத்தின் தடையுண்டாச்சுதா இல்லேயாவென்று பாரப்பதிலும் அப்படி நுணுக்கமாய்க் கவனிக்கலாம். வெஷ்ட்டு மினிஷ்ட்டர் (Westminister) கோர்ட்டுகளில் 20-பவுனுக்குக் கீழ்ப்பட்ட நஷ்ட்ட வழக்குகளில் ருசுவுக்கு விரோதமாய் சூரிகள் தீர்ப்புக்கொடுத்தாலும் அதற்காக மறுவிசாரணேக்கு உத்தரவு கொடுக்கிறதில்லே. (B-L-M-134-135.) இண்டியாவில் தாலுக்கா முன்சிப்கள்செய்கிற ரூ-20-க்குள் பொறுமான ஜங்கமசொத்தின் வழக்கில் முன்சிப்களுடையதீர்ப்பின்பேரில் அப்பீல் கிடையாது. (சென்னபட்டணம் சட்டத்தின் 1816ஆ VI-வதுசட்டம் 43-பிரிவு.)

The Law disregards trifles.

Exception.

§ 46. யுக்தி அல்லது நியாயமானது லாவுக்குப் பிராணனுகவிருக்கின்றது. எந்த லாவினுடையவாவது, யுக்தி அல்லது முகாந்தரம் நின்று போனல், அத்துடன் அந்த லாவும் நின்றுபோம். உ-ம். பார்லியமெண்டு மெம்பர்களில் ஒரு

Reason is the soul of Law.

வர் ஒவ்வொரு பார்லியமெண்டு செஸனும் முடிவாகிற வ ரைக்கும் எந்த நியாயஸ்தலத்தின் கட்டளைக்கும உட்பட வேண்டியதில்லை. ஏனென்றால், அந்த மெம்பருனவர் யா தொருதடையுமன்னியில் பார்லியமெண்டுக்குவந்து ஆலோ சனை சொல்லி அதின்மூலமாய் லோகோபகாரஞ் செய்ய வேணும். அந்தச் செஸன் முடிந்தபின்பு அவர் ஆஜராக வேண்டிய மறுசெஸன் வரைக்கும் அவருடைய சார்விசு ஜனங்களுக்கு வேண்டியதில்லை. ஆகையால், லோகோப காரத்துக்குத் தடையன்னியிலிருக்கவேணுமென்கிற நியா யத்துக்காக அல்லது முகாந்தரத்துக்காக அந்தப்பாத்தியங் கொடுபட்டபடியால், அந்தக்காரியம் நின்று போனஉடனே அந்த லாவும் நின்றுபோகும். (B-L-M-151-N-125.)

A matter the validity of which is at issue in legal proceedings cannot be set up as a bar thereto.

§ 47. எந்தச்சங்கதியின் செல்லுபடியானது நியாயஸ்த லத்தில்விவாதத்தில் வந்து விட்டதோ அதேசங்கதியானது. அதின் செல்லுபடி முதலானதை யாக்ஷேபிக்கிற கட்சிக்கு யாதொரு தடையுண்டுபண்ணமாட்டாது. உ-ம். ஆண்சந் ததியுடைய ஒரு இந்து வானவன் சந்ததிகளுக்கு விரோத மாக அன்னியனுக்செழுதிவைத்த உயில்ச் செல்லுமா செ ல்ல மாட்டாதாவென்கிற வழக்கில் அது செல்லுமென்று கட்சிசொல்லி அதினால் லாபமடையவேண்டிய கட்சிக்கா ரன் அந்த உயிலைத்தானே, அது சரியானதல்லவென்று ஆட்சேபிக்கிற கட்சியை றத்துசெய்ய ஆதாரமாகச் சொல் லக்கூடாது. (B-L-M-157.)

No wrong without remedy.

§ 48. எந்தத்தப்புக்கும் பரிகாரமில்லாமல் போகமாட் டாது. (180-ibid.)

The immediate, not the remote cause of any event regarded.

§ 49. லாவானது எந்தக்காரியத்தினுடையவும் சமீபகார ணத்தைமட்டும் லட்சியஞ்செய்யுமே தவிர தூறகாரணத் தைக் கவனிக்கமாட்டாது. (N-820-B-38-B-L-M- 202.)

Stifling enquiry.

§ 50. விசாரணைக்காஜராகாமல் ஓடுகிறவன் குற்றத்தை யொப்புக்கொள்ளுகிறான். (N-736.)

Ignorance of Law no excuse.

§ 51. எந்தமனிதனும் தனக்கு-லா-த்தெரியாத நிமித்தம் தான் தப்பிதஞ்செய்ததாயுமானதால், க்ஷமிக்கவேணுமென் றுஞ் சொன்னால் அதற்கு க்ஷமைகிடையாது. லா-த்தெரி

யாமலிருக்கையில் செய்த தப்பிதத்தை மன்னிக்கத்தான் வேணுமென்று சில கட்சி விவேகத்தில் படுகின்றது. இது ஒரு தர்மமான அபிப்பிராயந்தான். ஆனால் இதை ஸ்திரமான மூலாக ஒப்புக்கொண்டுவிட்டால் நீதிசெலுத்துகையில் இடைவிடாமல் தடையுண்டாகிறதுந் தவிர அயோக்கியர்கள் மனத்துணிவுடன் துஷ்கிருத்தியங்களைச் செய்துவிட்டு அகப்பட்டுக்கொண்டால் அப்பொழுதுமட்டும் லாத்தெரியாமையினால் தப்பிதஞ்செய்ததாயும், ஆனதால் மன்னுப்புப் பெறுவது தங்கள் பாத்தியமென்றும் சொல்லுவார்கள். துஷ்ட்ட சிட்சை செய்யும்படி கோர்ட்டுகளை ஏற்படுத்தியது வியர்த்தமாகிவிடும். மைற்றொரு பட்சத்தில் சுறுசுறுப்புடனும் பக்தியுடனும் லாவைப்படிக்கிற மனிதர்களுக்குத் துற்திருஷ்ட்டத்தினால் அல்லது தைய்வச்செயலினால் தப்பிதஞ் செய்தவுடனே தெண்டனைகிடைத்துப் போகும். அப்பொழுது லாவைப்படித்ததற்காகத் தெண்டனைகிடைத்ததேயென்று அந்த மனிதர்கள் பச்சாத்தாபப் படுவார்கள். இத்தியாதி முகாந்தரங்களால் லாத்தெரியா தென்றால் க்ஷமையில்லை. (B-45. B-L-M-281.)

§ 52. எவனுடைய வாக்குமூலத்தில் ஒருஇடம் பொய்யாகுமோ அவனுடைய வாக்குமூலம்முழுதிலும் பொய்தான். (N-425.) False in part false in whole.

§ 53. ஒரு தஸ்தாவேசின் பாஷையானது இலக்கணப்பிசகாயிருந்தால் அந்த நிமித்தியத்துக்காக அதில் தெளிவாய் அர்த்தமாகிற வக்கணைகள் றத்தாகமாட்டாது. (N-769.) Orthographical error not to vitiate contracts.

§ 54. ஒரே தப்பிதத்துக்காக எந்த மனிதனையும் இரண்டு தடவை வியசனப்படும்படி செய்யக்கூடாது. (N-465-B-L-M-294.) No man shall be twice vexed for one and the same cause.

§ 55. ஒரு லாவானது தன்னைவிட அதிக கனமான ஒரு லாவுக்குட்பட்டுப்போகும். (N-8.) Laws subject to weightier law.

§ 56. அசாத்தியமான காரியங்களைச் செய்யும்படி லாவானது ஒருவனையும் கட்டாயஞ்செய்கிறதில்லை. ஒரு மருப்புச்சொல் சங்கதியை ருசுப்படுத்துவது அசாத்தியமென்று சில கிறந்தகர்த்தர்கள் சொல்லுகிறதாகவும், அந்த அபிப் The law compels no man to do impossibilities.

பிராயம் சரியல்லவென்றும், மருப்புச்சொல்கட்சி அநேகம் சமயங்களில் ருசுவாகத் தகுந்ததென்றும், அநேகந் தடவைகளில் ருசுப்படுத்தவேண்டியது கட்டாயமென்றும், நார்ட்டன்துரையவர்கள் சொல்லுகிருர்கள். உருபத்தில் மருப்புச்சொல் கட்சியாகவிருக்கின்ற வாதங்கள்காரியத்தில் உறுதிச்சொல் கட்சியாகவிருக்கும். இதைப்பத்தி ருசுப்பெருவின் தலைப்பின்கீழாக மிகவும் விவரமாய் எழுதலாகும்.—அப்படிப்பட்ட விஷயங்களில் அந்த மருப்புச்சொல் சங்கதி ருசுவாகவேண்டியதுதான். ஒருவன் தன்குமாரனுக்கு A என்கிற ஸ்திரியை விவாகஞ்செய்துகொள்ளுகிறதாய் ஒப்பந்தஞ்செய்கிருன். பின்பு அவன்குமாரன் அந்தஒப்பந்தத்துக்குச் சம்மதிக்கிறதில்லை. ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொடுக்கும்படிசெய்ய A கொண்டுவருகிற வழக்கில் ஒப்பந்தஞ்செய்தவன் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது அசாத்தியந்தான். ஏனென்ருல், தன் குமாரனுக்கு அருவருப்பாயிருக்கிற ஒருகாரியத்துக்குச் சம்மதிக்கும்படி அவனை அவன்தகப்பன் மனமுண்டாக்குவது அசாத்தியந்தான். நிறைவேற்ற அசாத்தியமென்று நினைக்கத்தக்க காரியங்களில் இது ஒன்றுதான். ஆனதால் நிறைவேற இடமில்லாத இவ்வித வழக்குகளைத் தள்ளிப்போடவேணுமென்று சொல்வது அழகாயிருக்கும். ஆனால் "புரும்" (Broom) துரையவர்கள்சொல்வதில் இந்த ஒப்பந்தத்தினல் A க்கிஉண்டான திரவியம், மானம்முதலான நஷ்டங்களைக்கொடுக்கும்படி அந்தத் தகப்பனைப் பாத்தியப்படுத்தவேணுமென்று இருக்கின்றது. ஒவ்வொரு கிறந்தகர்த்தர்களும் இவ்விதமாய் அசாத்தியமான காரியங்களைப்பத்திப் பரிகாரஞ்சொல்லிப் போட்டார்கள். இதைக்கொண்டு பார்ப்பதில் அசாத்தியமானகாரியங்கள் விவாதத்தில் மிகவும் அரிதாக வரும். அல்லது வரவேவராதென்று காணுது. "அடிக்கடி வரும்படியான சுவபாவத்தையுடைய வழக்குகளுக்காக லா செய்யப்பட்டிருக்குதென்று" (இதின் 36-வதுபிரிவில்)சொல்லப்பட்டிருக்கின்றது. அசாத்தியத்தைச்செய்யும்படி லா ஒருவனையுங் கட்டாயஞ்செய்கிறதில்லையென்பதைக்கொண்டு அசாத்தியமான காரியத்தைச் செய்விக்கவேணுமென்று அடிக்கடி வழக்குகள் வருமென்றும், அப்படி வருகிறவழக்

Impossibility explained.

Consequence of impossible contracts.

கைத் தள்ளவேணுமென்றுந்தோற்றுது. எப்படியென்ருல், A க்கி B 15 தினத்துக்குள் ரூ-1000 கொடாவிட்டால், B ஆகாயமார்க்கத்தில் பறந்து சென்னபட்டணத்திலிருந்து தஞ்சாவூருக்குவரவேணுமென்று கண்டிருக்கும் உடம்படிக் கையை இந்தப் பிரிவின்படி தள்ளலாம். ஆகிலும் ரூ.1000 பெறுமான என்னுடைய பதக்கத்தையொருவன் என்னி டத்தில்இரவல் வாங்கிக்கொண்டானென்றும், இப்பொழுது அதை அவனிடத்திலிருந்து வாங்கித்தரவேணுமென்றும், நான்செய்கிற வழக்கில் அந்தப் பதக்கத்தையாவது அதின் கிரயத்தையாவது எனக்கு வாங்கித்தரவேணுமென்று மட் டும் நான் பிராதுசெய்யவேணுமேதவிர என்னுடையபதக்க மே எனக்கு வரவேணுமென்று வழக்குசெய்யக்கூடாது. ஏனென்ருல், என்னெதிரி ஒருக்கால் நிஜத்தில் அந்த நகை யைப் போக்கடித்திருக்கலாம். அதிஞல் அதின் கிரயத்தை எனக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கலாம். அப்படியிருந் தும், அதே நகையை அவன் எனக்குக்கொண்டுவந்து கொ டுக்கத்தான்வேணுமென்று கோர்ட்டில் தீர்ப்புப்பண்ணுகிற தானல் அது அநியாயமாகவே இருக்குமானதால், நிறை வேற்ற அசாத்தியமான காரியமென்பது இதைப்போலொத் ததென்றறியவேண்டியது. அசாத்தியமான காரியங்களைச் செய்யும்படியொருவன் தன்சம்மதியின்பேரில் ஒப்புக்கொ ண்டாலும், அல்லது அவனுடைய தப்பிதமான காரியத்தி னல் அசாத்தியமான காரியங்களை யொருவன் செய்யும்படி ஏற்பட்டாலும் அந்தச்சமயங்களில் எல்லாம் அந்த அசாத் தியமானகாரியங்களைச் செய்யக்கூடாமற் போவதிஞலுண் டாகும் திரவியவிஷய நஷ்ட்டத்தையவன் தீர்க்கவேண்டிய துதான். ஆனதால், "புரும்" துரையவர்கள் சொல்லுகிறது சரிதான். (N-588-B-L-M-222.)

§ 57. ஒரு ஆதரவின் அர்த்தபுஷ்ட்டியான எழுத்துகளுக் கு எவ்வளவேனும் விரோதமான வியாக்கியானஞ் செய்யக் கூடாது. (N.633.) Express terms admit no expositions.

§ 58. சம்சயவிஷயங்களில் எல்லாம் கைதிகளைத் தெண் டிப்பதைவிட விட்டுவிடுவது நன்மை. (B-49.) Safer to acquit than condemn.

No man shall be allowed to take advantage of his own wrong.

§ 59. எந்த மனிதனும் தான் ஒரு தப்பிதத்தைச்செய்து அது தப்பென்று பின்னாலேசொல்லிக்காட்டி அதின்மூலமாக ஒரு லாபத்தையடைய எத்தினப்பட்டால் அதற்கு இடங்கொடுக்கக்கூடாது. அப்படிப்பட்ட லாபத்தையவன் அடையக்கூடாது. (B-L-M-255.)

Acts indicate intention.

§ 60. ஒருவன்செய்கிறகாரியமானது அவனுடைய மனோபாவம்எப்படியிருக்குதென்பதைக்காட்டும். (B-L-M-270)

Criminal acts, when not criminal ones.

§ 61. ஒருகாரியமானது குற்றமுள்ள சுவபாவத்தையுடையதாகவிருந்தாலும், அந்தக்காரியத்தைக் குற்றமான எண்ணமன்றியில் செய்தால் அது குற்றமாகமாட்டாது. (B-L-M-275.)

The rights of a bestower of gift, what.

§ 62. இனாமாய்க் கொடுபடுகிற சொத்தைக்குறித்து எவ்வித வியவஸ்தையை வேண்டுமானாலுஞ்செய்ய இனாம்கொடுக்கிறவனுக்குப் பாத்தியமுண்டு. (410-ibid.)

The position of assignees.

§ 63. மேடோவர் வாங்கிறவன் மேடோவர் செய்கிறவனுடைய ஸ்தானத்தில் வருகிறான். (415-ibid.)

What are supposed to be tacitly granted.

§ 64. எதன்னியில் ஒரு கிரயம் தானம்முதலான வினியோகமானது உபயோகப்படமாட்டாதோ அதையந்தவினியோகபத்திரத்தில் தெளிவாய்க் கண்டெழுதாவிட்டாலும், அதையும் வினியோகஞ்செய்ததாகவே எண்ணப்படும்.—(426-ibid.) எந்தநிலத்தைச் சுற்றிலும் உன்னுடையநிலமே சூழ்ந்திருக்கின்றதோ அந்த உள்நிலத்தை நீயெனக்கு வித்த கிரயபத்திரத்தில் அந்த நிலத்துக்குன் நிலத்தின்வழியாய் நான் நடந்துபோகிறதென்றாவது, உன் நிலத்தின்வழியாய் நான் ஜலம் பாச்சிக்கொள்ளலாமென்றாவது தெளிவாய்க் கண்டிராவிட்டாலும், அது முதலான பாத்தியங்களையுன் நிலத்தின்பேரில் நான் அனுபவிக்க நீ சம்மதித்ததாகவே லா-நினைக்கும்.

The incidents pass by grant of Principal, but not the Principal by that of incidents.

§ 65. ஒரு நிலத்தையாவது மைற்றுமுள்ள பணம்முதலான ஜங்கம ஆஸ்தியையாவது விற்றால் அதைச்சேர்ந்த மகசூல்வரும்படி வட்டி வாடகை, லாபம்முதலான யாவற்று ஒட்டுகளும் மூலசொத்தைக் கிரயத்துக்கு வாங்குகிறவனுக்

குக்கிடைக்கும். ஆனால் அப்படியே மேற்கண்ட ஒட்டுகளை விலைக்கு வாங்குகிறவனுக்கு அந்தக் கிரயபாத்தியத்தால் அந்த மூலசொத்துங் கிடைத்துப்போகமாட்டாது. (433-ibid.)

Consequence of a grant of future interest.

§ 66. வருங்காலத்தில் கிடைக்கும் பாத்தியதையை விற்றால் செல்லாது. உ-ம். நான் சர்க்காரில் தர்க்காஸ்துசெய்திருக்கிற நிலமெனக்குச் சித்தித்தால் அதிலுனக்கு 10-ல்-1 தருகிறேனென்றுசொல்லி எழுதிக்கொடுக்கிற பத்திரஞ்செல்லாது. இதின்பேரில்தான் ஒருவனுடைய வசத்திலில்லாத சொத்தையவன் அன்னியனுக்கு விற்கக்கூடாதென்றும், அப்படி விற்றால் அது சாம்பர்ட்டி தோஷத்துக்குள்ளாகுமென்றும், விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. வியாச்சியஞ்செய்கிற பாத்தியதையை விற்றால் அதுவும் சாம்பர்ட்டியென்று சென்னபட்டணம் சதர்க்கோர்ட்டார் அவர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள். (Br-V-D-5.) இந்தவார்த்தைகளினாலே எந்தப்பத்திரங்களையும் விவாதமூலம் உண்டாவதற்கு முன்னாடி மேடோவர்செய்தால் அது சாம்பர்ட்டியல்லவென்றும், வியாச்சியமூலமுண்டானபின் மேடோவர்செய்தாலது ஷாம்பர்ட்டியென்றும் அர்த்தமாகின்றது. விவாதமூலமென்கிற வார்த்தைக்குப் பத்திரங்களின் கெடுக்கடப்பது முதலானதென்று இவ்விடத்தில் அர்த்தமென்றறியவேண்டியது. இதினால் மறுபடியும்தோற்றுகிறதென்னவென்றால், சுத்தக் கிரயபத்திரங்களில் மேடோவர்செய்ய சுவல்பங்கூடக் கெடுவில்லையென்றும், ஆனதால் சுத்தக் கிரயபத்திரம் பிறந்தவுடனே கிரயம்பெற்றவனிடத்தில் கிரயசொத்து வராவிட்டால் அப்பொழுதே வியாச்சியமூலமுண்டாகிவிட்டுதென்றும், ஆனதால்தான் சுத்தக் கிரயபத்திரத்தை மேடோவர்செய்தால் அது ஷாம்பர்ட்டியென்றும் சதர்க்கோர்ட்டார் நினைத்ததாகவும் தோற்றுகின்றது. (B-L-M-440.)

Of property by a party not in possession.

Of a right of action.

Meaning of words how ascertained.

§ 67. எந்தவார்த்தைக்காவது அர்த்தத்தில் சந்தேகம்வந்தால் அந்தவார்த்தைகளுடன் சம்மந்தப்பட்டிருக்கிறவார்த்தைகளின் அர்த்தத்தைப்பார்ப்பதைக்கொண்டுமுதலில் சந்தேகம்வந்த வார்த்தையின் அர்த்தத்தைச் சரியாக நிதானித்துக்கொள்ளலாம். (523-ibid.)

Words of Instruments to be construed strongly against the party employing them.

§ 68. ஒரு தஸ்தாவேசில் கண்டிருக்கும் வார்த்தைகளின் அர்த்தத்தில் சந்தேகம் வரும்பொழுதெல்லாம் அந்த தஸ்தாவேசை எழுதிக்கொடுத்தவனுக்கு மிகவும்விரோதமான அர்த்தத்தைத்தான் செய்யவேணும். (529-ibid.)

Consequence of surplus age, harmless.

§ 69. ஒரு தஸ்தாவேசில் வேண்டியதைவிட அதிகமாக எழுதப்பட்டிருந்தால் அந்த நிமித்தத்துக்காக அந்த தஸ்தாவேசு றத்தாகமாட்டாது. ஆனலந்தப்பத்திரம் மைற்ற எனங்களில் செல்லுபடியுள்ளதாக இருக்கவேணும். (559-ibid.)

Consequence of false discription, harmless.

§ 70. ஒரு தஸ்தாவேசில் ஒரு இடத்திலிருக்கிறவார்த்தைகள் பொய்யானுல் நிஜபாகங்கள் றத்தாகமாட்டாது.—(562-ibid.)

Consequence of express mention.

§ 71. ஒரு தஸ்தாவேசில் தெளிவான வக்கணைகளிருந்து தேயானுல் அந்தத் தெளிவான வார்த்தைக்குவிரோதமான வியாக்கியானம் எவ்வளவும் செய்யக்கூடாது. (581-ibid.)

Consequence of words alluded to in any writing.

§ 72. ஒரு தஸ்தாவேசில் மற்றொரு தஸ்தாவேசு அல்லது இடத்திற்சொல்லியிருக்கிற வார்த்தைகளைப் பிரஸ்தாபித்திருந்தால் அப்படிப்பிரஸ்தாபிக்கலான வார்த்தைகளானது அந்தப்பிரஸ்தாபஞ்செய்கின்ற தஸ்தாவேசிலேயே கண்டிருந்தாலெப்படியோ அப்படியே செல்லுபடியுள்ளதாகும். (599-ibid.)

Parol evidence inadmissible to contradict written.

§ 73. ஆதரவில்கண்டிருக்கிற வக்கணைக்கு விரோத வக்கணையை ருசுப்படுத்த வாய்மொழி ருசுவை அங்கிகரிக்கவே கூடாது. (Br-V-D-16.)

A Bill to perpetuate testimony may be filed in Courts by persons in possession of property.

§ 74. எந்த மனிதனுவது யாதொரு சொத்துமுதலானதை யனுபவித்துக் கொண்டிருக்கையில் அந்தச்சொத்து அல்லது பாத்தியம்முதலானதைப்பத்தி யாதொருவழக்கு வரும்போலும், அப்பொழுது தன்னனுபவம்முதலானபாத்தியங்களை ருசுப்படுத்தவேணுமானுல் தன்சாட்சி வியசனம் பயித்தியம்முதலான நோவுள்ளவனுகவாவது, தேசப்பிரஷ்ட்டனுகவாவது இறந்தாவது போவான்போலும் நினைத்தால் அவனுடைய ருசு நீடித்திருக்கும்பொருட்டு நியாயசபையில் ஒரு மனுக்கொடுக்கலாம். அந்தப்படி கோர்ட்டார்

வாக்குமூலங்களை வாங்கிவைக்கவேண்டும். சொத்தனுப விக்காதவர்களுக்கு இந்தப்பாத்தியமில்லாமலிருந்தது. ஆகிலும் மகாருணியவர்களுடைய ஆளுகையின் ரு-கூ-வது ஆண்டுகளில் பிறந்தசட்டத்தின் 69-வது அத்தியாயத்தில் "சான்சறி" (Chancery) கோர்ட்டில் மனுக்கொடுக்கிற எல்லா மனிதர்களுக்கும் அந்தப்பாத்தியமுண்டென்று இடங்கொடுக்கப்பட்டிருக்கின்றது. (சான்சறி) கோர்ட்டுக்கொப்பான அதிகாரமுடைய கோர்ட்டு இண்டியாவில் இல்லை. இருந்தால் நன்மையாகவிருக்கும். (N-509-510.)

This privilege extended to all persons in chancery.

CHAPTER II. அத்தியாயம் உ.

SECONDARY EVIDENCE. மத்தியம் ருசு.

Secondary evidence when admissible.

§ 75. உத்தமமான ருசுவைக் கொண்டுவரக்கூடவில்லையென்று கோர்ட்டாருக்குத் திருப்தியாகும்படி ஒருவன் ருசுப்படுத்தினலொழிய அந்தச்சங்கதிக்கு மத்தியம்மான ருசு அங்கிகரிக்கப்படவேமாட்டாது. அந்த ஆதரவு போக்கடிக்கப்பட்டுப்போச்சுதென்றுவது, பரிகரிக்கப்பட்டுப் போச்சுதென்றுவது, எதிரிகளுடைய கையிலிருக்குதென்றுவது, ருசுவாகவேண்டியதுடன் போக்கடிக்கப்பட்டுப் போயாவது, பரிகரிக்கப்பட்டுப்போயாவது இருந்தபட்சத்தில்அதைப்பத்தி அதை நம்புகிற கட்சிக்காரன் செவ்வையாகத் தேடிப் பார்த்தானுவென்றும், எதிரிகையில் போயிருந்தால் அந்த ஆதரவைக்கொண்டுவரும்படி எதிரிக்கி நோட்டீசு கொடுபட்டிருக்குதாவென்றும் கோர்ட்டார் விசாரிக்கவேண்டும். இந்தவிசாரணை சூரியைச்சார்ந்ததல்லா. ஜட்ஜியைச்சார்ந்தது. தகுந்தபடி தேடினுனென்பதை தீர்மானிப்பதில் அந்த ஆதரவு தேடக்கூடுமான சுவபாவத்தையுடையதாவென்பதையும் ஜட்ஜி யோசிக்கவேண்டும். ஒருவன் தன்லெட்டரின்பேரில் வந்த போஷ்ட்டு முத்திரையுடைய கவற் போக்கடிக்கப்பட்டுப் போச்சுதென்றும், அதைத்தேடிப்பார்த்தும் அகப்படவில்லையென்றுஞ்சொன்னல் அது நம்பக்கூடிய சுவபாவத்தை யுடையது. மைற்றெருவன்

தன்வீட்டுச்சீட்டைத் தேடினேன் என்றால் அதை ஒப்புக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், அந்த ஆதரவு ஒருவன் சகஜமாய் போக்கடிக்கக் கூடுமானதல்லா. (1855ஆ II வது-ஆக்ட்டு-36-வது-பிரிவு-B-465.)

Former depositions inadmissible, when the witness is alive, sane and within the Queen's power.

§ 76. ஒருசாட்சிக்காரன் உயிருடனும் விவேகத்துடனும் இருக்கும்பொழுது அவனை விசாரணைக்கு ஆஜர்ப்படுத்தாமல் அவனுடைய முந்தியவாக்குமூலத்தை ருசுவாக அங்கிகரிக்கக்கூடாது. அந்தச்சாட்சிக்காரன் எதிரிகளுடன்சேர்ந்துக் கொண்டிருப்பதாயும், ஆனதால் பொய்சொல்லுவானென்றும் கட்சிசொல்லும்பொழுது அந்தச்சாட்சிக்காரன் பொய் சொன்னால் அதைப்பொய்யென்று ரூபிக்கும்பொருட்டு அந்த முந்தியவாக்கு மூலத்தை தாக்கல்செய்யலாம். (N-501.) சாட்சிக்காரன் தூரதேசத்தில் இருந்தால் கம்மிஷன்மூலமாய் விசாரிக்கலாம். 1859ஆ VIII வது ஆக்ட்டு-175.) மகாராணியவர்களுடைய அதிகாரத்துக்கு வெளியேபோன சாட்சியினுடைய வாக்குமூலத்தையவன் உயிருடனிருந்தாலும் தாக்கல் செய்யலாமென்று நான் நினைக்கிறேன். இதற்குவிரோதமாக ஒரு கட்சியுண்டு. அதாவது, ஒருவன் ஒரு சாட்சியினுடைய முந்திய வாக்குமூலத்தை தாக்கல்செய்யவேணுமென்கிற அக்கரையினால் அந்த வாக்குமூலத்தையெழுதிவைத்த சாட்சிக்காரனை உள்கையினாலாவது, மோசமாகவாவது, பெலாத்காரமாகவாவது, மகாராணியவர்களுடைய விரோதிகளுடைய தேசங்களுக்கு அனுப்புவது சாத்தியமானதால், அந்தப்படி செய்தால் ஜனங்கள் லா-வை ஏய்க்கிறதாகும். ஆனதால், உயிருடனிருக்கிற ஒருசாட்சி விரோத இராசாங்கத்திலிருக்கிற முகாந்தரத்தால் அவனுடைய முந்திய வாக்குமூலத்தை அங்கிகரிக்கக்கூடாதென்று கட்சிவரலாம். இந்தக்கட்சிக்கு விரோதமாய் எனக்குத் தோற்றுகிறதாவது, ஒரு சாட்சிக்காரன் எதார்த்தத்தில் விரோதிகளுடைய தேசத்தில் போயிருக்கலாம். அந்தவிஷயத்தில் தர்ம்மமாயும் கட்டாயமாயும் அந்தச்சாட்சியினுடைய முந்தியவாக்குமூலத்தை ருசுவாக அங்கிகரிக்கவேவேண்டும். ஆனால் மேலேசொன்னபடி எந்தக்கட்சிக்காரனாவது, ஒருசாட்சியை மோசமாகவாவது,

பெலாத்காரமாகவாவது, உள்கையாகவாவது, விரோத தேசத்துக்கனுப்பிவிட்டால் உத்தம ருசுவைக்கொண்டுவராமல் மறைக்கிறவனுக்குவிரோதமாக எல்லா ஊகங்களும் செய்யப்படுமென்று இதின் 14-வது பிரிவிற்சொல்லியிருக்கிற படிக்கும், (பிரசம்ஷன்) என்கிற பிரகரணத்திற்சொல்லியிருக்கிறபடிக்கும், அந்தக்கட்சிக்காரனுடைய கட்சியை ருசுவை அழுத்தின சந்தேகத்துக்குட்படுத்தலாம். ஆனதால், மோசம் ருசுவாகிறவனைக்கும் மகாராணியவர்களுடைய விரோதிகளின் தேசத்திலிருக்கிற சாட்சிகளுடைய முந்திய வாக்குமூலத்தை ருசுவாக அங்கிகரிக்கலாமென்று எனக்குத் தோற்றுது.

§ 77. உத்தமமான ருசு வராததுக்கு சமாதானஞ்சொல்லியாகிவிட்டதென்றும், ஆனதால் மத்தியம் ருசு அங்கிகரிக்கலாமென்றும் கோர்ட்டார் ஒருதடவை தீர்மானித்துப்போட்டால் அந்த மத்தியம்ருசுவுக்குப்பரிமிதி இவ்வளவென்று நிறுக்கில்லை. மத்தியமருசு எவ்வளவு தாழ்ந்த பரிமிதியுள்ளதாகவிருந்தாலும் நிமித்தமில்லாமல் அந்த ருசுவை அங்கிகரிக்கலாம். (B-466.) ஆனல் மேஸ்தர் ஷ்டார்க்கி துரையவர்கள்சொல்வதில், எந்தருசுவைக் கோர்ட்டுக்குக்கொண்டுவரக்கூட இல்லையென்று ஒருவன் ருசுப்படுத்துகிறனே அவனதற்கு அடுத்த கீழ்ப்படியிலுள்ள மத்தியம்மான ருசுவைக் கொண்டுவரவேணுமென்று சொல்லுகிறர்கள். மேஸ்தர் பெஸ்ட்டுதுரையவர்களுடைய புஸ்தகத்தின் 466-வது பிரிவின் (S) நோட்டில் அடியில்கண்டபடி எழுதியிருக்கின்றது. அதாவது, "அமெரிக்காவின் சிலஇடங்களில் அடியில்கண்ட மத்தியஸ்தமான ஒருமார்க்கத்தை இந்த விஷயத்தில் அனுஷ்ட்டிக்கிறர்கள். அநேகம் ஆதாரங்களைக்கொண்டு பார்ப்பதில் அமெரிக்காவின் சாஸ்திரம் இப்படியிருப்பதாகத் தோற்றுகின்றது. அதாவது, விவகாரத்தின் சுபாவத்தைப் பார்ப்பதினலேயே கட்சிக்காரன் கொண்டுவந்திருக்கிற மத்தியம்ருசுவைப்பார்க்கிலும் அதிக உத்தமமான ருசு இருக்கிறதென்று தெரியவந்தால், அந்தஉயர்ந்த ருசுவைக் கொண்டுவரும்படி கட்சிக்காரனுக்கு உத்தரவுகொடுக்க வேண்டும்." "அப்படித் தெரியவராவிட்டால் அப்படிக்கி அதிக உத்தமமான ருசு இருக்குதென்று ஆட்

There are no degrees of secondary evidence.

சேபிக்கிறவன் அது இருப்பதை ருசுப்படுத்துகிறதுந் தவிர மேற்சொன்ன தாழ்ந்த ருசுவைக் கோர்ட்டில்கொண்டுவந்த பொழுதே விவாதப்படுகிற அதிக உத்தமமான ருசுவிருந்தது தன்னெதிரிக்குத் தெரியுமென்பதையும் ருசுப்படுத்த வேண்டும்." உ-ம். ஒருவனைத்தெண்டித்ததீர்ப்பு பரிகரிக்கப் பட்டுப்போனவிஷயத்தில் அந்தத்தீர்ப்புப்பிறந்ததைக்குறித்து வாய்மொழி ருசுவை அங்கிகரிக்கமாட்டார்கள். ஏனென்றால், ஒவ்வொருதீர்ப்புக்கும் நகல் எக்ஸ்ச்சகர் என்னும் மேலான்கோர்ட்டுக்குப் போகவேணுமென்று லா-விருப்பதாலும், அந்தவிடத்திலிருந்து நகல்பெற்றுவந்து தாக்கல்செய்யலாமாகையாலுந்தான்.

Where evidence of a primary nature not required.

§ 78. ஒருமலையின்பேரிலாவது, ஒரு கல்லறையின்பேரிலாவது எழுத்து வெட்டியிருக்கின்ற சங்கதியைப்பத்தியும் ஒரு சுவரின்பேரில் பலபத்தால் எழுதியாவது, காகிதங்களை ஒட்டி அதின்பேரில் எழுதியாவது இருக்கின்ற சங்கதிகளையும், பப்பளிக்கு ஆபீசுகள், நியாயஸ்தலங்கள், இதுகளின் றிகார்ட்டில் அடங்கியிருக்கின்ற சங்கதிகளையும் ருசுப்படுத்தும்பொழுது உத்தமமான ருசுவையே கொண்டுவரும்படி சொல்லவேண்டியதில்லை. எக்ஸ்திருக்ட்டு முதலான மத்தியமமார்க்கத்தால் ருசுப்படுத்தச்சொல்லலாம். (B - 467 - 468.)

SECTION I.—பிரிவு க.

HEARSAY EVIDENCE.—கேழ்வி ருசு.

Hearsay not receivable in general.

§ 79. எந்த குடிசியால் நடவடிக்கையிலும் கேழ்வி ருசு அங்கிகரிக்கப்பட்வே மாட்டாதென்பது ஒரு பொதுவான விதியாகவிருக்கின்றது. இதானது உபயோகமானதென்று வழக்காளிகளுடைய மனதில் எத்தனை படுமோ, அத்தனை உபயோகமற்றதென்று ஜட்ஜிகளின் புத்தியில் படும். கேழ்வி ருசுவை யேன் அங்கிகரிக்கக்கூடாதென்றால், தான் கேழ்விப்பட்டதாய் சாட்சிக்காரன் சொல்லுகிற சங்கதியின்மூலத்தைக்குறித்து எதிரி றத்துசவால்போட இடமில்லாமற்

போகிறது. மேலும், அந்தமூலம் அந்தச்சாட்சியின் ஞானத்தில் பிரமாணத்தின் முத்திரையுடன்வந்ததல்லா. இதல்லாமலும், கேழ்விசாட்சியை அங்கிகரித்து நம்புகிறதானல், துணிச்சலுடன் பொய்யைச்சொல்லுகிற ஒரு சாட்சியின் கடாட்சத்தில் உலகத்தார் யாவருடையவும் பாக்கியம், கீர்த்தி, தேகம், சுவதந்தரம், முதலானதுகள் மடிந்துபோவது மட்டுமல்லா. அந்தச்சாட்சிக்காரன் இராசதெண்டனைக்காவது, தைவதெண்டனைக்காவது உள்ளாகாமல்தானே, கோர்ட்டாரையும் தன் வாக்குமூலத்தால் நொந்துபோகவேண்டிய கட்சிக்காரனையும் ஏச்சுப்போட்டு அவனுடைய ருசுபொய்யானதென்று நியாயாதிபதிகளுக்குத் தெரியச்செயே அவனுடைய அந்த அயோக்கியமான ருசுவை நம்பும்படியான கட்டாயத்தைக் கோர்ட்டாருடைய தலையின்பேரில் வைத்துப்போட்டுப் போய்விடுவான். அது மிகவும் வியசனகரமாயும், நிதியுண்டுபண்ணினவர்களுக்கு ஒரு பரிகாசத்தை யுண்டுபண்ணத்தக்கதாயுமிருக்கும். எப்படியென்றல், A யை B கொலைசெய்தானென்று C தனக்குச்சொன்னதாய் D கேழ்விருசுச்சொல்லி அதைக்கோர்ட்டார் அங்கிகரித்து நம்பவேண்டியது கட்டாயமாயிருந்தால் அது மேற்கண்டமுகாந்தரத்துக்குத் திருஷ்டாந்தரமாகவிருக்கும். அது எவ்வாறென்றல், பிரஸ்தாப கொலை நடந்ததென்று D கேழ்விருசுச்சொல்லி அதற்காக B யையும் கோர்ட்டார் தூக்கிப்போட்டான பின்பு A இறந்துபோகவேயில்லையென்று கோர்ட்டாருக்குத் திருப்தியாய் ருசுவாகும்படி A யே கோர்ட்டில் அஜராலுங்கூட D யைப் பொய்சாட்சிக்காகத் தெண்டிக்க இடமில்லை. ஏனென்றல், D சொன்னதெல்லாங்கூடி A யின் கொலைசங்கதி தனக்கு C யின் முகாந்தரமாய் மட்டுந்தெரிந்தபடியாலும், C யின் வார்த்தையைத் தான் நம்பி அதைமட்டும் கோர்ட்டில் சொன்னபடியாலும், தன்னைப் பொய்சாட்சிசொன்னவன்போல் தெண்டிக்கக்கூடாதென்று D சொல்வான். அதைக்கோர்ட்டார் ஒப்பவேண்டியதுதான். ஆனதால், D க்கி இராசதெண்டனை கிடையாது. அவனுக்கு தைவதெண்டனையில்லாமல் எப்படிப்போகுமென்றல், தான் தைவத்தின்பேரில் பிரமாணஞ்செய்து சொன்னதெல்லாங்கூடி விவாதக்கொலை

Dangers resulting from admitting hearsay as evidence.

நடந்ததுண்டென்று "C தனக்குச்சொன்னதாக" மட்டு மானதால் D யை பொய்ப்பிரமாணத்துக்காக தைவம் தெ ண்டிக்கமாட்டாது. இந்த கேசில் கோர்ட்டார் B யை தூக்கிப்போட்டதப்பு நியாயமாய் யார்பேரில்வரும். கேழ் விருசுவை அங்கிகரிக்கலாமென்று சட்டஞ் செய்தவர்கள் பேரில்வரும். இதுமுதலான காரணங்களுக்காக கேழ்விருசு வை அங்கிகரிக்கக்கூடாது. (B-476-477.)

Exception. § 80. இப்படியிருந்தாலும் சிலவிஷயங்களில் கேழ்விருசு வை அங்கிகரிப்பது யுக்தமாயும், சில விஷயங்களில் கட் டாயமாயும், சில விஷயங்களில் நம்பத்தக்கதாயுமிருக்கின் றது. அப்படிச்செய்யாவிட்டால் அநேகம் பொல்லாங்குக ளும் கலக்கங்களும் துஷ்ட்ட சிட்சையில்லாமையும் உண் டாகும். ஆனதால் அவ்விஷயங்களில் கேழ்விருசுவை அங் கிகரிக்க லா-சம்மதிக்கின்றது. அவைகளாவன, 1 ஜனங்க ளுக்குப் பொதுவான லாபவிஷயம், 2-வம்சபரம்பரை. 3 சாகுங்காலையிற்சொல்லிய வார்த்தைகள். இவைகளை அந்த வரிசைப்படிக்கி இதினடுத்த பிரிவுகளில் எழுதுகிறேன்.

Hearsay receivable in matters of public Interest. § 81. 1-ஜனங்களுக்குப் பொதுவான லாபவிஷயங்களில் கேழ்விருசுவை அங்கிகரிக்கலாம். ஏனென்றால், ஒரு ரோட் டையாவது, கோயிலையாவது, தடாகம் முதலானதையாவ து, ஜனங்கள் நீண்டகாலமா யனுபவித்துக்கொண்டுவருவா ர்கள். அதற்கு ஜனங்கள் முதல்த்தரமான ருசுகொண்டுவர வேணுமானல் அப்படிப்பட்ட ருசுவைக் காப்பாத்திவைக் கும்படிக்கி ஒவ்வொருமனிதன் கையிலும் தஸ்தாவேசுயிரு ப்பது அசாத்தியம். மேலும், அந்தச்சொத்துகள் பொது வாய் ஜனங்களுக்குச் சொந்தமென்று எல்லாருக்கும் பிர சித்தமாய் தெரிந்த விஷயமானதாலும், அப்படியதுகள் பொதுவாருதென்று விவாதமுண்டாவதற்கு நீண்டகாலத் திற்குமுன் முதல் யாவருஞ்சொன்னது நிர்நிமித்தமாய்ப் பொய்யாகவிராதாகையாலும், அதுகள் பொதுவாருக்கு ஆதியில் எவ்விதமாய்க் கிடைத்துதென்பதை ருசுப்படுத் தச்சொல்லுகிறவழக்கு நீண்டகாலத்திற்குப்பின் வரும்பொ ழுதெல்லாம் அந்தச்சொத்து ஆதியில்கிடைத்த மார்க்கத் தை ருசுப்படுத்துவது அசாத்தியமாகையாலும், ஜனங்க

ளுக்குப் பொதுவானவிஷயங்களில் கேழ்விருசுவை அங்கி கரிக்கலாம். ஆனல் எப்பொழுதும் பொதுவாருக்கும் அவ ர்களுடைய எதிரிகளுக்கும் விவாதமுண்டாகிவிட்டதற்குப் பின்பட்டகாலத்தில் அந்தச்சொத்துப் பொதுவாருதென்று ஒருவன்சொன்னதைக் கோர்ட்டுக்குவருகிற சாட்சி கேழ் விப்பட்டிருந்தால் அது உபயோகமான ருசுவாகமாட்டா து. அப்படியந்தச் சாட்சிக்காரன் கேழ்விப்பட்டது விவா தத்தோற்றமுண்டாவதற்கு முன்னுடியிருக்கவேண்டும்.— (B-480.)

§ 82. 2-பலானவனுக்குப் பலானவன் பலானவிதத்தில் பெந்துவென்கிற சங்கதி. 1-பலானவன் பலான தேதியில் இறந்தான். பலான தேதியில் பிறந்தான் என்பது. 2-இது முதலான விஷயங்களிலும் கேழ்விருசுவை அங்கிகரிக்கலா ம். இதுகளில் நேர்ருசுவை அபேட்சிப்பது அசாத்தியமா யும் அசந்தர்ப்பமாயுமிருக்கும். ஒவ்வொரு மனிதனும் பிற ந்த தேதியையும் இறந்ததேதியையும் மைற்றயாவரும் ஞா பகத்தில் வைத்துக்கொள்வது ஒவ்வொருவனுக்கும் அனு வசியமாயும் அசாத்தியமாயுமிருக்கும். சில இடங்களில் மனிதர்கள் பிறந்ததைக்குறித்து ஜாதகம் வைப்பதுண்டு. அது அந்தந்த மனிதனுடைய தாய்தக்தைக்குமட்டும் தெரி யும். இது எல்லாருக்கும் அப்படியே தெரியவேண்டியதல் லா. அப்படியே இறந்துபோனதுகளையும், விவாகங்களான தையும் சில கவரன்மெண்டு ஆபீசுகளிலாவது, மதவிஷய ஆபீசுகளிலாவது பதிந்துகொண்டிருந்தாலும், பதிந்தவர்க ளுக்குச் சிலவிசை தெரிந்தாலும் மைற்றவர்களுக்குத் தெ ரிந்திருக்க வேண்டுமென்பது அசாத்தியமான காரியமாக விருக்கின்றது. ஐதருக்கு டிப்புசுல்தான் குமாரனென்பது ஜகப்பிரசித்தமாய்த் தெரிந்தகாரியம். ஆனல் அதைப்பற்றி நேர்ருசு அபேட்சிப்பது அசாத்தியமாயும் அசந்தர்ப்பமாயு மிருக்கும்.

Hearsay receivable in matters of Pedigree.

§ 83. 3-ஒருவன் இறந்துபோகும்பொழுது சொன்ன வார்த்தைகளைக்குறித்துக் கேழ்விருசு அங்கிகரிக்கலாம்.— இதினல் இவ்விடத்தில் அறியவேண்டியதென்னவென்றால், ஒருவன் இறந்துபோகும்பொழுது தன்னைக் கொன்றவன்

In dying declarations also hearsay is receivable.

பலானவனென்று சொல்லுகிறவிஷயத்தில்மட்டுந்தானென் பதாம். ஏனென்றால், ஒருவன் இறந்துபோகும்பொழுது எப்படியும் அவன் தைவத்தை மிகவும் நினைத்து தைவத்தி னிடத்தில் மிகவும் பயத்துடன் நிஜம்சொல்லுவானுனதால் அவனுடையவார்த்தைப் பிரமாணத்தின்பேரில் வந்ததற் குச் சமானமாகும். ஆனதால் தானிந்தவிஷயத்தில் கேழ்வி

Exception. ருசு அங்கிகரிக்கலாம். ஆனால் அப்படி இறந்துபோகிறவன் தைவத்தினிடத்தில் சுவல்பங்கூடப் பயமில்லாத அல்லது தைவவிஷய ஞானம் சுவல்பங்கூட இல்லாத பாலனுகவிருந் தால் அவனுடைய வார்த்தையைக்குறித்துக் கேழ்விருசு அங்கிகரிக்கக்கூடாது. (B-479-480-481-487-)

CHAPTER IV.—அத்தியாயம் ச.

Admissions Against Interest in Civil Matters.

சிவில்வழக்குகளில் தன் லாபத்துக்கு விரோதமாய் ஒருவன் ஒப்புக்கொள்ளுதல்.

Admissions against interest. § 84. ஒருமனிதன் தன்னுடைய லாபத்துக்கு விரோத மாய் வாய்மொழியாகவாவது, எழுத்துமூலமாகவாவது, மைற்றும் எவ்விதமாகவாவது ஒப்புக்கொண்டிருந்தால், அந்த ஒப்புதலை றத்துசவாலாவது, பிரமாணமாவது, இல் லாமல்தானேநல்லருசுவாக அங்கிகரிக்கலாம். (N-170-171)

Meaning of. தன் லாபத்துக்கு விரோதமென்கிற வார்த்தைக்கி அர்த்த மென்னவென்றால், தன்னுடைய பணத்துக்காவது தன்பா த்தியதைக்காவது மானத்துக்காவது இதுமுதலான மைற் றும் எவ்விதங்களுக்காவதுவிரோதமென்றறியவேண்டியது. (N-176.) இவ்வித ருசுவை அங்கிகரிக்கவேண்டியது. அந் தந்த வழக்கின் சாரும்சத்திற்கு மெத்தவும் அவசரமாக

Under what circumstances such admission receivable. விருந்தால்மட்டுந்தான். (N-179.) இது சங்கதிக்கி இதை விட அதிக உத்தமமான ருசுவிருக்கும்பொழுது கூடாது. (180-ஷை) எந்தமனிதனும் தனக்கு நஷ்ட்டம்வரும்படி எந்தவார்த்தையையுஞ் சொல்லமாட்டானென்கிற தத்து வத்தின்பேரில் இந்த நூல் ஏற்பட்டுது. (B-501.)

§ 85. ஒருவன்தன் லாபத்திற்குவிரோதமாய் ஒப்புக்கொள்வதானது ஒருதஸ்தாவேசின் உண்மைக்கு மத்தியம்மான ருசுவாகவிருந்தாலும், ஒப்புக்கொள்ளுகிறவன்மட்டில் அந்த மத்தியம்மான ருசுவை ஒருஆட்சேபனையுமில்லாமல் அங்கிகரிக்கலாம். (B-474-478.)

Admissions received, as against party makingthem.

§ 86. ஒரு தஸ்தவேசு தகுந்த ஷ்டாம்பில் பிறக்கவில்லையென்கிற காரணத்தால் கோர்ட்டில் தாக்கலாகக்கூடவில்லை. ஆனாலந்த ஆதரவுபிறந்ததை உபயவாதிகளும்ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகிலும் அதில் கண்டிருக்கிற சங்கதிகள் பலானதென்று அதையெழுதிக்கொடுத்தவன் ஒப்புக்கொண்டால் அந்த ஒப்புதலை அவனுக்குவிரோதமாய் மத்தியம்மான ருசுவாக அங்கிகரிக்கலாம். அப்படியங்கிகரிக்கக்கூடாதென்று முதலில் "கர்னி" என்கிற ஜட்ஜீ தீர்மானித்தார். ஆனாலந்த தஸ்தவேசு கோர்ட்டில் தாக்கலாகாவிட்டாலும் அதையெழுதிக்கொடுத்தவன் ஒப்புக்கொள்ளுகிறபடியினாலே அந்த ஒப்புதலை நியாயமாய் அங்கிகரிக்கத்தான் வேணுமென்று "பார்க்" "ஆல்டர்சன்" "கர்னி" "ரூல்ப்" என்கிற ஜட்ஜீகள் ஒருமைப்பாடாய் தீர்மானித்தார்கள்.— ஆனால் இவ்வித ஒப்புதலின் யோக்கியதை எப்படிப்பட்டதென்பதை அந்தந்த வியாச்சியத்தின் சங்கதிக்குத்தக்கபடி ஜூரி யோசிக்கவேண்டியது. உ-ம். ஒருவன் தன்வழக்குக்குக் காலநிர்ணயசட்டத்தின் தோஷமுண்டாகாமலிருக்கும்பொருட்டு பிரதிவாதியால் தனக்கு வரவுவந்திருப்பதாய் ஒப்புக்கொள்வான். இச்சமயங்களில் அந்த ஒப்புதலுக்கு எத்தனை நம்பிக்கை கொடுக்கவேணுமென்பதை ஜூரி யோசிக்கவேண்டுமேயொழிய அவ்வித ஒப்புதலை அங்கிகரிக்கமாட்டோமென்று சொல்லக்கூடாது. (B-507.)

Admissions receivable to prove the contents of any deed.

§ 87. ஆனால் ஒருதஸ்தவேசு பிறந்ததேஉண்டாவென்றுமில்லையென்றும் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கையில் அப்படிக்கொத்த தஸ்தாவேசு ஒன்றுபிறந்ததென்றும் அதைத்தான் மைற்றொருவனுக்கு எழுதிக்கொடுத்ததாயும் ஒருவன் ஒப்புக்கொண்டால் அந்த ஒப்புதலை அங்கிகரிக்கவேகூடாது. உ-ம். ஒருசொத்தில் A க்கிருக்கிற முன்பாத்தியதையை அழிக்கவேணுமென்கிற கருத்துடன், B அதற்

Admissions not receivable to prove execution of any bond.

கும் முந்தி ஒரு ஆதரவு அதேசொத்தின்பேரில் C க்கி எழுதிக்கொடுத்ததாய்ச்சொல்லுவான். அப்பொழுது அவனைப் புதலே அங்கிகரித்தால் அந்த தஸ்தவேசு கோர்ட்டுக்கு வராமலும், அதின்சாட்சிகளுக்குப் பிரமாணம் றத்துசவால் முதலானதில்லாமலும் போகிறது. அப்படி இல்லாவிட்டால் விசாரணையில் றத்துசவால் முதலானதால் ஒருக்கால் அந்தப் பத்திரம் பொய்யாகிவிடலாம். இந்தப்பிரயோஜனம் எதிரிக்கி இல்லாமல் போய்விடும். ஆனதால்த்தான் ஒரு தஸ்தவேசில் கண்டிருக்குஞ் சங்கதிக்கு ஒப்புதலே அங்கிகரித்தாலும் அங்கிகரிக்கலாமேதவிர ஒரு ஆதரவு பிறந்ததற்குக்கூட ஒப்புதல்வாங்கக்கூடாது. (B-509.)

CHAPTER V.—அத்தியாயம் ரு.

CONFESSIONS. கிரிமினல் வழக்குகளில் ஒப்புதல்கள்.

Reasons for which confessions are not to be received, or to be received with caution.

§ 88. சிவிலில் எப்படியோ அப்படியே கிரிமினலிலும் கைதியின்வாயினால்குற்றத்தைத்தான் செய்ததுண்டென்று ஒப்புக்கொண்டால்து குற்றம்நடந்த சங்கதிக்கி உத்தமமான ருசுவென்று உலகத்தில் நீண்டகாலமாய் ஒரு அபிப்பிராயமிருந்துவருது. ஆனால் இங்கிலிஷ் லாயர்கள் கிரிமினல் வழக்கில் விசேஷமாய் பெரியகுற்றங்களின் விஷயத்தில் கைதிகளுடைய ஒப்புதலே ஒப்புக்கொள்ளவே கூடாதென்று அநேகம் கட்சிகள் சொல்லுகிறார்கள். அவைகள் மிகவும் பச்சாத்தாபம் பூததயையுடைய யாவத்துப்பிறுணிகளும் மெச்சுக்கொள்ளும்படியாயிருக்குது. அதற்காக யாவரும் அந்த லாயர்களுக்கு நன்றியறிந்தவர்களாயுமிருக்கவேண்டும். குற்றஞ்செய்தவனைத் தெண்டனைசெய்வதைப் பார்ப்பதுமிகவும்சந்தோஷகரந்தான். ஆனால் குற்றமைற்றவனைத் தெண்டனைசெய்வதைப் பார்ப்பதினாலுண்டாகும் வியசனத்துக்கு அளவில்லை. ஆனதால், ("It is safe to err in acquitting than punishing") என்று (N-300) லா-விருக்கின்றது. ஆனதால் ஒப்புதல்விஷயமாய் பெஷ்ட்டுதுரையவர்கள் சொல்லியிருப்பதை யாவரும் செவ்வையாய் மனதில் கெட்டிசெய்து கொள்ளவேண்டும். அதை அடியில் வரிசையாகவே எழுதுகிறேன். (B-95.)

§ 89. ஒருவன் நித்திரையிற் சொல்லும் வார்த்தைகளில் அவன் ஏதோ ஒருகுற்றத்தைச் செய்திருந்ததாயும் அதை அவன் ஒப்புக்கொள்ளுகிறது போலுமிருந்தாலும் அந்த வார்த்தைகளையொரு ஒப்புதலாக அங்கிகரிக்கக்கூடாது. ஏனென்றால், அப்பொழுது அந்த மனிதனுக்குப் புத்தியின் கோசாரம் கிரமமாகக்கிடையாது. இதைப்பத்தி பெஷ்ட்டு துரையவர்களுடைய புஸ்தகத்தின் 511-வது பிரிவின் (U-X) நோட்டுகளிற்சொல்லியிருப்பதாவது, (Kent) கெண்டுதேசத்தில் 1839ஸு இல் வந்த ஒருவழக்கில் ஜட்ஜியாகிய (Tindal) "டிண்டால்" துரையவர்கள், இவ்வித ருசுவை அங்கிகரிக்கக்கூடாதென்று நினைத்தார்கள். (U) "நித்திரையில் பேசுகின்ற இந்த அதிசயமானது மிகவும் முக்கியமான ஒருகாட்டல் ருசுவாகவிருக்கும். சிலமனிதர்கள் தங்கள்காரியங்களை நித்திரையில் பிறுத்தும்படி அவ்வளவுதூரம் அவ்வியவஸ்தையான விவேகத்தை யுடைத்தாயிருக்கிறார்கள். மேலும், இது அவனுடைய சுவப்பனமேதவிர வேறில்லை. அது ஒருசுவப்பனமாகவேயிருந்தாலும் ஒருகடுமையான சந்தேகமாகவிருக்கின்றது." (B-511.) Statements during sleep not receivable.

§ 90. ஆனால் ஒருவன் மதுபானஞ் செய்தமயக்கத்தில் இருக்கையில் தன்லாபத்துக்கு விரோதமாய்ச் சொல்லுகிற ஒப்புதல்கள் ருசுவாக அங்கிகரிக்கப்படவேண்டும். ஆனால் அவனுடைய மயக்கத்தின் அளவு எவ்வாறுவிருந்துதென் பதை ஜூரி யோசிக்கவேண்டும். (511-B.) Those during intoxication receivable.

§ 91. தூக்கம்முதலான அவ்வியவஸ்தைகளில் சொல்லுகிற வார்த்தைகளின் விஷயமாய், "ஆர்ப்பத்நட்" துரையவர்களாற் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்ற சென்னபட்டணம் பவுசுதாரிகோர்ட்டு கிரிமினல் தீர்ப்புகளுடைய றிப்போர்ட்டு புத்தகத்தின் 61-வது பக்கத்தில் எழுதியிருப்பதை இங்கே வாசிக்கவேண்டும். அதாவது, "தாசிநாயக்கன் 1 நாச்சான் 2 வெங்கடாசலம் 3 தாண்டவராயன் 4 சொக்கன் 5 இந்த ஐந்து குற்றவாளிகளும் பெருமாள்நாயக்கன் என்ற ஒருவனை வேணுமென்று மனப்பூர்வமாய்க் கொலைசெய்ததாக 1834ஸு செப்ட்டெம்பர் மாசத்தில் விசாரிக்கப்பட்டார்கள். இறந்துபோனவன் கொலைசெய்யப்பட்டுசின்னபின்னம் செய்யப்பட்டு அவன்தலை ஒரு எலும் Mr. Arbuthnot's report.

புக்குன்றினடியிலும், அதற்கு நெடுந்தூரத்தில் மைற்ற தேகமுங்கிடந்துது." வெங்கடசாமி யென்பவன் இறந்து போனவனுடன் மனஸ்தாபமாக விருந்தபடியால் அவன் பேரில் சந்தேகம்வந்துது. அந்தக்குற்றத்தைச்செய்ததில்லை யென்று வெங்கடசாமி சொன்னது திருப்திகரமாக விராத தால், ஒரு அசலான் வீட்டில் அவனை மோகசூலில் வைக் கப்பட்டிருந்துது. அப்படி வைத்ததற்கு அடுத்துவந்த இரவில், அவனுடைய நித்திரையில் அடியில்கண்ட வார்த் தைகள்தவழி அவனுடையவாயிலிருந்து வந்துதுகள். அதி னல் அவனும் மைற்றக்குற்றவாளிகளும்சேர்ந்து ஒருகொலை செய்தது தெளிவாகத்தெரிந்துது. அவைகளாவன, (தாசா, கைகளைப்பிடித்துக்கொள். நாச்சான் தலையை வெட்டிப்போ டு-தாண்டவருயா, சொக்கா, வெங்கடாசலம், அவன் காலை ப்பிடித்துக்கொள்ளுங்கள்-வாருங்கள் தலையை எறும்புக்கு ன்றில் புதைத்துவிட்டுப் போவோம்.) இந்த வார்த்தைகள் மறுநாள் காலமே அதிகாரிகளுக்குத் தெரிந்தவுடனே வெ ங்கடசாமியைப் பாருவில்வைத்து, கொலைசெய்த குற்றத்தை யவன்பேரில் சாட்டினர்கள். அவன் உடனே குற்றத்தை ஒப்புக்கொண்டு தன் நித்திரையில் பிரஸ்தாபித்த ஐந்துபே ரையும் குற்றஞ்சாட்டினன். அவர்கள் பிடிபட்டவுடனே அப்படியே குற்றத்தை யொப்புக்கொண்டார்கள். வெங்க டசாமியும் நாச்சானும் விசாரணைக்கு முன் இறந்து போனர் கள். மைற்ற நாலுபேரும் முக்கியமாய் தங்களுடைய ஒப்பு தலினலேயே தூக்கிப்போடப்பட்டார்கள்."

Confessions tainted with illegality.

§ 92. இங்கிலிஷ் லா-வில் உறுதியாய்ச் சொல்லியிருக் கின்ற விதியாவது, எந்த ஒப்புதலானது குற்றவாளியின்தே கத்தின் பேரிற்செய்த சித்திரவதையினலாவது, பலாத்கா ரத்தினலாவது, பாருவில்வைத்த நிர்ப்பந்தத்தினலாவது, ஒப்புக்கொண்டால் க்ஷமையைக்கொடுப்போமென்கிற நம் பிக்கை வார்த்தைகளினலாவது வாங்கப்படுமோ. மேலும், ஒருகுற்றத்தை விசாரித்துத்தெண்டிக்க நியாயப்படி அதிகா ரமுடையவனுகவாவது, வேறேவிதமாகவாவது இருக்கின்ற மனிதனுடைய ஆக்கினையின் பேரிலாவது, சம்மதியின்பேரி லாவது, குற்றத்தை யொப்புக்கொண்டால் தெண்டனையை மன்னிக்கிறேமென்றும் ஒப்புக்கொள்ளாவிட்டால் தெண்

டனையை விதிப்போமென்றும் பயமுறுத்தி எந்த ஒப்புதலானது வாங்கப்படுமோ அதுவும் சர்வதேவ நியாயஸ்தலத்தில் ருசுவாக அங்கிகரிக்கப்படமாட்டாது. (B-532.)

Utility of confessions abused.

§ 93. ஒரு குற்றம்நடந்துதென்றும், அதைப்பலானவன் செய்தானென்றும் கோர்ட்டார் தெரிந்து கொள்வதற்கு, குற்றவாளியின் ஒப்புதல் மிகவும் உத்தமமான ருசுவாகவிருக்கும். இதினால்த்தான் குற்றவாளியின் வாயிலிருந்து ஒரு ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள எந்தநாளிலும் ஒருவிசேஷமான ஆசையுண்டாயிருந்துது. ஆனாலிதை யொருசாஸ்திரமாக வேற்படுத்தியது முதல், அதினால் பலப்பிரமாதங்களுண்டாச்சுது. அதாவது, குற்றஞ் சாட்டப்பட்டுப்போன ஒவ்வொரு மனிதனையும் உடனே குற்றத்தை யொப்புக்கொள்ளும்படி சித்திரவதைசெய்து நிர்ப்பந்தப்படுத்தி நயத்திலும் பயத்திலும் எவ்வாறாவது ஒப்புதல்களை வாங்கிப்போடுகிற கெட்டவழக்க முண்டாச்சுது. இந்த வழக்கம் இண்டியாவிலும் அதைவிட அதிகமாக இண்டியாவின் போலீசு ஆபீசர்களிடத்திலும் இருந்துது. அது சித்திரவதை கம்மிஷன் என்கிற சபையாரைக் கவரன்மெண்டார் ஏற்படுத்திய 1856௵ முதல் சுத்தமாய் நின்றுபோச்சுது. (N-239-240-241.)

Frequency of such practice in India.

Confessions however, voluntary and free to be received with caution.

§ 94. ஒப்புதலானது மனப்பூர்வமானதாக விருந்தால் அதை நல்ல ருசுவாக அங்கிகரிக்கலாம். (ஷி) ஆனால் மனப்பூர்வமானதாக விருந்தாலும் அதைக்கூடச்சரியாக நம்பிவிடக்கூடாது. மனிதர்கள் நம்பிக்கை, பயித்தியம் முதலானதாலும், தனக்குச் சுகத்தையாவது அன்னியருக்குச் சுகத்தையாவது உபத்திரவத்தையாவது உண்டாக்க வேணுமென்கிற ஆசையினாலும், லா-வாவது சங்கதியாவது தெரியாமையினாலும் மனப்பூர்வ ஒப்புதல்போல் பொய்யாக ஒப்புக்கொண்டு அதினால் கோர்ட்டார் பிசகான தீர்ப்புச்செய்து நிறைவேற்றும்படி செய்கின்றார்கள் என்பது நமக்கு அனுபவத்தினால் தெரியுது. ஆனதால் குற்றவாளியின் ஒப்புதலைக்கொண்டு மாத்திரம் விசேஷமாய்க் கொலைமுதலான வழக்குகளில் யாதொருதீர்மானமுஞ் செய்யவேகூடாதென்பது இங்கிலிஷ் லா-வின்முடிவாக விருக்கின்றது. (N-242.)

Practice of the English Judges in solemnly warning the accused against confessing guilt.

§ 95. ஒப்புதல்களின் விஷயமாய் பெஷ்ட்டு துரையவர்கள் சொல்லுவதை விசேஷமாய்க் கவனத்துடன் படிக்க வேண்டும். அதாவது, "கிரமமான பெரியநியாயஸ்தலங்களில் ஒப்புக்கொண்டாலும் அந்த ஒப்புதல்கூடத் தப்பாகி விடுகிறதென்று அநேகம் திருஷ்ட்டாந்தரங்களினால் தெரியவருகிறபடியினாலே, விசேஷமாய் பெரிய குற்றவிஷயங்களில் தகவல் ருசுவில்லாமல் ஒப்புதலைமட்டும் கொண்டு குற்றவாளிகளைத் தெண்டிக்கக்கூடாது." ஆகிலும் "ஒப்புக்கொள்ளுகிற நிமித்தியத்திற்காக மட்டும் மன்னுப்பாவது குறைந்த தெண்டனையாவது கிடைக்கமாட்டாதென்றும், ஆனதால் குற்றத்தை மறுதலித்துக் குற்றஞ்செய்யவில்லையென்று எதிர்வாதஞ் செய்தால் அதை ஒத்துக்கொள்வோமென்றும் குற்றவாளிகளுக்கு இங்கிலிஷ் ஜட்ஜிகள் எச்சரிக்காமல் குற்றவாளிகளின் ஒப்புதலை றிகார்ட்டில் சேர்க்கிறதேயில்லை." (B-530.)

Confessions by mistake of fact.

§ 96. ஒரு மனிதன் சங்கதியாவது லா-வாவது தெரியாமையினால்குற்றத்தையொப்புக்கொள்ளலாம். எப்படியென்றால்,ஒருவன் தன் பெண் திருடினாளென்பதற்காக அவளையடித்துக்கொண்டிருக்கையில், அதற்குமுன் அவளுண்டிருந்த விஷத்தின் ஏற்றத்தால் இறந்தாள். தான் அடித்ததால்த்தான் அப்படியவள் இறந்ததாகத் தகப்பன் நம்பினான். ஆனால் வைத்தியர்கள் அவளுடைய தேகத்தை யறுத்துப்பார்த்ததில், அவள் அடியினால் இறக்கவில்லையென்றும், விஷத்தின் ஏற்றத்தால் இறந்தாளென்றுந் தெரியவந்தது. இல்லாவிடில் தன்மகளைத் தானேகொன்றதாகத் தகப்பன் நிச்சயமாய் ஒப்புக்கொள்வான். அதினால் தகப்பனைக் கோர்ட்டார் கட்டாயமாய்த் தெண்டித்துமிருப்பார்கள். மேலும்,

Confession by mistake of Law.

ஒருவன் இரகசியமாய்த் திருடியிருக்க,இரகசியத்திருட்டுக்கு சுவல்ப தெண்டனையென்றும், வழிப்பறிமுதலிய கொடிய திருட்டுக்கு அதிக தெண்டனையென்றுமிருக்கிற லா-தெரியாமையினால் பொதுவாய்த் திருடினதாக ஒப்புக்கொள்வான். அதினால் அவனுக்கு வழிப்பறிக்குற்றத்திற்குள்ள தெண்டனையாகிவிடும். மற்றொருபட்சத்தில் ஒருவன் தன்னுடைய நியாயமானகட்சி அந்நியாயமென்று ஜட்ஜியின் புத்தியில்பட்டிருப்பதால், தன்கட்சியிலிருக்கின்ற நியாயத்

தையெடுத்துக்காட்டும்பொழுது இறைந்து பேசுவான்.— நியாயம்பேசும்பொழுது பேசுகிற இருவரும் சமமேதவிர வேறில்லே. ஆனல் எப்பொழுதும் அத்துமீறிப்பேசுவது மன்னிக்கத்தக்கதல்லா. அப்படி அத்துமீறி அவமானமாய்ப் பேசாமல் வார்த்தைகளை இறைந்து பேசினதற்காகமட்டும் (Contempt of Court) என்கிற கோர்ட்டாரை அவமானஞ்செய்த தப்பிதத்திற்காகக் குற்றஞ்சாட்டப்படலாம். இறைந்து பேசுவது சகஜமானதென்கிற லா-தெரியாமையினல் அந்தக்கட்சிக்காரன் கோர்ட்டாரை அவமானமாய்ப் பேசினதாக ஒப்புக்கொள்ளலாம். (B-542-543.)

§ 97. குற்றவிசாரணைக்கி உள்ளாகிற தொந்தரவிலிருந்தும் சித்திரவதையிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காகவும் அதினல் ஏதாவது லாபம் பெறுவதற்காகவும் பொய்யாய்க் குற்றத்தையொப்புக்கொள்ளுகிறதுண்டு. எப்படியென்ருல், 1812ஸு மேமீ 10உயில் கொலையுண்டானென்ற (Russel Colvin) ரசல் கால்வின் என்பவனுடைய கொலையைக்குறித்து 1819ஸு செப்டெம்பர் மாசத்தில் "பென்னிங்டன்" சீமையின் சூப்ரீம் கோர்ட்டில் தெண்டனையடைந்த இரண்டு (மூறன்) களுடையகேசு மனதில் மிகவும் அழுத்தமாய்ப் பதியும்படியாயிருக்கின்றது. அதாவது, அந்தக் குற்றவாளிகளின் மைத்துனனுகிய "கால்வின்" திரடசித்தமில்லாத பயித்தியக்காரன் போலிருந்தானென்றும், அவனைசவரட்சணை செய்யக்கடமைப்பட்டிருந்த குற்றவாளிகளின் குடும்பத்துக்கு அவன் பெளுவாக விருந்தானென்றும்,அவன் காணுமற்போனதினத்தில் நெடுந்தூரத்திலிருந்த புலத்தில் அவனுக்கும் அவர்களுக்கும் கொடுமையான சண்டை நடந்துதென்றும், அவனையவர்களிலொருவன் ஒரு தடிக்கொம்பால் பிடரியில் கெட்டியாய் அடித்து அதினல் அவன் பூமியில் விழுந்துவிட்டான் என்றும்தெரியவந்துது. அக்காலத்தில் அவன் கொலையுண்டானென்கிற சம்சயமுண்டாயிருந்துது. சிலமாதத்திற்குப்பின்பு அதேபுலத்தில் அவனுடைய தொப்பி கிடந்ததினல் அந்தச் சம்சயம் பெலத்துது. நாள் ஆக ஆக இந்தச் சம்சயம் விருத்தியாச்சுது. ஆனல் 1819ஸு-த்தில் அசல்வீட்டுக்காரன் ஒருவன் இந்தக்

Confessions to escape vexation or in expectation of a mitigated punishment.

கொலை நடந்ததைக்குறித்தும் அவன் தேகத்தையொளித்த தைக்குறித்தும் மிகவும் விபரமாய் அடிக்கடி சொர்ப்பனங் கண்டபடியால் மெத்த சோறுய் அவர்கள்பேரில் குற்றஞ் சாட்டப்பட்டுது. அவர்கள் கொலைசெய்தார்களென்று வெ குசாய் நம்பப்பட்டுது. கண்டிப்பாய்ப் பரிசோதித்ததில் அதேபுலத்தில் ஒரு பாழ்க்குகையில் கால்வினுடைய கத்தி யும் அவனுடைய சொக்காயின் சில பொத்தான்களும் அக ப்பட்டதுந்தவிர அதற்கு மெத்த சமீபத்தில் ஒரு பள்ளத் தில் மனிதனுடையதென்று நம்பக்கூடிய இரண்டு நெகங்க ளும் சில எலும்புகளும் அகப்பட்டுது. அந்தவிடத்தில் "கால்வினை" கொன்று புதைத்தோமென்று அந்தக்குற்றவா ளிகள் ஒப்புக்கொண்டார்கள். அந்த ருசுவையும் இந்த ஒப் புதலையும் சேர்த்துப்பார்த்ததில் அவர்களைத் தூக்கிப்போ டும்படி தீர்ப்புசெய்யப்பட்டுது. ஆனல் சாவுக்குப்பதிலாக சாசுவதக்காவலில் தங்களை வைக்கும்படி அவர்கள் தர்ம சபையாருக்கு அதேதேதியில் விண்ணப்பஞ்செய்துகொண் டார்கள். அந்தப்படியவர்களில் ஒருவனுக்குமட்டும் உத் தரவுசெய்யப்பட்டுது. ஆனதினல் அவர்கள் குற்றஞ்செய் ததில்லையென்று நிஜத்தைச்சொன்னர்கள். அதினல் கால் வினைத் தேடிவந்தவர்களுக்கு வெகுமானஞ்செய்யப்படுமெ ன்று விளம்பரம்போட்டதின்பேரில் "நியூ ஜர்சி" என்னும் ஊரிலிருந்து முன்வீட்டுக்குத் திரும்பிவந்தான். ஆனதால் அவர்களைத் தூக்காமல் விடுதலைசெய்யப்பட்டுது. அவர்கள் தன்னைக் கொன்றுவிடுவார்களோவென்கிற பயத்தினல் அவ ன் ஓடிப்போயிருந்தான். மேலேசொன்ன எலும்புகள் மிரு கத்தின் எலும்புகள். ருசுவாயிருக்கிற சங்கதிகளைப்பார்ப்ப தில் எப்படியும் அவர்கள் தூக்கிப்போடப்படுவார்களென் றும், பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களுக்கிருந்த மார்க்கமெல்லாங்கூடித் "தாங்கள்செய்த தப்பிதத்துக்காகத் தாங்கள் வியசனப்படுகிறதாயும், இனியப்படிச்செய்கிறதில் லையென்றும், ஆனதால் மன்னிக்கவேணுமென்றும் கோர்ட் டாரைக்கேட்டால் அதினல் சிட்சையைக் குறைத்துக்கொ ள்ளலாமென்றும்" யாரோ ஒரு சிநேகிதன் அவர்களுக்குத் தப்பு யுக்தி சொல்லிக்கொடுத்திருந்தான். அதினல்த்தான் அவர்கள் தப்பாய் ஒப்புக்கொண்டது. (B-544-Z-நோட்டு.)

§ 98. திரடசித்தமில்லாதபின்னுஞ் சிலர் கோர்ட்டு அதிகாரத்துக்குள் தங்களை நிறுத்தியிருப்பதைப் பார்ப்பதினுலும் தங்களுக்குவிரோதமாய்ச் சாட்சிகள் பொய்சொல்வதினுலும் தங்களுக்குவிரோதமாய்ப் பரோக்ஷ சங்கதிகளுடையருசு வருவதினுலும் பயந்தும் தங்களுடைய கேசைத்தீர்க்கிற ஜட்ஜீயின் கார்கஸ்தியத்தில் அவநம்பிக்கைவைத்தும், பொய்யாய்க் குற்றத்தை யொப்புக்கொள்ளுகிருர்கள்.—(ஷை-544.)

Confessions by weakness of mind, false witnesses against the accused and the want of honesty in the Judge.

§ 99. ஒருகுற்றவாளி நிஜத்தைச்சொல்வதினல் ஒரு பெரியமனிதனும் அந்தக்குற்றத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக அவனுடையபெயரையும் பிரஸ்தாபத்தில் கொண்டுவரவேண்டியதாய்வரும். அப்பொழுது அந்தக்குற்றத்தைக் குற்றவாளி தான்மட்டும் செய்ததாகப் பொய்யாய் ஒப்புக்கொண்டால் அதற்காக அந்தப் பெரியமனிதன்செய்கிற உபகாரம் பெரிதாகவும், அவன்பெயரைப் பிரஸ்தாபிக்கும்படிக்கி நிஜத்தைச்சொல்லிப்போட்டால் அவன்செய்கிற உபத்திரவம் மெத்தவும் பெரிதாகவுமிருக்கும். இப்படிப்பட்ட சமயங்களில் குற்றவாளி பயமுறுத்தல்களினுலும், லஞ்சத்தினுலும் நிஜத்தைமறைத்துக் குற்றத்தைத்தன் பேரில் சுமத்திக்கொள்ளும்படிநேரிடும். (B-545.)

Confessions to benifit one's self.

§ 100. ஒருவன் பேரில் சிறியகுற்றத்திற்காக விசாரணை நடந்துகொண்டிருக்கையில் பெரிய குற்றங்களின் பிரஸ்தாபம் வராமல் அமுங்கிப்போகும் பொருட்டு பிரஸ்தாபத்தில் வருகிற சிறியகுற்றங்களை அவன் ஒப்புக்கொள்ளுகிறதுண்டு. (B-546.)

Confessions to stifle enquiry.

§ 101. மனதில் செம்மையாய் நிதானிக்கிற சக்தியில்லாததினுலும் ஜீவித்திருப்பது தொந்தரவாயிருந்தால் அதினுலும் சுத்தமாய் நடவாமலேயிருக்கின்ற குற்றத்தையாவது நடந்திருந்தால் தான் செய்யாத குற்றத்தையாவது மனிதர்கள் ஒப்புக்கொள்ளுகிறதுண்டு.—1666 ஷு-த்தில் "லண்டன்" பட்டணத்தைப்பெருந் தீயினுற் கொளுத்தியது தான் தானென்று "ஹியூபர்ட்" என்கிற ஒரு பிருன்சுக்காரன் ஒப்புக்கொண்டான். தன் ஜீவனைக்காப்பாற்றிக் கொள்ளச் சக்தியில்லாதமகாதீனனுக அவனிருந்தபடியால் இவ்விதமாய்த்

Confessions by unsoundness of mind and weariness of life.

தன் பிராணனைப் போக்கடித்துக் கொள்ளச் சம்மதித்தான். அவனுடைய ஒப்புதலை நிஜமென்று ஜட்ஜிகளாவது கூட யிருந்தவர்களாவது நம்பாவிட்டாலும் அவன் மெத்ததெளி வாயும் விவரமாயும் ஒப்புக்கொண்டபடியால் தூக்கிப்போ டப்பட்டான். (B-547.)

Confessions by vanity.

§ 102. மனிதர்கள் ஜம்பத்தினுல் குற்றத்தை யொப்புக் கொள்ளுகிறதுண்டு. உ-ம். பலானமதத்தைத் தூஷித்துப் பி ரபந்தங்கள் எழுதினேனென்பது முதலான ஜம்பவார்த்தை களினுல் தன் மதத்தாருக்குள் தான் அதிகப்பிரகாசமுள்ள வனுகவிருக்கவேணுமென்று ஆசைகொள்ளுகிறவன் தான் யாதொன்றும் அப்படியெழுதாம லிருக்கையில் எழுதின தாக ஒப்புக்கொள்ளலாம். (B-549.)

Confessions by a desire to benefit others.

§ 103. தன் பிராணனைப்பார்க்கிலும் தனக்கு அதிக இன் பமாகவிருக்கின்ற மனிதர்களுடைய பிராணனையாவது, பாக் கியத்தையாவது, கீர்த்தியையாவது காப்பாற்றி வைக்கும் பொருட்டு மனிதர்கள் பொய்யாய்க் குற்றத்தையொப்புக் கொள்ளுகிறதுண்டு. "நியூறம்பறூ" என்கிற சமஸ்தானத் தில் 1787 ௵ த்தில் ஒரு ஆச்சரியமான காரியம் நடந்ததா கத் தெரியவருகின்றது. அதாவது, கொடிய ஏழ்மையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த இரண்டு ஸ்திரிகள் அவர்க ளில் ஒருத்தியுடைய குழந்தைக்கி அந்தச் சீர்மையின், லா-ப்படிக்கி, தாய்தந்தையில்லாத பாலர்களுக்கு இருந்த பிர யோஜனத்தை ஸ்தாபித்துக்கொடுக்கும் பொருட்டு ஒருபெ ரிய குற்றத்தைத் தாங்கள் செய்ததாக ஒப்புக்கொண்டார் கள். அவர்களில் ஒருத்தியைத் தூக்கிப்போடப் பட்டுது. அவள் தூக்குமரத்தின்பேரில் இறந்துபோனதைப் பார்த்த வியசனத்தால் மைற்றொருவள் இறந்துபோனுள். (B-551.)

To injure others.

§ 104. அன்னியரை யுபத்திரவஞ் செய்யும்பொருட்டு தானும் அவர்களுமாய்ச் சேர்ந்து ஒரு குற்றத்தைச் செய்த தாக ஒப்புக்கொள்ளுகிற வழக்கத்தைப்பற்றி இண்டியா தே சத்து ஜனங்களுக்கு உதாரணஞ் சொல்லவேண்டியதில்லை. அப்படிப்பட்ட ஒப்புதல்கள் சகஜமாய் அந்த ஜனங்களுக் குத் தெரிந்ததுதான். (552-ஷை.)

§ 105. ஒருவன் குற்றத்தை யொப்புக்கொள்ளாமல் மறுதளிக்கையில்த்தானே அவனுடைய வார்த்தைக்கித் தப்பர்த்தம் செய்வதினால் அவன்பேரில் குற்றஞ்சுமருகிறதுண்டு. உ-ம். மூன்றுமனிதர்கள் ஒரு ஸ்திரியை பெலாத்காரம் செய்ததால் அவள் இறந்துபோனாள். குற்றம் நடந்தகாலத்தில் அவர்களில் ஒருவனை மைற்றொருவன், "கோல்மேன்" என்கிற பேரால் அழைத்திருந்தான். அதினால் ஒருசத்திரத்தில் குடித்துவிட்டு மயங்கிக்கிடந்த குற்றமைற்ற கோல்மேன் என்கிற ஒருவன்பேரில் சந்தேகம்வந்துது. அவ்விடத்தில் இருந்தவர்களிலொருவன் கோல்மேனை மோசஞ்செய்யும் பொருட்டு அந்தக்குற்றத்தில் நீ சேர்ந்தவனல்லவாவென்று கேட்டான். அதற்கு ஒருபுத்தகத்தில் கண்டிருக்கின்றபடிக்கி அவன் சொன்னதாவது, "ஆம் நான்சேர்ந்திருந்தேன் ஆனால் என்ன" வென்றான். மைற்றொருபுத்தகத்திற் கண்டிருக்கின்றபடிக்கி அவன்சொன்னதாவது, "நான் சேர்ந்திருந்தால் அதினாலென்ன" என்றான். இதினாலும் இன்னஞ்சில ஏஷியங்களினாலும் அவனைத் தூக்கிப்போடப்பட்டுது. நிஜமான குற்றவாளிகள் மூவரும் பின்புபிடிபட்டார்கள். அவர்களில் சர்க்கார்தரப்பில் சாட்சிசொன்ன ஒருவன் தவிர மைற்றவர்களைத் தூக்கிப்போடப்பட்டுது.—(554-Z-கோட்டு-B.)

Mis-interpretation of words as confessions.

§ 106. இப்படியெல்லாமிருப்பதால் ஒப்புதல்களை நம்பி விசேஷமாய்ப் பெரியதெண்டனைகளைச் செய்யவேகூடாது. சில ஜட்ஜீகள் குற்றவாளிகளைக்கேழ்க்கிற சவால்களைக்கிரமமாகக்கேழ்க்காமல் அவர்கள் குற்றத்தையொப்புக்கொண்டிருந்தால் பின்பு சவால்கேழ்க்கவேண்டியது எப்படியோ அப்படியவர்களைக் கேழ்க்கின்றார்கள். அது மிகவும் அக்கிரமமென்று இங்கிலிஷ் லாவில் முடிந்திருக்கின்றது. அதற்குப் பிறான்சுதேசத்தில் 1847-ஆம்-த்தில் மகா உயர்ந்த நியாயசபையாகிய பிரபுக்களின் கோர்ட்டில் "பிறாச்லின்" சமஸ்தானத்தின் சிறிய இராசனைச்செய்த விசாரணை நல்ல திருஷ்ட்டாந்தரமாகவிருக்கின்றது. அதாவது, அந்தச்சிறிய அரசன்தன் பெண்சாதியைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டான். அடியிலெழுதியிருப்பது அந்தக் குற்றவாளிக்கும் பிரதான ஜட்ஜிக்குமநடந்த உத்தரப்பிரத்தியுத்தரமாகவிருக்கின்றது.

What practice is to be avoided.

கேள்வி. அவளை (இறந்துபோனவளை) கடைசியில் நீயடித்தபொழுது அவள் பூமியின்பேரில்ப்போட்டு இழுக்கப்பட இல்லையா?

மறுமொழி. நீ ஏன் என்னை இவ்விதக்கேள்வி கேள்க்கிருய்?

கே. உன் அறையில் நீ புகுந்தவுடனே நீ அப்பொழுதே வெட்டிய இரத்தத்தால்நீநனையப்பட்டிருந்ததையும், அதை நீ அலம்பிப்போடவேண்டிய கட்டாயம் வந்திருந்ததையும் நீ பார்த்தபொழுது மெத்தகஷ்ட்டமானசமயத்தை யனுபவித்திருக்கவேண்டுமெல்லவா?

மறு. இந்த இரத்தத்தின் குறிப்புகள் என்னமாக யென்பேரில் வந்துதென்பதைப்பற்றி துப்பார்த்தம் கொள்ளப்பட்டிருக்கின்றது?

என்குழந்தைகள் முன்பாக அவர்களுடைய தாயாரின் இரத்தம் என்பேரில் இருப்பதுடன்போக எனக்கு மனமில்லை.

கே. இந்தக்குற்றம் செய்தத்தில் நீ மிகவும் பாவியாகவிருக்கவேண்டும்.

குற்றவாளி இதற்கு யாதொரு பெதலுஞ்சொல்லாமல் அழுந்துகிருன்.

கே. இந்தக்குற்றத்தைச் செய்யும்படி உன்னை ஏவிய கெட்டபுத்தி வாதத்தை நீ பெறவில்லையா?

மறு. இப்படிப்பட்டவிஷயங்களில் ஜனங்கள் யோசனை சொல்லமாட்டார்கள்.

கே. நீ வியசனத்தினுல் அரிக்கப்பட்டிருக்கவில்லையா? நிஜத்தைச்சொல்லி விடுவது உனக்கு ஒரு மாதிரியான ஆறுதலாகமாட்டாதா?

மறு. இன்றைக்கி யென்பெலன் சுத்தமாய் விழுந்துபோகின்றது.

கே. நீ எப்பொழுதும் உன் அசக்தியைக்குறித்துப் பேசுகிருய். என்கேழ்விகளுக்கு "ஆம்" "அல்லா" என்றுமட்டும் சொல்லும்படி நான் உன்னைக்கேழ்க்கிறேனே தவிர வேறில்லை.

மறு. யாராவது என்தாதுவைப்பார்த்தால் என் அசக்தியை அறிவார்கள்.

கே. அநேகம் கேழ்விகளுக்கு நீ விவரமாய் பெதல் சொல்லி யிருக்கிறுய், அதுகளுக்கெல்லாம் உனக்குப் பெலமிருந்துது.

குற்றவாளி யாதொரு பெதலும் சொல்லவில்லை.

கே. உன்னுடைய மவுனமானது நீ குற்றவாளியென்று எனக்குப் பெதல்சொல்லுது.

மறு. நான்குற்றம்செய்தேயிருக்கிறேன் என்கிற முடிவான நம்பிக்கையுடன் நீ இங்கேவந்திருக்கிறுய், ஆனதால் அந்த எண்ணத்தைமாற்ற என்னல் இல்லை.

கே. நீ குற்றஞ்செய்ய இல்லையென்று நாங்கள் நம்பும்படியான யாதொருமுகாந்தரங்களை நீ எங்களுக்குக் காட்டினுல் குற்றஞ்செய்ததாக நாங்கள் எண்ணிக்கொண்டிருப்பதை நீ மாற்றக்கூடும். நீ குற்றஞ்செய்தாயென்று நினைப்பதைவிட வேறை எண்ணங்களையெண்ணும்படியான தோற்றங்களைக் காட்டி அதுகளுக்கு முகாந்தரங்களையும் நீ காட்டிவிட்டால் அப்போதும் எங்கள் எண்ணத்தை நீ மாற்றக் கூடும்.

மறு. உன்மனசில் உண்டாயிருக்கின்ற உறுதியான அபிப்பிராயத்தை மாற்ற எனக்கு சக்தியிருக்குதென்று நான் நம்பவில்லை.

கே. அந்த எண்ணத்தைமாற்ற உனக்கு சக்தியில்லையென்று நீ ஏன் நம்புகிறுய் ?

குற்றவாளிசற்று நேரம் மவுனமாகயிருந்துவிட்டு மேலே பேசத்தனக்கு சக்தியில்லையென்று சொன்னுன்.

கே. இந்தப்பயங்கரமானகுற்றத்தை நீ செய்தபொழுது உன்குழந்தைகளை நினைத்தாயா ?

மறு. குற்றத்தைக்குறித்தோவென்றுல், நான் அதைச் செய்யவில்லை. குழந்தைகளைக்குறித்தோவென்றுல், அவர்கள் எப்பொழுதும் என் நினைப்புக்குப் பாத்திரமாகவிருக்கிறுர்கள்.

கே. இந்தக்குற்றத்தை நீ செய்யவில்லையென்று சொல்லும்படியான துணிச்சலுனக்குண்டாகுமா?

குற்றவாளி சற்றுநேரம் மவுனத்துடன் தன்கைகளின் மத்தியில் தலையைவைத்துக்கொண்டு பின்பு சொன்னதாவது, இப்படிப்பட்ட கேழ்விகளுக்கு நான் பெதல் சொல்லவேண்டியதில்லை. (B-536. foot note) நேராகவாவது மறைவாகவாவது குற்றவாளியானவன் களைத்துப்போய் தனக்கு விரோதமாய் ஒப்புக்கொள்ளுகிறவரைக்கும் மாத்திமாத்திப் பலவிதமாய்க் கேழ்வி போடுகிற வழக்கம் பொல்லாது. தந்தரமாய்க் கேழ்விபோட்டுத் தொந்தரவு செய்வதினால் மெல்மேலும் வருகிறதொந்தரவுகளை நீக்கிக்கொண்டு தப்பித்துக்கொள்வது ஸகஜமான உறுதி யுடையவர்களால் மாளாது. அசக்தமனமுள்ளவர்கள் இப்பேர்ப்பட்ட தொந்தரவுகளில் பொய்யாயிருந்தாலும் எதுவாயிருந்தாலும் ஒப்புக்கொண்டு விடுவார்கள். அப்படிச்செய்வது மிகவும் தப்பானது. (B-536.)

Corpus delicty necessary before trial.

§ 107. ஒரு குற்றம் நடந்ததென்று வழக்குவரும்பொழுதெல்லாம், எவன் குற்றஞ்செய்தானென்று விசாரிப்பதினால் ஒரு குற்றம் நடக்காமலிருக்கையில் கூடப்பொய்யாகக் குற்றங்களை ஒப்புக்கொண்டு விடுவார்கள். அதினால் தப்புத்தீர்ப்புகள் செய்து நிறைவேற்றிப்போடுகிறார்கள். ஆனதால் ஒரு பிராதுவந்தவுடனே அதிற்கண்ட குற்றம் நடந்திருக்குதாவென்று முதலில் விசாரித்துக்கொண்டு அப்பால்த்தான் யார்குற்றஞ்செய்தார்களென்கிறபயிண்டில் கோர்ட்டார் பிரவேசிக்கவேண்டும். (B-534.)

CHAPTER VI. அத்தியாயம் சா.

ESTOPPELS.—முன்னுக்குவிரோதமாய்ப் பின்சொல்லும் வாயை மூடுகிற தடை அல்லது "இஷ்டாபல்."

Estoppels have a large operation in civil than in criminal cases.

§ 108. ஒருவனுடைய ஒப்புதலை அங்கிகரித்து அவனுக்குவிரோதமாய் சூடிசியால் தீர்மானங்களைச் செய்யக்கூடாதென்று இதுவரைக்கும் சொல்லிவந்ததெல்லாம் கிரிமினலுக்கு மட்டுமேதவிர சிவிலுக்கல்லா. தன் லாபத்துக்கு விரோதமாய் ஒருவன் என்னவார்த்தையைச்சொன்னாலும்

என்னகாரியத்தைச்செய்தாலும் அதுகளெல்லாம் சிவிலில் அவனுக்குவிரோதமாகவே உபயோகப்படுத்தப்படும். கிரிமினல் சிலவிஷயங்களில்மட்டும் அரிதாய் உபயோகப்படுத்தப்படும். அந்த வார்த்தைகளுக்கும் காரியங்களுக்கும் விரோதமாயந்தமனிதன் பின்பு எந்தவழக்கிலாவதுவாதித்தாலும் எதிர்வாதஞ்செய்தாலும் அந்தமுன் ஒப்புதலானது அந்தப்பின்வாதத்துக்கு "இஷ்டாபல்" என்கிற வாயைமூடுகிற தடையாகும். (B-532.) இஷ்டாபல் என்பது றிகார்ட்டுமூலமானது 1. தஸ்தவேசுமூலமானது 2. பிரசித்தியின்மூலமானது 3. இவ்வாறுகப்பிரிக்கப்படும். 1- றிகார்ட்டு மூலமான இஷ்டாபல் என்பதற்குத் திருஷ்டாந்தரம் மெத்தவேண்டியதில்லை. ஆகிலும் றிகார்ட்டுமூலமாய் உண்டாகிற இஷ்டாபலானது வாக்குமூலங்களில் ஒப்புக்கொண்டிருப்பதும் கோர்ட்டுத்தீர்ப்புகளும் ஜட்ஜிமெண்டுகளும் தவிர பிளிடிங்குசுகளில் ஒப்புக்கொண்டிருப்பதுமாம். பிளிடிங்குசுகளில் உண்டாகிற இஷ்டாபலில் இன்னம் ஒரு பேதமிருக்கின்றது. அதாவது, ஒருவனை எதிர்வாதஞ்செய்யும்படி லாவினுல் இடங்கொடுத்திருக்கின்ற காலத்திற்குள்ளாக எதிர்வாதஞ்செய்யாதவன் தன் எதிரிக்கித்தீர்ப்புக்கிடைக்கச் சம்மதித்தவனுகிருன். அப்படியே ஒரு கட்சிக்காரன் ஒருவிதமான கட்சியைச்சொல்லிப்போட்டானேயானுல் அவன் பின்பு வேறை ஒருவிதமான கட்சியைச் சொல்லி அதினுல் பிரயோஜனமடையும்படி அவனுக்கு இடங்கொடுக்கக்கூடாது. வாதிவழக்கு பைசலாகிவிட்டுதென்கிற வாதத்தைச்செய்தாகிவிட்டபின்பு அவ்வழக்கைப் பிடிக்க அந்தக்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்கிறவாதத்தையாவது அவ்வழக்கு காலநிர்ணய சட்டம்முதலானதால் தடைபட்டிருக்குதென்கிற வாதத்தையாவது செய்யவேகூடாது.

Estoppels what.

Division of.

1 Estoppel by matter of record.

எந்த தஸ்தவேசை ஒருவன் கிரமமாகவும் ஆய்ந்தோய்ந்த ஆலோசனையுடனும் சம்மதித்து எழுதிக் கையெழுத்துவைத்துவிடுகிருனே அவ்வித ஒரு தஸ்தவேசில் கண்டிருக்கிற சங்கதிகளுக்குவிரோதமாய் எவ்வளவும் வாதிக்கக்கூடாது. (B-520-to-524.)

2 By deed.

3 By matter in pais.

ஜனங்களுக்கு கிருமாந்தரங்களில் எது பிரசித்தமாய்த் தெரியுமோ அதற்குப் பிரசித்த சங்கதியினு லுண்டாகும் இஷ்டாபல் என்றுபெயர். அதைப்பத்தி இதின் 115-வது பிரிவில் விவரமாக எழுதப்படும். (B-L-M-265.) முதல் 2 வகை இஷ்டாபல்களின்பேரில் தங்கள் வழக்கை ஆதாரப் படுத்துகிறவர்கள் தங்களுடைய பிளிடிங்குசுகளில் அந்த இஷ்டாபல்களை வாதித்திருக்கவேண்டும். வாதிக்காவிடில் அந்த இஷ்டாபல்களின்பிரயோஜனத்தை இழந்துபோவார் கள். 3-வதுவகுப்பு இஷ்டாபல்களை வாதிக்கக்கூடாது.—(B-526. இதின் 111-வது பிரிவு.)

Estoppels how used in criminal cases.

§ 109. கிரிமினல்வழக்குகளில் இஷ்டாபல் லா-வை எப் படி உபயோகப் படுத்தவேண்டுமென்றால், ஒப்புதலையங்கி கரிப்பது ஒருவழக்கின் சுவபாவத்துக்கு மிகவும் சரியாகவி ருக்குதென்று கோர்ட்டார் எண்ணி ஒப்புதலை அங்கிகரித் தும் போட்டால் அதின்பின்பும் குற்றத்தை ஒப்பாமல் குற் றவாளி மறுதளிக்கிறபொழுது, அந்தமறுப்பை யெதிர்க் கும்படியிருக்கின்ற காரியங்களை இஷ்டாபலாக நிருக்ஷேப ணையாய் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். எப்படியென் றால், ஜுரிகளை நியமித்தபொழுது குற்றவாளிசும்மாயிருந்து விட்டு அவர்களுக்குப் பிரமாணஞ் செய்வித்தானபின்பு அ ந்த ஜுரிகள் தன்னை விசாரிக்கக் கூடாதென்கிற ஆக்ஷேபத் தைச் செய்யக்கூடாது. மைற்றொருவிஷயத்தில் A-யும்-B-யும் கூடித்திருடிய சொத்தின்பகுதலைக்குறித்து எல்லா விவரங்களுடனும் A-க்கி-B யெழுதிய காகிதம் கோர்ட்டில் தாக்கலாகிருசுவாகிவிட்டால் தானந்தத்திருட்டில் சம்பந்தப் படவில்லையென்று B-மறுதளிக்கிற எதிர்வாதத்துக்கு வி ரோதமாய் ஷ காகிதத்தை இஷ்டாபலாக உபயோகப்படுத் தலாம். ஆனலப்படி உபயோகப்படுத்தும்பொழுதெல்லாம் குற்றவாளிக்கி தயவாக உபயோகப்படுத்த வேண்டும்.—(B-530.)

Definition of estoppels by Mr. Best.

§ 110. இஷ்டாபல் எப்படிப்பட்டதென்பதற்கு, சார்-எட்வார்ட்-கோக்-துரையவர்கள் சொல்லியிருக்கிற இலக்ஷ ணமாவது, “எந்த விஷயங்களில் ஒருமனிதனுடைய சொ ந்தக்காரியம் அல்லது அங்கிகாரமானது நிஜத்தைச் சொல்

ல்வாவது வாதிக்கவாவது கூடாமல் செய்யுமோ-அது-இஷ்டாபல்." ஆனால் இந்த இலட்சணம் கர்ணசிருவியமாக இருக்கவில்லையென்று "பெஷ்ட்" துரையவர்கள் சொல்லுகிற இலட்சணமாவது. "ஒருவனை நிஜத்தைச்சொல்லவொட்டாமல் பின்காலத்தில் தடுப்பது அல்லா-ஆனால் எதானது ஒரு மனிதனுடைய பிரவேசத்தினால் நிஜமென்று ஏற்படுத்தப்பட்டுதோ அது பொய்யென்று அவன்தானே பின்பு சொல்லுகிறதிலிருந்து அவனைத்தடுப்பது இஷ்டாபலாகும்." பெஷ்ட் துரையவர்கள் சொல்லுகிற இலட்சணம் சரியாகவிருக்குதென்று எனக்குத்தோற்றுது. (B-515-516.)

§ 111. இண்டியாதேசத்தின எந்தவழக்குகளிலும் கட்சிக்காரர்களும் நேட்டிவ்ஜட்ஜிகளும் இஷ்டாபல் இருக்குதாவென்று தேடிப்பார்ப்பதும் இஷ்டாபலைப்பிடித்துக்கொண்டு அநேகம் காரியங்களை அல்லது அநேகம்வியாச்சியங்களை சகஜமாய்த்தீர்ப்பதும் விசேஷவழக்கம். இஷ்டாபல் என்பதுவியாச்சியங்களை வெகுசெம்மையாயும் ஜல்தியாயும் தீர்ப்பதற்கு ஜட்ஜிகளுடையகையில் பெரிய ஆயுதமாகவிருக்கும். 1855 ஷு க்கு முன்வரைக்கும் சென்னப்பட்டணம் இராஜதானியைச்சார்ந்த வெளிஜில்லாசோர்ட்டுகளில் பிளிடிங்குசுகளை மெத்தவிஸ்தாரமாய் வளர்த்தியெழுதுவது வழக்கமாயிருந்துது. மதுரைஜில்லா சிவில்ஜட்ஜி மேஸ்தர் "பெய்ங்ஸ்" துரையவர்கள் 1855 ஷு த்தில் (Vakeels' Manual) வக்கில் ஒழுக்கமென்று ஒருபுஸ்தகம்போட்டபின்பு பிளிடிங்குசுகளை வளர்த்தியெழுதுகிறவழக்கம் கொஞ்சம் மட்டுப்பட்டுது. 1855 ஷு த்தில் சதர்கோர்ட்டு ஜட்ஜி மேஸ்தர் "இஸ்திரெஞ்சு" துரையவர்கள் (Rules of procedure) நடவடிக்கைகளின் நூல்களென்று ஒருபுஸ்தகத்தைக் கோர்ட்டுத்தரவாகவே ஏற்படுத்தியபின்-பிளிடிங்குசுகளைச் சுருக்கியெழுதவேண்டியகட்டாயம் லாயர்களுக்கு உண்டாகிவிட்டுது. 1855 ஷு VIII ஆக்ட்டினாலே இன்னமும்மெத்தசுருங்கிப்போச்சுது. 1855 ஷு க்கு முன்வரைக்கும் எழுதப்பட்டிருக்கின்ற மேல்ச்சொன்னவளர்த்தலான பிளிடிங்குசுகளை யெடுத்துப்பார்த்தால் அதுகளில் 3-வதுவகுப்பு, இஷ்டாபல்தான் விசேஷமாயடங்கியிருக்கும். இப்பொழுது பிளிடிங்குசுகளைச் சுருக்கிப்போட்டதினால்

Estoppels very common to the notion of the Native Judges and Practitioners in India.

Old practice of the Lawyers in India of drawing their pleadings in ignorance of the Law which prohibits the inserting, in their pleadings, of estoppels in pais.

இஷ்டாபலைச்சார்ந்த சங்கதிகளை வளர்த்தியெழுதக் கூடா
விட்டாலும் புத்திசாலியாயிருக்கின்ற ஒருலாயருக்கு இஷ்
டாபல்கட்சிகளை ருசுகாலத்தில் கோர்ட்டில் கொண்டுவ
ந்து விடும்படியான இசைவை சுருக்கப் பிளிடிங்குசுக
ளில் வைத்து எழுதத்தெரியும். எப்படியென்றால், A
சில நிலத்தை B யின்முகாந்தரமாய் C க்கி விற்றதினால்
அது C யின் நிருக்ஷேப அனுபவத்தில் இருக்கின்றது.
இப்படியிருக்க, B செய்கிறவழக்கில் ஷை நிலம் தனக்
குப். பிதரார்ஜீத சொந்தமென்றும், A தனக்குள்புறக்
குடியாய்மட்டுமிருந்தபடியால் அவனிடத்திலிருந்து எந்த
மார்பாட்டினாலேயோவாங்கி C அனுபவித்தபோதிலும் அ
ந்தநிலம் C க்கி சித்திக்கமாட்டாதென்றும், ஆனதால் A-C
இவர்களிடத்திலிருந்து ஷை நிலம்வரவேணுமென்றும் செய்
கிறவழக்கில் A-யும் C-யும் கொடுக்கிற ஆன்சறில் விவாத
நிலம் A-க்கி சுவதந்திர பாத்தியமுள்ளதென்றும், அதை
யவன் கிரமமாய் C-க்கி வித்தானென்றும், இந்தக்கிரயபத்தி
ரத்துக்கு B-யும் கூடவிருந்து அவன்முகாந்தரமாகவே ஷை
நிலம்C-க்கி கிரயமாச்சுதென்றும் சொல்லவேண்டியதானது
B-க்கி விரோதமான இஷ்டாபலைக்காட்ட அவசியமுள்ளதா
கத்தோற்றினாலும் ஒரு சமர்த்தனான லாயர் எழுதுகிற ஆன்
சறில் நூல்ப்படி வளர்த்தலில்லாமலும், இஷ்டாபலைக்காட்டு
கிற சங்கதியைவிடாமலும் இவ்வளவுதான் எழுதுவான்.—
அதாவது, "விவாதநிலம் A-க்கி சொந்தம். அதையவன்
C-க்கி வித்துப்போட்டான். அதில் B-க்கி யாதொருபாத்
தியமுங்கிடையாது." இந்த 3 கட்சிகளும் 3 பயிண்டுகளாக
வேயிருக்கும். அதில் 3-வது பயிண்டுகளாகவேயிருக்கும்.
அதில் 3-வது பயிண்டாகிய "விவாதநிலத்தில் B-க்கி
யாதொருபாத்தியமுங்கிடையாது" என்கிற பயிண்டை ருசு
ப்படுத்துகையில் B-யின்முகாந்திரமாகவே விவாதநிலம் C
க்கி சித்தித்துதென்கிற சங்கதியை C ருசுப்படுத்தி அதின்
மூலமாய் B-யின்வழக்குக்கு ஒரு இஷ்டாபலைக் கொடுக்க
லாம். இதுதான் மேஸ்தர் இஸ்திரோஞ்சுதுரையவர்களுடை
ய யுக்தி. ஆனால் பிளிடிங்குசுகளைச் சுருக்கமாய் எழுதச்
சொன்னதைக்கொண்டு பிரசித்த இஷ்டாபல் கட்சிகளை ஜா
டையாய்ச்சொல்லவாவது ருசுப்படுத்தவாவது கூடாதென்

றுங்கிணக்கவேண்டியதில்லை. பிரசித்த இஷ்டாபல்கட்சிகளை ருசுப்படுத்தும்படி சங்கதிகளை பிளிடிங்குசில்சொல்லலாம்.

§ 112. 1850 ஷு-த்தில் A-க்கி B எழுதின காகிதத்தில் "தான்குடியிருக்கிற A-யினுடைய 15 நெம்பர் வீட்டுக்குத் தான்செய்த மறுமத்திருல் ஷை ஷுத்துக்காக A-க்கிச்சேர வேண்டிய ஷை வீட்டின் வாடகைப்பணம் ஒழவடைந்துபோனதாகக் கண்டிருக்கின்றது. 1852 ஷு-த்தில் ஷை வீட்டைத் தன் வசப்படுத்தவேணுமென்று A செய்கிறவழக்கில் ஷை வீடு தனக்குப் பிதரூர்ஜீத சொந்தமென்று B வாதித்தான். இந்த எதிர்வாதத்தைப் பொய்யாக்குவதற்காக மேல்க்கண்டகாகிதத்தை இஷ்டாபலாக A தாக்கல்செய்யலாம். Illustration of Estoppels.

§ 113. இஷ்டாபல் எப்பொழுதும் அதையுண்டாகும்படியான காரியங்களைச்செய்தவர்களையும் அவர்களை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிறவர்களையும்மட்டும்பெத்தப்படுத்துமேதவிர அன்னியர்களைப் பெத்தப்படுத்தமாட்டாது. ஆனல் ஒருமனிதன் பாகம் முதலானதற்கு அயோக்கியனுகிவிட்டுது. ஒருவன் கிரமமான விவாகமானவளுக்குப் பிறந்தவனென்பது, ஒருவனை (Outlawry) என்கிறதெண்டனைக்காக லாவிலிருந்து நீக்கியிருப்பது, சாதிபிரஷ்ட்டம் செய்திருப்பது, இதுமுதலான சங்கதிகளைப்பத்திப் பிறந்திருக்கும் (Judgment in rem) என்கிற பேரைக்கொள்ளுகிற கோர்ட்டு திகார்ட்டுகள் அன்னியர்களையும் பெத்தப் படுத்தும். (B-518.) Who are bound by the estoppels of others, or who are estopped by the acts of others. Judgments in rem. Excepted.

§ 114. A-க்கிச்சொந்தமான நிலத்தையவன் B-க்கி முதலிலும் C-க்கி மறுபடியும் வித்தானென்று B-யும் C-யும் ஆடுகிற வழக்கில் C-க்கி மட்டும் கிரயஞ் செய்ததாய் A முதலில்ச் சொல்லிவிட்டுப் பின்பு B-க்கிம் கிரயம்செய்ததுண்டென்று சொன்னல் இதினுல், A-க்கி "பினல்கோட்" படிக்கிக் கிடைக்கவேண்டிய தெண்டனையைக்குறித்து நான் இங்கேசொல்லவில்லை. B-க்கிம் C-க்கி மிருக்கின்ற சிவில்வழக்கு தீர்ப்பாகவேண்டியதைக்குறித்துமட்டும் பேசுகிறேன். இதல்லாமலும் B-க்காவது C-க்காவது அவரவர்களுடைய கட்சிருசுவாக வேண்டியதற்கு A-யின் வாக்கு மூலத்தைவிட வேறை ருசுவும்கிடையாது. Further illustration of estoppels.

இச்சமயத்தில் A-யினுடைய முந்தியவாக்கு மூலமானது அ
வனுடைய இரண்டாவது வாக்கு மூலத்தை இஷ்டாபலுக்கு
உள்ப்படுத்தும். அவனுடைய இரண்டாவது வாக்குமூலம்
ஒரு உபயோகத்துக்கும் வரமாட்டாது. ஒரு சிவில் கேசில்
பிரதிவாதி தன்வக்கிலுக்கு வாய்மொழியாய்க் கொடுத்த
சம்மதிப்படி அவனுடைய வக்கிலானவர் வாதி பிருதை
ஸ்தாபித்து இராஜீனுமா செய்துவிட்டார். இது ஒரு ௵
நவம்பர் ௴ 5வயில் நடந்துது. ௸ ௴ 10வயில் ௸ வக்கி
லிடத்தில் ௸ பிரதிவாதி கணக்குத் தீர்த்துக்கொண்டு ௸
வியாச்சியத்தை நடத்தும்பொருட்டு வக்கிலிடத்தில் கொடு
த்திருந்த கோர்ட்டுச்சிலவுபணம் முதலானதை வாங்கிக்கொ
ண்டுவக்கிலுக்குக் கொடுத்திருக்கிற றசீதில் ௸ நெம்பர் வழ
க்கு ருஜீயாய் பைசலாகிவிட்டபடியால் அந்த நெம்பர் வழ
க்கை நடத்தக்கொடுத்திருந்த பணத்தை தான் வாங்கிக்
கொண்டுவிட்டதாகக் கண்டிருக்கின்றது. பின்பு தன் சம்மதி
யன்னியில் ருஜீனுமாசெய்து போட்டதாயும் அதினுலுண்
டான நஷ்டம் வரவேணுமென்றும் வக்கில் பேரில் பிரதி
வாதி செய்யும் வழக்கில் அவனுக்கு விரோதமான இஷ்டா
பலாக இந்த றசீதை உபயோகப்படுத்தலாம்.

Estoppels in pais illustrated. The case of Pickard v. Sears.

§ 115. விவாதசொத்து தன்னுடையசொந்தமென்றும் அ
துவரவேணுமென்றும் A-வகைருபேரில் B-செய்தவழக்கில்
விவாதசொத்து C- யினுடைய வாஸ்தவமான அனுபவத்தி
லிருந்து தென்றும் C- யின்பேரில் A- க்கி வரவேண்டியிரு
ந்த தீர்ப்புத்துகைக்காக ஏலம் போடப்பட்டு Aக்கித்தானே
ஏலத்தில் விடப்பட்டு தென்றும் தெரிய வந்ததும் தவிர
அந்த சொத்து A- க்கி வசப்பட்ட பின்பு அது அப்படி
வசமானது B-க்கித் தெரிந்து மிருக்கையில் தனக்கு அந்த
சொத்தில் பாத்தியமிருக்குதென்று கொஞ்சங்கூட தெரி
யப்படுத்தாமல்த்தானே அந்த சொத்தைப் பிறத்தியில் D-
க்கி A-வினியோகம் செய்ததைக்குறித்து A-க்கி B-ஆலோ
சனைகளும் சொல்லி இருந்ததாகவும் தெரியவந்துது. இப்
படி B- நடந்ததைக்கொண்டு விவாதசொத்தை A-பருதீ
னம் செய்ததற்கு B- சம்மதித்திருந்தானென்றும் வாஸ்த
வத்தில் அந்த சொத்தில் B- க்கி யாதொரு பாத்தியமு
மில்லையென்றும் தீர்மானிக்க லாச்சுது. இந்தவழக்கில் சித்

தாந்தத்தைப் படிக்கும்பொழுது, பிர. நீ. "லார்ட், டென் மேன்" துரையவர்கள் அடியில் எழுதியவிதியை ஏற்படுத் தினர்கள். அந்த விதியானது அநேகம் வழக்குகளுக்கு சம் மந்த முள்ளதாய்க் காணப்படுகிறதும் தவிர எந்தமனித னும் தன்னுடைய சொந்தத் தப்பிதத்தினல் பிரயோஜன மடையக் கூடாதென்கிற லா-வின் மூலில்யிருந்து உண்டா னதாகவுமிருக்கின்றது. அந்தப்பிரபு அவர்கள்செய்த விதி என்னவென்றால், "எந்தவிஷயங்களில் ஒருவன் தன்னு டைய வார்த்தைகளினலாவது நடத்தையினலாவது ஒரு காரியம் பலானவிதமா யிருக்குதென்று அன்னியன் நம்பும் படிக்கும் அந்த நம்பிக்கையின்பேரில் அந்த அன்னியன் நடக்கும்படிக்கும் (மனப்பூர்வமாய்) செய்கிருனே அவன் அந்த வார்த்தைக்கும் நடத்தைக்கும் விரோதமாய் ஒருகா ரியம் அந்தக்காலத்திலேயே இருந்துதென்று பின்காலத்தில் ஒன்றுஞ் சொல்லக்கூடாதென்று லா-வின்விதி" யென்று தான். (B-L-M-265.) அப்படியே வாதி கிரிக்குக்கும் பிர திவாதி வெல்ஸ்க்குமிருந்த கேசில் ஒரு சொத்துக்குடைய வனை ஒருவன், அதை மைற்றொருவன் தன்சொந்தம்போ ல் ஆளும்பொழுது கூடயிருந்து சம்மதியுடன் பார்த்துக் கொண்டிருந்து, அதினல் ஒரு அன்னியன் ஒரு நல்லநம்பிக் கையுடன் அதைக் கிரயத்துக்குவாங்கினல் அவனிடத்தி லிருந்து அந்தச்சொத்தையந்த ஆதிசுவான்தாரன் பெற்றுக் கொள்ள நியாயமில்லையென்று விதாயகம் ஏற்பட்டுது.— எவனனவன் ஒருசொத்தைக்குறித்த வியாபாரம் நடக்கை யில் தான் கூடயிருந்தும், தான் ஆட்சேபிக்கக்கூடியதாயிரு க்கிற ஒருசங்கதியை அஜாக்கிரதையினலாவது மோசடியி னலாவது ஆட்சேபிக்காமலும் இருந்துவிட்டு அதினல் இவ னுக்கு ஆட்சேப மில்லையென்கிற நம்பிக்கையின்பேரில் அந்த வியாபாரம் நடந்துபோகும்படி விட்டுவிடுகிருனே அந்தக்கட்சிக்காரன் தான்முதலில் ஆட்சேபிக்காமல் விட் டிருந்த சங்கதியையும் பின்காலத்தில் ஆட்சேபிக்கவேகூ டாது. (266-ஷை)

The case of Gregg v. Wells.

இவ்விதமாக, "பிக்கியார்ட்" க்கும் "சியர்சு" க்குமிருந்த வழக்கிலும் இன்னமும் அதிகவிஸ்தாரமாய் "கிரிக்" க்கும் "வெல்சு" க்கு மிருந்த கேசிலும் லார்ட் "டென்மேன்"

The Judgment of the Court of exchequer, in

Freeman v. Cook considered as the governing rule on the subject.

அவர்கள்சொல்லிய விதியை "பிரீமன்" க்கும் "கூக்" க்கு மிருந்தவழக்கில் மிகவும் அழகாய் "கோர்ட்-ஆப்-எக்ஸ்ச்சகா " என்று லண்டனில் இருக்கின்ற பெரிய கோர்ட்டார் வியாக்கியானஞ்செய்தார்கள். இந்தகேசில் பிறந்த சித்தாந்த மானது, இஷ்டாபல் விஷயமாக ஒருவியவஸ்தா கல்பனறூலாக எண்ணப்படவேண்டும். (மனப்பூர்வமாய்) என்றுமேலே உபயோகிக்கப்பட்டிருக்கின்ற வார்த்தையைக் கொண்டு அறியவேண்டியதென்னவென்றால், அந்தமனிதன் எதைப்பொய்யென்று தெரிந்துகொண்டிருக்கிறனோ அந்த சங்கதியை நிஜமென்று அவன் சொல்லவில்லையே யென்றாலும் அதைப்பத்தியவன்சொன்னவார்த்தைகளைநம்பி அதின் பிரகாறம் நடக்கும்படி யவன் அன்னியருக்கு மனமுண்டாக்கினனென்றுவது கடைசியில் நினைக்கவேண்டுமேதவிர வேறில்லை. ஆனதாலதின்படி நம்பி நடவடிக்கையும் நடந்து போய்விட்டால் அந்த நம்புதலுக்குவிரோதமாய் அவன் சொல்லுகிறதை அங்கிகரிக்கவேகூடாது. ஒருமனிதனுடைய எண்ணம் எதுவாகவானாலுமிருக்கட்டும் அவன்சொல்லுகிறவார்த்தைகளை ஒருவிவேகியானமனிதன் நிஜமாயிருக்குதென்று அங்கிகரிக்கும்படியாயும், அந்தவார்த்தைகளின்படி நம்பிநடக்கலாமென்று அந்தவார்த்தைக்கி அர்த்தஞ்செய்துகொண்டு அதுநிஜமாயிருந்தால் எப்படியோ அப்படியே நடந்தும்விடும்படியாயும் அவனுடைய நடவடிக்கைகளிருந்தால் அந்தவார்த்தையைச்சொல்லி அல்லதுகாரியத்தைச்செய்கிற கட்சிக்காரன் அது நிஜமல்லவென்று ஆட்சேபிக்கிறதிலிருந்து நீக்கப்பட்டிருப்பான். வியாபாரவழக்கத்தின்படியாவது வேறைவழக்கப்படியாவது நிஜத்தைச்சொல்லிவிடக் கடமைப்பட்டிருக்கின்ற ஒருமனிதன் அசாக்கிறதையினலாவது வேறைவிதத்தினலாவது தவறிப்போனல் அந்தவிஷயத்திலும் அதேவிதமானவிதிதான் உபயோகப்படும். உ-ம். ஒரு கூட்டுவியாபாரத்திலிருந்து விட்டுப்போகிற கூட்டாளியானவன் அந்தக் கூட்டுவியாபாரத்திலிருந்து பலான தேதிமுதல்தான் நீங்கிப்போனனென்கிற விவரத்தையும், மைற்ற கூட்டாளிகள் தனக்காக ஏஜண்டுகளல்லவென்பதையும், அந்தக் கூட்டுக்கடையில் குடுக்கல் வாங்கல்செய்கிறயாவருக்கும் கிரமமானவிதமாய்த் தெரியப்

படுத்திப் போடாவிட்டால் தான் நீங்கினதேதிக்கிப் பின் கூட இவனுக்குவிரோதமாய் மைற்றக் கூட்டாளிகள் செய் கிற வியாபாரங்களுக்கு இவன் உள்ளாகவேவேண்டும். எந் தெந்தவழக்குக்கு, "பிக்கியார்ட்" க்கும் "சியர்சு" க்கும் இருந்த கேசின் விதி உபயோகப்படுமோ அதுகளில் எல் லாம், நம்பும்படியிருக்கிற வார்த்தைகளும் நடவடிக்கைக ளும் எவனுல் சொல்லப்பட்டு செய்யப்படுதோ அவனே அதைச்சார்ந்த வியாபாரங்களைச்செய்தானென்றுவது, அ தைச்செய்ய உத்தரவுகொடுத்தானென்றுவது சொல்வதற் குச் சமமாகும். (B-L-M-277.)

§ 116. தான்சொன்னவார்த்தையை நம்பிக் காரியங்க ளைச் செய்யும்படி ஒருவன்மைற்றொருவனைப் பிரோபித்து அவனுமந்தப்படிநடந்தபின்பு அந்தவார்த்தையை முதலில் மோசமாகவாவது, தப்பாகவாவதுதான் சொன்னதினுல் அ ந்த வார்த்தையைத்தள்ளிப்போட்டுத் தான் பின்பு சொல் லுகிற புதுவார்த்தையை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று ஒருவன் பிருதுசெய்தாலும் எதிர்வாதஞ்செய்தாலும் அந்த ப் புதுவார்த்தையை லாவானது தள்ளிவிட்டு "எவனுன வன் பரஸ்பரவிரோதமாய் வார்த்தைகளைச்சொல்லுகிரு னே அவனுடையவார்த்தைகளைக் கேழ்க்கவே கூடாது" என்றிருக்கிற லாவின் வரியைத்தானே பெதலாகச்சொல் லும்-(B-L-M-160-) ஏனென்றுல், எந்தமனிதனும் தன் சொந்தமோசத்தினுலாவது தப்பிதத்தினுலாவது உண்டா கிறலாபத்தையடையக்கூடாது. (255-ஷ) உ-ம் ஒருஉண் டிகையை அங்கிகரித்துச் சயன்செய்து கொடுத்தவன் அப் படிச்சயன்செய்துகொடுத்தகாலத்தில் தானே இந்த உண்டி கைக்காகப் பணம் கேழ்க்கிறவன் அதில்கண்டிருக்கிறவனல் லவென்று அறிந்தும் சயன்செய்து கொடுத்துவிட்டால் பின்பு பணங்கொடுக்கவேண்டியகாலத்தில் இவன் உடைய வனல்லவானதால் கொடுக்கமாட்டேனென்று தகருர்செய் யலாமென்கிற எண்ணத்துடன் சயன்செய்துகொடுத்தேன் என்று சொல்லக்கூடாது. சயன்செய்தஉண்டிகையை யெ வன்கொண்டுவருகிருனே அவனுக்குச்சயன்செய்தவன் ப ணம்கொடுத்துவிடவேண்டும். (B-L-M-268-269.)

He is not to be heard, who alleges things contradictory to each other.

Estoppels in pleadings illustrated.

§ 117. ஒரு பிருதில் இரண்டுசெங்கதிக ளடங்கியிருக்கையில் பிரதிவாதி ஒருசங்கதியைமட்டும் ஆட்சேபித்தால் மைற்றொருசங்கதியை ஒப்புக்கொண்டதாகும். உ-ம். இறந்துபோன A-யின் ஆஸ்தியை அவன்குமாரனுகிய நீ அடைந்திருக்கிறுயென்றும், A எழுதிக்கொடுத்திருக்கிற கணக்கருப்பில்க்கண்ட ஆயிரம்கலம் நெல்லுக்கும் பிருதுதேதியில் வித்த விலைப்படிக்கி கள் க்கு ரூபாய் 1-வீதம். கூடிய ரூபாய் 1000 மும் வரவேணுமென்றும் B செய்கிறவழக்கில் நெல்லின்கிரயம் பிருதுதேதியில் கலம் 1-க்குரூபாய் ½ வீதம் வித்துதென்று நீ ஆன்சறில் சொல்லிப்போட்டால் A-யின் ஆஸ்தியை அடையவில்லையென்கிற கட்சியைப் பின்னுலே நீ சொல்லக்கூடாது. (B-523.) ஆகிலும் எவ்விதமான வாதங்களையும் பிளிடிங்குசுகள் வாங்கும்படியான காலங்களில் சொல்லலாமென்று மகாருணியவர்களுடைய ஆளுகையின் 15-16-வது ஆண்டுகளின்சட்டத்தில் 76-வது அத்தியாயம் 81-வது பிரிவில் இடங்கொடுபட்டிருக்கின்றது. (ஷை)

Estoppels to be certain, but not constituted by inference or argument.

§ 118. இஷ்டாபலுக்காக ஒருவனுடைய வார்த்தையையாவது எழுத்தையாவது உபயோகித்துக்கொள்ளும்பொழுது அந்தவார்த்தையையாவது எழுத்தையாவது தெளிவான அர்த்தபுஷ்டியான எழுத்துகளாலும் வார்த்தைகளாலும் உபயோகிக்கப்பட்டிருந்தால்மட்டும் சரியே தவிர யுக்தியினுலாவது ஊகத்தினுலாவது ஒருவார்த்தையையாவது எழுத்தையாவது அர்த்தம்செய்துகொண்டு பின்பு அதை இஷ்டாபலாக உபயோகப்படுத்தக்கூடாது. (B-524.)

Due time to be allowed to the opposite party to explain certain facts as not amounting to estoppel.

§ 119. ஆனல் ஒருசங்கதியானது உனக்கு விரோதமான இஷ்டாபல் என்று உன் எதிரி வாதித்தால் அது இஷ்டாபல்தானு அல்லவாவென்பதைப்பத்தி நீ சமாதானஞ்சொல்லும்படி உனக்கு நோட்டிசுகொடுத்து தகுந்தசாவகாசம் கொடாவிட்டால் அந்தக்காரியம்உனக்கு விரோதமான இஷ்டாபலாகமாட்டாது. (526-ஷை.)

Acts of the obligee against obliger when and how become

§ 120. ஒருதஸ்தாவேசு பிறந்தகாலத்தில் அதில்க்கண்டிருக்கிறவக்கணையை நிறைவேற்றுவது சாத்தியமாகவிருந்துது. அதைநிறைவேற்றவேண்டியகாலத்தில் அதைச்செய்யவேண்டியவனைச் செய்யவொட்டாமல் செய்துகொள்ளவேண்டி

யவன் பாருவில்வைப்பது முதலானதால் தடைசெய்திருந் தால் அந்தவக்கணையை அவன்நிறைவேற்றவில்லையென்று நினைக்கக்கூடாது. (B-L-M-259.)

estoppels against former.

§ 121. அன்னியொன்னியவிரோதமான இஷ்டாபலகளிரண்டு இருந்தால் அவைகள் ஒன்றுக்கொன்று அடித்துக் கொண்டுவிடும். அதினல் வியவகாரம் விரிந்துபோகும். ஒரு இஷ்டாபலுமில்லாமல் இருந்தால் எப்படியோ அப்படியாகும். உ-ம். ஒரு சிவில்வழக்கில் பிரதிவாதியின் வக்கிலானவர் அந்த நெம்பர் ருஜீயானதற்குப் பின் பட்டகாலத்தில் பிரதி வாதியுடன்தான் எவ்வித எழுத்துமூலமான வியாபாரமும் செய்யவில்லையென்று ஒரு ஆபீசில் எழுதிவைத்திருந்தார். இதற்குப்பின் ஷெ நெம்பரில் தன் சம்மதிக்குவிரோதமாய் வக்கில் ருஜீனமாதாக்கல்செய்ததாக வக்கீல்பேரில் பிரதி வாதி வழக்குசெய்கிருன். பிரதிவாதி தன்வக்கீலிடத்தில் முதலில்வியாச்சியம் நடத்தக்கொடுத்திருந்த சிலவுப்பணத்தை ருஜீனமாவுக்குப்பின்பட்டகாலத்தில் பெத்துக்கொண்டுகொடுத்திருக்கிற றசீதில் அந்த நெம்பர் ருஜீயாகிவிட்டதால் அந்தப்பணத்தைத்தான் பத்திக்கொண்டுவிட்டதாகக் கண்டிருக்கின்றது. இந்த றசீதானது இந்தப்பிரதிவாதி தன் வக்கீல் பேரில் செய்தவழக்குக்குவிரோதமான இஷ்டாபலாகும். ருஜீநாமாவுக்குப் பின்பட்டகாலத்தில் பிரதிவாதியுடன் தான் யாதொருவியாபாரமும் செய்யவில்லையென்று வக்கீல் எழுதிவைத்திருப்பது ஷெ றசீதைதாக்கல்செய்ய விரோதமான ஒரு இஷ்டாபலாகும். ஆனதால் பிரதிவாதிதன்வக்கீல் பேரில் செய்தவழக்கு ஒருதடையுமில்லாமல் நடக்கும். பிரதிவாதியின் சம்மதியின்பேரில் ருஜிநாமாசெய்யப்பட்டதென்கிற சங்கதியை வக்கில் ருசுப்படுத்தவேண்டும்.

Conflicting estoppels neutralize each other. Illustration of conflicting estoppels.

§ 122. ஒருவழக்கு கால நிர்ணயசட்டத்தால் தடைபட்டுப்போச்சுதென்று தள்ளுபடியாகிவிட்டுது. அந்தவழக்கின் உண்மையை மறுபடியும் பிரதிவாதி ஒப்புக்கொண்டானென்கிற நிமித்தத்தால் அவ்வழக்குக்கு மறுபடியும் உயிர்உண்டாகமாட்டாது. (சதர்கோர்ட்டு விசேஷ அப்பீல் 1851 ஷு 245-நெம்பர் தீர்ப்பு.)

A claim once declared as barred cannot revive on a subsequent admission.

CHAPTER VII.—அத்தியாயம் எ.

MATTERS JUDICIALLY DECIDED.—ஜூடிசியால் அதிகாரிகளால் தீர்ந்துபோன சங்கதிகள்.

Matters once solemnly decided by a Court of competent Jurisdiction to be never again put into litigation between the same parties.

§ 123. ஒரே கட்சிக்காரர்களுக்குள் வியக்தமான சிலபயிண்டுகள் ஒரு தடவையில் தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டுகளில் கிரமவழக்குகளில் தீர்ந்துபோய் அப்பீலன்னியில் முடிந்துபோய் விட்டால் பின்பு அதேபயிண்டுகளைக் குறித்து அதே கட்சிக்காரர்களாவது அவர்களை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிறவர்களாவது வேறை வழக்குசெய்யவேகூடாது. (1802 ஸூ II-வதுசட்டம் X-வது பிரிவு. 1859 ஸூ VIII-வது ஆக்ட்டு 2-வது பிரிவு. B-592-593.)

The plea of res-Judicata ought to be pleaded Else the right of that plea is waived.

Exception.

§ 124. இப்படி இரண்டாவது வழக்கு வந்துவிட்டால் பிரதி வாதி யான்சறில் அதுமுன்னாலே தீர்ந்துபோன வழக்கென்றும் (இதின் 108-வது பிரிவு.) அதைத் தள்ளிப்போட வேண்டுமென்றும் வாதிக்கப்பட வேண்டும். வாதிக்காவிடில் அப்படி வாதி வழக்குதடைபட்டிருப்பதை யெடுத்துச்சொல்லுகிறபாத்தியம் பிரதிவாதிக் கில்லாமல்போய்விடும். ஆகிலும் புது வழக்குத்தீர்ந்து போவதற்குமுன் எப்போவாவது பிரதிவாதியானவன் முன்வழக்கின் தீர்ப்பைக்கொண்டு வந்து தாக்கல்செய்தால் அந்தத்தீர்ப்பை சூரிகள் பிரதிவாதி தரப்பில் ஒரு ருசுவாக அங்கிகரித்து ஆலோசித்து இரண்டாவது வழக்கைத்தள்ளலாம். (N-487.) இரண்டாவது

Dangers from allowing a second suit, as described by Mrs. Best, and Broom.

வழக்கு செய்யும்படி இடம்கொடுப்பதில் இருக்கின்றபொல்லாங்குகளை பெஷ்ட்டு துரையவர்களும் புரும்துரையவர்களும், சொல்லியிருக்கிறார்கள். அவைளாவன, தகுந்த அதிகாரிகளாலும் முடிவான அப்பீலதிகாரிகளாலும் தீர்ப்பு செய்யப்பட்டுப் போன ஒரேசிவில் அல்லது கிரிமினல் வழக்கைத்தானே மறுபடியும் கட்சிக்காரர்களுடைய இஷ்டப்படிக்கி அவர்களுக்கு மனசுவந்தபொழுதெல்லாம் தீர்ப்பில் தப்பு இருக்குதென்றாவது பொய்யாகவோ மெய்யாகவோ புதிதான சில நல்லருசுக்கள் அகப்பட்டுதென்றாவது சொல்லுகிற முகாந்தரங்களினால் கட்சிக்கார்கள் புதுப்பித்துக்கொள்ளக்கூடுமானால் அதுபெரிய அசவுக்கியங்களையும்

பொல்லாங்குகளையுமுண்டாக்கும். சூடிசியால் நடவடிக்கையானது இவ்வளவுதூரம்மட்டும் போகலாமென்கிற ஒரு அத்து அல்லது எல்லை ஏற்படுத்தாவிட்டால் எந்தமனிதனாவது தன் தேகம், சுவதந்தரம், சொத்து, இதுகளை அனுபவிப்பதில் பத்திரமாயிருப்பதாக ஒருக்காலும் எண்ணவேகூடாது. அல்லாமலும் அனியாயக்காரனும், பிடிவாதக்காரனும், சண்டைக்காரனுமான மனிதனும், விசேஷமாய் பாக்கியவந்தனும், அதிக ஆசைக்காரனுமான மனிதனும் ஜனக்கூட்டங்களைத் தன்கடாட்சத்திற்குள் அடிமைக்காரர்களாகச் செய்துகொண்டு அந்தக்கூட்டத்தை துர்வழக்கு, கலில், க்ஷுத்திரம் இதுகளுக்கு ஒருபெரிதான ஆகாரமாகச்செய்துவிடுவான். நியாயசபைகளின் தீர்ப்புகளுக்கு முடிவு ஒன்றிருக்கவேண்டுமென்று இருக்கிற பெரிய தத்துவத்தைப்பிரபஞ்சம்முழுதிலும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். (B-44-B-L-M-297.)

ஆனால் எந்தப்பயிண்டுகள் முன்தீர்ப்பில் தீர்ந்துதோ அந்தப்பயிண்டுகள்மட்டுந்தான் மேல்க்கண்டவிதிக்கி உபயோகப்படுமேதவிர யுக்தியினால் ஊகிக்கக்கூடிய பயிண்டுகளுக்குமுன் சித்தாந்தம் உபயோகப்பட்மாட்டாது. (B-593.) What points in the second suit are barred by the former Judgment.

§ 125. கோர்ட்டுக்குவருகிற வழக்குகளை முடிக்கவேண்டியது இராசாங்கத்தாருடைய கடமையாகவிருக்கின்றது. (N-26-98-352.) ஒவ்வொருவழக்கிலும் நிஜத்தைக் கண்டுபிடித்துத்தீர்ப்புச்செய்வது மிகவும்கஷ்டமாகவிருக்குது. இவ்வளவுபெரியருசுசாஸ்திரத்தைப்படித்தும்தர்ம்மமான ஒரு தீர்ப்பைச்செய்யப் பெசகு நேரிடுது. (இதின் 4-வது-பிரிவு) இப்படியிருக்க, ஒருவனுக்கு ஒருவன் ஏதாவதுகொடுக்கவேண்டுமென்றாவது செய்யவேண்டுமென்றாவது முடிவாய் ஒருதீர்ப்பு அல்லது ராஜீநாமாமுதலானது ஏற்பட்டுப்போனபின்பு "ஒவ்வொருவியாபாரமும் எதின்மூலமாகஒருவனை பெத்தப்படுத்திற்றோ அதின்மூலமாகவே றத்தாகவேண்டும்" என்று (இதின் 29-வதுபிரிவு) இருக்கின்ற லாவுக்கும் விரோதமாய் அவ்விதமாக நியாயசபையில் ஏற்பட்ட ஒரு கடமையை அந்தச்சபையாருடைய சாட்சியமன்றியில் தீர்த்துப்போட்டதாக ஒரு தீர்ப்புக்கடனாளிசொல்லி அதை Private adjustment after Decree void.

யவன் மறுபடியும் தீர்ப்பாவதற்குமுன் சொத்துக்குடையவனை எந்த அந்தஸ்தில் வைத்திருந்தானே அதே அந்தஸ்தில் வைத்துவிடும்படி லாவில் இடங்கொடுத்தால் அது இதின் 124-வது பிரிவில்கண்ட தொந்தரவைவிட பெரிதான தொந்தரவுகளையும் க்ஷேமக்குறைவையும் உண்டாக்குமானதால், டிக்கிரிகளில்க் கண்டகடமைகளை உள்ளுக்குள் தீர்த்துப்போட்டதாக எவ்வளவு உறுதியான ருசுக்களைக்கொண்டுவந்தாலும் அதுகள் டிக்கிரியின் ஷறத்துக்குவிரோதமாயிருந்தால் கோர்ட்டார் அங்கிகரிக்கவேகூடாது. ஆனல் அந்தக்கடமைகள் தீர்ந்துபோனதாக தீர்ப்புக்குடையவன் ஒப்புக்கொண்டால் சரிதான். (1859 ஷு VIII-வது ஆக்ட்டு 206-வது பிரிவு) உள்ளுக்குள் தீர்த்துப்போடுகிறது கூடாதென்று டிக்கிரியில் கண்டிருப்பதற்கு விரோதமாயந்தக்கடனை நடந்ததற்கு சிட்சைக்காக அந்தக்கடனைமறுபடியும் கோர்ட்டுமூலமாக ஒருவிசை அந்தக்கடமையைத்தீர்க்கவேண்டியதுதான். ஆகிலும் உள்ளுக்குள்ளாக ஒரு கடமையைப்பெற்றுக்கொண்டுவிட்டவன் மறுபடியும் அந்தக்கடமையை நிறைவேற்றிக்கொடுக்கவேண்டுமென்றுகேழ்ப்பது குற்றந்தானே. எப்படியெனமுல், டிக்கிரியை நிறைவேற்றமனுக்கொடுக்கிற ஒவ்வொருவனும் அந்த டிக்கிரிப்படி கடனை நடவாததினுல் தனக்கு நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று சொல்வதாலும் உள்ளுக்குள் தீர்ந்துபோயிருந்தால் அப்படி நிறைவேற்ற மனுக்கொடுப்பது மோசடியும் அதில் காணுவது பொய்யுமானதாலும், (No man shall be allowed to take advantage of his own wrong or fraud) என்று லாவிருப்பதாலும் டிக்கிரிக்குப்பின்பு உபயவாதிகளுக்குமுண்டான ஸ்நேகத்தின் நம்பிக்கையினுல் தீர்ப்புக்கு உடையவனுக்குக் கடனை எதார்த்தத்தில் பணங்கொடுத்துக் கடமையத் தீர்த்திருந்தால் அந்தப்படி தீர்ந்துபோச்சுதென்கிற விவரத்தைக்கண்டு கோர்ட்டில் மிமோமுண்டம் கொடுக்க நம்பிக்கையினுல் கடமைப்பட்ட தீர்ப்புக்குடையவன் அந்தப்படி குடாவிட்டால் அது அவன்பேரில் நம்பிக்கைத்துரோகக் குற்றத்தைச்சாட்டுமென்று நான் நினைக்கிறேன். லாக்களுடைய கருத்தெல்லாங்கூடி ஒருவனும் துர்மார்க்கஞ்செய்யக்கூடாதென்றும் ஒருவனும் கெட்டுப்போ

கக்கூடாதென்றுமானதாலும் உள்ளுக்குள் கடமையைப் பெற்றுக்கொண்டும் பின்பு கோர்ட்டில் மனுக்கொடுத்து நிறைவேற்றுகிறவனை நம்பிக்கைத் துரோகத்திற்காகத் தெண்டிப்பதினால் நன்மையைத்தவிர வேறையொன்று முண்டாகாததினாலும் அப்படிப்பட்டவனை நம்பிக்கைத் துரோகத்திற்காகத் தெண்டிக்கலாம். ("That which was originally void, will not become valid by lapse of time" என்று லாவிருப்பதால் (B-L-M-167.) சிவிலில் தீர்த்தகடமையை ருசுப்படுத்தச் செல்லாமற்போன ஒரு றசீதானது நம்பிக்கைத்துரோகவழக்கில் பின்பு எப்படி செல்லுபடியுள்ளதாகுமென்று சில கட்சிவரும். இந்த றசீதின்படி வேறை சிவில் கிரமவழக்கிடுகிற தப்பானவழக்கம்இப்பொழுது பல கோர்ட்டுகளில் நடக்கின்றது. அந்தவழக்கில் இந்த லா உபயோகமென்பதில் சந்தேகமில்லை. அந்த றசீதைக்கொடுத்தவன் மறுபடியும் நிறைவேற்றினால் அவனை நம்பிக்கைத் துரோகத்திற்காகத் தெண்டிப்பதற்கு இந்த றசீது ருசுவாக யேன் அங்கிகரிக்கப்படக்கூடாது. நிச்சம்சயமாய் அங்கிகரிக்கப்படலாம். எப்படியென்றால், இந்தக்கிரிமினால் வழக்குக்குவாதி மகாறுணியவர்கள் றசீதுபெற்றவன் சாட்சிமாத்திரமேதவிர வேறில்லை. மேலும் 1860 ஞு XXXVI வது ஆக்ட்டு XII-வதுபிரிவில், "எந்ததஸ்தவேசுகள் இந்த ஆக்ட்டின் A அடையாள சாப்தாவில்குறித்த வீதப்படிக்குள்ள முத்திரைக்காகிதத்தின்பேரில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று இந்த ஆக்ட்டின II-வது பிரிவிற்சொல்லியிருக்கின்றதோ அந்ததஸ்தவேசுகளை யந்தப்படி முத்திரைக்காகிதங்களில் எழுதியிராவிட்டால் அந்ததஸ்தவேசுகளினால் யாதொருபாத்தியம் உண்டாகிறதாகவாவது அழிக்கிறதாகவாவது வேறை எவ்விதமாகவாவது அதுகளை எந்த சிவில்கோர்ட்டிலும் ருசுவாக அங்கிகரிக்கப்படமாட்டாதென்றும், ஆகிலும் அந்த தஸ்தவேசுகளைத்தானே எந்தக்கிரிமினால் வழக்கிலும் ருசுவாக அங்கிகரிக்கலாமென்றும்" கண்டிருக்கின்றது. அப்படியே தீர்ப்புக்குடையவன் கொடுத்த றசீதையும் அவன் நம்பிக்கைத் துரோகஞ்செய்ததை ருசுப்படுத்த ருசுவாக அங்கிகரிக்கலாமென்று நான் நினைக்கிறேன். குற்றங்கள்எல்லாம் றுணியவர்களுக்குச்செய்தது

றசிதுபெற்றவனுடைய தப்பிதத்திற்காக ஷ கிரிமினல் வழக்கு றத்தாகமாட்டாது.

Cases illustrative of the authority of of res-Judicata.

§ 126. தீர்ந்தவழக்கை மறுபடியும் கொண்டுவரக்கூடாத தற்கு உபமானமுள்ள கேசுகளாவன, ஒருசாமானை நீ ஒருவனிடத்தில் கொண்டாய் அவனுக்கு அதில் பாத்தியமில்லையென்றும் அதுவரவேண்டுமென்றும் நிஜமான உடமைக்காரன் வழக்கிடுகிறான். அந்தவழக்கு எவ்விதத்திலோ உன் பட்சம் தீர்ந்து போச்சுது. அப்பீலன்னியில் முடிந்தும் போச்சுது. பின்பு அந்தசாமானை நீ போக்கடித்துப்போடுகிறாய். உடமைக்காரன் கையிலகப்படுகின்றது. அவன்பேரிலதுவரவேண்டுமென்று நீ செய்கிறவழக்கில் அதுதனக்குப் பாத்தியமுள்ளதென்று அவன் ஆட்சேபிக்கிறான். அந்த ஆட்சேபத்தை றத்துசெய்ய முன்தீர்ப்புப்போதும். (B-L-M-295.) மைற்றொருகேசில் கொண்டசரக்கின் கிரயம் வரவேண்டுமென்று B-பேரில் A-வழக்கிட்டான். அந்தக்கிரயத்தை A-க்கி முன்னமேயே B-செலுத்தி றசீதுபெற்றுக் கொண்டான். ஆனால் அந்த றசீது அகப்படாதத்தினால் தாக்கலாகி ருசுவாகவில்லை. B-க்கி வேறைருசுவும் கிடையாது. ஆனதால் A-பட்சம் தீர்ப்பாகி B-யினிடத்திலிருந்து பணம் வசூலுமாகிவிட்டுது. அதின்பிறகு அந்தறசீது B-க்கி அகப்பட்டுது. ஆனதால் தப்பாகத்தன்னிடத்திலிருந்து வசூலாகிவிட்டபணத்தை A-யினிடத்திலிருந்து றசீதின்படிவாங்கித்தரவேண்டுமென்று B-வழக்கிடுகிறான். கிரமமானகட்டளைகளின் மூலமாக வசூலானதுகையை திரும்பியும் B-க்கி வாங்கிக்கொடுக்கக்கூடாதென்று லார்டு "கினியன்" அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அது அப்பீலிலும் உறுதியாச்சுது. (298-ஷ.)

Wherein Judgments of Courts &c. are void.

§ 127. கோர்ட்டுத்தீர்ப்புகள் இவ்வளவுகனமுள்ளதாகவிருந்தாலும் அடியிற்கண்டமுகாந்தரங்களுக்காக அதுகள் றத்தாகும். அவைகளாவன 1-தீர்ப்பில்க்கண்டிருக்கிற சொத்து பலானதென்கிற நிச்சயம் இல்லாமலிருப்பது. 2-எந்த சொத்தைவாதிக்கிப் பிரதிவாதிகொடுக்கவேண்டுமென்பது சட்டப்படி செல்லாதோ அதைக்கொடுக்கும்படி தீர்ப்புச் செய்திருப்பது. 3-அசாத்தியமான காரியத்தைச்செய்யும்

படி தீர்ப்புச்செய்திருப்பது. 4-தீர்ப்பானது லாவுக்குப் பிரத்தியட்சவிரோதமாயிருப்பது. 5-தீர்ப்பில் அன்னியொன்னிய விரோதமான வியவஸ்தைகள் அடங்கியிருப்பது. 6-பிருதில் கேழ்க்காமலிருப்பதைத் தீர்மானித்திருப்பது. (B-595.) 7-மோசம் சம்பந்தப்பட்டிருப்பது. (ஷை-599.)

§ 128. ஒருவன் தான் சம்பந்தப்படாத நடவடிக்கைகளுக்கு உள்ப்படவேண்டியதில்லையென்று இருக்கின்ற (இதின் 15-வது பிரிவு) றூலுக்கு ஒரு நிஷேதமிருக்கின்றது.—அதாவது, ஒருமனிதனுடையவாவது ஒரு பதார்த்தத்தினுடையவாவது அந்தஸ்தைக்குறித்துச் செய்யப்பட்ட தீர்ப்பாம். அதற்கு "ஜட்ஜ்மெண்டு இன்-றம்" என்று பேர். உதாரணம். A என்பவன் 1840 ஷ் த்தில் சித்தப்பிரமையுள்ளவனாகவிருந்தான். B என்கிறவன் அவனுடைய தகப்பனுஸ்தியை அடையவில்லை. C என்பவன் D என்பவனுக்கு சுவிகாரபுத்திரன் என்பது முதலானதாம். (B-212-N 487.) இவ்வித தீர்ப்புகளுக்கு சம்பந்தப்படாத கட்சிக்காரர்கள்கூட அதுகளுக்கு பெத்தப்படவேண்டும். Effect of Judgment in rem.

PART II.—பார்ட்டு உ.

INSTRUMENTS OF EVIDENCE. ருசுவின் ஆயுதங்கள்.

§ 129. நியாயஸ்தலங்களில் விவாதத்தில் வருகின்ற சங்கதிகள் உண்மையானதென்கிற அல்லது அல்லவென்கிற ஞானத்தை ஒருசூடிசியால் அதிகாரியின் மனதில் உண்டாகிற (இதின் 1-வது பிரிவு.) ருசுவென்கிற பதார்த்தமானது அந்தப்படி நியாயாதிபதிகளின் புத்திக்கிவர மூன்றுமார்க்கங்களிருக்கின்றன. அவைகளின் வழியாகமட்டும் ருசுவெளியாகிறபடியால் அவைகளுக்கு ருசுவின் ஆயுதமென்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவைகளின் பிரஸ்தாபத்தை இந்த இரண்டாவதுபார்ட்டிலே சொல்லுகிறேன். அவைகளாவன, 1-மனிதர்கள் அல்லது சாட்சிகள் 2-எழுத்துமூலம் அல்லது தெஸ்தவேசுகள் 3-ஸ்தாவரம் அல்லது பதார்த்தங்கள் அல்லது பிரத்தியட்சமானது இவைகளை இந்தப்பார்ட்டிலே 3-அத்தியமாகப்பிரித்துவரிசைப்படிசொல்லுகிறேன். What constitute Instruments of Evidence. Division of.

CHAPTER I.—அத்தியாயம் க.

WITNESSES.—சாட்சிகள்.

Who are called by the name "Witnesses."

§ 130. தங்களுக்குத் தெரிந்தசங்கதிகளை நியாயாதிபதிகளுக்கு குடிசியால்காரியங்களுக்காக பப்பளிக்குகோர்ட்டில் வந்து சொல்லுகிறவர்களுக்கு சாட்சியென்றுபெயர். எல்லா மனிதர்களும் ஸ்திரியானாலும் சம்ரி புருஷன், பாலன், விருத்தன், அதிகாரி, பிச்சைக்காரன், இவர்களானாலும் சரி மேல்ச்சொன்ன காரியத்துக்காகச் சம்மன்செய்யப்படுகிறவன் எவனும் சாட்சியெனப்படுவான். வாதிப்பிரதிவாதிகளாக இருப்பவர்கள்கூட ஒருவருக்காக மைற்றொருவர் சங்கதிகளைச்சொல்லச்சொல்லி சம்மன்செய்யப்பட்டால் சாட்சியெனப்படுவார்கள். (1859 ஸு VIII-வது ஆக்ட்டு 161-வது பிரிவு.) சாட்சிப்பிரகரணத்தை அடியில்க்கண்ட பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும். அவைகளாவன.

Division of this Chapter.

பிரிவு. I. சாட்சிசொல்லத் தகுந்தவர்கள் யார்?

II. சாட்சிசொல்லும்படி யாரைக்கட்டாயம்செய்யலாம், யாரைக்கட்டாயஞ்செய்யக்கூடாது?

III. நிஜம்சொல்லும்படியிருக்கின்ற பெந்தோபஸ்துகள்.

IV. மனிதர்களுடைய வாக்குமூலத்தை மதிக்கிற விதம்.

V. ஏகசாட்சியின் வாக்குமூலம்.

VI. சாட்சிகளின் விசாரணை.

VII. அபிப்பிராயசாட்சி.

SECTION I.—பிரிவு க.

WHO ARE COMPETENT.—சாட்சிசொல்லத் தகுந்தவர்கள் யார்.

Who are competent as Witnesses.

§ 131. நியாயசபைகளில் ருசுச்சொல்வதற்குப் பிரமாணத்தின் யோக்கியதையையும் தாங்கள்சொல்லுகிற சங்கதியின் அர்த்தத்தையும் அறிய விவேகத்தில் பெலமில்லாத 7-வயதுக்குக்கீழ்ப்பட்ட பாலர்களும் பயித்தியக்காரர்களுந்

தவிர மைற்ற யாவத்து மனிதர்களும் ஸ்திரிகளும் பிரபுக்களும் மைற்றுமுள்ள யாவரும் சாட்சிசொல்லத்தகுதியுள்ளவர்களேதவிர வேறில்லை. (1855ஸூ II-வது ஆக்ட்டு XIV வது பிரிவு) மகம்மது சாஸ்திரத்தின்படி ஸ்திரிகள் சாட்சி சொல்லத் தகுந்தவர்களேயல்லா. ஆனால் இந்தவிதி இப்பொழுது செத்துப்போயிற்று. இந்து லாவில் எவனுடையவாக்குமூலத்தைக் கட்டாயமாய் நம்பலாமோ அப்படிப்பட்டவன்மட்டும் சாட்சிசொல்லத்தகுந்தவன் என்று விதியிருந்தது. அதினால் சாட்சிசொல்லத்தகுதி யெவனுக்குக் கொடுபட்டிருந்ததோ, அல்லது எவனைச்சாட்சியாக ஏற்றுக்கொண்டார்களோ அவனுடைய வாக்குமூலத்துக்கு நம்பிக்கையும் பூருவாகக் கொடுபட்டுக்கொண்டுவந்தது.

According to the Muhummadan Law women were not competent.

சாட்சியின் தகுதிக்கும் அவனுடைய ருசுவின் நம்புதலுக்கும் சம்பந்தமில்லையென்கிற தத்துவம் அநேகருக்குத் தெரியாது. அதினால் சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுப்போன மனிதனுடைய வாக்குமூலத்தை நம்பவேவேண்டுமென்கிற தப்பான எண்ணம் இண்டியாவில் இருந்தது. அதற்காகவே எந்தமனிதன் சாட்சியாக வரக்கூடாதென்று ஒருவன் நினைக்கிறானோ அவனந்த மனிதனைப் பிரதிவாதியாய்ச் சேர்த்துப்போடுகிற வழக்கமுண்டு. ஒரு கட்சிக்காரனை மைற்றொருவன் சாட்சியாகக் கோறலாமென்கிறதாய் 1855 ஸூ X-வது ஆக்ட்டுவருகிறவரைக்கும் அப்படி நடந்துவந்தது. ஷை ஸூ II-வது ஆக்ட்டில் ஒரு வழக்கில் சம்பந்தமும் பிரயோஜனமுமுள்ளவன் கூடச் சாட்சிசொல்லலாமென்று எழுதியிருந்ததைப்பார்த்தவுடனே அநேகம்பேர் கட்சிக்காரர்களும், நேட்டிவ் ஜட்ஜிகளும், சாட்சியின் தகுதிக்கும் அவர்களுடைய ருசுவின் நம்புதலுக்கும் சம்பந்தமில்லையென்கிற தத்துவம் தெரியாமையினால் அவர்களை றத்துசவால் கூடப் போடுகிறதில்லை. எவனை அங்கிகரித்ததோ அவனுடைய வாக்குமூலத்தை நம்பவேண்டுமென்கிற கட்டாயத்தை தர்ம்மசபையார் வைக்கவேயில்லை. சாட்சிகளுடைய ருசுவை நம்புவதில் மெத்தசாக்கிரதையாகவிருந்து சரியாக மதிக்கும்பொருட்டு இங்கிலிஷ் லாயர்கள் அநேகம் உத்தமமான விதிகளை மிகவும் சிரமப்பட்டுக் கண்டுபிடித்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். (4-வது பிரிவு இந்த அத்தியாயம்.)

Confusion produced by ignorance of the distinction between admissibility and credibility of Evidence.

அதினல் ருசுவின் அங்கிகாரத்துக்கும் நம்புதலுக்கும் மிகவும் வித்தியாசமிருக்குதென்றறியலாம். (B-128.) எப்படிப்பட்ட மனிதனையும் சாட்சியாக அங்கிகரிக்கவேண்டுமென்று மெத்த அவுதாரியமான வியாக்கியானம் ஏன்செய்யவேணுமென்ருல், ஒருமனிதன் எத்தனைபொய்சொல்லவந்தாலும் அவனுடையவாக்குமூலத்தில் நிஜம் பலானதென்றும் பொய் பலானதென்றும் கண்டுபிடிக்கிற விதிகளை (இந்தஅத்தியாயத்தின் 4-வது பிரிவு) ஏற்படுத்திப்போட்டபடியால் பொய்யினிடத்தில் பயமில்லை. ஆனல் எப்படிப்பட்டவனிடத்திலிருந்தும் தெரிந்துக்கொள்ளும்படியான நிஜத்தைத் தெரிந்துக்கொள்ளாமல் நஷ்டப்படுத்திப்போட இங்கிலிஷ்லாவுக்குச் சம்மதமில்லை.

Reasons for the liberal admission of persons as Witnesses.

§ 132. ஒருசாட்சிக்காரன் சாட்சிசொல்லத்தகாதவனென்று லா-ஊகிக்கமாட்டாது. தகாதவன் என்கிற கட்சியைச் சொல்லுகிறவன் ருசுப்படுத்தவேண்டும். (B-129.)

Presumption against incompetency.

§ 133. தைவவிஷயஞானம், தைவபக்தி, விவேகம், இதுகள் இல்லாதவர்களும், வழக்கின்கட்சிக்காரர்களும், எந்தக் கட்சிக்காரனுக்காவது லாபமுண்டாகிறதில் ஆசையுடைய பக்ஷபாதியும், சாட்சிசொல்லத்தகாதவர்களென்று முன்னலே, லா-விருந்தது. இந்ததோஷங்கள் எல்லாம் 1855 ஷ II-வது ஆக்ட்டினல் நீங்கிப்போச்சுது. இப்பொழுது எல்லாமனிதர்களும் இதின் 131-வது பிரிவுப்படி தகுதியுள்ளவர்கள்தான். சாட்சிசொல்லத்தகாதவர்களென்று மேலே சொன்னமனிதர்கள் இங்கிலீஷ்தேசத்தில் தகாதவர்களென்று தான் இப்பொழுதுமிருப்பதாகத்தெரியுது. அல்லது அந்ததேசத்தில் அந்ததோஷம் நிவர்த்தியானதாகத் தெரியவரவில்லை. (B-133-to-173.)

Old Law as to incompetency in India.

§ 134. ஒரு சுமாருய் மனுஷியப்பிருணிகள் யாவரும் இண்டியாவில் சாட்சிசொல்லத்தகுந்தவர்கள்தான். ஆகிலும் பயித்தியக்காரர்கள்மட்டும் தகாதவர்கள் என்று இண்டியாவின் சட்டத்தில் சொல்லியிருப்பதின் காரணம் பிரத்தியட்சமாகவிருக்கின்றது. அதாவது, பயித்தியக்காரனை ஒன்று கேட்டால் வேறைஒன்று சொல்லுவான். அல்லது பெதலே சொல்லமாட்டான். ஆகிலும்அவனைகோர்ட்டார் தெண்டிக்

Lunatics during lucid intervals competent.

கமாட்டார்கள். தெண்டிக்கவுங்கூடாது. ஏனென்றால், ஒரு காரியம் குற்றமுள்ளதாகவிருந்தாலும் குற்றமான எண்ணத்துடன் அதைச்செய்யாவிட்டால் அது குற்றமல்லா. (இதின் 61-வது பிரிவு.) கோர்ட்டாரை அலட்சியம்செய்யவேணுமென்கிற எண்ணத்துடன் பெதல்சொல்லாமலிருந்ததாக சிக்ஷைசெய்யவேண்டிய கோர்ட்டாரோ சொல்லமாட்டார்கள். இப்படி நிச்சயமில்லாதவிதமாய் அவன்சொல்லுகிறவார்த்தையை நம்பி ஒருவனுக்கு அனுகூலத்தையாவது ஒருவனுக்குப் பிரதிகூலத்தையாவது கோர்ட்டார்செய்யக்கூடாது. மேலும், அவனுக்குப் பிரமாணத்தின் யோக்கியதை தெரியமாட்டாது. நத்துசவாலுக்கு பெதல் சொல்லமாட்டான். ஆகிலும் இவனுடையருசுவினால் தெரிந்துகொள்ளக்கூடிய நிஜத்தைக்கூடவிட்டுவிட லாவுக்கு சம்மதமில்லை. எப்படியென்றால், ஒருபயித்தியக்காரனுக்கு அந்த உபாதி தெளிந்திருக்கும்காலத்தில் அவனை சாதாரணமான மனிதன்போல் சாட்சியாக விசாரிக்கலாம்.

SECTION II.—பிரிவு உ.

WHO ARE COMPELLABLE TO GIVE EVIDENCE AND WHO ARE NOT.—சாட்சி சொல்லக்கட்டாயப் படுத்தப்படவேண்டியவர்கள்யார் செய்யப்படக்கூடாதவர்கள்யார்.

Competent persons compellable to give evidence.

§ 135. சாட்சி சொல்லத்தகுதியுடைய எல்லாமனிதர்களும், சாட்சிசொல்லும்படி கட்டாயம் செய்யப்படுவார்கள். எந்தமனிதனை ஒருகூடிசியால் வழக்கில் சாட்சிசொல்லும்படி கிரமமானவிதமாக நோட்டிசு கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அவன்குறித்த கெடுவில் குறித்தவிடத்தில் ஆஜிராகாமல் போனால் அவனுக்கு ஆறுமாதம் சாதாக்காவலாவது ஆயிரம்ரூபாய் அபருதமாவது அவ்விரண்டுமாவது விதிக்கப்படும். (இண்டியன்பினல்கோட் 174-175-பிரிவுகள்) அவனுக்கு வாரண்டுமுதலான கட்டளைகளும் பிறக்கும். (1859-ஞ VIII-வது ஆக்ட்டு 159-வது பிரிவு.) ஆனால் அரசனை சாட்சியாகக்கோறப்பட்டு அவன் ஆஜிராகாவிட்டால் அவன்

The king excepted.

பேரில் வாரண்டுமுதலான பெலாத்காரக்கட்டளைகளையனுப் பக்கூடாது. (இதின்-16-வதுபிரிவு B-124.) அவன்தவிர மைற்ற எல்லாமனிதர்களுக்கும்பிரபுக்களுக்கும் கட்டாயமா னவாரண்டுகள்பிறப்பிவிக்கலாம். இதைப்பற்றி அடியில்எழு தியிருப்பது நல்ல உபமானமாகவிருக்கின்றது. அதாவது, ஒருசமயத்தில் மகாருணியவர்களுடைய மூத்தகுமாரனு கிய "வெல்ச்தேசத்தின் அரசனும். (Arch-Bishop of Canterbury)" காண்டர்புரியின்மடத்து பெரியமகாகுரு அவர்களும், (Lord High Chancellor) என்கிற றிவினியு கோர்ட்டின் ஓயர்ந்த அதிகாரியும் ஒரே கோச்சில் போய்க் கொண்டிருந்தபொழுது ஒருவீட்டின் சாடுமோலியும் ஒரு அங்காடிக்காரியும் (Penny) என்றுபெயருள்ளகாசில் அரை க்காசு பெறுமான பழத்துக்காக சண்டைபோட்டுக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது அந்தப்பெண்பிள்ளைகளிருவ ரும் ஷெ பிரபுக்களை சாட்சிகோறினல் அவர்கள் வரமாட் டோமெனலாமா? நிச்சயமாக அப்படி சொல்லவேகூடாது.

The Prince of Walse and others to be summoned.

தைவநிந்தனைக்காக ஒருவன்பேரில் வந்த வழக்கில் மதவிஷ யங்களில் எப்பொழுதும் அன்னியோன்னிய விரோத அபிப் பிராயமிருக்குமென்பதை ருசுப்படுத்தவேண்டிய பிரதிவாதி எல்லா மதங்களுடைய பெரிய குருக்களையும் நிச்சயமாக சம்மன்செய்தான். அவர்கள் எல்லாரும் ஆஜிருய் சாட்சி சொல்லக்காத்திருந்தார்கள். இங்கிலீஷ் கடலின் பேரில் "நெப்போலியன்" சக்கிரவிருத்தியவர்கள் (Emperor Napolean) வந்திருந்தபொழுது அவரை ஒருவழக்கில் சாட்சி சொல்வதற்காகச் சம்மன் பெற்றுக்கொண்டார்கள். ஆனு ல் சம்மன் சார்வாகவில்லை. (B-124 B-நோட்டு.)

The Heads of all religious persuasions summoned.

Attempt made to summon and to compel Emperor Napolean.

§ 136. அநேகமாய் எல்லாமனிதர்களும் சாட்சிசொல் லத் தகுந்தவர்கள் என்பதையும் சாட்சி சொல்லும்படி கட்டாயஞ் செய்யப்படுவார்களென்பதையும் இதற்கு முன் சொல்லியாகிவிட்டுது. ஆனல் சிலரை சிலகாலம் வரையி லும் சிலரை சிலசங்கதிகள்மட்டிலும் காரியத்தை வெளிப்ப டுத்திச் சொல்லும்படி லாவானது கட்டாயஞ் செய்யமாட் டாது. அதுகளுக்கு ஜனங்களுடைய க்ஷேமத்திற்காகத் தள் ளிவிடப்பட்ட ருசுவென்றும் சுவதந்தரத்துக்காகத் தள்ளி விடப்பட்ட ருசுவென்றும் பெயர். அவைகளாவன.

Of preveleged communications.

§ 137. 1 ஒருகட்சிக்காரனுக்கும் அவனுடையவக்கீலுக்கும் வக்கில்விருத்தியைச்சார்ந்த நம்பிக்கையில் நடக்கிற உத்தரப்பிரத்தியுத்தரங்களை வெளிப்படுத்தும்படி அந்த வக்கீலை கட்டாயஞ்செய்யக்கூடாது. எந்தச்சங்கதியானது வக்கீலுடைய விருத்தி நம்பிக்கையினால் வக்கீலுக்குத்தெரிந்திருக்குதோ அதைப்பற்றி அந்த வக்கீலைவிசாரிக்கலாமென்று அந்தச்சங்கதியைச்சொன்ன கட்சிக்காரன் சம்மதித்தால் பின்பு வக்கீலைசாட்சியாகவிசாரிக்கலாம். அல்லது அந்த கட்சிக்காரன் சாட்சியாக விசாரிக்கப்பட்டுப்போனாலும் பின்பு அவன் சம்மதியன்னியில் வக்கீலை சாட்சியாக விசாரிக்கலாம். (1855ஸ் II-வது ஆக்ட்டு XXIV-வது பிரிவு.)

Counsel in a cause preveleged.

§ 138. 2 கவரன்மெண்டு ஆபீசர்கள் ஒருவருக்கொருவர் கவரன்மெண்டு ரகசியங்களைக் குறித்து எழுதிக்கொள்ளுகிற காகிதங்களைக்கொண்டுவரும்படியாவது அதுகளிலடங்கியிருக்கின்ற சங்கதிகளை வெளிப்படுத்தும்படியாவது அதுகளை வைத்துக்கொண்டிருக்கிறவர்களையாவது எழுதியவர்களையாவது பார்த்தவர்களையாவது எந்த கோர்ட்டாரும் கட்டாயஞ்செய்யக்கூடாது. (ஷ ஆக்ட்டு XXI-வது பிரிவு.)

Public officers, regarding the affairs of the state, preveleged.

§ 139. 3. சூரிகள் ஒரு வியாச்சியத்தின் சங்கதிகளை விசாரணை செய்துக்கொண்டிருந்தபொழுது அந்த வழக்கு விஷயமாய் அவர்கள்முன்பாக என்னநடந்துதோ அதைக் குறித்தும் தாங்கள்செய்த தீர்மானம் தப்புமுதலானதால் அநியாயமாய் தீர்க்கப்பட்டுதென்பதைக் குறித்தும் சூரிகளைசாட்சியாக விசாரணை செய்யக்கூடாது. (B-585.)

Jurors preveleged.

§ 140. 4. புருஷனுக்கும் பெண்சாதிக்கும் நடந்த இரகசியவார்த்தைகள் ஒன்றையும் வெளிப்படுத்தும்படி அவர்களில்யாரையும் கட்டாயஞ்செய்யக்கூடாது. ஆனால் எந்தச் சங்கதியானது புருஷன் பெண்சாதிகளாக விராவிட்டாலும் அன்னியருக்கு சகஜமாய் சொல்லக்கூடுமோ அதை யவர்கள் பேசியிருந்தாலதைப்பற்றி இந்த விதி சம்பந்தப்படாது. (ஷ 590.)

Husband and wife preveleged.

§ 141. ஒருவன் தன்னுடைய புண்ணிய பாவங்களைக் குறித்து ஆலோசனைபெற்றுக் கொள்ளும்பொருட்டு பாதிரிகளிடத்தில் சொன்ன சங்கதிகளை வெளிப்படுத்தும்படி

Confessions to Clergymen not preveleged.

அவர்களைக் கட்டாயஞ்செய்யலாமா கூடாதாவென்கிற சங்கதி வெகுநாளாய் சந்தேகமாயிருந்தது. அவர்களைக் கட்டாயஞ் செய்யலாமென்று முடிந்திருக்கின்றது. (B-587.) ஆனால் அந்தப்பாதிரியைக் கட்டாயஞ் செய்யக்கூடாது. அல்லது அவர்கள் இவ்விஷயமாய் நிஜம்சொல்லாவிட்டால் தெண்டிக்கக்கூடாது என்று நார்ட்டன்துரையவர்கள் கட்சிசொல்லுகிறார்கள்.

Confessions, to Friend and Medical men, not preveleged.

ஒரு சினேகிதனிடத்தில் சொன்ன இரகசியங்களையும் வைத்தியனிடத்தில் சொல்லிய இரகசியங்களையும் வெளியிடும்படி கட்டாயஞ்செய்யலாம். (B-590. 586.)

SECTION III.—பிரிவு. ௩.

SECURITIES OF TRUTH.—நிஜத்திற்கிருக்கின்ற பெந்தோபஸ்து.

Number of the sanctions of truth prevailing among societies not well civilized.

§ 142. நாலுமுகாந்தரங்களுக்காக நிஜஞ்சொல்லுங் குணம் மனிதனுக்கு சுவபாவத்திலிருப்பதாக அநேகம் கிரந்தகர்த்தர்கள் சொல்லுகிறார்கள். அந்தநாலுமுகாந்தரங்களின் செல்வாக்கும் கோர்ட்டில் சாட்சி சொல்லவருகிற சாட்சிகளின் மனதின்பேரில்மட்டும் செல்லுமேதவிர சுவபாவமாய் திரிகிற எல்லாமனிதர்கள் பேரிலும் செல்லமாட்டாது. கிரமமான லாக்கள் இல்லாமல் இருக்கின்றதேசங்களில் நியாயஸ்தலங்கள் தவிர மற்றவிடங்களில் பொய்சொன்னால் இராஜதெண்டனைகிடையாது. கிரமமான லா-இருக்கின்ற பிரிட்டிஷ் இராச்சியங்களில் நியாயஸ்தலங்கள் தவிர மற்றவிடங்களில் பொய்சொன்னால் கடைசிபட்சம். Misdemeanor என்கிற சிறியகுற்றப்படியாவது தெண்டிப்பார்கள். தைவத்தின்பேரால் பிரமாணம்செய்து வைக்காதவரையில் பொய்சொன்னால் தைவதெண்டனை கிடையாது. ஆனதால் மனிதர்களுக்கு நிஜஞ்சொல்லுங் குணமிருப்பதற்குள்ள முகாந்திரங்களை என்புத்தகத்தில் சாட்சிப் பிரகரணத்தில் எழுதியிருக்கிறேன் நிஜஞ்சொல்லுகிற சுவபாவம் மனிதனுக்கிருக்குதென்பதில் சந்தேகமில்லை. அப்படியே ஒருவன் சொன்னதை நம்பிக்கையுடன் கேழ்க்கிற சுவபாவமும் மனிதனுக்கிருக்குதென்பதில் சந்தேகமில்லை. ஒரு

Reasons for annexing Securities of of truth to the Chapter "Witnesses."

வன் தன்னுடைய பிரயாசையினால் கண்டுபிடித்து பிறத்தி யானுக்கு நேராகவாவது பரோக்ஷமாகவாவது சொல்லுகிற காரியங்களை நம்பாவிட்டால் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த ஞானத்தைக்கொண்டு தெரிந்துகொள்வது மிகவும் சுவல்ப்பமாயிருக்கும். உலகம் நாகரீகமாகவும் மாட்டாது. சரியாக ஆளப்படவும் மாட்டாது. நியாயாதிபதிகள் தங்கள் முன்பாகவரும் ஒவ்வொருவழக்கின் உண்மையையும் தாங்கள் நேராகத்தெரிந்து கொள்ளுகிறதானால் ஒருக்காலும் கூடாத அசாத்தியமாகையால் சாட்சிகளுடைய ருசுவை அங்கிகரித்து அதினால் நீதிசெலுத்துகைக்கி ஒரு ஒதவியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசரமாச்சுது. ஆகிலும் நிஜஞ்சொல்லும்படி சாட்சிகளுடைய மனதிலிருக்கின்ற பெங்தோபஸ்துகள் யாவையென்பதையும் அதுகளிலும்எவ்வாறாகக் கெடுதி நேரிடுதென்பதையும் இதினடுத்த பிரிவுகளில் எழுதுகிறேன். அவைகளாவன, சுவபாவத்தின் பெங்தோபஸ்து 1-நீதியின் பெங்தோபஸ்து அல்லது மனிதர்களுடைய "அன்னியோன்னிய அபவாதத்தின் பெங்தோபஸ்து 2-மதவிஷயமான பெங்தோபஸ்து 3-இராஜா ஆக்கினையின் பெங்தோபஸ்து 4-இவைகளாம்.

Reasons for which the testimony of witnesses has been resorted to.

§ 143. 1-நிஜம்சொல்ல மனிதர்களுடைய மனதில் முதலில் இருக்கின்றபெங்தோபஸ்தானது சுவபாவத்தின்பெங்தோபஸ்தாகவிருக்கின்றது. அது எவ்வாறாகப் பெங்தோபஸ்து செய்யுமென்றால், மனிதன் சுவபாவத்தில் பெளுவைத்தாங்குவதைப்பார்க்கிலும் தன்மனதை லேசாகவைக்க ஆசையுள்ளவனாகவிருப்பான். பொய்யைச்சொன்னால்எந்தவிடத்தில் என்னசொல்லியிருக்கிறோம் என்று ஞாபகத்தில் கட்டுப்பாடாக வைத்துக்கொள்ளும்படிக்கி மனதுக்கு இவன் வேலையிடுவான். இது ஞாபகத்துக்கு பெளுவானது. ஆனால் இந்த பெளுவை நீக்கிக்கொள்ளும்பொருட்டு நிஜம் சொல்லலாம். பொய்யானது மேல்க்கண்டபடி கட்டுப்பாட்டின் வேலையானதாலும், நிஜமானது ஞாபகத்தின்வேலையானதாலும், ஞாபகமானது அதிலிருக்கிற வார்த்தைகளைத் தவறிக் கொட்டிப்போடுமாகையாலும், அப்பொழுது பொய் அந்த வாயைத்தடுக்கவந்தாலும் உபயோகமில்லாததினாலும் மனிதன்சொல்லுகிற வார்த்தைகள் நிஜமாகவிருக்கலாம். (B-16.)

The natural or physical sanction.

The popular or moral sanction.

§ 144. 2-நியாயஸ்தலத்தில் ஒருவன்சொல்லும் பொய்யைக் கோர்ட்டார் கண்டுபிடிக்காவிட்டாலும் பொய்சொன்னவனுடைய இஷ்டர்களுக்கு அவன் பொய்சொன்னான் என்பது தெரியுமானதாலும், அவர்களிவனைப் பொய்சொன்னதற்காக சபைகளில் அவமானஞ்செய்வார்களாகையாலும், மனிதன் நிஜம்சொல்ல இதுவும் ஒருகாரணமாகும்.—(B-17.)

The religions sanction.

§ 145. 3-எந்த மனிதனுடைய புத்தியிலும் சர்வசக்தியுள்ள தைவம் ஒன்றிருக்குதென்றும், அதின் அதிகாரத்தில் மனிதனுடைய யாவத்துபாக்கியமும் பரலோக முத்திமுதலானதும் அகப்பட்டிருக்குதென்றும், சுவல்ப்பஞானங் கூடயில்லாமல் போகமாட்டாது. அப்படிக்கொத்த தைவத்தின்பேரில் பிரமாணஞ்செய்வித்துவிட்டால் அதானது ஒவ்வொருமனிதனுடைய மனசாட்சியின்பேரிலும் ஒரு பெரிதான செல்வாக்கை ஒடத்தாயிருக்கும். ஆனதால் பிரமாணஞ்செய்து வைத்துவிட்டால் பொய்வராது. "சத்தியஞ்செய்கிறவன் வாயில் பிரமாணம் என்கிற ஒரு சூத்திரத்தை வைத்திருக்கின்றது. பின்பு அவன் பொய்சொன்னால் அவன்பேரில் தைவகோபத்தையந்த சூத்திரம் இழுக்கும்." (B-18.)

The Political sanction.

§ 146. 4-பொய்யைச்சொல்ல வொட்டாமல் மேல்க்கண்ட பெந்தோபஸ்துகள் மனிதனைத்தடுக்கும் சந்தேகமில்லை. அதுகளையெல்லாம் தாண்டியொருவன் பொய்சொல்லிப்போட்டால் இராஜதெண்டனைவிடாது. உலகத்தில் சகலவிதமான பாக்கியத்தையும் விட்டு அடிமையாக காவலில் வைக்கப்படுகின்ற இராஜதெண்டனையின் பயமானது மனிதனுடைய மனதில் மிகவும் ஆழமாகப்பதியும் அதினாலாவது நிஜம்சொல்லலாம். (பினால்கோட் 193-வது பிரிவு.)

Arguments against these sanctions

§ 147. இவ்விதமான பலபெந்தோபஸ்துகள் இருந்தாலும் அதுகளே முடிவானபெந்தோபஸ்துகளாகமாட்டாது. எப்படியென்றால், சுவபாவத்தின் பெந்தோபஸ்தானது முக்கியமாய் ஞாபகத்தை சுலுபப்படுத்திக்கொள்வதற்காகவிருந்தால் நிஜத்தை அல்லது நடந்தகாரியத்தை நடந்தபடி ருசுவாகச் சொல்லவொட்டாமல் ஞாபகமில்லையென்பதுமு

தலான ஜவாபுகளைச்சொல்லிப்போடலாம். லோகோபவாதத்தின் பெங்தோபஸ்தைக்குறித்தோவென்றால், ஒருமனிதனுடைய ஒரோடத்தையானது ஜனங்களில் சிலர் புத்தியில் தப்பென்றும் பின்னுஞ் சிலர்புத்தியில் செய்யவேண்டியதென்றும் படும். (B-20.)

§ 148. இவ்விதமாக நிஜத்தின் பெங்தோபஸ்துகளைக் கூடச்சாட்சிகள் ஏமாத்திப் போடுகிறபடியால் அவர்களுடைய வாக்குமூலம் பிரமாணத்தின்பேரில் வந்தாலும் அதுகள் பொய்யாயிருந்தால் எப்படியோ அப்படி அந்த வாக்குமூலத்தின் எதார்த்தத்தை வியாக்கியானப்படுத்திற்கு உத்துசவால்போடும்படி லா-உத்தரவு செய்கின்றது. அல்லாமலும் இதினடுத்த பிரகரணமும் பெரிதான ஒரு பெங்தோபஸ்தாகவிருக்கின்றது. Security of cross examination.

SECTION IV.—பிரிவு ச.

MODE OF WEIGHING HUMAN TESTIMONY.—மனிதர்களுடைய வாக்குமூலத்தை மதிக்கின்றவிதம்.

§ 149. மேலேசொல்லிவந்த பெங்தோபஸ்துகள் யாவத்தும் இருந்தாலும் அத்துடன் லாவானது திருப்தியடைகிறதில்லை. மனிதர்களுடைய வாக்குமூலத்தை தருசில்போட்டு நிறுத்துப்போடவேண்டும். எப்படியென்றால், ஒரு மனிதனுடைய வாக்குமூலத்தை நம்பவேண்டுமானால். 1-நிஜத்தைச்சொல்ல அவனுக்கு சத்தியிருக்கின்றதா? அதாவது, இவனுக்கு இந்த சங்கதிதெரியநிமித்தமென்ன? தெரிந்துகொள்ளவேண்டிய அந்தஸ்தில் இருக்கிறானா? அவன் நிதானமான மனதுள்ளவனாகவிருக்கிறானா? அல்லது திரடசித்தமில்லாதவனாகவிருக்கின்றானாவென்பதுமுதலானதாம். 2-அவனுக்கு நிஜம்சொல்லமனமிருக்கின்றதா? அதாவது, நிஜத்தைச்சொல்லவொட்டாமல் தடுக்கின்ற எந்தபட்சபாதத்திலாவது அவன் உள்பட்டிருக்கின்றானா? இதற்குமுந்தியசமயங்களில் அவன் கார்கஸ்தியமாக சாட்சிசொல்லியிருக்கின்றானா? வாக்குமூலம் எழுதிவைக்கும்பொழுது அவனுக்கிருந்த மாதிரியும் சேஷ்டைகளும் எதுவாகவிருந்தன என்பதாம். (B-21-22.)

Scale to weigh human testimony.

Ability and willingness in the Witness to speak the truth are great tests.

The consistency of the several parts of the narration and the possibility and probability thereof.

§ 150. அந்தச் சாட்சிக்காரனுடைய வாக்குமூலத்திற் கண்ட எல்லா இடங்களும் ஏகவாக்கியத்தைச்செய்துபார்க்கையில்ஒவ்வுகின்றதுகளாவென்பது 1-சொல்லியிருக்கின்ற சங்கதிகள் நடப்பது சாத்தியமா அல்லது நடக்க ஏஷியமிருந்திருக்கின்றதா இல்லையாவென்பது 2-இதுகளைப் பார்க்கவேண்டியது எல்லாத்தையும்விட முக்கியமானதுகள். (ஷ)

How a man's willingness to narrate truly is weighed.

§ 151. ஒருமனிதனுடைய வாக்குமூலத்தை எதார்த்தமாக எழுதிவைக்க அவனுக்கு மனமிருந்ததைநிறுப்பதற்கு அடியிற்கண்டது மெத்தவும் பெரிதான தருசாகவிருக்கின்றது. அதாவது, வாக்குமூலம் எழுதிவைக்கும்பொழுது அந்தச் சாட்சிக்காரனுக்குண்டாகும் சேஷ்ட்டைகளையும் அவன்வாக்குமூலம் எழுதிவைக்கும் மாதிரியையும் யோசிக்கவேண்டியதானது அந்த வாக்குமூலம் வாங்கவேண்டியதைப்பார்க்கிலும் அவசியக் குறைவுள்ளதல்லா.

Marks of insincerity.

எவனுடையசாட்சியாக இவன் வந்திருக்கிறானே அந்தக் கட்சிக்காரனுக்குச் சாதகம்செய்யும்படியான வார்த்தைகளை எழுதிவைப்பதில் அவன் பறபறப்புடன் மேல்விழுந்து பக்தியுடன்சொல்வதும், சங்கதிகளைப் பன்னிப்பன்னிச் சொல்வதும், தன்கட்சிக்காரனுக்கு எதிரிபட்சத்திய சங்கதியைப் பத்தி சாதகமாக ஏதாவது இவன்சொல்லவேண்டியிருந்தால் அதில் இவனுக்கிருக்கின்ற அசம்மதியும், ஜவாபுகளைத் தாமசமாய்ச் சொல்வதும், கேழ்விகளுக்கு நேரான ஜவாப் சொல்லாமல் வேறையெதையாவதுசொல்லித் தப்ப எத்தனப்படுவதும், தான்சொல்லுகிற ஜவாப்களின் பிரயோஜனம் என்னமாகுமென்பதை ஆலோசிக்கக் காலம் சம்பாதிக்கும்பொருட்டு கேழ்வி தனக்குக் காதில் விழவில்லைப் போலாவது, கேழ்வி தனக்கு அர்த்தமாகவில்லைப்போலாவது பேஷ்ஜம்செய்வதும், வரப்போகின்ற கேழ்வி எப்படிக் கொத்த சுவபாவமுள்ளதாகவிருக்குமென்பதைத் தெரிந்துகொள்ளாமலே ஜவாப்சொல்ல அவன் அவசரப்படுவதும், எந்தவிடத்தில் விவரம்சொல்வதினால் அல்லது தன்வாக்குமூலத்திற்கு வியாக்கியானப்படுத்துவதினால், தன்வாக்குமூலம் பொய்யாகவிருக்கின்றபட்சத்தில் பூர்வோத்தறவிரோதம்வரவேமாட்டாதென்று அவனுக்குத்தெரியுமோ அவ்விடத்தில் கேழ்விகளுக்கு மிகவும் விவரமாக வியாக்கியானப்

படுத்துவதும், தான் அந்தவழக்கினிடத்திலும் மைற்றும் எல்லாவிஷயத்திலும் மிகவும் அலட்சியமாக விருப்பவன் போல் பேஷ்ஜம்செய்வதும், பிரத்தியட்சமாய் மனப்பூர்வமான நாணயக்குறைவுகளின் அடையாளங்களாகவிருக்கின்றன. மைற்றொருபட்சத்தில் தான்சொல்லுகிற ஜவாப்களின்பிரயோசனம் என்னமாகவிருக்குமென்பதை யோசிக்காமல்த்தானே பிரத்தியட்ச சம்மதியுடன் ஜவாப்சொல்வதும் தன்வாக்குமூலம் பொய்யாகவிருந்தால் பூர்வோத்தரவிரோதம் தெளிவாய்வந்துவிடும்படியிருக்கின்ற சங்கதிகளைச்சார்ந்த யாவத்து நடவடிக்கைகளையும் யாதொரு தகருருமில்லாமல் றெடியாய் விவரித்துசசொல்வது முதலானதுகளும் நாணயத்தின் அடையாளங்களாகவிருக்கின்றன. (B-21.) Marks of sincerity.

§ 152. ஒருசாட்சிக்காரன் எத்தனை பொய்யைச் சொன்னாலும் இந்த தருசைக்கொண்டு நிறுத்தால் அந்தப்பொய்யைக்கண்டுபிடித்து அதினால் நிஜம்பலானபக்கத்திலிருக்குதென்று தெரிந்துகொள்ளலாமாகையாலும், ஆனால் அந்த சாட்சிகளைவிசாரணைசெய்கிற முதல் அதிகாரக்கோர்ட்டாருக்குமட்டும் இந்தப்படி சாட்சி வாக்குமூலத்தை நிறுக்கும்படியான சமயம்வாக்கிமேதவிர அப்பீலதிகாரிகளுக்கு கிடைக்கமாட்டாதாகையாலும் தான் சங்கதிகள் ருசுவாச்சுதென்றும் இல்லையென்றும் அசல் கோர்ட்டார்சொல்வதை அப்பீல்கோர்ட்டார் விசேஷ நம்பிக்கையுடன் அங்கிகரிப்பார்கள். இந்த அர்த்தம் 1853 ௵ XVI-வது ஆக்ட்டிலிருந்துது. எப்படியென்றால், சங்கதிகள் ருசுவாச்சுதா இல்லையாவென்பதைப்பத்தி கிழ்க்கோர்ட்டார் சொல்வதுமட்டும் முடிவானதேதவிர அதில் சதர்கோர்ட்டார் பிரவேசிக்கவேகூடாது. நிஜத்தைக்கண்டுபிடிக்க இவ்வளவுபெரிதான லா-வையேற்படுத்தியும், அதை அறியாமல் அநேகம் கீழ்கோர்ட்டார் மேலே சொன்னசேஷ்டை முதலானதை கவனியாமல், சாட்சி வாக்குமூலத்தில் எது எழுதப்படுகின்றதோ அதைமட்டும் கவனிக்கின்றார்கள். அல்லது ஜட்ஜிகளும் சூரிகளும் தங்களுடைய சொந்தஞானத்தை சூடிசியால் ருசுவாக அங்கிகரிக்கக்கூடாதென்று (இதின் 16-வது பிரிவு.) இருக்கிறலாப்படிக்கி தாங்களாகதெரிந்துகொள்ளுகிற மேல்கண்டசேஷ்டை முதலானதுகள் சூடிசியால் காரியங்களு Utility of retaining the power of finding facts in the Court trying a Witness.

க்கு உபயோகப்படமாட்டாதென்று நினைத்துக்கொண்டு அவைகளைக்கவனிக்கும்படி கட்சிக்காரர்கள் கேட்டுக்கொண்டாலும் கவனிக்கிறதில்லை. "A consideration of the demeanour of a witness (Stark-Ev-517.) and of the manner of giving his evidence is often times not less material than the testimony itself." என்று பெஷ்ட்டுதுரையவர்கள் சொல்லுகிறுர்கள். அதாவது, சாட்சிகளுடையவாக்குமூலங்களைப்போலவேயே சாட்சிகளுடைய சேஷ்டை முதலானதும் கோர்ட்டார் கவனத்தில்வரவேண்டியது. ஏனென்றுல், நிஜம் பலானதென்று கோர்ட்டாருக்குத் தெரியச்சேயே அதை உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடாதென்று, லா-ஒருக்காலும் நினைக்கமாட்டாது. ஜட்ஜிகள் சூடிசியால் அதிகாரமொறமையில் பெஞ்சிலிருந்துக்கொண்டிருக்கையில் எதைத்ரெிந்துக்கொண்டாலும் அது சூடிசியால் ருசுவாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆனல் ஜட்ஜிகள் தங்களுடைய சொந்த ஞானத்தை சூடிசியால் ருசுவாக உபயோகப்படுத்தக்கூடாதென்று சொன்னதின் அர்த்தமெல்லாங்கூடி, அவர்கள் அதிகாரமொறமையில் இல்லாமல் வெறும்மனிதனுக ஊர்வழிகளில்ப்போய் வியவஸ்தையில்லாத ஜனங்கள்சொல்லுகிற கடைத்தெருவார்த்தை முதலானதைக்கொண்டும் தன் சொந்த அனுபவத்தினல் தெரிந்துகொண்டதாகச் சொல்லப்படுகின்றதுகளைக் கொண்டும் பிரமாணத்தின்பேரில் நடக்கின்ற நியாயஸ்தலங்களில் விவாதப்படுகிறசங்கதிகள் ருசுவாச்சுதென்றுவது இல்லையென்றுவது சொல்லக்கூடாதென்றுமட்டும் அந்தலா-வுக்கு அர்த்தம்செய்யவேண்டுமேதவிர வேறில்லை. ஜட்ஜிகள் அப்படியேன் சொந்தஞானத்தை உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாதென்பதற்குள்ள முகாந்தரங்களை இதின் 16-வது பிரிவில் எழுதியிருக்கின்றது.

SECTION V.—பிரிவு-௫.

THE TESTIMONY OF SINGLE WITNESS.—ஏகசாட்சியின்ருசு.

General remarks.

§ 153. இரண்டுமனிதர்கள் ஒருசங்கதி எதார்த்தமென்றும் அல்லவென்றும் சர்ச்சைப்பட்டுக் கொண்டிருக்கும்

பொழுதெல்லாம், சாட்சிகள்யென்று மேலாகப்பிரஸ்தாபித்திருக்கின்ற மனிதர்கள்முதலான ருசுவின் எந்த ஆயுதத்தின் மூலமாகவாவது கோர்ட்டாருக்குத் திருப்திசெய்து வைக்காவிட்டால், யார்சொல்லுகிற வார்த்தையையும் கோர்ட்டார் நம்பமாட்டார்களென்று இதற்குமுன் சொல்லியாகிவிட்டது. (இதின் 4-5-வது பிரிவுகள்)

ஆனல் எந்தசங்கதியை எத்தனைபேரைக்கொண்டு அல்லது எத்தனை சாட்சிகளைக்கொண்டு ருசுப்படுத்தவெணுமென்பதைப்பற்றி இதுவரைக்கும் ஒன்றும்சொல்லவில்லை. உலகத்தில் எப்பொழுதும் ஒரு சங்கதிக்கி ஒரு சாட்சியைக்கொண்டு ருசுப்படுத்தி அந்த ருசுவைப்போதுமான ருசுவாக அங்கிகரிக்கக்கூடாதென்கிற ஒரு அபிப்பிருய மிருந்து கொண்டேவருகின்றது. அது அநேகம் நிமித்தங்களுக்காக நல்ல அபிப்பிருயந்தான். ஏகசாட்சியின் ருசுவை அங்கிகரிக்கக்கூடாதென்பதற்கு யாவரும் சொல்லும் கட்சிகளை இதினடுத்தபிரிவில் எழுதுகிறேன். இங்கிலீஷ தேசத்தில் மதவிஷயமான சாஸ்திரக்காரர்களும் அப்படியே அபிப்பிருயப்படுகிருர்கள். ஆனல் அத்தேசத்தின் லா-கோர்ட்டு ஜட்ஜீகள் ஏகசாட்சியின் ருசுவை நல்லதாகவும் பூர்த்தியானதாகவும் அங்கிகரிக்கலாமென்பதற்காக சொல்லும் கட்சிகளை இதின் 155-வது பிரிவில் சொல்லுகிறேன். ஆனல் ஏகசாட்சியின் ருசுவை 156-வது பிரிவில்க்கண்ட சங்கதிகள் மட்டில் அங்கிகரிப்பது நியாயமாகவிருக்கின்றது.

இந்து லாவில் உபயவாதிகளாலும் கோறப்பட்டவனுல் ஏகசாட்சியின் ருசு எல்லாவிஷயங்களிலும் போதுமானதென்றிருக்குது.

1855 ஸு II-வது ஆக்ட்டு XXVIII-வது பிரிவில் Treason என்கிறகலாபம் முதலான பெருங்குற்றக்கேசுகள் தவிர மற்ற எல்லாவிஷயங்களிலும் எவனுடையவாக்குமூலம் நப்புதலைக்கி யோக்கியமாகவிருக்கின்றதோ அவ்வித மனிதனுடைய ஏகசாட்சி ருசுபோதுமென்றுகண்டிருக்கின்றது. இதினல் வியாச்சியங்களின் சுவபாவத்திற்கும் சாட்சி சொல்லுகிறவனுடைய குணங்களுக்கும் தக்கவிதமாய் ருசுவை அங்கிகரித்து நம்பவேண்டுமென்றறியவேண்டியது.

2-ம். ஒருநேட்டிவு பிரபுவீட்டிலிருந்து மற்றொருகிரகஸ்தன்

ரூபாய் 1000 பொறுமான ஒரு சந்திரகாரத்தை எறவலாகவாங்கிப்போனது தனக்குத்தெரியுமென்று, லார்ட்-கவர்னர் அவர்கள் ருசுச்சொன்னல் அது ஏகசாட்சிருசுவானதால் அங்கிகரித்து நம்பமாட்டோமென்றுசொல்லலாமா? இதுகள் நாலும் இன்னம் அடியில் எழுதுகிறகாரணங்களாலும் ஏகசாட்சியின் ருசுவை நம்பலாம்.

Reasons against the Law of receiving and believing the testimony of single witness.

§ 154. ஏகசாட்சியின்ருசுக் கூடாதென்பதற்கு இருக்கின்ற முகாந்தரங்களாவன. எந்தமனிதனும் தனக்கு எசைந்த ஒருவனை திட்டம்செய்துகொண்டு தன்னிஷ்டப்படி சங்கதிகள் எல்லாம் நிஜம்போல் ருசுச்சொல்லிவைத்து அவன் வார்த்தைகளின்படிக்கெல்லாம் தீர்ப்புச் செய்யும்படியான கட்டாயத்தை கோர்ட்டாருடைய தலையின்பேரில்வைத்துவிடுவான். மேலும் எந்தசங்கதிக்கும் இரண்டுபேர்சாட்சிகளாக வந்துசொன்னல் ஒருவனுடையவாக்குமூலத்திற்கும் மைற்றொருவனுடைய வாக்குமூலத்திற்கும் பேதமிருக்குதாவென்று பார்க்கலாம். அவ்விருவருக்கும் றத்துசவால்போடுவதினல், அவர்கள் பொய்யைச்சொன்னல், அந்த இரண்டு வாக்குமூலமும் பேதிக்கும். அது அந்த ருசுவினல் நொந்துபோகவேண்டிய கட்சிக்காரனுக்கு நன்மையையுண்டுபண்ணும். இதுமுதலான காரணங்களால் ஏகசாட்சி ருசுவை நம்பக்கூடாது.

Reasons for which the testimony of single witness is receivable.

§ 155. ஏகசாட்சியின் ருசுவை நம்பக்கூடுமென்பதற்குள்ள முகாந்தரங்களாவன. ஏகசாட்சியின்ருசுவை நம்பக்கூடாதென்று சட்டமிருக்கின்ற சங்கதி துஷ்ட்டர்களுக்குத் தெரிந்தால் உடனே அவர்கள் கொலை, வழிப்பறி, முதலாகிய தங்களுடைய துஷ்ட்டவிருத்தியைத் துணிச்சலுடனும், சிட்சையினிடத்தில் பயமில்லாமலும், ஏகசாட்சியின் சமுகத்திற்செய்வார்கள். அகிருத்தியம் நடக்கப்போகிறதென்பதை நொந்தவன் முன்னடியறிந்து அதற்காக சாட்சிகளை முன்னடி திட்டஞ்செய்வது அசாத்தியம். அகிருத்தியங்களைச்செய்கிறவனும் அதற்காகத் தன்கூடச் சாட்சிகளைக்கொண்டுவரமாட்டான். அவர்களிருவரும் சாட்சி சம்பாதிக்காவிட்டாலும் அப்பொழுது தற்செயலாய் சாட்சிகள் வருவார்கள் என்பதும் நிச்சயமில்லை. இதுமுதலானதற்காக ஏகசாட்சிகளுடைய ருசுவை அங்கிகரிக்கலாம்.

§ 156. என்னசொன்னாலும் ஏகசாட்சியின் ருசுவை சகஜமாய் அங்கிகரிக்க எந்தத்தேசத்திலும் சம்மதிக்கமாட்டார்கள். ஆகிலும் சிலவிஷயங்களில் அங்கிகரிக்கலாமென்று பெஷ்ட்டுதுரையவர்கள் சொல்லுகிறார்கள். அது மிகவும் யுக்தமாயும் அவசியமாயுமிருக்கின்றது. அதாவது, அந்தந் தவழக்கின சுவபாவத்திற்கும் சாட்சிசொல்ல வருகிறவர்களுடைய சுகுணங்களுக்கும் தக்கதாய் ஏகசாட்சியின் ருசு அங்கிகரிக்கலாமென்று ஜட்ஜியின் புத்தியிலும் அந்தச்சாட்சியின் ருசு நம்பத்தக்கதாகவிருக்கின்றதென்று ஜூரியின்புத்தியிலும் படும்பொழுதெல்லாம் அங்கிகரிக்கலாம். மேலும், எந்த நடவடிக்கையை இரண்டுமனிதர்கள் சாவகாசத்துடனும் அன்னியோன்னியசம்மதியுடனும் செய்துகொள்ளுகிறார்களோ அந்தவிஷயங்களில் ஏகசாட்சியின்ருசு உபயோகமில்லை. எந்தநடவடிக்கையானது பெலாத்காரம் முதலான தற்செயல்களினால் சம்பவிக்கின்றதோ அவ்விஷயங்களில் ஏகசாட்சியின் ருசுப்போதும். அதிகசாட்சிகள் விசாரிக்கப்பட்டிருந்து அவர்களில் ஒருவனுடைய வாக்குமூலத்திற்கும் மைற்றொருவனுடைய வாக்குமூலத்திற்கும் பேதப்பட்டால், எவனுடையவாக்குமூலம் அதிகநம்பிக்கையுள்ளதாக விருக்கின்றதோ, அதை ஜூரியோசித்து நம்பினாலும் விரோதமில்லை. (B-559-561.) Cases, wherein such testimony receivable.

§ 157. சாட்சிக்காரன் சொன்னபடியெல்லாம் தீர்ப்புச் செய்யவேண்டுமென்று இதினால நினைக்கவேண்டியதில்லை. சாட்சிக்காரனுடைய யோக்கியதைகளையும், அவனுடைய சேஷ்டைகளையும் ருசுச்சொன்னசங்கதி நடப்பதற்கு ஏதுயமிருக்குதாயென்பதையும், ஜூரியோசித்துத்தான் ருசுவை மதிக்கப்படும். மேலும், எந்ததேசத்தில்-லாவுக்கு எஜமான் ஜட்ஜிகளாகவும் சங்கதிகளுக்கு எஜமான் ஜூரிகளாகவும் இருக்கவில்லையோ அந்ததேசங்களுக்கு இந்தவிதி உபயோகமில்லைத்தான். (B-560.) Remarks.

SECTION VI.—பிரிவு. ௬.

EXAMINATION OF WITNESSES.—சாட்சி விசாரணை.

Examination of Witnesses what.

§ 158. சாட்சி சொல்லத்தகுந்தவர்கள்யார் என்பது முதலானதை இதற்கு முன் சொல்லியாகிவிட்டது. ஆனால் சாட்சிகள் கோர்ட்டு முன்பாகவந்தபின்பு செய்யவேண்டியது பலானதென்பதை இனிச்சொல்லவேண்டும். அப்பொழுது நடக்கும்காரியத்திற்கு சாட்சிவிசாரணை யென்றுபெயர். இந்த ஏட்டிங்கில் சாட்சிகளை எந்த பயிண்டுகளைப்பற்றி விசாரணைசெய்யவேண்டுமென்பது-1. சாட்சிகளுக்கு சவால்முதலானது போடவேண்டியது யார் யென்பது - 2. எவ்வித சவால்கள் போடலாம் எவ்வித சவால்கள் போடக்கூடாதென்பது. 3-இதுகளையும் ரத்துசவால்போடுகிறதுமுதலான சங்கதிகளையும் சொல்லவேண்டும். ஆகிலும் இதை ஆரம்பிப்பதற்குமுன் சாட்சிவிசாரணைசெய்வதற்காக இங்கிலாண்டில் கூடுகிற ஜூரிகளுடைய ஏற்பாட்டையும் சுவல்ப்பம் சொல்லவேண்டியது அவசரமாகவிருக்கின்றது. ஆனதால் அந்தப்படி எழுதுகிறேன்.

Witnesses to appear before the Jury.

§ 159. எந்த சாட்சிகளை விசாரிக்கலாமென்கிற லா-பயிண்டை ஜட்ஜீ தீர்மானித்துப்போட்டவுடனே அவர்கள்ஜூரிகள்முனபாக விசாரணைக்காக ஆஜிருகவேண்டும். (B-82.)

What constitutes a law court.

§ 160. லா-கோர்ட்டுகளுக்கு ஒன்று அல்லது பலஜட்ஜிகளிருப்பதுண்டு. அவர்கள் லா-வைப்படித்தவர்களாயும், அதின் அதிகாரத்தை வகித்துக்கொண்டவர்களாயு மிருப்பார்கள். வியாச்சியம்நடக்கின்ற தேசத்தின் ஜனங்களிலிருந்து சாதாரணமாய் பொறுக்கியெடுக்கப்பட்டிருக்கின்றஜூரி என்று பேர்பெறுகிற 12-மனிதர்களால் அந்த ஜட்ஜிகள் உதவிசெய்யப்பட்டிருப்பார்கள். எந்த சங்கதியும் ருசுவாச்சுதென்றும் ருசுவாகவில்லையென்றும் சொல்லுகிற அதிகாரம் அந்த ஜூரிகளுடையது. (இதின் 16-வது பிரிவு.) தகுந்தயோக்கியதையில்லையென்கிற காரணத்துக்காகவாவது தீர்மானங்களைச்செய்வதில் மைற்றும் எவ்விதமான அக்கிரமத்தையாவது செய்வார்கள்போ லிருக்குதென்கிற காரணத்துக்காகவாவது தங்களுடையவழக்குகளை அந்தஜூரிகள் தீர்

Who are to become the Jury.

Their province.

Mode in which they are challenged.

மானிக்கவேண்டியதில்லையென்றுவியாச்சியக்காரர்கள் தோஷாரோபணஞ்செய்யலாம். கொலை, திருட்டுமுதலானகுற்றங்களால் சாட்டப்பட்ட மனிதர்கள்நிமித்தஞ் சொல்லாமலே சாப்தாவில் இருக்கின்ற சூரிகளைக் கொலைவிஷயத்தில் 35-தடவையும் திருட்டுவிஷயத்தில் 20-தடவையும் தூஷிக்கலாம். அல்லது தங்கள்வழக்கைவிசாரிக்கவேண்டாமெனலாம். வியாச்சிய நடவடிக்கைகளை நடத்துவதும்சாட்சியத்தையங்கிகரிப்பதும் தள்ளுவதும் ஜட்ஜியின்வேலை. இதுவுந்தவிர வழக்கானது விசாரணைக்கித் தகுதியுள்ளதானவுடனே சூரி கையில் அதைக்கொடுத்து, விவாதபயிண்டுகளையும், அதற்குச்சம்பந்தமான லா-க்களையும், ருசுபொறு எவன்பேரில் இருக்குதென்பதையும், சூரிக்கி விபரமாய்ச்சொல்லிக்கொடுக்கவேண்டியதும் ஜட்ஜீயைச்சார்ந்தது. உடனே கட்சிக்காரர்களும் வக்கீல்களும் சாட்சிகளும் சூரிமுன்பாக ஆஜிராகவேண்டியது. (B-82.)

In treason or felong how.

The province of the Judge.

§ 161. எந்த சங்கதியை விசாரிக்க சூரிகள் கூடுகிறார்களோ அந்த சங்கதியைப்பற்றிய ஒரு பத்திரிகையை சூரிகள் கையில் கோர்ட்டு ஆபீசரில் ஒருவராவது வாதிவக்கீலாவது கொடுக்கவேண்டியது. உடனே விசாரணையாரம்பமாகும். இது கிரிமினல்வழக்கின்விதி. சிவிலில் இந்தவேலையை வாதியாவது அவனுடைய வக்கீலாவது செய்யவேண்டியது. (B-602.)

A summary of the case to be given to the Jury.

§ 162. வியவகாரத்திற்கு முக்கியமான அம்சங்களைப்பத்திமட்டும் சாட்சிவிசாரணை செய்யவேண்டுமேதவிர அனுவசியமான பயிண்டுகளைப்பத்திவிசாரிக்கக்கூடாது. (B-245.)

To what points evidence should be confined.

§ 163. எவன்பேரில் ருசுபொறுவிருப்பதாகத் தீர்ந்திருக்கின்றதோ அவனுடையசாட்சிகளை முதலில் விசாரணைசெய்யவேண்டும். கிரிமினல்வழக்கில் வாதிக்கி வக்கீல் இல்லாவிட்டால் அவனுடையசாட்சிகளைக் கோர்ட்டாரோ விசாரிப்பார்கள். ஏனென்றால், கிரிமினல் வழக்குகளில் வாதி மகா ராணியவர்கள் பின்பு எதிரிபக்கம் விசாரணையாகும். (602-ஷை.)

Whose witnesses are to be first examined.

What questions the Witnesses are bound to answer to.

§ 164. எந்த சாட்சிக்காரனும் கோர்ட்டாரால் தனக்குப் போடப்பட்ட எந்த சவால்களுக்கும் ஜவாப் சொல்லித்தீர வேண்டும். ஜவாப்சொல்லமாட்டேனென்று அவன் ஆட்சேபிக்கக்கூடாது. பலானசவாலைப் போடலாமென்றும் பலானதைப் போடக்கூடாதென்றும் கோர்ட்டார் ஆட்சேபிக்கலாம். அல்லது உபயகட்சிக்காரர்கள் அல்லது அவர்களுடைய வக்கில்கள் ஆட்சேபிக்கலாம். ஆகிலும் பலான சவாலைப் போடலாமென்றும் பலானதைப் போடக்கூடாதென்றும் கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டுமேதவிர சவால்களின் யுக்தாயுக்தையையோசிப்பது சாட்சிக்காரனுடைய பாத்தியமல்லா. (1859 ஞு VIII-வது ஆக்ட்டு 172-வது பிரிவு)

A Witness is bound to answer even such questions as will criminate or disgrace him.

மேலும், எந்த ஜவாபானது அந்த சாட்சிக்காரனை குற்றத்திற்காவது அவமானத்திற்காவது உள்ளாக்கும்படியாயிருக்குமோ, அந்த ஜவாப்களைக்கூட அந்தச்சாட்சிக்காரன் சொல்லவே வேண்டும். (1855 ஞு II-வது ஆக்ட்டு XXXII-வது பிரிவு.)

But he will not be punished for such answers, yet will be civilly liable for any other answer bringing a civil liability.

ஆனால் அந்த ஜவாபைக்கொண்டு அவனையாதொரு தெண்டனையும் செய்யும்படியதை ருசுவாக உபயோகிக்கக்கூடாது. (ஷை பிரிவு.) ஆகிலும் அந்த ஜவாபானது வியாச்சியத்தின் சுவரூபத்திற்கு முக்கியமானதாகவிருந்து எழுதிவாங்கியபின் அது அந்தச்சாட்சிக்காரனை ஒரு சிவில் தகாதாவுக்கு உள்ளாக்கும்படியாயிருந்தாலும் அந்த ஜவாப்களையும் அந்தச்சாட்சிக்காரன் சொல்லவேண்டும். அந்தச்சிவில் தகாதா அவனை விடவும்மாட்டாது. (B-127.)

Such questions how answered to in England.

ஒரு கிரிமினல் தகாதாவையாவது அவமானத்தையாவது உண்டாக்கும்படியான ஜவாப்களை ஒரு சாட்சிக்காரன் சொல்லவேவேண்டுமென்கிற விதி இங்கிலாண்டுதேசத்தில் இன்னமும் உண்டாகவில்லை. இதைப்பத்தி பெஷ்ட்டுதுரையவர்கள் மிகவும் பெரிதான கட்சிகள் சொல்லியிருக்கிறார்கள். (N-404.)

The party against whom any documentary or real evidence is offered has a right to inspect it.

§ 165. எவனுக்காவது விரோதமாய் ஒரு ஸ்தாவர ருசுவாவது, ஒரு லிகிதமூலமான ருசுவாவது விடப்பட்டால், அதைப்படித்தும், வேறைவிதமாயும் பார்க்க அவனுக்கு பாத்தியமுண்டு. சாட்சிகளுக்கு கேழ்விபோடுகிறதைப்பற்றியிருக்கின்ற நூல்களுக்கு கோர்ட்டாரும் கட்டுப்பட்டிருக்க

வேண்டியதுதான். விசாரணைமுழுதிலும் உண்டாகும் லா-வைப்பற்றிய தகரார்களையும் வழக்கத்தைப்பற்றிய தகரார்களையும் ஜட்ஜிதீர்மானிக்கவேண்டியது. எந்தபட்சத்திய வக்கீலாவது லாவைக்குறித்தாவது வழக்கத்தைக்குறித்தாவது ஏதாவது ஆட்சேபனைசொன்னால் அதுகளைக் கோர்ட்டார்கேட்டு சமாதானஞ் சொல்லவேண்டியது. (B-602-N-397.)

Questions of Law and usage are determined by the Judge.

§ 166. குற்றவாளிகளுடைய தரப்பில் வக்கீல்கள் ஆஜிரும் விசாரணைகாலத்தில் அவர்களுக்கு ஆலோசனைசொல்லலாம். அவர்களுக்கு சகாயமான லா-பயிண்டுகளைப்பேசி அவர்களுக்காக சாட்சிகளை முதல்விசாரணை கிருச்விசாரணை முதலானதும் செய்யலாம். (B-605.)

Counsel allowed to appear for the accused, and give them advice &c.

§ 167. கோர்ட்டார் குற்றவாளிக்கி வக்கீலாகயிருக்கவேண்டுமென்று ஒரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. கோர்ட்டார் எப்பொழுதும் தெண்டனைசெய்வதில் திருஷ்டியுள்ளவர்களாக விருப்பதைவிட மன்னிப்பதில் திருஷ்டியுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று அந்த லா-வுக்கு அர்த்தம்செய்யவேண்டுமேதவிர வேறில்லை. இப்படியிருக்க, "கோர்ட்டார் குற்றவாளிக்கி வக்கீலாயிருப்பதினாலே குற்றவாளிக்கி வக்கீல் தேவையில்லை" என்று சிலர் தப்பர்த்தஞ் செய்வார்கள். அந்தலாவினால் தெரிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால், குற்றவாளி வக்கீல் வைத்துக்கொள்ளச் சக்தியில்லாதவனாகவிருந்தால், வக்கீல் இல்லாததினால் அவன் என்ன நஷ்டடமடைவானோ அதை யடையாமலாவது, அல்லது வைத்துக்கொண்டால் என்னலாபத்தையடைவானோ அந்த லாபத்தை யடையும்படியாவது் காக்கவேண்டியது கோர்ட்டாருடைய கடமையென்றும், அவனுக்கு சாதகமான, லா-பயிண்டுகள் எதாவது இருந்தும், அதையவன் அறியாமையினால் அவனுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாவிட்டால் அவனுக்கு அந்தப்பிரயோஜனத்தைக் கொடுப்பிவிக்கவேண்டுமென்றும், எதிரிபக்கத்திய வக்கீலினுடைய யாதொருகடுமையான யுக்திவாதங்களால் அவனுக்குப்பொல்லாங்கு நேரிடாமல் காக்க வேண்டுமென்றும், மொத்தத்தில் குற்றவாளிக்கி ஒருகிரமமான விசாரணை கிடைக்கவேண்டுமென்றும்தான். (B-603.)

Interpretation of the Law that "the Courts shall be a Counsel of the accussed."

Though the plea of not guilty be not proved yet the Jury may give a reasonable credit to the facts of the plea.

§ 168. எந்தக்குற்றவாளியாவது வக்கீலன்னியில் எதிர்வாதஞ்செய்தால், தான் குற்றமற்றவனென்பதை ரூபிக்கத்தக்க சங்கதிகளில் எதைவேண்டுமோ அதையவன் சூரிக்கிச்சொல்லலாம். அந்தச்சங்கதிகளையவன் ருசுப்படுத்தாவிட்டாலும், அவன் வாக்குமூலத்திற்கண்டிருக்குஞ் சங்கதிகள் நிஜமாகவிருக்க ஏதுக்களிருக்கின்றதாவென்பதை சூரியோசித்து அவனுடைய வாக்குமூலத்திற்கு எத்தனை நம்பிக்கைகொடுக்கலாமோ அத்தனை நம்பிக்கைகொடுக்கலாம். குற்றவாளிபட்சமாய் குற்றத்தைக்காட்டுகின்ற சங்கதிகள் குற்றமுள்ளதல்லவென்று குற்றவாளி சாமாதானம்சொல்லும்படியிருக்கின்ற விஷயங்களில் எல்லாம், அந்தச்சமாதானங்களைக் குற்றவாளிசொல்லுகிற அவ்வளவுவிவரமாய் வக்கீல்சொல்லக்கூடாது. அதற்காகத்தான் இப்பேர்க்கொத்தசமயங்களில் அந்தச்சமாதாளங்களைக்குற்றவாளிதானே சூரிக்கிநேராகச்சொல்லவேண்டுமென்றும், பின்பு அச்சமாதானங்கள் அவனுக்கு சாதகத்தை யுண்டுபண்ணவேண்டுமென்கிற வியாக்கியானத்தை வக்கீல்கள் செய்யலாமென்றும் சில ஜட்ஜிகள் வழக்கஞ்செய்திருக்கிறார்கள். (B-606.)

Counsel allowed to comment favourably on the statements of the accused.

Whose witnesses to be first examined.

§ 169. எந்தக் கட்சியினுடைய சாட்சியை முதலில் விசாரணை செய்யவேண்டுமென்பது ருசு பெளுவைப்பத்திய தீர்மானத்தை யனுசரித்திருக்கும் அந்தக் கிரமப்படிக்கி விசாரணை யாரம்பமாகும்.

Examination in chief; cross examination; and Re-examination, defined.

விசாரணையானது முதல் விசாரணையென்றும், றத்துவிசாரணையென்றும், புனர்விசாரணையென்றும் பிரிக்கப்படும். எந்தச் சாட்சியையும் அழைத்த கட்சிக்காரன் சவால் கேழ்ப்பதற்கு முதல்விசாரணையென்றும், அதைக் கண்டிக்கும்பொருட்டு அவனுடைய எதிரிவக்கீலால் கேழ்க்கப்படுகிற கேழ்விகளுக்கு றத்துவிசாரணையென்றும், றத்துவிசாரணையில் வந்தவார்த்தைகளுக்கு வியாக்கியானம் வாங்கும்பொருட்டு ஷெ சாட்சியைத்தானே சம்மன் செய்தவன் கேழ்க்கிற கேழ்விகளுக்குப் புனர் விசாரணையென்றும் பெயர். (B-622-N-429.)

Arrangement of Witnesses for trial.

§ 170. எந்தவழக்கிலும் சாட்சிகள் கோர்ட்டில் ஆஜிரான உடனே ஒருசாட்சியைமட்டும் விசாரணைக்காக நிறுத்திக்கொண்டு மைற்றவர்களை, காதுகேட்கக்கூடாத தூரத்தில்

மொகசூலில் வைக்கவேண்டியது. விசாரணையாகி விட்ட சாட்சி கோர்ட்டில் நிற்கவேண்டியது. பின்பு வேறையொரு சாட்சி விசாரணையாகும். விசாரணையாகி விட்ட சாட்சியானவள் பிரதிஷ்டையுள்ள ஸ்திரியாகவிருந்து, வரப்போகிற சாட்சியிடத்திலிருந்து நாசூக்கல்லாத சில வார்த்தைகள் ருசுவாக வாங்கவேண்டியிருந்தால் அப்பொழுது அந்த ஸ்திரியைக் கோர்ட்டில் தூரமாக ஒரு அறையில் தனியாக வைத்துவைக்கவேண்டியது. (B-607.)

Nature of the examination in-chief.

§ 171. விசாரணைக்காக நிற்கிற சாட்சியை எந்தப்பயிண்டு ருசுவாகும்பொருட்டு அழைக்கப்பட்டிருக்கின்றதோ அந்தப் பயிண்டைப்பத்தி அவனை அழைத்த கட்சிக்காரனாவது வக்கீலாவது கிரமமாகச்சவால்களைக் கேழ்க்கவேண்டும். அதில் ஜாடை சவால் இருக்கவேகூடாது. கேழ்க்கப்பட்ட கேழ்விகள் உபயவாதிகளுடைய பெயரையும் படித்தானபின்பு, அவர்களைத்தெரியுமா? அவர்களுக்குள் எதாவது பத்து வரவு உண்டா என்பதுமுதலான சாதுவான கேழ்விகளாகவிருக்கவேண்டும். (N-373.)

That of cross examination.

§ 172. முதல்விசாரணையில் சாட்சிக்காரன்சொன்ன சங்கதி அவனுக்குத்தெரிய நிமித்தமென்ன? அவன் சொன்னபடி நடப்பது சாத்தியமா, அல்லது நடக்க ஏஷியங்களிருக்கின்றதா, என்பதுமுதலானதுகளை நிதானிக்கும்பொருட்டு உள்ளறத்து சவால்களையும், நிஜம்சொல்ல அந்தச்சாட்சி சக்தனாகவும், மனமுள்ளவனாகவுமிருக்கின்றானா, அவன் நல்லநடத்தையுள்ளவனா, அவனையழைத்த கட்சிக்காரனிடத்தில் தாட்சிணியம், பாந்தவியம்முதலானதுகளிருக்கின்றதா, என்பதுகளை வெளியிடக்கூடிய றத்துசவால்களையும், அந்த வாக்குமூலத்தினால் நொந்துபோகவேண்டிய கட்சிக்காரன் அல்லது அவனுடையவக்கீல் கேழ்க்கலாம். அதின் மூலமாய் அந்தவாக்குமூலத்தை நம்பக்கூடாதென்பதுமுதலான ரிமார்க்குகளை சூரிக்கி எடுத்துக்காட்டலாம். (இதின் 149-150-151-பிரிவுகள்.)

Extent to which re-examination confined.

§ 173. புனர்விசாரணையானது றத்துவிசாரணையில்வந்த ஜவாப்களுக்கு சமாதானஞ் சொல்லும்படியான கேழ்விகளாகமட்டும் இருக்கவேண்டும். அதாவது, அந்தச்சாட்சிக்காரன் றத்துவிசாரணையில் சொல்லியிருந்த ஜவாப்களின்

அர்த்தம் சந்தேகமுள்ளதாயிருந்தால், அதுகளைவியாக்கியானப்படுத்திச் சொல்லும்படியான கேழ்விகளாகவிருக்கவேண்டுமென்பதாம். புனர்விசாரணை முடிந்தபின்புங்கூட வேறை புதிதானசங்கதியைப்பத்தி சாட்சிக்காரனைக் கேழ்க்க வேண்டியிருந்தால், கோர்ட்டாருடைய உத்தரவின்பேரில் கேழ்க்கலாம். ஆனால் இதைக்குறித்தும் றத்துசவால்கேழ்க்க எதிரிக்கி பாத்தியமுண்டு. (N-429-430.) ஒரு சாட்சிக்காரன்விசாரணையாகிப் போய்விட்டாலும் ஒரு முக்கியமான சங்கதிவிட்டுப்போயிருந்தால், அதையாவது, ஒரு புதுவிஷயத்தைப்பற்றிய நிஜத்தையாவது தெரிந்துக்கொள்வதற்காக அந்தச்சாட்சிக்காரனைக் கோர்ட்டார் மறுபடியும் வரவழைத்து தாங்களாகவும் விசாரணைசெய்து வக்கில்களையும் சவால்கள்போடச்சொல்லலாம். (430.ஷி)

A witness cited by one party may be examined for his opponant.

§ 174. ஒருவன்தான் கோருதவனும் எதிரியுடையவனுமான சாட்சியைத் தன்பக்கத்திற்கும் விசாரிக்கவேண்டுமென்று முதல்விசாரணையில் தெரிந்தால் அப்பொழுதும், றத்துவிசாரணையிலாவது புனர்விசாரணையிலாவது தெரிந்தால் அப்பொழுதும் சாட்சியாக விசாரிக்கலாம். ஏனென்றால், தன்கட்சிக்கிமுக்கியமான சங்கதி அந்தச்சாட்சிக்கித்தெரியுமென்பது, அதுவரைக்கும் அந்தக்கட்சிக்காரனுக்குத் தெரியாது. (N-439.)

Leading questions not to be, in general, put by a party, citing a Witness.

§ 175. ஒருசாட்சியானவன் தன்னை சம்மன்செய்தகட்சிக்காரனுக்கு சாதகமான ருசுச்சொல்லும்படி பட்சபாதமுள்ளவனாகவிருப்பான், அல்லது அப்படியிருப்பானென்று நினைக்கும்படியாயிருக்கும். (B-622.) ஆனதால் அவனை அழைத்த கட்சிக்காரன் அவனுக்கு ஜாடைசவால்போடுகிறதானால் தன்கட்சிக்கி சாதகமானவரையில்மட்டும் ஜவாப்வரும்படியான சவால்களைப் போடுவான். ஆனதால் தன் சாட்சிக்கி தான் சாடைசவால்போடக் கூடாதென்று பொதுவானறால் இருக்கின்றது.

Exception.

ஆனால் றத்துவிசாரணையில் சாட்சிகளுக்கு சாடை சவால்போடலாம். சாடைசவால் என்பதெல்லாங்கூடி ஒருசாட்சிக்காரனை அழைத்தவனாகிலும் சரி, அவனுடைய எதிரியாகிலும் சரி, எந்தகட்சிக்கி சாதகமாய் அந்தசாட்சி பட்சபாதமுள்ளவனாகத் தோற்றுகிறானோ, அந்தக்கட்சிக்காரன்மட்டும், அவனுக்கு சாடைசவால்போடக்

கூடாது. ஒரு சாட்சிக்காரன் தன்னையழைத்தவனுக்கு விரோதமாய் ருசுச்சொல்லத்துடங்கிவிட்டால் பின்பு அவனை கோறினவன் கூடசாடைசவால்போடலாம். (N-377.) ஒரு சாட்சிக்காரனை அழைத்தவனுக்கு எதிரிபட்சத்தில் அவன் ருசுச் சொல்லிக்கொண்டுவந்தால், அந்தச்சாட்சியை அந்த எதிரி றத்துவிசாரணையில்க் கூட ஜாடைசவால் போடக்கூடாது. ஜாடைசவால்என்பது எது என்றால், கேழ்விக்குள் தானே ஜவாப்கள் எல்லாம் அடங்கியிருப்பதாம். (N-401) உ-ம். "என்னிடத்தில் பிரதிவாதி ரூபாய் 100 கடன்வாங்கிக் கொண்டு ஜனவரி௴ 5வயில் உன் வீட்டுவாசலில்சீட்டெழுதிக்கொடுத்ததில்லையா" வென்பது கட்டாயமாய் சாடை சவாலாகும். ஆனால் ஒருசங்கதியை ஆரம்பிவிக்கிறவிஷயங்களில் ஜாடைசவால் குற்றமுள்ளதல்லா. (B-611.) சிகாழி தாலூகா ருமாபுறத்திலிருக்கும் கிருஷ்ணயன் குமாரன் ருமய்யனைத் தெரியுமாவென்பது தப்பல்லா.

What constitutes a leading question.

Leading questions merely introductory allowable.

உ-ம். "பிரதிவாதி கோவிந்தய்யனை 1860௵ டிசம்பர் ௴ 23வயில் நீர் சென்னப்பட்டணத்தில் பார்த்ததுண்டா? அந்த ஊரில் அந்ததேதியில் அவன் மேஜஸ்திரேட்டாகிய உம்மிடத்தில் எதாவது சாட்சிசொல்லும்படி ஆஜிராகி விசாரணையாகாமலே போய்விட்டதுண்டா" வென்று கேழ்ப்பது பார்வைக்கி ஜாடை சவாலாகவிருந்தாலும் குற்றமுள்ளதல்ல. இல்லாவிட்டால் இந்த சகஜவிஷயத்தைப்பற்றி அந்தச் சாட்சிக்காரன் வாயிலிருந்து சரியானசமாசாரம்வர மிகவும் நாழிகைசெல்லும். கோர்ட்டாருக்கு வீண் தாமதமுண்டாகும். விசாரணைசெய்கிற வக்கீல் சமர்த்தரல்லவென்றும் தோற்றும். (B-611-612-613.) அப்படியே ஒரு சாட்சிக்காரன் சொல்லவேண்டிய சங்கதி மெத்தநீண்டதாகவும், தொந்திரவுள்ளதாகவுமிருந்தால் அச்சங்கதியவனுக்கு செவ்வையாக ஞாபகம்வரும்பொருட்டு சாடைகாட்டலாம். (N-379.)

Leading questions may be put in matters of a complicated nature.

§ 176. ஒரு சாட்சிக்காரன் பூர்வோத்தரவிரோதமாய்ச் சொன்னானென்று காட்டும்பொழுதெல்லாம், அதற்குமுன்னாடியே, அந்த சாட்சிக்காரன் முதலிர்ச்சொல்லியிருந்த வார்த்தைகளையெல்லாம் அவன்காதில் மறுபடியும்போட்டு,

Leading questions are necessary to constitute a con-

tradiction in a deposition. Else a contradiction is not a contradiction.

“நீ பலானபலான விதமாகச்சொன்னதில்லையா” வென்று அவனைக்கேட்டிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் அவன் சொன்ன பூர்வோத்தர விரோதவார்த்தைகளுக்கு அவன் எதாவது சமாதானம் சொல்லியிருப்பான். அப்படிக்காட்டியும் சமாதானம் சொல்லப்படாவிட்டால், அந்தப் பூர்வோத்தர விரோதத்தைக்கொண்டு அந்த வாக்குமூலத்தை கிரமமானவனாக்கிம் அவநம்பிக்கைப்படலாம். அப்படிக்கி சமாதானம் சொல்லக்கூடிய சாவகாசத்தை அந்த சாட்சிக்காரனுக்குக் கொடுத்திராவிட்டால் அது பூர்வோத்தரவிரோதமாகமாட்டாது. பலானவார்த்தைகளை நீ சொன்னதில்லையாயென்று கேழ்ப்பதுமட்டும் போதாது. அந்த வார்த்தைகள் நடந்தவிடத்தையும், காலத்தையும், அதிற் சம்பந்தப்பட்ட மனிதர்களுடைய பெயர்முதலானதையும் குறித்துச்சொல்லவும்வேண்டும். அப்படியும் அந்த விரோதத்தைப்பத்தியவன் சமாதானம் சொல்லமாட்டாவிட்டால் பூர்வோத்தரவிரோதத்தை ஸ்தாபிக்கலாம். அப்படிவிரோதமாக முன்னாலே யாதொரு வார்த்தையைச் சொல்லவில்லையென்று அந்தச்சாட்சிக்காரன் மறுதளித்தால் அப்படிச் சொன்னானென்பதை வேறை சாட்சி முதலானதுகளால் ரூபிக்கலாம். (N-436-)

The testimony of a witness how discredited.

§ 177. ஒருசாட்சியினுடைய ருசுவை பிரதிகதமான அல்லது எதிரடியான ருசுவினாலும், றத்துவிசாரணையினாலும், துர்ப்பலப்படுத்துகிறதும்தவிர, சாட்சியினுடைய நடத்தை கெட்டதென்பது. 1-அவன் பூர்வோத்தரவிரோதமாக ருசுச் சொல்லியிருக்கிறானென்பது. 2-இதுகளாலும் துர்ப்பலப்படுத்தலாம். (B-614.)

One's own witness turning hostile to him how interrogated.

§ 178. ஒருசாட்சிக்காரனை ஒருவன் அழைத்தபோதிலும் அவனுக்குவிரோதமாயந்தச் சாட்சி திரும்புவானேயானால், அவனைத்தன் எதிரிசாட்சிபோல் அந்தக்கட்சிக்காரன் விசாரணைசெய்யலாம். அவன் பலானசங்கதியில் பூர்வோத்தர விரோதமாய்ச் சொல்லியிருக்கிறான் என்பதுமுதலான தோஷங்களையும் எடுத்துக்காட்டலாம். (N-435.)

Reasons for and against the practice of discredit-

§ 179. ஒருவன் மைற்றொருவனை யோக்கியமான சாட்சியென்று சொல்வதற்குப் பெதலாக அவனைச்சாட்சிகோறிய பின், அவன் தனக்குவிரோதமாய்ச் சாட்சிசொன்னமாத்தி

ரத்தில், அவனே அயோக்கியனென்று சொல்லிவிடும்படியா ன அதிகாரத்தை ஒருகட்சிக்காரன்கையில் கொடுக்கக்கூடா தென்று சில ஜட்ஜீகள் சொல்லுகிருர்கள். வழக்காளியான வன் ஒருசாட்சியை அழைக்கும்படியான கட்டாயத்தில் இருப்பதால் அழைக்கிருனென்றும், அதினுல் அயோக்கிய ஞன ஒருசாட்சியினுடைய வார்த்தைகளுக்கெல்லாம் இந்த வழக்காளி கட்டுப்படவேண்டுமென்பது அக்கிரமமென்றும் பின்னுஞ்சில ஜட்ஜீகள் சொல்லுகிருர்கள். ஆனுல் சாட்சிக் காரன் யோக்கியனென்றும், நிஜத்தைச்சொல்லுவானென் றும் நம்பிக்கோறியபின் அவன் திடீலென்று விரோதமான ருசுச்சொன்னுல், அப்பொழுதுமட்டும் அவன் ருசுவை நம் பத்தகாதென்று சொல்லலாமென்பதாகவும், அவனுடைய ருசு பொய்யென்பதாக அவனுடன் கோறப்பட்டிருக்கிற வேறை சாட்சிகளால் ருசுப்படுத்தலாமென்பதாகவும் அர்த் தமாகின்றது. (B-615-N-433.) ing one's own Witness.

§ 180. ஆகிலும் இண்டியாவில் இப்பொழுது ஒருவழக் காளி தன்பக்கத்து சாட்சியின் ருசுவை நம்பத்தகாதென்று காட்டலாம். (1855௵ II-வது ஆக்ட்டு XXX-வதுபிரிவு) The Law of India on the subject.

SECTION VII.—பிரிவு. எ.

Opinion Evidence.—அபிப்பிராயசாட்சி.

§ 181. சாட்சிகளைக் கோர்ட்டுக்கு அழைத்ததெல்லாங் கூடி அவர்களுக்குத்தெரிந்த சங்கதியைக் கோர்ட்டாருக்கு த்தெரியப்படுத்தமட்டுமோகையால், பலானசங்கதி பலான விதமாயிருக்குமென்று சாட்சிகள் நினைப்பதாகச்சொல்லு கிற அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொதுவாய் ருசு வாக அங்கிகரிக்கக்கூடாது. அவர்கள்கொண்ட அபிப்பிரா யமானது யாதொருகிரமமான ருசுவின்பேரில், அதாவது, சூடிசியால்ருசுவின்பேரில் ஆதாரப்பட்டிராவிட்டாலுஞ்சரி, நல்லருசுவின்பேரில் ஆதாரப்பட்டிருந்தாலுஞ் சரி, அவ ர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாதென் பது பிரத்தியட்சமாகவிருக்கின்றது. எப்படியென்ருல், நல் லருசுவின்பேரில் ஆதாரப்பட்டிராவிட்டால் அவர்களுடை Reasons for which opinion Evidence is not receivable in general. Jury are the competent persons to draw opinion from facts.

ய அபிப்பிராயம் ஒன்றுக்கும் உதவமாட்டாது. கிரமமான ருசுவின்பேரில் ஆதாரப்பட்டிருந்தால், எந்தச்சங்கதிகளின் உண்மையைத்தெரிந்துகொண்டதினால் அந்த அபிப்பிராயம் சாட்சிகளுக்கு உண்டாச்சுதோ அந்த உண்மை ஞூரிக்கித் தெரிந்தால் அவர்களும் அப்படியே ஒருசரியான அபிப்பி ராயத்தைக்கொள்ளச்சமர்த்தாள் என்பதில் சந்தேகமில்லை. ஆனதால் சாட்சிகள் தங்களுக்குத் தெரிந்தமட்டில் சங்கதி களைச்சொல்லிவிட்டுப்போய் விடவேண்டியதும், அதுகளி ன்பேரில் தோற்றுகிற அபிப்பிராயத்தைச் ஞூரிகள் சொல் லவேண்டியதும் தர்ம்மமென்று விதிக்கலாச்சுது. சாட்சிக ளுடைய அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளவேண்டியது கட்டாயமானால், "சங்கதிகளைத் தீர்ப்பது ஞூரியென்றும், உத்தமருசுவைமறைத்து வைத்திருக்கையில் மத்தியமருசு வைத் தள்ளவேண்டுமென்றும், ஒருவன்தான் சம்மந்தப்ப டாத அன்னியனுடைய காரியத்தாலாவது வார்த்தைகளா லாவது நொந்துபோகக்கூடாதென்றும்," லாவிற்சொல்லி யிருக்கின்ற உத்தமமானநூல்கள் எல்லாம் வியர்த்தமாகிவி டும். இதுவும்தவிர ஞூரிகளுடைய ஸ்தானத்தில் சாட்சிகள் வந்துவிடுவார்கள். ஆனதால் ஞூடிசியால் தீர்மானங்களுக் குச் சாட்சியின் அபிப்பிராய ருசுவைப்பொதுவாக அங்கி கரிக்கக்கூடாது. (B-493-494.)

Opinion Evidence is receivable in scientific matters.

§ 182. ஆனால் சிலவிஷயங்களில் சாட்சிகளுடையஅபிப் பிராயத்தை ருசுவாக அங்கிகரிப்பது கட்டாயமாயும் சவுக ரியமாயுமிருக்கின்றது. அதாவது, சாமான்னியமாய் மனி தர்களுக்கு சகஜவியாபாரங்களினால் தெரியக்கூடியவிஷயங் களில்தவிர அருதாய் தெரியக்கூடிய அன்னியவிருத்திகள், சாஸ்திரங்கள், சமத்காரங்கள், தொழில்கள், அல்லது வித் தைகளைச்சார்ந்த சங்கதிகளில் அந்தவிருத்திகளில் இருப்ப வர்களுடைய அபிப்பிராயத்தை ருசுவாக அங்கிகரிக்கலாம்.

Example.

உ-ம். A-யை B-அடித்ததால் A இறந்துபோய்க்கிடக்கிற தாக B குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறான். A சுவபாவமாய் ரோகத்தால் இறந்தானா, அல்லது அடியினால் இறந்தானா என்பதைப்பற்றி கிரமமான ஒரு அபிப்பிராயத்தைக்கொள் வதற்குத் தேக வைத்தியத்தில் சாமர்த்தியமுள்ள ஒருடாக் டருக்குமட்டும் செவ்வையாகத் தெரியுமேயொழிய வேறில்

லை. அந்த அபிப்பிராயத்தை அந்தச்சாஸ்திரத்தில் பரிசயமில்லாத ஜூரிகள் கொள்ளவேண்டுமானால் அந்தச்சாஸ்திரத்தை முதலில்படித்துப் பின்பு இந்தவழக்கைத் தீர்க்கவேண்டும். இது சாத்தியமுமல்லா. சவுகரியமுமல்லா. ஆனதால், வைத்தியனுடைய அபிப்பிராயத்தை இதில் அங்கிகரிக்கவேண்டும். (B-L-M-838.)

§ 183. ரசவாதம், வைத்தியம், கெணிதசாஸ்திரம், கப்பல்வியாபாரம், தச்சன், கொல்லன், தட்டான்முதலானவர்களுடைய வேலைகள், இதுமுதலான விஷயங்களில் அந்தந்தச் சாஸ்திரங்களில் வழக்கப்பட்டவர்களுடைய அபிப்பிராயத்தை ருசுவாக அங்கிகரிக்கலாம். (N-313- B-L-M-837 B-495.)

In matters of chemistry, surgery &c. also such evidence is receivable.

§ 184. எப்பொழுதும் அந்தந்தச்சாஸ்திரவிஷயங்களில் அபிப்பிராய சாட்சியம் அங்கிகரிக்கலாமென்றிருந்தாலும், அந்த அபிப்பிராயத்தை அந்தச்சாட்சி எவ்வாறாகக் கொண்டானென்று றத்துசவால் கேழ்க்கலாம். அப்படிக்கி அவர்கள்சொல்லுகிற முகாந்தரத்தைச் சரியானதாவென்று ஜூரிகள் தங்களால் கூடியவரையில் யோசிக்கவேண்டும். இல்லாவிட்டால் "கோர்ட்டாருக்கும் வக்கில்களுக்கும் அந்தச் சாஸ்திர விஷயங்களில் பரிசயமில்லாத்தினால் தவக்கமன்றியில் ஒப்புக்கொண்டுவிடுகிறார்கள்" என்பதை அந்தவிருத்திக்காரர்கள் தெரிந்துகொண்டு அதினால் தங்களுக்கிஷ்டமானபடி அபிப்பிராயமென்று சொல்லுவார்கள். இது அவர்களுக்கு ஜனங்கள்பேரில் ஒருபிசகான செல்வாக்கையுண்டாக்குகின்றது. ஆனதால், அபிப்பிராயருசுவை அங்கிகரித்தபின், அது எந்தநிமித்தத்தால் கொள்ளப்பட்டதென்பதையும், அந்தநிமித்தங்களால் கொள்ளப்பட்ட அபிப்பிராயத்தை நம்பக்கூடுமா கூடாதாவென்கிறதையும், ஜூரிகள் தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தைக்கொண்டு நிதானிக்கவேண்டும். (B-496.)

It is necessary that the Witness should be questioned as to what reasons he entertains such opinion for, and that the Jury weigh the credit due to such reasons.

§ 185. அபிப்பிராயருசுவை ஒரேதரமாய் நிதானிக்காமல் ஜூரிகள் நம்பிவிடக்கூடாதென்பதற்கு இன்னமும் ஒரு முகாந்தரமுமிருக்கின்றது. அதாவது, ஒருசாஸ்திரத்தில் மிகவும் கீர்த்தியுள்ள ஒருவித்துவானானவர், அதேசாஸ்திரத்தில் ஒருவகுப்பில் சக்தியில்லாதவராகவிருப்பார். இதை

A Witness skilled in one branch of a science might be deficient in another

branch of the same science.

ப்பற்றி ஒருநல்ல திருஷ்டாந்தரமிருக்கின்றது அதாவது, "டானலன்" என்பவன் தன்மைத்துனனை விஷம்வைத்துக் கொன்றுவிட்டானென்ற வழக்கில், அபிப்பிராய சாட்சி சொல்லும்படி அழைக்கப்பட்ட மகாப்பிரபலமான வைத்திய சாஸ்திரியாகிய "ஜான்ஹண்டர்" என்பவர் கோர்ட்டில் தன் அபிப்பிராயத்தைச் சொல்வதற்குமுன் சொன்னதாவது, "விஷத்தின் விஷயமாய்த்தான் விசேஷமாய்க் கவனிக்கவில்லையென்றும், அதினால் தனக்கு மிகவும் வியசனமாயிருப்பதாகவும்" சொன்னார். அவர் மிகவும் நாணையமுள்ளவரானபடியால் தன்னுடைய அசக்தியை வெளியிட ஒப்புக்கொண்டார். அப்படியன்னியில் அவர் ஒரு அபிப்பிராயத்தைச் சொல்லியிருந்தால்நிருக்ஷேபணையாய்க் கோர்ட்டார் நம்பி தப்பான ஒரு தீர்மானத்தைச்செய்தேயிருப்பார்கள். (B-498-ல் A-நோட்டு.)

Further exception to the rule rejecting opinion evidence.

§ 186. கோர்ட்டுமுன்பாக வரக்கூடாத ஸ்தாவரங்களுடைய ஸ்திதிகளைப்பத்தியும், மனிதர்களுடைய கையெழுத்து அடையாளத்தைப்பத்தியும் அபிப்பிராயருசு அங்கிகரிக்கலாம். எப்படியென்றால், ஒரு கட்டடம் குறித்த ஒரு காலத்தில் பழைசாகவிருந்துதா, புதிதாகவிருந்துதா, பெலமாகவிருந்துதா, துர்ப்பலமாகவிருந்துதா, என்பது முதலானதாம். ஒருவனுடைய கைய்யெழுத்தடையாளம் தெரிந்த மைற்றொருவன் இது பலானவன் கைய்யெழுத்தைப்போலிருக்குதென்று சொல்லலாம். பலானகாலத்தில் பலானமனிதன் சந்தோஷமுள்ளவனாக, அல்லது வியசனமுள்ளவனாக, பயித்தியம்பிடித்தவனாக அல்லது தெளிந்தவனாக இருந்தான் என்றுசொல்லலாம். (B-499-B-L-M-838.)

CHAPTER II.—அத்தியாயம் உ.

DOCUMENTS.—ஆதாவுகள்.

Documents or writings what.

§ 187. மனிதர்களுடைய எண்ணங்களை எப்பொழுதும் ஒரே ரிதியான அர்த்தத்துடன் காட்டுவதற்காக எழுத்து மூலமாகவாவது, யாதொரு அடையாளங்கள் மூலமாகவாவது, பத்திரப்படுத்தி யிருக்கின்ற காகிதம், ஓலை, கல், மரம்,

பலகை முதலானதுகளெல்லாம் தெஸ்தாவேசுகள், அல்லது ஆதரவுகள் என்று சம்கியையாகப் பேரிடப்படும் தாம்பரசாசனம், பட்டயங்கள், கிரயசாசனங்கள், உயில்கள், சிலாசாசனங்கள் முதலானதுகள் இதற்கு திருஷ்டாந்தரமாகும். இந்த அத்தியாயத்தை அடியிற்கண்ட பிரிவுகளாகப்பிரித்து அந்த வரிசைப்படி எழுதவேண்டியது அவசரமாகவும சவுகரியமாகவுமிருக்கின்றது. அவைகளாவன.

பிரிவு-I. ஆதரவுகளின் பிரிவினை.

II. எந்த ஆதரவுகளை வாஸ்தவத்தில் ருசுப்படுத்த வேண்டும்.

III. நியாயஸ்தலங்களில் செல்லும்படியான கிரமமான ஆதரவுகள்யாவை, அக்கிரமமானது யாவை.

IV. ஆதரவுகளை ருசுப்படுத்துகிறவிதம்.

V. ஆதரவுகளுக்கு வியாக்கியானஞ் செய்யவேண்டியவிதமும் "அம்பிகுட்டி." யென்கிற சந்தேகமும்.

VI. கையெழுத்தடையாளம்.

SECTION I.—பிரிவு க.

DIVISION OF DOCUMENTS.—ஆதாவுகளின் பிரிவினை.

§ 188. ஆதரவுகள் பப்பளிக் என்றும், "பிறைவேட்" இரகசியம் என்றும் பிரிக்கப்படும். முதல்வகுப்பு "சூடிசியால்" என்றும், "சூடிசியால் அல்லாதது" என்றும், சூடிசியால் ஆதரவுகள் "றிகார்ட்டைச்சார்ந்த தென்றும்" "றிகார்ட்டைச் சேராதது" என்றும் பிரிக்கப்படும். *Public and private.* *Sub-division of public documents.*

§ 189. பப்பளிக் ஆதரவில், சூடிசியால், றிகார்ட்டைச் சார்ந்ததுகள் யாவையென்றால், பார்லியாமெண்டு முதலானசட்ட நிர்மாணசபையாரால் குறிக்கப்பட்ட மிமோராண்டங்கள், ஆக்ட்டுகள், அரசனுடைய நியாயஸ்தலங்களின் தீர்ப்புகள், முதலானதாம். *Public documents of a Judicial nature and of records.*

§ 190. பப்பளிக் சூடிசியால் ஆதரவுகளில் றிகார்ட்டைச்சேராத, ஆதரவுகளாவன. நியாயஸ்தலங்களில் தாக்கலாகிற பிளிடிங்குசுகளும், சாட்சி முதலானவர்களுடையவாக்குமூலங்களும் கட்டளைகளுமாம். *Those not of records.*

Those not Judicial.

§ 191. பப்பளிக் ஆதரவுகளில் சூடிசியால் அல்லாதது கள் யாவையென்றால், பார்லியாமெண்டு அவுசுகளுடைய டைரி நியூஸ்பேப்பர்முதலானதுகளும்,இங்கிலாண்டினுடை யபாங்க புஸ்தகங்களும், புறப்பு, எரப்பு, விவாகம், முதலா னதுகளின் றிஜிஸ்தர்களும், ஒருகூட்டத்தாருடைய புஸ் தகங்களும், மதவிஷய சபைகளின் றிஜிஸ்தர்களுமாம். (B-212.)

Private writings what.

§ 192. உயில்களும், கிரயபத்திரங்களும், ஒப்பந்தச் சீட்டு, கடன்சீட்டு முதலாகிய, யாதொரு அதிகாரிகளுடைய கிரமமான பிரவேசமில்லாமல், அல்லது ஜனங்கள் தங்களு டைய சொந்தசம்மதியின்பேரிலாவது அன்னியோன்னிய சம்மதியின்பேரிலாவது செய்துகொள்ளுகிற எழுத்துமூல மான யெல்லா ஆதரவுகளும், இரகசிய அல்லதுபிரைவேட் ஆதரவுகளாம். (B-213-214.)

The distinction between Deeds and other inferior written Instruments which prevails in England, is quite unknown to India.

§ 193. இங்கலீஷ்தேசத்தில் "டீட்ச்" என்கிற பத்திரங் கள் மெத்தவும் அதிகபெலமுள்ளதுகள் என்றும், மைத்த எல்லா எழுத்துமூலமான ஆதரவுகளும் அவ்வளவு விலையு ள்ளதல்லவென்றும், எல்லாபத்திரங்களும் கையெழுத்தாகி முத்திரைபோடப்பட்டதெனிகனிடத்தில் கொடுபடவேண்டு மென்றும், "டீட்ச்" என்கிற பத்திரங்கள்தகுந்த பிரதிப்பிர யோஜனத்தின் பேரில் புறந்துதுகள் என்று ஊகிக்கப்படு மென்றும், ஆனதால் அவ்விதபத்திரங்கள் பணம்கொடுப டாமல் யெழுதப்பட்டுதென்று கட்சியேசொல்லக்கூடாதெ ன்றும்,இப்படிபலவகைகளாயி சொல்லப்பட்டிருக்கின்றது. (B-214.)

இண்டியாவில் மனிதர்களில் ஒவ்வொருவரும் தனித்தனி யாய் முத்திரைகள் வைத்துக்கொள்ளுகிற வழக்கமுமில்லை. பத்திரங்களுக்கு முத்திரைவைக்கிற வழக்கமுமில்லை. ஆன தால் இண்டியாவில் இதுவரைக்கும் பிறந்தபத்திரங்களை இங்கிலாண்டிலிருக்கின்ற (Inferior written instruments) என்கிற பத்திரங்களுக்குச் சமானமாகவாவதுவைத்து,அது களில் பிரஸ்தாபித்திருக்கின்ற பிரதிப்பிரயோஜனத்தை ருசு ப்படுத்துகிற பெளுவைப் பத்திரத்தைவைத்துக்கொண்டி ருப்பவன்பேரில் வைத்தாலும் வைக்கலாம். அல்லது (Deeds) என்கிற ஓயர்ந்த ஆதரவுகளுக்குச் சமமாக வைத்

து அதுகளில் பிரஸ்தாபித்திருக்கின்ற பிரதிப்பிரயோஜனம் முதலானதை அடையப்பட்டிருக்குமென்கிற ஊகத்தை எதிர்க்க ருசு அங்கிகரிக்கமாட்டோமென்றுவது சொல்லலாம். பத்திரங்களில் இப்படி இருவகை பேதமிருக்கிற சங்கதி இண்டியாவில் ஜனங்களுக்குத் தெரியவேமாட்டாது. ஆனுல் இப்பொழுது உண்டாயிருக்கின்ற ஷ்டாமபுசட்டமாகிய 1860வது XXXVI-வது ஆக்ட்டில் இண்டியா ஜனங்களுக்கு இதுவரைக்கும் தெரிந்தபெயர்களைவிட அதிகமாய் சில ஆதரவுகளின்பெயர் தெரியுது. அதினுல் இனியேதாவது பத்திரங்களில் பேதம் தெரியலாம். சதர்கோர்ட்டு ஜட்ஜீ மேஸ்தர் இஸ்திரெஞ்சு துரையவர்கள், "உயில்" என்னும் வார்த்தை இந்து லாவுக்குத்தெரியாதென்று சொல்லுகிறார்கள். (S-M-H-L-168.) எது எப்படியிருந்தாலும் இண்டியா கோர்ட்டுகளில் எந்த எழுத்துமூலமான பத்திரங்களையும் (Deeds) என்கிற ஒயர்ந்த பத்திரங்களுக்குச் சமானமாய் நடத்திவருகிறார்கள். The word "Will," was unknown to Hindu Law (S- M- H- L. 168.)

ஆனுல் பத்திரங்கள் கையெழுத்தான பின்பு தனிகனிடத்தில் கிரமமாக ஒப்பிவைக்கப்பட்டால் மட்டும் அதுசெல்லுமேதவிர இல்லாவிட்டால் செல்லாதென்று சொல்வது மட்டும் இங்கிலாண்டில் எப்படித்தெரியுமோ அப்படி இண்டியாவுக்கும் தெரியும் அந்ததேசத்தில் அந்த Escrow என்கிறதோஷமென்றும், இந்ததேசத்தில் ஈறெட்டாய்ப்பொதுக்கட்டினதோஷமென்றும் சொல்லுகிறார்கள். இதைப்பத்தி (Legal and illegal writings) என்கிறபிரிவில் விவரமாகச் சொல்லுகிறேன்.

SECTION II.—பிரிவு. உ.

WHAT WRITINGS ARE TO BE ACTUALLY PROVED.—எந்த ஆதரவுகளை வாஸ்தவத்தில் ருசுப்படுத்தவேண்டும்?

§ 194. பப்பளிக் ஆதரவுகளில் ஜூடிசியால் சுவபாவத்தில், றிகார்ட்டைச்சார்ந்த அல்லது இதின் எவதுபிரிவில் கண்ட ஆதரவுகளைக் கோர்ட்டாரோ ஜூடிசியால் நோட்டிசு செய்து தெரிந்துகொள்வார்கள். What documents the Courts shall take Judicial notice of.

What may be proved by attested copies from public offices.

§ 195. பப்ளிக் ஆதரவுகளில் இதின் 191-192-வது பிரிவுகளிற்கண்ட ஆதரவுகளுக்குச் சயன்மோகருடன் பப்ளிக் ஆபீசுகளிலிருந்து எக்ஸ்திருக்ட் கொண்டுவந்து தாக்கல்செய்தால், அதுகளிற்கண்ட சங்கதிகள் எதிர்க்கக்கூடிய விதத்தில் ருசுவாகிவிட்டுதுகள்.

Private writings to be fully proved.

§ 196. "பிறைவேட்" அல்லது இரகசிய ஆதரவுகளென்று இதின் 193-வது பிரிவிற்சொன்ன ஆதரவுமுதலானதுகளைக் கட்சிக்காரர்கள் ருசுப்படுத்தவேண்டும்.

Only the material points to be proved.

§ 197. எப்பொழுதும் வியாச்சியத்தில் முக்கியமான அம்சங்களுக்குமட்டும் ஆதரவுகள் தாக்கல்பண்ணி ருசுப்படுத்தவேண்டுமேதவிர அனுவசியசங்கதிக்கிக்கூடாது. (B-245.)

SECTION III.—பிரிவு ௩.

LEGAL AND ILLEGAL WRITINGS.—நியாயஸ்தலங்களிற் செல்லும்படியான கிரமமான ஆதரவுகள் யாவை அக்கிரமமானதுகள் யாவை.

Adequacy and Legality of consideration and proper delivery are necessary to make a document valid.

§ 198. ஒவ்வொரு ஆதரவும் கிரமமானதா, அல்லது அக்கிரமமானதா, அல்லது லாப்படிக்கி செல்லுமாவென்பதை நிதானிப்பதற்கு அடியிற்கண்ட விதிகளைச் செவ்வையாக மனதில் அழித்திக்கொள்ளவேண்டும். அவைகளாவன, I ஒவ்வொரு ஆதரவும் கிரமமானவும், தகுமானவுமான பிரதிப்பிரயோஜனத்திற்குப் பிறந்திருக்கின்றதா? II அதைக் கிரமமாகத் தனிகனுக்கு ஒப்பிவிக்கப்பட்டிருக்கின்றதா? இவைகளாம்.

These rules apply to the Law of Evidence as well as to that of contracts.

§ 199. இந்தவிதிகள் (Law of Contracts) என்கிறவியாபாரச்சாஸ்திரத்திற்கு அதிக சமீபமாகச் சம்பந்தப்பட்டாலும் (Law of Evidence) என்கிற ருசுசாஸ்திரத்திற்கும் கூட்டாய்ச் சம்பந்தப்படுகின்றது.

§ 200. I ஆனதால் ஒவவொரு ஆதரவுக்கும் கிரமமானவும், தகுமானவுமான, பிரதிப்பிரயோஜனம் உண்டாயிருக்குதென்பது தெளிவாகக் கோர்ட்டாருக்குத் தெரிந்தால் மட்டும், அந்த ஆதரவைப்பற்றி ஒரு தீர்மானஞ்செய்யலா

மாகையால், 1 "பிரதிப்பிரயோஜனம்" எதென்பதையும், 2 அது எவ்வாருகவிருந்தால் "தருமானவும் கிரமமானவும்" ஆகும் என்பதையு மினிசொல்லவேண்டும்.

§ 201. 1 பிரதிப்பிரயோஜனமென்பது றெக்கப்பணமாகவாவது தினிசாகவாவது, சேவையாகவாவது, கிரமமானமைற்றும் எதுவாகவாவது இருக்கலாம். பிரீதியும் இதர புண்ணியலோகபல உத்தேசமும் பிரதிப்பிரயோஜனமாகும். ஆனல் முதலில் சொன்னப் பிரதிப்பிரயோஜனங்கள், என்னுல் உனக்குக்கிடைத்து விட்டபின், அதற்காக நீ, யெனக்கு வாய்மொழியாகவோ லிகிதமாகவோ சம்மதித்த சொத்தை கொடாவிட்டால், அதைப்பற்றி நான் உன்பேரில் நியாயஸ்தலத்தில் வழக்கிட்டுப் பெற்றுக்கொள்ளலாம், பின் சொன்னதின் விஷயங்களில், அதற்காக நீ யெனக்கு ஒப்புக்கொண்ட சொத்து என்வசத்தில் வந்துவிட்டால் மட்டும் பின்பு அந்தச்சொத்து எனக்குக் சொந்தமாகுமே தவிர அது என்வசமாவதற்கு முன்னுடி அதை வரப்பத்த நான் உன்பேரில் வழக்கிட்டால் செல்லாது. (S-M-H-L. 177-178. Sadagopacharloo's manual of Muhummadan Law from Section 101-to 114.) What constitutes a consideration.

பிரதிப்பிரயோஜன மில்லாமலே லிகிதமூலத்தில் (Wills) உயிலென்று ஒன்றுருக்கின்றது. அது யூரோப் தேசத்தாருக்குமட்டும் விசேஷமாய் உபயோகமாகின்றது. அந்த ஆதரவு யாதொருபிரதிப்பிரயோஜனத்தின் பேரில் பிறக்கிறதில்லை. பிரீதி மட்டும் ஒருகாரணம்போல் தோற்றுகின்றது ஆனல் அந்த காரணத்திற்காகப் பிரக்கிறதாக அதில் கண்டெழுதுகிற வழக்கமிருப்பதாகத் தெரியவரயில்லை. ஆகிலும், யாதொரு பிரதிப்பிரயோஜனமும் இல்லாமலே அப்படிக்கி ஒரு உயிலை ஒருவனுக்கொருவன் எழுதிக்கொடுத்தால், அது சலாவணியாகவேண்டுமென்று லாவில் ஆதாரமுண்டாயிருக்கின்றது. இதினல் யாதொரு பிரதிப்பிரயோஜனமுமில்லாத ஒரு ஆதரவை நியாயஸ்தலங்களில் நிறைவேற்றவேண்டுமென்று லிஜிஸ்லேச்சரில் சம்மதித்ததாக எனக்குத்தோற்றவில்லை. சர்வசுவதந்தரத்துடன் ஒரு சொத்தை யனுபவித்துவருகிற மனிதன் அதையினி அனுபவிக்கக்கூடாமல் போகும்படியான அந்தஸ்தில்வருகிறபொழுது, அ A consideration is not necessary to make a Will valid.

தாவது, இறந்துபோகும் தருணத்தில் அந்தச்சொத்தை இனி யார் அனுபவித்தால் அவனுக்குச் சந்தோஷமாகவிருக்குமோ அவன் அந்தச் சொத்தையெடுத்துக்கொள்ளுகிற பாத்தியதையை அவனுக்குக்கொடுக்கும்படியான அதிகாரத்தைச் சொத்துக்குடையவனுக்குக் கொடுக்கவேண்டுமென்று லிஜிஸ்லேச்சரில் சம்மதித்ததாகமட்டும்நினைக்கவேண்டும். (Warren's Abridgement of Blackstone's, Commentary. Page 417.)

இவ்வித அதிகாரத்தைக்கொடுப்பதற்காக மட்டுமிருந்தாலும் அதில் பிரதிப்பிரயோஜனமில்லாமல் போகவில்லை. எப்படியென்றால், தன்சொத்தையெவன்அனுபவித்தால் சொத்துக்குடையவனுக்குச் சம்மதமோ அவன் அதை அனுபவிக்கும்படி காப்பாத்துவதினால் சொத்துக்குடையவனுக்கு ஒருபெரித்தான ஆறுதலாகின்றது. இந்த ஆறுதலைச்சரியான பிரதிப்பிரயோஜனமென்று சொல்லலாம். ஆனதால்த்தான் உயிலைப் பெற்றுக்கொண்டவன் அதில்க்கண்ட சொத்தை உடையவன் இறக்குங்காலத்திற்கு முன்முதலாவது, அந்தக்காலம் முதலாவது அவனுக்காக அனுபவித்துவருகிறவர்களிடத்திலிருந்து வரப்பெற்றுக்கொள்ள நியாயஸ்தலத்தில் வழக்குசெய்யலாம்.

The Will of a Hindoo differs from that of others.

இந்துக்களுடைய உயில்களுக்கு மேல்க்கண்டபடி ஒரு ஆறுதலிப்பது பிரதிப்பிரயோஜனமாக மாட்டாது. அவர்களுடைய உயில்சாஸ்திரத்திற்கு ஒத்திருக்கவேண்டும். இல்லாவிடில்செல்லாது. (1829-ஆ-V-வது சட்டம்.) இந்துக்கள் உயில்செய்யவேண்டிய அவசரமேயில்லையென்று மேஸ்தர் இஸ்திரெஞ்சுதுரையவர்கள் சிலநியாயம் சொல்லுகிறார்கள். அவைகளாவன, 1-அவர்களுடைய உயில்சாஸ்திரத்திற்கு விரோதமாகவிருந்தால் செல்லாதானதினால் உயில் அவசரமில்லை. 2-அது சாஸ்திரத்திற்கு ஒத்திருந்தால் செல்லுபடியுள்ளதாகவிருந்தாலும், செல்லுபடியுள்ள உயிலிற்கண்ட சங்கதி சாஸ்திரத்திலேயே இருப்பதால் அப்போவும் உயில்வேண்டியதில்லை. (S-M-H-L-170.)

Legality and adequacy of consideration defined.

§ 202. 2-கிரமமானவும், தருமானவுமான பிரதிப்பிரயோஜனம் எதென்பதை இங்கேசொல்லவேண்டும். "கிரமம்" என்கிறவார்த்தையினால் அறியவேண்டியதாவது, எ

தானது நீதிக்கும், சுவபாவத்திற்கும், ஜனங்களுடைய க்ஷேமத்திற்கும், இராசாஞை, அதாவது, சட்டங்களுக்கும், விரோதமாகவிருக்கமாட்டாதோ, அதென்றறியவேண்டியது. (S-L-C-201-17.)

"தருமான" என்கிறவார்த்தைக்கி அர்த்தமென்ன வென்றால், உபயகட்சிக்காரர்களும் அன்னியோன்னிய சம்மதியின் பேரில் எந்த சொத்துக்கு எது விலேயென்று ஏற்படுத்திக் கொள்ளுகிறார்களோ அதென்றறிய வெண்டியது. (S-L-C-130.) ஈனக்கிரயமென்கிற கட்சியினால் சம்மதியின் பேரில் நடந்த ஒரு வியாபாரம் றத்தாகமாட்டாது. மோசடியாய் ஒரு சொத்தையொருவன் ஈனக்கிரயத்திற்குக் கொண்டால், அதுமட்டும் செல்லாது. ஏனென்றால், மோசம் கோர்ட்டுத் தீர்ப்புகளைக்கூட றத்துசெய்துவிடும் (B-L-M-307. 655.) அது தவிர மனப்பூர்வ சம்மதியின்பேரில் நடக்கின்ற ஒவ்வொரு வியாபாரமும் தருமான பிரதிப்பிரயோஜனமுள்ளது தான். (S-L-C-138.) இந்து தேசத்தில் அல்ல சலில் விற்கும்விலேக்கிக் குறைவாக ஒரு கிரயபத்திரமானது பிறந்து, யாதொரு மோசமுமில்லாமல், சம்மதியின்பேரில் எழுதப்பட்டு கிரமமாக ஒப்பிவிக்கப்பட்டாலும், ஈனக்கிரயமென்கிற முகாந்தரத்திற்காக அது செல்லாதென்று சொல்லுகிற வழக்கமுண்டு. ஆகிலும் பூர்ணமான சம்மதியின்பேரில் கிரமமாகப்பிறந்த ஆதரவை றத்து செய்ய ஈனக்கிரயமென்கிற கட்சி உபயோகமில்லேயென்று சதர்கோர்ட்டார் அவர்கள் விதித்திருக்குறார்கள். (சதர்கோர்ட்டு 1854 ௵ 44-ம் நெம்பர் தீர்ப்பு.)

Reasons for which certain transactions are declared void.

§ 203. ஒவ்வொரு வியாபாரமும் உபயவாதிகளுடையவும் சம்மதியுள்ளதா யிருந்தால் போதுமென்று மேலாகறால் சொன்னதைக்கொண்டு எல்லாமனிதர்களும் தாங்களிஷ்டப்பட்டதை யெல்லாம் எழுதிக்கொண்டு விட்டால் அதுகள் எல்லாம் சலாவணியாகி விடுமென்று நினேக்கக்கூடாது. அப்படிக்கி சலாவணியாக இடம் கொடபெட்டுப் போனால், மனிதர்கள் செய்துகொள்ளும் அக்கிரமங்களுக்கு, தெஸ்தாவேசு அல்லது அதின் அன்னியோன்னிய சம்மத வக்கனேயென்பது பொல்லாங்கான கவசமாகும். ஆனதால்

பிரதிப்பிரயோஜனத்தின் விஷயமாய் சொல்லியபடிக்கே, ஒவ்வொரு ஆதரவின் வக்கணையும், நீதிக்காவது, சுவபாவத்திற்காவது, ஜனங்களுடைய க்ஷேமத்திற்காவது, இராஜை, அதாவது, சட்டத்திற்காவது,விரோதமாகவிருக்கக்கூடாது. விரோதமாயிருந்தால் அதுகள் செல்லுபடியுள்ளதல்லா அதுகளைப்பத்தி இதின்கிழாகச் சில உபமானங்கள் எழுதுகிறேன்.

Illegal contracts. Illustrated.

§ 204. ஒருவனை மைற்றொருவன் அடிக்கக்கூடாதென்று லா-விருக்கின்றது. (இண்டியான் பினல்கோட் 319-பிரிவு.) இதற்கு விரோதமாய் A- க்காக B- யானவன் C- யை-20. அடியடித்தபடியால், அதற்காக A-சம்மதித்த ரூபாய் 200-யையும் அவன் எழுதிக்கொடுத்த சீட்டின் ஷரத்துப்படி அவனிடத்திலிருந்து வாங்கித்தரவேண்டுமென்று B- வழக்கு செய்கிறான் இந்த சீட்டுசெல்லாது.

Champerty and maintenance which tend to promote litigations.

§ 205. வியாச்சியங்களை வளத்தக்கூடாதென்றும், அப்படியே வியாச்சியங்களை வளத்தும்பொருட்டாவது, வேறையெதற்காவது ஒருவனுக்கொருவன் சகாயஞ்செய்து அதின்மூலமாய் நியாயஸ்தலங்களில் வழக்குகளை வளத்தக்கூடாதென்றும் லா-விருக்கின்றது எப்படியென்றால், எந்தவழக்கின் சொத்தில் ஒருவனுக்குப் பாத்தியமாவது சம்பந்தமாவது இல்லையோ, அவன் பணத்தினலாவது, வேறைவிதமாயாவது பாத்தியஸ்தனுக்குச் சகாயம்செய்தால் அது "சாம்பர்ட்டி மெண்டிநன்ச்" (Champerty and Maintenance) என்கிறதோஷத்திற்குள்ளாகும். அந்தச்சகாயம் செய்ததற்காகத் தனக்கு அந்தபாத்தியஸ்தனால் கிடைத்த ஆதரவுபடி வரவேண்டிய பணம்முதலானதைவாங்கித்தரவேண்டுமென்று அவன்கொண்டுவருகிற வழக்குசெல்லாது. அப்படியே நியாயஸ்தலத்தில் வருகிறவழக்குகளில் யாதொருசம்மந்தமுமில்லாத ஒருவன் அந்தச்சொத்தில் தனக்கு யாதொருபங்கு வரவேண்டுமென்கிற ஏற்பாட்டின்பேரில் அந்தவழக்கை வளரும்படிசெய்தால் அது சாம்பர்ட்டியென்கிற குற்றமாகும். அதைப்பத்திவருகிறவழக்கும் செல்லாது. (S-L-C-193.)

Marriage brokage, being an act against public happiness, any obligation in consideration of it is void.

§ 206. ஒருபெண்ணுக்கும் ஒருபுருஷனுக்கும் விவாகம் கடனைசெய்துவைப்பதற்காகவென்று ஒருவன் சிலது கைக்கித்தரகுச் சீட்டுவாங்கிவைத்திருந்தால் அதுசெல்லாது. (ஷை-184.)

Purchase of a right of action, void because it increases and encourages litigations.

§ 207. ஒருவன் தன்னனுபவத்தில்இல்லாதஸ்தாவரசொத்தில் தனக்கிருக்கின்ற பாத்தியதையை அன்னியனுக்குவித்தால் அதுவும், மைற்ற எல்லாஜங்கமசொத்தும் அவனுக்குச்சேரவேண்டியகாலம் கிடந்தபின். அதாவது, வியாச்சியமூலமுண்டானபின்பு அந்த ஜங்கமசொத்தில் தனக்குள்ள பாத்தியங்களைவித்தால் அதுவும் ஷாம்பட்டியானபடியால் அதுவும் செல்லாது. (Br-V-D-5.)

Contracts against morality, void.

§ 208. ஒருதாசி அல்லது வியபிசாரிக்கி அவளுடைய தொழிலுக்குப் யோகமாகும்படி வீடுகள், வஸ்திரம், தானியம் முதலானதுகளைக் கிரயம், வாடகைமுதலானதுகளுக்காகக் கொடுத்திருந்தால், அந்தக்கிரயம், வாடகைமுதலானதுகள்வரவேண்டுமென்று, தனிகன் வழக்குசெய்யக்கூடாது, செய்தால்செல்லாது. (S-L-C-171.)

Delivery of Deeds and instuments explained.

§ 209. II-ஒவ்வொரு ஆதரவும் கிரமமானதா, அல்லது அக்கிரமமானதா, அல்லது, லா-ப்படிக்கிச்செல்லுமாவென்பதை நிதானிப்பதற்காக இதின் 199-வது பிரிவிற்சொல்லியிருக்கின்ற இரண்டுவிதிகளில் இரண்டாவதைக்குறித்தோவென்றால், எந்த தெஸ்தவேசானது எழுதப்பட்டுக் கையெழுத்துசாட்சிகளாகி விட்டபோதிலும் வேறையேதாவது ஒரு காரியம் நடந்தபின் இந்த ஆதரவு சலாவணியாகவேண்டியதென்கிற எந்தக்காரணத்திற்காகவாவது, அந்த ஆதரவு பத்திராரூடசாட்சிகளில் ஒருவனிடத்திலாவது பொதுக்கட்டப்பட்டிருந்தால், அது ஆதரவு என்கிற யோக்கியதையை அடையவில்லையென்றும், காரணார்த்தமாய்ப்பிறந்த எழுத்தென்றும் நினைக்கப்படும். இப்படிக்கி ஈரோட்டாய்க் கொடுபடுகிற ஆதரவுகள் எல்லாம் (Escrow) "இஸ்க்ரோ" வாகப் பிறந்துதென்று சொல்லப்படும். (S-L-C-9.) ஆனால் அப்படிக்கி ஈரோட்டாகக் கொடுத்ததாய்ச் சொல்வது அந்த ஆதரவினால் பிரயோஜனமடையவேண்டியகட்சிக்காரனிடத்தில்த்தானே கொடுபட்டிருந்தால் அது இஸ்க்ரோவிற்சேரமாட்டாது. (ஷை)

Escrow.

Writings in the custody of the creditor not Escrow.

§ 210. வாதிகளிடத்திலிருந்து ஆதரவுகள் நேராகக் கோர்ட்டுக்குவந்திருக்கையிலும், அந்த ஆதரவுகள் "இஸ்க்ரோ" வாகவைக்கப்பட்டுதென்று அநேகம் பிரதிவாதிகள் சொல்லுகிறதுண்டு. அந்தவாதங்களைத் துர்க்கட்சிகளென்று கோர்ட்டார் தள்ளிப்போடவேண்டியது. (ஷ 10.)

SECTION IV.—பிரிவு ௪.

PECULIAR MODE OF PROVING WRITINGS.—ஆதரவுகளை ருசுப்படுத்துகிற விதம்.

§ 211. இந்தப்புஸ்தகத்தின் 6-வது கலத்தில் சங்கதிகள் அல்லது கட்சிகள் ருசுவாகவேண்டியதைப்பத்தி பொதுவானவிதியைச்சொல்லியிருக்கின்றது. இதின்கீழாக ருசுபெறு என்கிற பிரகரணத்திலும் சொல்லியிருக்கின்றது. ஆகிலும் ஆதரவுகளை ருசுப்படுத்துகிறதற்காகத் தனியாய்ச் சிலவிதிகளிருப்பதை இங்கேசொல்லுகிறேன்.

No limitation as to the number of Witnesses to prove each writing.

§ 212. எந்த ஆதரவு எத்தனைசாட்சிகளால் ருசுவாகவேண்டுமென்கிறதற்கு ஒரு நிருக்குக்கிடையாது.

More credit will be given to a writing proved by not less than two Witnesses.

ஆனால் இரண்டுபேர்களுக்குக் குறையாத சாட்சிகளால் ருசுவானால் அந்த ஆதரவை எல்லாக்கோர்ட்டாரும் அதிகமாய் நம்புவார்கள். ஆகிலும் ஏகசாட்சியின் ருசுவை அங்கிகரிப்பது அவசரமென்றும், நம்ப இடமிருக்குதென்றும், கோர்ட்டாருக்குத்தோற்றினால் அதையும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அதைப்பத்தி விவரமாக இதின் 153-வது பிரகரணமுதல் 157-வது பிரகரணம் வரைக்கிம் சொல்லியிருக்கின்றது.

Wills must be proved by not less than two Witnesses.

§ 213. ஒரேசங்கதியை ஒன்றைவிட அதிகசாட்சிகளால் ருசுப்படுத்தினால், ஒருவாக்குமூலத்திற்கு மற்றொருவாக்குமூலத்தை யிணையிட்டுப்பார்க்கும்பொழுது, அந்தச்சங்கதியை ஜூரிகள் அதிகநம்பிக்கையுடன் அங்கிகரிப்பார்கள். ஒருசாட்சியால் கூடருசுவாகாமல்ப்போன சங்கதியை நிஜமென்று கோர்ட்டார் அங்கிகரிக்கமாட்டார்கள். இந்தவிதி உயிலுக்குச்சம்மந்தமில்லை. உயிலானது இரண்டுசாட்சிக்கிகுறையாதவர்களால் ருசுவாகவேண்டும். (B-216.)

§ 214. பத்திரத்திலடங்கிய யாவத்துசங்கதியைப்பத்தியும் ஒன்றுகூடவிடாமல் பத்திரசாட்சிகளைக்கேழ்ப்பதும், பத்திரத்தைப்பார்த்துச் சொல்லவேண்டுமென்று அவர்கள் பெதல்சொல்லுவதும் வழக்கமாயிருக்கின்றது. அதினுலும் பின்னும் அநேகம் நிமித்தங்கள்ளுலும். பத்திரங்களிலடங்கிய சங்கதிகளையெல்லாத்தையும் சாட்சிகளைக்கேழ்க்கவேண்டியதில்லை. பத்திரங்களைச் சாட்சிகள் பார்வையிட்டு இதுதான் தாங்கள் சாட்சிபோட்டபத்திரங்களென்று சொன்னுல்போதும். (B-217.) ஆனுல் எந்தசங்கதிகளிலாவது விசேஷமுகாந்தரங்களுக்காகப் பத்திரத்தைச் சாட்சிக்கிக் காட்டுவதற்கு முன்னுடி அதிலடங்கியிருக்கின்ற சங்கதிகளைக்கேழ்க்கலாம்.

The contents of a deed need not be proved in general, but the transactions attending the execution of writings may be enquired into.

§ 215. பத்திரசாட்சிகளால்மட்டும் அதுருசுவாகவேண்டும். பத்திரம்பிறக்கும்பொழுது கூடயிருந்தவர்களைக்கொண்டு பத்திரத்தின் உண்மையைருசுப்படுத்தக் கூடாது. ஆனுல் பத்திருரூடசாட்சிகளுடைய வாக்கு மூலத்தைத் தகவல் பார்க்க வேண்டியிருந்தால் அப்பொழுதும், பொய்யாகக் வேண்டியிருந்தால் அப்பொழுதும் மட்டும் கூடயிருந்தவர்களுடைய ருசுவை அங்கிகரிக்கலாம். பத்திரசாட்சிகள் இறந்தாவது பயித்தியம் பிடித்தாவது போனுலும், கோர்ட்டு யெல்லைக்குள் இல்லாமல்போனுலும், சாக்கிரதையாய்த் தேடிப்பார்த்தும் அகப்படாவிட்டாலும் அவர்களுடைய கைய்யெழுத்தடையாளத்தை ருசுப்படுத்தினுல் போதும். இதுவேதவிர கூடயிருந்தவர்களை விசாரிக்கக்கூடாது. (B-214.)

The only attesting witnesses to be called to prove a writing, but not those who were present at its execution to be allowed to prove any such deeds.

§ 216. சந்தேசலேசம் கூடஉண்டாக இடமில்லாத உத்தமன் வசத்திலிருப்பதும் 30 வஷ க்கு முன் பிறந்ததுமான ஒரு ஆதரவை யாதொரு ருசுவுமில்லாமல் நிஜமாக அங்கிகரிக்கலாம். ஆகிலும் அதில் எங்கேயாவது மூக்கியமான யெடங்களில் எதாவது கிருக்கு முதலானசம்சயங்களிருந்தால் அப்பொழுது அவ்வளவு நம்பிக்கை கொடுக்ககூடாது. (B-214 Stark 521-to-524.)

Writings of more than 30 years standing, how to be proved.

SECTION V.—பிரிவு ௫

INTERPRETATION OF DEEDS AND INSTRUMENTS, INCLUDING AMBIGUITY.—"அம்பிகுட்டி" என்கிற சந்தேகம் அல்லது, துவந்துவார்த்தபோதங்கள் உள்பட, லிகித மூலமான ஆதாரவு களுக்கு வியாக்கியானம் செய்தல்.

Although the truth of a writing has been established by the admission of the opponants or by Judicial evidence, yet there are some sources in them which produce a necessity for an Interpretation of them.

§ 217. ஒருவழக்கில் ஒருகட்சிக்காரனால் தாக்கல்செய்யலான ஒருபத்திரமானது அவனுடைய எதிரியால் போதுமானபடி கிரமமாய் ஒப்புக்கொள்ளப்பட்டதினாலாவது, சூடிசியால் ருசுவின் மூலமாயாவது, உண்மையானதென்று ஸ்தாபிக்கப்பட்டுப்போனபோதிலும் அதிலடங்கியவக்கணையானது தன்பட்சத்திற்கே சாதகமென்று ஒரு கட்சிக்காரனும் அதேவக்கணை தன்பக்கத்திற்கு சாதகமானதென்று அவனுடைய எதிரியும் சொல்லுகிற வழக்கமுண்டு. அப்படியே கோர்ட்டுத்தீர்ப்புகள், உத்தரவுகள், சட்டங்கள், ஆக்ட்டுகள், சாஸ்திரங்கள், இதுகளுடைய அர்த்தத்தைப்பத்தியும் விவாதப்படுவதுண்டு. அப்படியவர்கள் வாதிப்பதும் ஆதாரமற்றிராது. ஏனென்றால், லிகிதங்களில் அப்படிச்சம்சயப்படும்மடியான வக்கணைகள் எதார்த்ததில் இருப்பதுண்டு. இவ்விதப்பெசகானது ஜனங்களுக்கு இலக்கணமாவது, தர்க்கம்முதலிய சாஸ்திரங்களாவது தெரியாமையினாலும், அகராதிகோசத்தின் வார்த்தைகள் தெரியாமையினாலும், கோசத்திலேயே ஒருவார்த்தைக்கிப் பலவர்த்தங்களிருப்பதினாலும், அவ்விதவார்த்தைகளையே உபயோகிக்கும்படியான கட்டாயம் சிலவிசை சம்பவிப்பதினாலும் உண்டாகிறதுண்டு. இந்தச்சம்சயங்களுக்கு அர்த்தஞ்செய்கிற விதத்தைப்பத்திய சிலவிதிகளை ஏற்படுத்தாவிட்டால், ருசுசாஸ்திரப்படிப்பானது ஒருவனைப் பூர்ணமான ஜட்ஜியாகச்செய்யமாட்டாது. ஆதாரவுமுதலான எழுத்துமூலங்களை வியாக்கியானப்படுத்துவதற்காகச் சிலவிதிகளை அடியிற்கண்ட பிரிவுகளில் எழுதப்படும். (B-L-M-480.)

Mode in which a writing is to be interpreted.

§ 218. 1-ஒரு லிகிதத்திற்கு ஔதாரியமாயும் கட்சிக்காரர்களுடைய எண்ணத்திற்கு ஒத்துமையாயும் வியாக்கியானஞ்செய்யவேண்டும். 2-அதிற்சொல்லியிருக்கிறவார்த்தைகள் முழுமையையும் சேர்த்து ஆலோசிக்கவேண்டும். 3-யா

தொருவார்த்தையின் அர்த்தத்தைப் பத்திரத்தின் அர்த்தத்தைக்கொண்டு அறியலாம். 4-ஒரு ஆதரவின்வக்கணையானது அதையெழுதிக்கொடுத்தவனுக்கு விரோதமாக வியாக்கியானப்படுத்யப்படும். 5-வேண்டியதைவிட அதிகமானஎழுத்துகளிருந்தால் அந்த அதிக எழுத்துகளைமட்டும் தள்ளிவிடலாம். 6-பொய்யான ஒருசங்கதியை ஒரு ஆதரவில் எழுதியிருந்தாலும் பாதகமில்லை. 7-பொதுவான சிலவார்த்தைகளையெழுதியிருந்தால் அதுகளுக்குப் பத்திரசங்கதிக்கித்தக்கவிதமான அர்த்தஞ்செய்யவேண்டும். 8-ஒருசங்கதியைத் தனித்துக்குறித்திருந்தால் மைற்றசங்கதிகளை விலக்கியிருப்பதாக எண்ணவேண்டும். 9-கூடமாய் அர்த்தமாகிறதற்கு விரோதமாய் வெளியிட்டுச்சொல்லியிருந்தால் அந்த வெளியிட்டுச்சொன்னது செல்லாது. 10-ஒரு ஆதரவில் பிரஸ்தாபம் செய்யப்பட்டிருக்கின்ற மைற்றொரு ஆதரவு முதலானதின் பிரகரணமானது அந்த ஆதரவிலேயே சேர்த்து எழுதப்பட்டதாக எண்ணப்படும். 11-பின்வார்த்தைகளுக்கு முன்வார்த்தைகள சம்பந்தப்படும். 12-ஒரு ஆதரவு முதலானது பிறந்தகாலத்திலிருந்த சங்கதிகளையனுசரித்துச் செய்கிற வியாக்கியானம் உத்தமம். 13-வார்த்தைகளுடைய உருவத்தைமட்டும் மிகவும் நுணுக்கமாய்க் கவனிப்பவன் அந்த ஆதரவுக்கு மேலெழைந்தவாரியான் அல்லது பெருதரமாய் தப்பான அர்த்தத்தைக்கொள்ளுகிறுன். (B-L-M-480-481.)

§ 219. ஒவ்வொரு லிகிதத்திற்கும் அர்த்தஞ்செய்யும்பொழுதெல்லாம், அதினுடைய ஒவ்வொரு இடங்களும் சலாவணியாகும்படியாயும் ஒவ்வொருவார்த்தையும் எந்த வகையிலாவது கோசரிக்கும்படியாயும் செய்யவேண்டும். மேலும், அந்தவியாக்கியானம் யுக்தமானதாயும், யாவருடையவும் எண்ணத்திற்கு ஒத்ததாயும் இருக்கவேண்டியதும்தவிர கட்சிக்காரர்களிடத்தில் தயவுள்ளதாயும், லா-வுக்கு விரோதமன்றியில் எவ்வளவு கூடுமோ அவ்வளவுமட்டும் கட்சிக்காரர்களுடைய மனசுக்கும் பிரத்தியட்சமான உத்தேசங்களுக்கும் ஒத்ததாயும் இருக்கவேண்டும். கட்சிக்காரர்களுடைய நியாயமான உத்தேசங்களுக்கும் எண்ணங்களுக்கும் தக்கபடி லிகிதங்களிற்கண்டிருக்கிற காரியங்கள்

A document should be so construed that every part and every word of it shall take effect.

சொல்லும்படியானயுக்திகளையும் மார்க்கங்களையும் ஜட்ஜிகள் கற்பிவிக்கவேண்டுமென்று (Lord Hale) "லார்ட் ஹேல்" அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனதால் கட்சிக்காரர்களுடைய எண்ணங்கள்தெரியும்பொழுது, அதற்குவிரோதமாய் வார்த்தைகளுடைய அர்த்தத்தைக்குறித்து வீண் ஆட்சேபங்களையுண்டுபண்ணக்கூடாது. (482-483-ஷ.)

§ 220. சந்தேகமாயிருக்கின்ற வார்த்தைகளுக்கு உலகத்தில் சாதாரணமாய் ஜனங்கள் நினைக்கிற அர்த்தத்தையும், இலக்கணப்படியுள்ள அர்த்தத்தையும் செய்யவேண்டும். ஆனால் அப்படிச்செய்வதினால் யாதொரு அசந்தர்ப்பமாவது, அசவுகரியமாவது உண்டானாலுஞ்சரி, மற்றவிடங்களிலிருக்கின்ற வார்த்தைகளைக்கொண்டு தெரியவருகிற கட்சிக்காரர்களுடைய எண்ணங்களுக்கு விரோதமானாலுஞ்சரி, அப்படி அர்த்தஞ்செய்யக்கூடாது. (B-L-M-483.)

The golden rule.

§ 221. ஆக்ட்டுகளுக்கும் சட்டங்களுக்கும் அர்த்தஞ் செய்யும்பொழுது அதுகளில் உபயோகப்படுத்தியிருக்கின்ற வார்த்தைகளுக்குச் சரியான அர்த்தத்தைச் சொல்லவேண்டுமேதவிரவேறில்லை. ஆனால் சந்தேகமாயும் மயக்கமாயும் இருக்கின்றவார்த்தைகளின் அர்த்தத்தை நாம்மாத்தலாம். வார்த்தைகளுடைய நேரான அர்த்தத்தை அனுஷ்டிப்பதினால் யாதொரு அசந்தர்ப்பமாவது அனியாயமாவது உண்டாகும்போலிருக்குதென்று நமக்குத்தோற்றுகிற ஒரு முகாந்தரத்தினால் மட்டும் வார்த்தைகளுடைய அர்த்தத்தை நாம் மாத்திப்போட்டால் சட்டஞ் செய்கிறவர்களுடைய அதிகாரத்தை நாம்வகிக்கிறதாகுமென்று பிரதான ஜட்ஜி Jerves "ஜர்விசு" அவர்கள் சொன்னார்கள். (ஷ510-511.)

§ 222. எழுத்துமூலமான ஆதரவுகளுக்கு வாய்மொழியைக்கொண்டு எவ்விதவியாக்கியானமும் செய்யக்கூடாதென்று இருக்கின்றலாவுக்கு அடியிற்கண்டகாரியத்தில் ஒருவிலக்கு இருக்கின்றது. அதாவது, சட்டம்முதலிய எந்தலிகிதத்திலும் (Ambiguity) சம்சயம்அல்லது துவந்துவார்த்தசங்கதிகளும் வார்த்தைகளுமிருப்பதுண்டு அதிலாம். அதானது (Lantent Ambiguity) "கூடமானசந்தேகம்" என்றும். (Patent Ambiguity) வெளியிட்டசந்தேகம் என்றும் பிரிக்கப்படும். கூடமானசந்தேகமெதென்றால், எந்த லிகித

Division and definition of Ambiguity.

த்திற்கண்ட சங்கதிகள் தெளிவாயும் நிச்சயமாயுமிருக்குமோ, ஆகிலும் அந்தலிகிதத்திற்குள்ளடங்கி இருக்கின்ற அவ்வித நிச்சயமான சங்கதிகளுக்குள்ளிருந்து தானே எந்த சந்தேகமானது உண்டாகுமோ அது (Latent Ambiguity) கூடசந்தேகமாம். உ-ம் இராமய்யனென்று பெயருள்ள பலர் சிதம்பரத்தில் வசிக்கின்றார்கள். இப்படியிருக்க, "சிதம்பரத்திலிருக்கும் இராமய்யருக்கு ஷ ஊரிலிருக்கும் கோவிந்தய்யன் எழுதிக்கொடுத்த கடன் சீட்டு" என்று கண்டிருக்கின்ற சீட்டில் எந்த இராமய்யனுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுது" என்பதுகூட சந்தேகமாம். கூடசந்தேகத்திற்கு இன்னமொரு இலட்சணமிருக்கின்றது. "எந்தச்சந்தேகமானது கட்சிக்காரர்கள் உத்தேசித்த ஒருகாரியத்திலிருந்து உண்டாகுமோ அதாம்." (Patent) அல்லது வெளியிட்ட சந்தேகம் எதென்றால், "எந்தச்சந்தேகமானது லிகிதத்தில் அடங்கியிராமல் வெளியிலிருக்கின்ற காரியங்களிலிருந்து உண்டாகுமோ அல்லது எந்தச்சந்தேகமானது கட்சிக்காரர்கள் உத்தேசிக்கவேயில்லாத காரியங்களிலிருந்து உண்டாகுமோ அதாம்." உ-ம். பலானவனுக்கு என்று பெயர்போடாமல் "சிதம்பரத்திலிருக்கும் கோவிந்தய்யன் எழுதிக்கொடுத்த கடனசீட்டு" என்றுமட்டுங் கண்டிருக்கின்ற சீட்டில் "யாருக்கு எழுதிக்கொடுபெட்ட சீட்டு" என்பது வெளியிட்டசந்தேகமாம். (B-L-M-545-B-219.)

§ 223. கூடசந்தேகத்தை நிவர்த்திசெய்ய வாய்மொழிருசுவாங்கலாம். மேல்ச்சொன்ன முதல்திருஷ்டாந்தரத்தில் கண்டபடி எந்த இராமய்யனுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுதென்பதைப் பத்திரமெழுதிக்கொடுத்ததாய்ச்சொல்லப்படுகிறவன் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் பத்திரசாட்சிகள் வந்து பலான இராமய்யனுக்கு என்று வாய்மொழி ருசுச்சொல்லலாம். இரண்டாவது திருஷ்டாந்தரத்தில்க் கண்டபடி யாருக்கெழுதிக்கொடுக்கப்பட்டுதென்பதைப்பத்தி சாட்சிகளுடைய வாய்மொழிருசு வாங்கக்கூடாது. இப்படிப்பட்டதால் ஏற்பட்டதற்கு நிமித்தமென்னவென்றால், ஒரு ஆதாரவின் வக்கணையைக் கட்சிக்காரர்களுடைய உத்தேசம் அல்லது எண்ணத்தின்படி வியாக்கியானம் செய்யவேண்டுமென்று லா-இருக்கின்றது. (இதின் § 220.) முதல் திருஷ்டாந்

Parol evidence receivable to remove Latent but not Patent Ambiguity.

Reasons for this rule.

தரத்தில் இராமய்யன் என்ற ஒருவனுக்கு அந்தப் பத்திரத்தையெழுதிக்கொடுக்க உத்தேசமுண்டாகிவிட்டுது. இதானது பத்திரத்திற்குள்ளடங்கிய சங்கதியாயும், கட்சிக்காரர்கள் உத்தேசித்ததாயுமிருப்பதினால் இதிலிருந்து உண்டாகிற சந்தேகத்தை நிவர்த்திசெய்ய வாய்மொழி ருசுவாங்கலாம். இரண்டாவது திருஷ்டாந்தரத்தில்பத்திரத்திற்குடையவன் ஒருவன் இருக்கவேண்டுமென்றே உத்தேசிக்கப்படாததினாலும், எந்தமனிதனுக்குப் பத்திரமெழுதிக்கொடுபட்டுதென்கிறசந்தேகம் பத்திரத்திற்குவெளிப்பட்டகாரியங்களிலிருந்து உண்டாகிறபடியாலும், இவ்விதகாரியங்களுக்குவாய்மொழி ருசுவாங்கிறதாகவிருந்தால் பேருக்கு ஆதரவு என்று ஒரு தளவாடத்தைச் சாட்சிக்காரன்கைய்யில்கொடுத்துவிட்டு அவனுக்கிஷ்டமான சங்கதியையெல்லாம் வியாக்கியானமென்கிற பேரைவைத்துச் சாட்சிக்காரன் ஆதரவுடன் சேர்த்துப்போடுவான். ஒயர்ந்த அந்தஸ்துள்ள ஆதரவுகளுடன் தாழ்ந்த அந்தஸ்துள்ள வாய்மொழியைச் சேர்க்கலா-வானது சம்மதிக்கமாட்டாது. (B-219.) மேலும், பத்திரமெழுதிக்கொடுத்தவன் பலானவனுக்குத்தான் எழுதிக்கொடுத்தேனென்று ஒப்புக்கொண்டால் அப்பொழுது இந்த பத்திரமில்லாமல் அந்த ஒப்புதலுக்காகவே அதைக் கொண்டு வருகிறவனுக்குத் தீர்ப்புக்கிடைக்கும். ஆனத்தினால் வெளியிட்ட சந்தேகத்துக்கு வாய்மொழி ருசுவாங்கக்கூடாதென்பது தான் மறுபடியும் நிலைக்கின்றது.

Illustration of Latent Ambiguity,

§ 224. என்னுடையநிலங்களில் 20-காணி நிலத்தை நான் உனக்குக்கிரயம் செய்தேனென்று கண்டு கொடுத்த ஒரு கிரயபத்திரப்படி நிலம்வரவேண்டுமென்று நீ செய்கிறவழக்கில் நஞ்சை நிலமா புஞ்சை நிலமா வென்பதைப்பற்றி சாட்சிகளை வாய்மொழியாய் விசாரிக்கலாம். ஆனால் ஷை நிலம்வாயெந்தவிடத்தில் உனக்குகிடைக்கு மென்பதைபற்றி வாய்மொழி ருசுவாங்கக்கூடாது. ஏனென்றால் யிடம் குரித்துக்கொள்ள எனக்காவது உனக்காவது மனமிருந்தால் குரித்துக்கொண்டிருப்போமென்றும், அப்படிக்குரித்துக் கொள்ளாத்தினால் யெந்தவிடத்தில் வேணுமானாலும் நீ பெற்றுக்கொள்ளலாமென்கிற அலட்சியமான யெண்ணத்துடன் நாம் பத்திரம்செய்து கொண்டோமென்றும் இப்படிப்பட்ட

விஷயங்களில் பத்திரம் பெற்றுக்கொண்டவன் கோருகிற விடத்தில் நிலம்விட வேண்டியதென்றும் லா-வில் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றது. மைற்றொருகேசில் எனக்குச்சொந்தமான வீட்டையுனக்குக கிரயம்செய்தேனென்று நான் எழுதிக்கொடுத்த பத்திரப்படி நீ செய்கிறவழக்கில் அந்தவீடு எந்தவிடத்திலிருக்கப்பட்டதென்று தெரியாவிட்டாலும் எனக்கு சென்னபட்டணத்தில்மட்டும் ஒருவீடு இருக்குதென்றும், ஆனதால் அந்தவீடுதான் நான் உனக்கு கிரயஞ் செய்தேனென்றும் நீ வாய்மொழிருசுவிடலாம். (B-219.)

§ 225. லிகிதங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றவார்த்தைகளில் எதிலாவது அர்த்தபேதம்வருவதுண்டு. அது வியாக்கியானம் பெறக்கூடிய சந்தேகத்தில்ச்சார்ந்ததுதான். ஆனதால் எந்த வியாபாரசங்கதியில் அந்தச்சந்தேகவார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கின்றதோ அதில் சாமர்த்தியமுள்ளவர்களை அந்தவார்த்தைக்கி வியாக்கியானம் செய்யச்சொல்லி வாய்மொழிருசுவாங்கலாம். (B-219.) கூடசந்தேகத்தை வாய்மொழிருசுவினால் நீக்கலாம். (N-658.) Ambiguity in words.

§ 226. ஒரு ஆதரவுக்கு இரண்டர்த்தம் ஆகும்படியிருந்தால், எந்த அர்த்தம் லா-வுக்கு ஒத்திருக்குமோ அந்த அர்த்தத்தைத்தான் கட்சிக்காரர்கள் நினைத்ததாக எண்ணவேண்டும். (B-328.) Ambiguons instrumen t s to have a lawful meaning.

SECTION VI.—பிரிவு. கூ.

PROOF OF HANDWRITING.—கைய்யெழுத்தடயாள ருசு.

§ 227. கைய்யெழுத்தடையாளம் பார்க்கிறவேலையானது எந்தத்தேசத்திலும் வியவகாரங்களில் அடிக்கடிவரும். அது நியாயம் செலுத்துவதற்கு மெத்தவுமுபயோகமானது. ஒருமனிதன்தான் போட்டகைய்யெழுத்தை தன் கைய்யெழுத்தல்லவென்று மருதளித்தால் அந்த விஷயத்திலும், ஒருவன் கைய்யெழுத்துப் போடாமலிருக்கையிலேயே போட்டானென்று அவனுடைய எதிரி சொன்னால் அந்த விஷயத்திலும் இவ்விதருசுவை தேடும்படி சம்பவிக்கும். The practice of comparing hand-writing prevails in all countries in the world.

கையெழுத் தடையாளத்தை விளங்குவதற்கு மூன்று
மார்க்கங்களிருப்பதாக "பெஷ்ட்" துரை அவர்கள் சொ

Comparison by a Witness who has seen the supposed Writer sign and write.

ல்லுகிறார்கள். அவைகளாவன, 1-எவனுடைய கையெ
ழுத்தானது விவாதத்தில் வந்ததோ அவன் விவாத
பத்திரத்திற்கு முன்னமேயே அனேகம் தடவைகளில்
கையெழுத்தாவது நெட்டெழுத்தாவது போட்டபொ
ழுது இந்த சாட்சிக்காரன் பார்த்திருக்க வேண்டும். அ
ப்பொழுது அந்த யெழுத்துகளின் மோடியும் ஜாடையும்
இவன்மனதில் பட்டிருக்கவேண்டும். அந்த சாடைமுதலா
னதுகளை இவனுடைய மனதில் வைற்றுக்கொண்டிருந்து
அதே ஜாடையாக விவாதகையெழுத் திருக்கின்றதாவெ
ன்று தன் புத்தி கோசாரத்துனால் சாட்சிக்காரன் யோசித்

Comparison by one that has held correspondence with the supposed Writer, though not personally acquainted with him.

துப்பார்த்துச் சொல்லவேண்டும். 2-விவாதப்படுகிற கைய்
யெழுத்துக்காரனை சாட்சிகாரன் ஒருக்காலும் பாராமலிருந்
தாலும் அவனுக்கும் அந்த சாட்சிக்காரனுக்கும் வர்தமான
பத்திரங்கள் வரத்துப் போக்கிருந்தால் அந்த பத்திரங்க
ளில் போட்டிருக்கும் கையெழுத்துகளை மனதில் நிதானி
த்துக்கொண்டு சாட்சி சொல்லலாம். கவரன்மெண்டு ஆபீ
சர்களில் ஒருவருக் கொருவர் வர்தமான பத்திரங்கள் அல்
லது பப்ளிக் லெட்டர்கள் யெழுதிக்கொள்ளுகிற துண்டு
அப்படியிருந்தும் அவர்கள் ஒருவருக்கொருவர் பரிசயமில்
லாமலிருப்பது முண்டு இது முதலானதுகளிதற்குத் திரு

Comparison by one neither acquainted with nor seen the supposed Writer.

ஷ்டாந்தரமாகும். 3-விவாதப்படுகிற கையெழுத்துக்கார
னை சாட்சிக்காரன் ஒருக்காலும் பாராமலிருந்தாலும் வர்த
மான பத்திரங்கள் வரத்துப் போக்கில்லா விட்டாலும்,
அவனுடைய கையெழுத்து தான்யென்று ஸ்தாபிக்கப்
பட்டிருக்கின்ற அல்லது உபயவாதிகளாலும் ஒப்புக்கொள்
ளப்பட்டிருக்கின்ற வேறு யாதொரு விடத்திலிருக்கின்ற
கையெழுத்துடன்யாரும் இணை இட்டுப்பார்த்துத் தங்கள்
அபிப்பிராயத்தைச் சொல்லாம். (B-225-226.)

The knowledge the witness acquires, of others hand writing, should not be had with

§ 228. மேல்ச் சொன்னபடி பலவிதமாய் கையெழுத்
தடையாளங்களைப் பற்றி ருசுச் சொல்லுகிற விஷயத்தில்
சாட்சிகளுக்குக் கிடைத்த ஞானமானது விவாதப்படுகிற
அல்லது விவாதப்படும் போலிருக்கின்ற ஒரு கையெழுத்
தைப் பற்றி பின்னாலே ருசுச்சொல்லவேண்டு மென்கிற

உத்தேசத்துடன் அடைந்ததாக விருக்கக்கூடாது. அப்படிக் கி கிடைத்தஞானத்தின் உதவியினால் சொல்லும் ருசுகிறம மென்பதைப்போல் அங்கிகரிக்கப்பட மாட்டாது. a view to depose on a specific occasion.

§229. ஒருவனையொருவன் பயமுறுத்தியெழுதிய ஒருகாகிதம் அகப்பட்டு சம்சயமும் உண்டாகிவிட்ட பின்பு சம்சயப் பட்டபேர் வழிகளில் ஒருவனனகுற்றவாளியிடத்திற்குபோலீசு இன்ஸ்பெக்டர்தான் சேவுகன் மூலமாய் சிலபணத்தையனுப்பி றசீதுவாங்கினன். இப்படிவாங்கினதின் கருத்தானது குற்றவாளியின் கையெழுத்தடையாளத்தைப் பத்தியுந்த போலீசுசேவுகன் இனிசாட்சி சொல்லவேண்டுமென்பது தான். அந்தப்படியே போலீசு சேவுகன் சாட்சியும் சொன்னன். இந்தருசுவானதுவந்துவிட்ட வியவகாரத்தில் உபயோகமாகும்பொருட்டு அடைந்த ஞானத்தின்பேரில் ஆதாறப்பட்டிருப்பதால் அங்கிகாரத்திற்குத்தகாததென்று தள்ளிவிட்டார்கள். (B-229.)

CHAPTER III.—அத்தியாயம் ௩.

REAL EVIDENCE.—ஸ்தாவரருசு.

§ 230. ருசுவின் ஆயுதங்களில் மூன்ருவது வகுப்பைச் சார்ந்த ஸ்தாவர அல்லது பிரத்தியட்ச ருசுவைப்பற்றி இங்கேசொல்லவேண்டும். இந்தச்சங்கதியை (I Definition and Division of Real Evidencc) என்கிற ஸ்தாவர ருசுவின் இலட்சணமும் பிரிவினையும். (II Utility and abuse of Real Evidence) அதாவது ஸ்தாவர ருசுவின் உபயோகமும் கெடுதியும் என்கிற இரண்டுபிரிவுகளாகப்பிரித்து அந்தவரிசைப்படி யோசிக்கவேண்டும். Division of this Chapter.

SECTION I.—பிரிவு க.

DEFINITION AND DIVISION OF REAL EVIDENCE.—ஸ்தாவரருசுவின் இலட்சணமும் பிரிவினையும்.

§ 231. உலகத்திலுள்ள யாவத்துபதார்த்தங்களும், ஸ்தாவரமானுலுஞ் சரி ஜங்கமமானுலுஞ் சரி, மனிதர்களுடைய இந்திரியங்களுக்குத் தெரியுமாகையால் அதுகளுக்கு ஸ்தா Real Evidence defined.

வர ருசுவின் மூலமென்றுபெயர். ஆனதால் எந்த சமாசாரம் அல்லது ஞானமானது அவ்வித பதார்த்தங்களிலிருந்து கிடைக்குமோ அதற்கு (Real Evidence) பிரத்தியட்சருசுவென்று பெயர். உ-ம். × அடையாளமிட்ட ஒருநாணயம் தப்புநாணயமென்று A பேரில் B குற்றஞ்சாட்டுகிருன். அது நல்ல நாணயமென்று யெதிர்வாதம்வந்திருக்கின்றது. இச்சமயத்தில் அந்த × அடையாளநாணயம் நியாயாதிபதியின் முன்பாகவரும்பொழுது அது ஸ்தாவரருசுவாகும்.

Division of Real evidence. § 232. ஸ்தாவரருசுவானது நேருனஸ்தாவர ருசுவென்றும் பரோக்ஷமானஸ்தாவரருசுவென்றும் பிரிக்கப்படும்.—

Direct real evidence. ஸ்தாவரருசுவுக்கு மூலமாகவிருககின்ற பதார்த்தமானது நியாயாதிபதியின் இந்திரியங்களுக்கு நேருகத்தெரியும்பொழுது அது நேருன ஸ்தாவரருசுவெனப்படும். உ-ம்.மேல்ச்சொன்ன × அடையாளநாணயத்தை ஜட்ஜீமுன்பாக கொண்டுவரும்பொழுது, "அது தப்புநாணயமா அல்லவா" யென்கிற பயிண்டுக்கு அதுநேருனஸ்தாவர ருசுவாகும்.

Circumstantial real evidence. எந்த ஸ்தாவரம் அல்லது திரவியத்தைப்பார்ப்பதினுல் வியாச்சியத்தின் முக்கியசங்கதி இருக்குதென்கிற அல்லது இல்லையென்கிற ஞானம் உண்டாகுமோ அது பரோக்ஷஸ்தாவரருசுவென்று சொல்லப்படும். (B-190.) உ-ம். ஒரு ஸ்திரி, புருஷசம்மந்தப்பட்டாளா யில்லையாவென்கிற முக்கியமான அல்லது ருசுவாகவேண்டியசங்கதி, உண்டென்பதைக்குறித்து அவள்பிரசவித்ததைப்பார்த்தாலது பரோக்ஷமானஸ்தாவர ருசுவாகும்.

Immediate real evidence. § 233. ஸ்தாவரருசுவானது தனக்கே தெரிந்த ஸ்தாவரருசுவென்றும் தெரியப்படுத்திய அல்லது ரிபோர்ட்டான ஸ்தாவர ருசுவென்றும் பிரிக்கப்படும். ஜட்ஜீயின் இந்திரியங்களுக்கு நேருகத்தெரியுவது தனக்கே தெரிந்த ஸ்தாவர ருசுவாம். மேல்ச்சொன்னபடி × அடையாளமிட்ட நாணயமானது நேருகக்கோர்ட்டுக்குவந்தால் அது தனக்கே தெரிந்த ஸ்தாவரருசுவாகும்.

Reported real evidence. ஒரு பதார்த்தத்தின் ஸ்திதி சாட்சிகளுடைய அல்லது லிகிதங்களுடையமூலமாய் நியாயாதிபதிக்கித் தெரியவரும்பொழுது அது ரிபோர்ட்டான ஸ்தாவரருசுவாம். உ-ம். A யென்பவன் 1840ஸு த்தில் சித்தசுவாதீனமாகவிருந்ததை தான்

பார்த்திருப்பதாக B யென்பவன் ருசுச்சொல்லும்பொழுது அவனுடைய வாக்குமூலம் ரிபோர்ட்டான ஸ்தாவர ருசுவாம். ரிபோர்ட்டான ஸ்தாவரருசுவானது யெப்பொழுதும் கேழ்விருசுவுக்கு சமானமாய் விலைகுறைந்திருக்கும். (B-192.) Remarks.

§ 234. ஸ்தாவரருசுவினுடைய மூலமான திரவியங்கள் கோர்ட்டுக்குவந்துவிட்டால் மிகவும் திருப்தியுண்டு. ஆனால் யெல்லாவழக்கிலும் அப்படிக் கொண்டுவரவேண்டுமானல் சிலசமயங்களில் அப்படிச்செய்வது உபத்திரவகரமாயும் சிலசமயங்களில் அசாத்தியமாயுமிருக்கும். திருட்டுப்போன மாம்சம் அழுகிறசமயத்தில் அதைக்கோர்ட்டுக்குக் கொண்டுவருவதுஉபத்திரவகரமாகும். கொயம்பத்தூருக்கு சமீபத்தில் நீலகிரியிருக்குதென்கிற கட்சியை ருசுப்படுத்த அந்த கொயம்பத்தூரையும் நீலகிரியையும் கோர்ட்டுமுன்பாக கொண்டுவருவது அசாத்தியமாகவிருக்கும். Cases wherein real evidence is not to be brought into Court.

SECTION II.—பிரிவு. உ.

UTILITY AND ABUSE OF REAL EVIDENCE.—ஸ்தாவரருசுவின் உபயோகங்களும் கேடுதியும்.

§ 235. விவாதத்தில் வருகிறசங்கதிகள் யெதார்த்தமென்றும் அல்லவென்றும் சந்தேகமிருக்கும்பொழுதெல்லாம் அந்தசந்தேகத்தை நிவர்த்திசெய்ய ஸ்தாவர ருசுவைவிட திருப்திகரமானது ஒன்றும் அகப்படமாட்டாது. இதுவும் அரிதாகத்தான் அகப்படும். ஆனதால் யெங்கெங்கேஸ்தாவர ருசுக்கிடைத்துதோ அப்பொழுதெல்லாம் ஒரு ஆட்சேபனையில்லாமல் நியாயாதிபதிகள் அந்த ருசுவை மிகவும் திருப்தியாகஒப்புக்கொள்வார்கள். ஆகிலும் இவ்விதருசுவை நம்புவதில் பலவகைகெடுதியுண்டு. அவைகளாவன, 1-தர்ச்செயல் அதாவது ஒருவன் தன் மனதறியாமையினலாவது தான்ஜவாப்தாரியில்லாமலாவது தானே, ஒருகாரியத்தைச் செய்தான்போல் தோற்றுவான். 2-ஸ்தாவரருசுவை பொய்யாக கல்ப்பிவித்திருக்கலாம். 3 நியாயமானகாரியம் தப்புபோல் தோற்றும். இவைகளாம். இதுகளில் உண்டாகும் Utility of real evidence. Abuse of.

கெடுதிகளை அடியில்யெழுதுகிறேன். ஆனத்திநால் ஸ்தாவர ருசுவை (Confessions) யென்கிற ஒப்புதல்களைப்போலவே யே மிகவும் உஷாருக அங்கிகரிக்கவேண்டும்.

1 Accident. § 236. 1-தர்ச்செயல்நால் ஸ்தாவரருசுவில் நேரிடும் கெடுதி எப்படியிருக்குமென்ருல், ஒரு நல்ல மனிதன் தான் மட்டும் போக்குவரத்தாயிருப்பதும் தன் வசத்தில் மட்டுமிருப்பதுமான ஒரு யெடத்தில் ஒரு திருட்டுப்போன நகையை ஒரு பட்சியானது கொண்டுவந்து போட்டிருந்தது. இதுயிப்படிவந்திருந்தது அவனுக்குத்தெரியவே தெரியாது. ஆகிலும் இதுனுல் இந்த நல்ல மனிதனை திருட்டுக்குற்றத்திற்கு உள்ளாக்கும்படிவரும். ஒரு இரத்தம்வடிகின்றதேகத்துடன்இராவில் ஒருவன் சம்மந்தப்பட்டிருக்கலாம். இந்த மூலமாய் இரத்தம் தன்வஸ்திரத்தில் பட்டது இவனுக்குத் தெரியாமலிருக்கலாம். மறுனுள் காலேவேளையில் இந்த றத்தம்வந்ததைப்பற்றி சமாதானம்சொல்ல அவனுல் மாளாது. (B-196.)

2 Forgery of real evidence. § 237. 2- ஸ்தாவர ருசுவை பொய்யாக கல்பிவிப்பதில் பல உத்தேசங்களிருக்கும். 1- தன்னை தப்பிவித்துக் கொள்வதற்காக 2- குற்றவாளியையாவது, வேறை யாரையாவது துன்பப்படுத்தும் பொருட்டு, இவைகளாம். 1-ஒருவன் குதிரையைதிருடினுன். உடையவர்கள் பின்தொடந்துவந்ததை தெரிந்துகொண்டான். உடனே, வழியோடேபோகிற குற்றமற்ற ஒருவனிடத்தில் குதிரையை கொடுத்துவிட்டு தான் தேகபாதை நிவர்த்திசெய்துகொண்டுவருவதாக சொல்லிவிட்டுஓடியேபோய்விட்டான். உடையவர்கள் அந்த நல்லமனிதனைப்பிடித்துக்கொண்டு அவனை தூக்கிப்போட்டார்கள். பின்பு ஒருசமயத்தில் நிஜமானகுற்றவாளி அகப்பட்டபொழுது மேல் நடந்தசங்கதியைச்சொன்னுன். (B-199.) 2- ஒருவன்பேரில் குற்றம்சாட்டுவதற்காக அவனுடைய வீட்டுக்குள்ளாவது பொட்டிமுதலானதுகளுக்குள்ளாவது திருட்டுப்போனதாகச் சொல்லுகிற உடமைகளை வைத்துவிட்டு உடனே போலீசு ஜனங்களை அழைத்துவந்து குற்றமற்றவனை குற்றஞ்சாட்டுகிறவழக்குமுண்டென்பதற்கு இண்டியாதேசத்து ஜனங்களுக்கு உபமானம் யெழுதவேண்டியதில்லை. அவர்கள் அடிக்கடி இப்படிப்பட்ட கேசுகளைப்பார்த்திருப்பார்கள்.

In self-exculpation.

In injuring others.

§ 238. 3-திருட்டுப்போன சொத்தைகண்டெடுத்த ஒருவன், நிஜமான சொந்தக்காரனைத்தேடி அதைக்கொடுக்கவேண்டுமென்றும் தப்பினுல் இச்சங்கதியை நியாயஸ்தலத்தில் தெரியப்படுத்தவேண்டுமென்றும் யெதார்த்தத்தில் நினைத்திருக்கலாம். இப்படி நினைத்ததையவன்செய்வதர்க்கு முன்னுடியவனைதிருடனென்று பிடிப்பதுண்டு. ஒருவனுக்கு தன் மூக்குமுதலானவிடங்களிலிருந்து யெதாவது இரத்தம்வந்திருக்கலாம். ஒரு மிருகத்தையடித்ததுனுலும் அப்படி இரத்தம் உண்டாகியிருக்கலாம். இதுகள் இவன் கொலை செய்தானென்கிற சந்தேகத்தையுண்டுபண்ணும். (B-203.)

3 Lawful actions appearing as criminal ones.

PART III.—பார்ட்டு ௩.

Presumptions.—ஊகங்கள்.

§ 239. இந்த பார்ட்டை அடியிற்கண்ட அத்தியாயமாகப்பிரித்திருக்கின்றது. அவைகளாவன.

I. ஊகங்களுடைய இலக்கணமும் பிரிவினையும்.
II. எதிற்கக்கூடாத லாவின் ஊகங்கள்.
III. லாவிலிருந்தும், சங்கதியிலிருந்தும் உண்டாகும் எதிற்கக்கூடிய ஊகங்கள்.

CHAPTER I.—அத்தியாயம் க.

Definition and division of Presumptions.—ஊகங்களுடைய லட்சணமும் பிரிவினையும்.

§ 240. எந்தெந்த மார்க்கங்களிலிருந்து நிஜம் தெரிந்துகொள்ளக்கூடுமோ அந்த மார்க்கங்களின் மூலம் யெப்படியிருந்தாலும் நிமித்தமில்லாமல் அதிலிருந்து வருகிற நிஜத்தைத்தெரிந்துகொள்ளும்படி இங்கிலீஷ்லா-வானதுயெடம்

Reasons for which recourse is had to Presumptions.

கொடுத்திருக்கின்றது. (இதின் சாட்சிப்பிரகரணம் முதலாவது பிரிவு) சூடிசியால் ருசுவின் பெரிதான பிரிவினைகளாகிய நேர்ருசு 1- பரோக்ஷ ருசு 2- இதுகளில் நேர்ருசு விசேஷயோக்கியதை யுள்ளது தான். ஆனால் அது எல்லா விஷயங்களுக்கும் அகப்படுவது அரிதாகயிருக்கும். (Stack-70.) மேலும் பரோக்ஷருசுவானது ஒரு யெண்ணத்தில் நேர்ருசுவைவிட குறவானதென்று சொன்னாலும் மைற்றொரு கட்சியில்நேர்ருசுவைவிட குறவுள்ளதல்லா. (Euclid's Book III:) யேதாவது ஒரு காரியமிருககு தென்பதை அல்லது இல்லை யென்பதை எதிர்கட்சிக்காரர்களுடைய ஒப்புதலினாலாவது சூடிசியால் ருசுவினாலாவது சாஸ்தரங்களுடைய சித்தாந்தங்களினாலாவது ஸ்தாபித்துப் போட்டால் அதிலிருந்து மைற்றொருகாரிய மிருக்குதென்பதையாவது யில்லையென்பதையாவது மனுஷியாள் தங்களுடைய விவேகத்தின் கோசரத்தால் கண்டுபிடிக்கலாம். எப்படியென்றால்,

1856 ஷூ சூலைமாதத்தில் பயிரிட்ட A-யுனுடைய காபித்தோட்டத்தை யந்த மாதம் முதல் அதுகாய்க்க ஆரம்பிவிக்கிறவரைக்கும் அவனுக்காக B- காவல்கார்க்கிறதென்றும் அதற்காக B- க்கு மாதம்-க-க்கு ரூபாய் 10 வீதம் சம்பளம் கிடைக்கிறதென்றும் யேர்ப்பாடுசெய்யப்பட்டுதென்றும், அந்த செடிகள்காய்க்க ஆரம்பிவித்த 1861 ஷூ டிசம்பர் மாதம்வரைக்கும் தனக்குச் சம்பளம் வரவேணுமென்றும் B செய்கிற வழக்கில் பயிர் செய்ததுமுதல் 30-மாதத்துக்குள்ளாக காபிச்செடிகள் காய்க்க ஆரம்பிக்குமென்றும் அந்தப்படியாரம்பித்தது யென்றும் ஆனதால் B-க்கு 30 மாதத்திய சம்பளம்மட்டும் கிடைக்குமென்றும் A-சொல்லுகிறான். இவ்வழக்கில் காபிச்செடி பயிரிட்டது முதல் யெத்தனை மாசத்துக்குள்காய்க்கும் யென்பதுமட்டும் விவாதமாயிருக்கின்றது. காபிப்பயிரிட்ட காலத்தை உபயவாதிகளும் ஒப்புக்கொள்ளுகிறபடியால் யெத்தனை தினத்தில் அதாவது 30 மாதத்தில் காய்க்கு மென்பதை ஜட்ஜீ யோசித்துக் கொள்ளலாம். இப்படி ஊகிப்பதற்கு Presumption யென்றுபேர். இப்படி ஊகிப்பதை நேர்ருசு அகப்படாத சமயத்திலும் நேர்ருசு அகப்படுவது மிகவும் தொந்திரவாயிருக்கிற சமயத்திலும், உபயோகப்படுத்திக் கொள்ளப்படும் (Stark, 70.)

§ 241. ஊகங்களைசெய்ய ஆரம்பிப்பதற்கு முன்னடி ஒப்புக்கொண்ட அல்லது ருசுவான காரியத்துக்கும் அதிலி ருந்து ஊகிக்கப்படும் காரியத்துக்கும் பலானவிதமான சம் பந்தமிருக்கிறதென்கிறஞானம் ஊகிப்பவனுக்கிருக்கவேண் டும். (Stark 71.)

Sources of Presumptions.

§ 242. ஊகங்ளானது லாவிருந்தும், சங்கதி அல்லது பதார்த்தத்திலிருந்தும் சூரிய சந்திராதிகளுடைய கெதிக ளிலிருந்தும், அனுபவம், மனிதர்களுடைய சாதாரணமா னநடத்தை, வாடிக்கை, வர்த்தக வழக்கம், இது முதலான துகளிலிருந்தும் உண்டாகும். (B-292- Stark 70-71.)

Mr. Starkies, definition of Presumptions.

§ 243. பலவிதமான பதார்த்தங்கள், சங்கதிகள், அல்ல து காரியங்களுக்குள்ளிருக்கும் அன்னியோன்னிய சம்பந் தமானது எந்தவிஷயங்களில் ஒன்றிருப்பதைக் கொண்டு மைற்றென்றுயிருப்பதை நிச்சயத்துடனுவது யேறவாவது குறையவாவதுயிருக்கும். யேஷியத்துடனுவது ஊகித்துக் கொள்ளும்படியெடமுண்டாக்குமோஅதானது Presumption ஊகமென்று சொல்லப்படும். (Stark 80.)

Mr. Best's definition of Presumptions.

§ 244. சூடிசியால் நோட்டீசுசெய்வதினுலாவது ஒப்புக் கொண்டதினுலாவது நியாயாதிபதிக்கு திருப்தியாகும்படிக்கி சூடிசியால் ருசுவினுல் ஸ்தாபித்ததினுலாவது எந்தக்காரிய மிருக்குதென்கிற சங்கதியேர்ப்பட்டுப்போச்சுதோ அதிரு ருந்து மைற்றொருசங்கதியிருக்குதென்ருவது இல்லையென் ருவது நியாயாதிபதியானவர் விகிதமான யுக்தியினுல் ஊகிப் பது "பிரமம்ஷன்" ஊகம் யெனப்படும். (B-290.)

Division of Presumptions.

§ 245. ஊகமானது லாவின்ஊகமென்றும் சங்கதிகளின் ஊகமென்றும் பிரிக்கப்படும்.

Presumptions of Law and Fact defined.

§ 246. லாவின்ஊகமென்பது அந்தப் பெயரையடைந்த லாவின் சில உறுதியான ரூல்களைவிட வேறில்லை. (Stark 748.) ஸ்தாபிக்கலாயிருக்கின்ற ஒருகாரியத்தின் அந்தஸ் தைக்கொண்டு மைற்றொருகாரியமிருப்பதையாவது இல்லா ததையாவது ஊகிப்பது சங்கதிகளின் ஊகமாம். (Srark 80.) அப்படி ஊகிப்பதற்குமுன்னடி நவக்கிரமம்முதலிய வானத்தின் கோசாரங்களைக்குறித்தும், மனிதர்களுடைய

மனோதர்ம்மத்தைக்குறித்தும் அவர்களுடைய கிருத்தியங்களின் ஊற்றுகளைக்குறித்தும், வர்த்தகம்முதலிய வழக்கங்களைக்குறித்தும் நியாயாதிபதி அல்லது ஊகிப்பவனுக்குச் செவ்வையான ஞானம் கிடைத்திருக்கவேண்டும். (B-292)

In what respects the Presumptions of Law differ from those of facts.

§ 247. லாவின்ஊகங்களுக்கும் சங்கதிகளுடைய ஊகங்களுக்கும் இரண்டுபேதமிருக்கின்றன. 1 சங்கதிகளின் ஊகத்தைச்செய்வது நியாயாதிபதிகளின் யுக்தத்தைச்சார்ந்து. லாவின் ஊகங்களைச்செய்யும்படி கோர்ட்டாரைக் கட்டாய்ஞ்செய்யக் கட்சிக்காரர்களுக்குப் பாத்தியமுண்டு.—செய்யவேண்டிய லாவின் ஊகங்களைக் கோர்ட்டார்செய்யாவிட்டால் அந்த ஒருநிமித்தத்தைக்கொண்டே அந்தவியாச்சியம் புனர்விசாரணைக்கிவரும். 2 லாவின் ஊகங்களை ஜட்ஜீகளேசெய்யலாம். அதற்கு ஜூரிகளுடையபிரவேசம் வேண்டியதில்லை. (293 ஷ)

Mixed Presumptions.

§ 248. லாவினால்பாதியும் சங்கதிகளால் பாதியுமாய், ஒரு சங்கதியிருக்குதென்றுவது இல்லையென்றுவது ஊகிப்பதுகலப்புஊகமெனப்படும். உ-ம் கிரமமாக நீண்டகாலமாய் ஒருவன் அனுபவித்துவருகிற சொத்துகள் அல்லது சுவதந்தரங்கள் விவாதத்தில்வந்து, அதுகள் அனுபவிப்பவனுக்குக் கிடைத்ததர்க்காக நீண்டகாலத்திர்க்கு முன் நடந்ததானம் கிரயம்முதலான சங்கதிகளை அனுபோகக்காரன் ருசுப்படுத்தாமலே ஆதியில் அந்த அனுபவம் சிகாசனது முதலான உத்தம ஆதாரங்களினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்குதென்று நினைக்கும்படி ஜூரிக்கி ஜட்ஜிசொல்லி அந்தப்படி நினைப்பது கலப்பு ஊகமாம். (B-313.)

Illustration of.

Conflicting Presumptions.

§ 249. எந்தசங்கதியில் ஒரேகாரியமானது ஒரு ஊகத்தின்படி ஒருவனைதெண்டனைக்கி உள்படுத்துமோ, ஆனால் மைற்றொரு ஊகத்தின்படி உள்படுத்தமாட்டாதோ அதில்ச்செய்யப்படும் ஊகம்பரஸ்பர விரோத ஊகமென்றுசொல்லப்படும். உ-ம் A- தேசாந்தரம் போய்விட்டான், அவனிருக்குமிடம் தெரியவில்லை. அவன்போன 1 வருஷக்குப்பின் அவன் பெண்சாதி B- யானவன் C- யை விவாகம்செய்துகொண்டான். இப்பொழுது உ-வது விவாகத்துக்காக B-யை தெண்டிக்கவேண்டுமானால், யாரும் குற்றம் செய்ததாக

Illustration of.

லா-முதலில் ஊகிக்கமாட்டாது. ஆனதால் A- சாகவில்லை யென்று ருசுவாகிறவரைக்கிம் B-யை தெண்டிக்கக்கூடாது. தெண்டிக்கவேண்டாமென்றால், ஒருதடவை உயிருடன்யி ருப்பதாக ஒப்புக்கொண்ட அல்லது ருசுவான மனிதன் செற்றானென்று ருசுவானாலொழிய அவன் செற்றதாக கோர்ட்டார் ஊகிக்கமாட்டார்கள். ஆனதால் தெண்டிக்கவேணும். (B-323.)

§ 250. ஒவ்வொருகாரியமும் கிரமமாக நடந்திருக்குதென்று லா-ஊகித்துக்கொள்ளும் அந்த ஊகம் கிரமமானதல்லவென்று ருசுவாகிவிட்டால் அந்த ஊகத்தை லா-விட்டுவிடும். யெந்த விஷயங்களில் இவ்விதமாய் முதலில்க்கொண்ட ஊகத்தைப்பின்பு யெதிரிகள் ருசுமுதலானதின்மூலமாய் மாற்றலாமோ அதுமுடிவாகாத ஊகமாகும். உ-ம். A-யென்பவள் B-க்கி வைப்பாட்டியா, தர்மபத்தினியா வென்கிற விவாதத்தில் தர்ம பத்தினியென்று லா-ஊகித்துக்கொள்ளும். அப்படியே ஒரு இந்துவின் குடும்பஸ்தர்கள் பாகமாகாதவர்களென்று லா-ஊகித்துக்கொள்ளும். (S-M-H-L-287.) இதுகளுக்கு யெதிறடியான ருசுவினால் விரோத கட்சிகளை ஸ்தாபிக்கலாம். ஆனதால் இதுகளுக்கு முடிவாகாத ஊகமென்று பெயர். Primâ facie Presumptions. Illustration of,

§ 251. முடிவான ஊகமென்பது யெதென்றால் ருசுவாகவேண்டியசங்கதிக்கிம் ருசுவாகியிருக்குற சங்கதிக்கு மிருக்கும் சம்பந்தமானது யெந்தவிஷயத்தில் நிச்சயமாய் சுவபாவத்தின் குணமாகுமோ அதாம். உ-ம். A- யென்கிற ஸ்திரியானவள் புருஷனிடத்தில் சம்பந்தப்பட்டாளா யில்லையா வென்கிற விவாதத்தில், அவள் பிரசவித்தசங்கதி நம்பிக்கையான ருசுவினால் ஸ்தாபிக்கப்பட்டால், அவள் புருஷசம்பந்தப்பட்ட சங்கதி முடிவான ஊகமாகும். Irrebuttable or conclusive Presumptions.

CHAPTER II.—அத்தியாயம் உ.

IRREBUTTABLE PRESUMPTIONS OF LAW.—எதிற்கக்கூடாத லாவினுடைய ஊகங்கள்.

§ 252. லாவினுடைய ஊகங்கள் எல்லாம் சுவபாவத்தின் ஊகங்களே தவிர வேறில்லை. அதுகளை லா-வானது அங்கிகரித்து நிறவேற்றுகின்றது. (B-294.) அவைகளாவன,

Every man intends the consequence of his own act.

1. ஒவ்வொருமனிதனும் தான் செய்யும் காரியங்களின் பிரயோஜனம்,குணம், அல்லது முடிவு,பலானதென்று அறிந்திருப்பதாகவும்,

By setting fire to a building, & injury is presumed.

2. ஒரு கட்டடத்திற்காவது மைற்றும் குடியிருப்புமுதலானதற்காவது நெருப்புவைக்கிறவன் அதில் யிருப்பவர்கள் அல்லது சொந்தக்காரர்களுக்கு பொல்லாங்குசெய்ய நினைத்ததாகவும்,

Consequence of using poison &c.

3. ஒருவனையொருவன் கொடுமையான ஆயுதத்தால் அடித்தாலும், விஷம்வைத்தாலும் துப்பாக்கியினால் சுட்டாலும் க்ஷாத்திரத்துடன் பொல்லாங்கு செய்ய யெத்தனம் செய்ததாகவும்,

Of express mention.

4. பணம்முதலிய கிரமமான பிரதிப்பிரயோஜனம் அடைந்ததற்காக பிறந்துதென்று கண்டிருக்கிற ஒரு பத்திரத்திற்கு விரோதமாய் சொல்வது பொய்யென்றும்,

Presumption that all of her Majesty's subjects are acquainted with the Law.

5. பிரிடிஷ் இராச்சியத்தில் இருக்கின்றயெந்தமனிதனும் அத்தேசத்தின் லாக்களையறிந்திருப்பதாகவும்,

Consequence of res Judicata.

6. கிரமமான தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டாரால் ஒருதடவை தீர்ந்துபோன சங்கதியானது அதிற்சேர்ந்தவர்கள்மட்டிலும் அவர்களை முன்னிட்டு தாவா செய்கிறவர்கள் மட்டிலும் மிகவும் சரியாக தீர்க்கப்பட்டிருக்குதென்றும்,

Children under seven years of age not capable of commiting felony &c.

7. ஏழுவயதுக்குள்ப்பட்ட குழந்தையானது கலாபம், வழிப்பறி, வியபிசாரம், முதலான பெருங்குற்றங்கள் செய்யமாட்டாது யென்றும் ஊகிக்கப்படும், இவ்வித ஊகங்களை யெதிர்க யாதொரு ருசுவையும் கோர்ட்டார் அங்கிகரிக்க மாட்டார்கள்.

Exception.

ஆனால் 4-6-வது ஊகங்களுக்கு. காரணமான லிகிதங்களில் மோசம் சம்பந்தப்பட்டிருக்குதென்றாவது, (B-295.) மைற்றவிஷயங்களில் தெய்வகிருத்தியம் அல்லது பிறருடைய கிருத்தியத்தால் குற்றம் நடந்துது யென்றாவது ருசுவிடலாம். ஏனென்றால், பயித்தியக்காரனுக்கு யெங்கேயும் தெண்டனைகிடையாது. இதின்-40-61-134-பிரிவுகள்.

The opinion of modern Judges as to conclusive Presumptions.

§ 253. ஊகங்கள் யெப்பொழுதும் முடிவானதாகவிருக்கக்கூடாதென்று இப்பொழுது நியாயாதிபதிகளுக்கு அபிப்பிராயமாகின்றது. (N-693.) ஆனதால் "நியுயார்க்" தேசத்தின் சட்டத்திலிருப்பதாக நார்ட்டன் துரையவர்களுடைய

மேல்குறித்த பிரிவில்க்கண்ட யெதிர்க்கக்கூடாத சில ஊகங்களை மட்டும் எழுதிப்போடுகிறேன். பின்பு யெழுதுகிற ஊகங்களையெல்லாம் அதுகளுக்கு யெதிரடியான ருசுவினுல் எதிர்க்கக்கூடிய முடிவாகாத ஊகங்களென்று நினைக்கவேண்டியது. "எந்தருசுவை அங்கிகரிப்பதினுல் ஒருகட்சிக்காரன் பட்சம் தீர்ப்பு செய்யும்படி கட்டாயமுண்டாகுமோ, அந்தருசுவை அங்கிகரிக்கமாட்டோமென்று ஒரு கிருத்திரிம நூலின்படி தள்ளிவிடுவது பிரத்தியட்சமாயும் யுக்தமாயுமிருக்கின்ற முகாந்தரத்துடன் யில்லாவிட்டால் சரியல்லா. (B-296.)

List of irrebuttable Presumptions of the New York civil code, as contained in Mr. Norton's work on Evidence.

1. ஒருவன் மைற்ருெருவனை ஒருகொடிய ஆயுதத்தால் ஆய்ந்தோய்ந்த ஆலோசனையுடன் அடித்து அதினுல் அடிபட்டவன் ஒருவருஷத்திர்க்குள் யெறந்துபோனுல் அது கொலைசெய்ய அவன் உத்தேசித்தான் யென்கிற ஊகத்தையுண்டாக்கும்.

2. ஒருவன் ஆய்ந்தோய்ந்த ஆலோசனையுடன் ஒரு அக்கிரமமான காரியத்தைச்செய்தால் அதினுல் அவன் அன்னியருக்குத் தீங்குசெய்யும்பொருட்டு க்ஷாத்திரமானவும் தப்பானவும் யெண்ணத்துடனிருந்ததாக ஊகிக்கப்படுவான்.

3. ஒருகாரியம் ஒருவிதமாய் நடந்திருப்பதாக ஒரு யெழுத்து மூலமான ஆதரவில்க்கண்டிருந்தால் அந்தகாரியமானது அந்தகட்சிக்காரர்கள்மட்டிலும் அவர்களை முன்னிட்டுக்கொண்டுதாவாசெய்கிறவர்கள்மட்டிலும் நிஜமென்று முடிவாய் ஊகிக்கப்படும்.

4. ஒரு மனிதன் தன்னுடைய வார்த்தைகளாலாவது, செய்கையினுலாவது, வழுவுதல்களாலாவது ஒருசங்கதி நிஜமென்று அன்னியன் நம்பும்படிக்கிம், அந்த நம்பிக்கைப்பிரகாரம் நடக்கும்படிக்கிம் மனப்பூர்வமாய் ஆய்ந்தோய்ந்த ஆலோசனையுடன் விட்டுவிட்டிருந்தால், பின்பு அந்தவார்த்தை, செய்கை, வழுவுதல், முதலானதிலிருந்து உண்டாகும் யெந்தவழக்கிலும் அந்த மனிதன் அந்தவார்த்தை, செய்கை, முதலானதை பொய்யென்று சொல்லக்கூடாது.

5. ஒரு புறக்குடியானவன் ஒரு நிலத்தைக் குத்தகைக்கி வாங்கினகாலத்தில், அந்த நிலத்தில் அதை இவனுக்குக் கொடுத்த உடயவனுக்கு பாத்தியமிருந்ததில்லையென்றுபின்பு யெந்தகாலத்திலும் அந்தப் புறக்குடி சொல்லக்கூடாது.

6. எந்தமனிதன் தேகத்தில் தார்ட்டியதைக் குறவில்லாமலிருக்கிறானோ அவனுடன்கூட சம்சாரம்செய்துகொண்டிருக்கிற அவனுடைய பாரியையின் வம்சம் தோஷமுள்ளதாகமாட்டாது. (N-693.)

CHAPTER III.—அத்தியாயம் ௩.

REBUTTABLE PRESUMPTIONS OF LAW AND FACT.—லாவிலிருந்தும் சங்கதிகளிலிருந்தும் உண்டாகும் எதிர்க்கக்கூடிய ஊகங்கள்.

Rebuttable Presumptions explained.

§ 254. முடிவாகாத ஊகமென்கிறவார்த்தைக்கி தப்பர்த்தமுண்டாகாம லிருக்கும்பொருட்டு சொல்லுகிறதாவது, சுவபாவங்களின் கோசாரம், கெதி, மனிதர்களுடைய சித்தவிருத்தி, தேசாசாரம், வர்த்தகவழக்கம், முதலிய பிரபஞ்சகாரியங்களைச் செவ்வையாக அறிந்தவிவேகியான ஒரு மனிதன் எந்தகாரியமாவது ஒருவிதமாயிருப்பதைக்கொண்டு மைற்றொருகாரியம் பலானவிதமாயிருக்கலாமென்று யுக்தியின்பேரில் யெதை உத்தேசமாய் நினைத்துக்கொள்ளுவானோ, ஆனால் யெதையொருவன் அப்படி நினைத்துக்கொண்டாலும் அந்தநினைவினால் நொந்துபோகும்படி யிருப்பவன் அந்த நினைவுப்படி அந்த காரியம் நடந்ததில்லையென்று ருசுப்படுத்தலாமோ அதென்றறியவேண்டியது. யெதிர்க்கக்கூடிய ஊகத்திர்க்கு நார்ட்டன்துரை அவர்களுடையபுத்தகத்தின் 375-வது பக்கம் 717-வது பிரிவில் ஒரு சாப்தாயெழுதப்பட்டிருக்கின்றது. அதைப்பார்த்தால் யெதிர்க்கக்கூடிய ஊகங்களுடைய சுவபாவம் சிலது தெரியும். அதாவது,

List of rebuttable presumptions, of the New-York civil code as contained in Mr. Norton's work on Evidence.

1. எந்த மனிதனும் குற்றத்தையாவது தப்பையாவது செய்யாதவனென்றும்,

2. ஒரு அக்கிரமமான காரியம் செய்யப்பட்டால் அது ஒரு அக்கிரமமான யெண்ணத்துடன் செய்யப்பட்டதென்றும்,

3. ஒருமனிதன் தானாகவே ஒரு காரியத்தைச்செய்தால் அதின்பலன் பலானதாகவிருக்குமென்று உத்தேசித்தேசெய்தானென்றும்,

4. எந்தமனிதனும் தனக்குசம்பந்தமான காரியங்களை சகஜமான சாக்கிரதையுடன் பார்த்துக்கொள்ளுகிறானென்றும்,

5. மனதறிந்து ஒளித்த ருசுவானது வெளிக்கு வந்தால் மறைத்தவனுக்கு விரோதமாகவிருக்குமென்றும்,

6. தாழ்த்தியான ருசுவைக்கொண்டு வருவதுனாலே உத்தமருசுவந்தால் விரோதமாகவிருக்குமென்றும்,

7. ஒருவனுக்கொருவன் ஒருவார்த்தையும் சொல்லாமல் பணம் கொடுத்தால் கடன்கொடுக்க வேண்டியிருந்தபணத்தைத் திருப்பிக்கொடுத்தானென்றும்,

8. அப்படியே ஒருவன் மைற்றொருவனுக்கு ஒரு பதார்த்தத்தைக்கொடுத்தால் அது வாங்கிக் கொண்டவனுக்குச் சொந்தமென்றும்,

9. கடன்வாங்கினவன் யெழுதிக்கொடுத்த சீட்டு அவனிடத்தில் ஒப்பிவிக்கப்பட்டால் அதற்காக கொடுபடவேண்டிய பணம் கொடுபட்டுப் போச்சுதென்றும்,

10. பிந்திய தேதிகளின் குத்தகை, வாடகை, வருமானம், முதலியதைப்பற்றி றசீது வந்துவிட்டால் அதற்கு முந்திய காலங்களின் வருமானம் ஒழவடைந்து போச்சுதென்றும்,

11. எந்த சொத்தை ஒருமனிதன் அனுபவிக்கிருனே அது அவனுக்குச் சொந்தமென்று அவன் ஒப்புக்கொள்ளுகிருனென்றும்,

12. ஒரு சொத்தை ஒருவன் சொந்தக்காரன்போல் அனுபவிப்பதைக் கொண்டும், அதற்கவன் சொந்தக்காரன் யென்று பிரசித்தமாய் ஜனங்கள் சொல்லுகிறதைக் கொண்டும் அவன் அதற்குச் சொந்தக்காரன்யென்றும்,

13. பணத்தைக்கொடுக்கும்படியாவது யாதொரு சரக்கை யொப்பிவைக்கும்படியாவது கண்டு ஒருவன்பேருல் வந்த உண்டிகையானது அவனிடத்திலேயே யிருந்தால், அதர்க்காக அவன் அந்தப்படிபணத்தைக் கொடுத்தோ, சரக்கை யொப்பிவைத்தோ சரிசொல்லிப்போட்டானென்றும்,

14. சர்க்கார் உத்தியோகத்தை நடத்திக்கொண்டுவருகிற ஒருமனிதன் கிரமமாக அந்த உத்தியோகத்திர்க்கு நியமிக்கப்பட்டிருக்கிருனென்றும்,

15. உத்தியோகத்தைச்சார்ந்த கடமைகள் யெல்லாம் கிரமமாக நடத்தப்பட்டிருக்குதென்றும்,

16. எந்ததேசத்திலுமிருக்கின்ற யாதொரு கோர்ட்டார் அல்லது ஜட்ஜீ அவர்களுடைய அதிகாரத்தை நியாயமான விதமாய் நிறைவேற்றிவருகிறார்களென்றும்,

17. ஒரு சூடிசியால் ரிகார்ட்டானது முடிவானதாகயிரு விட்டாலும், கட்சிக்காரர்களுடைய பாத்தியங்களை சரியாய்ச்சொல்லியிருக்குதென்றும்,

18. சூரிகள் முன்பாகவும் தர்மகர்த்தர் முன்பாகவும் கொடுபட்ட வழக்கிலிருக்கின்ற எல்லாவிவாதங்களும் அவர்களிடத்தில் சொல்லப்பட்டுதென்றும், அவர்களால் தீர்மானிக்கப்பட்டுதென்றும்,

19. மனிதர்களுடைய யெல்லாவியாபாரங்களும் கிரமமாயும் நாணயமாயும் நடந்துதென்றும்,

20. வியாபாரத்தில் வழக்கமாய்ச் செய்யப்படவேண்டிய காரியம் செய்யப்பட்டுதென்றும்,

21. ஒவ்வொரு உண்டிகையும் பணம்பத்திக்கொண்டே யெழுதப்பட்டுதென்றும்,

22. ஒரு உண்டிகையானது எந்தவிடத்தில் எந்தகாலத்தில் பிறந்ததாக அதில்க் கண்டிருக்கின்றதோ அதேவிடத்தில் அதேகாலத்தில் அது பிறந்துதென்றும்,

23. ஒவ்வொரு ஆதரவிலும் நிஜமாக தேதிபோடப்பட்டிருக்குதென்றும்,

24. கிரமமாக மேல்விலாசம் போடப்பட்டு தபாலில் போடப்பட்ட லெட்டருனது, தபால் போகும்காலத்துக்குள் போய் சேர்ந்திருக்குதென்றும்,

25. ஒருவனுடைய பேர் அடையாளத்தைக் கொண்டு தேகத்தின் அடையாளம் ஊகிக்கப்படுமென்றும்,

26. ஏழு வருஷம்வரைக்கும் இருப்பிடம் தெரியாமல் போனமனிதன் இறந்தானென்றும்,

27. பெரிய "டிட்ச்" யென்கிற பத்திரமாகவிருந்தாலும் இருபது வருஷம் சும்மாயிருந்து விட்டால் தீர்ந்து போச்சுதென்றும்,

28. ஒருகாரியம் நடந்தது சரியென்கிற அல்லது நிசமென்கிற நம்பிக்கையுடன் ஒருவன் சாடையாக யிருந்துவிட்டால் பின்பு அந்தகாரியம் கிரமமானதென்றும்,

29. ஒவ்வொரு காரியமும் காலசக்கிரத்தின் சகஜமான கெதிப்படிக்கிம் ஜனங்களுடைய சகஜமானவாடிக்கைப்படிக்கிம் சம்பவித்திருக்குதென்றும்,

30. கூட்டாளிகளாக வேலைபார்ப்பவர்கள் கூட்டைக்குறித்து கிரமமான ஏர்ப்பாடுகள் செய்து கொண்டுவிட்டார்களென்றும்,

31. பர்த்தாவாகவும் பத்தினியாகவும் நடந்துவந்த மனிதர்கள் கிரமமான விவாகம் செய்துகொண்டார்களென்றும்,

32. கொலை தவிர மைற்ற பெருங்குற்றத்தைச் செய்ததில் பர்த்தாவுடன் சேர்ந்து குற்றம் செய்த பத்னியானவள் அதை அவனுடைய ஆக்கினையின் பேரில்ச் செய்தாளென்றும், ஆனதால் குற்றம் செய்ய அவளுக்கு உத்தேசமில்லையென்றும்,

33. கிரமமாய் விவாகமான பின்பு, பங்தி போஜனத்திலிருந்தாவது, படுக்கையிலிருந்தாவது, தள்ளப்பட்டிராத பத்தினிக்கிப் பிறந்த குழந்தையானது, நிர்தோஷமானதென்றும்,

34. நடந்து கொண்டே யிருப்பதாக ஒருதடவை ருசுவாகிவிட்ட சங்கதியானது, அதின் சுவபாவத்திற்குத்தக்க அவ்வளவு நாள் வரைக்கிம் நடந்து கொண்டே யிருந்துதென்றும்,

35. லாப்படிக்கே யாவரும் நடக்கின்றார்களென்றும்,

36. 30 வரு க்கு மேல்பட்ட ஒருதெஸ்தவேசின் ஷரத்துக்கனுசரணையாய், அதில் சம்பந்தப்பட்டிருந்த யாவரும் நடந்துவந்தும், அந்த தெஸ்தவேசு கெட்டிசெய்யப்பட்டிருந்த விடம் பூர்ணமாய் நம்பிக்கையுள்ளதாயு மிருந்தால், அந்த தெஸ்தவேசு நிஜமென்றும், (Stark 521 முதல் 524 வரைக்கிம்.)

37. அச்சிட்டுப் பிரசித்தஞ் செய்யலான ஒரு புஸ்தகமானது, "சர்க்கார் உத்தரவின் பேரில் அப்படிசெய்யப்பட்டுதெ"ன்று அதில்கண்டிருந்தால், அது அந்தப்படி அச்சிட்டு பிரசித்தஞ் செய்யப்பட்டுதென்றும்,

38. ஒரு புஸ்தகமானது "அது பிறந்ததேசத்தின் நியாயாதிபதிகள் தீர்மானித்த கேசுகளைப் பற்றிய றிபோர்ட்டு அடங்கிய புஸ்தகமெ"ன்று அதில் கண்டிருந்தால், அந்த கேசுகளைப்பற்றி அதுசரியான றிபோர்ட்டு யென்றும்,

39. ஒரு ஸ்தாவர சொத்தை தடங்கலன்றியில் 20 ஷ காலம்வரைக்கிமாவது அதற்கு மேல்பட்டாவது, உடையவனென்பவனுக்குவிரோதமாக மைற்றொருவன் அனுபவித்தால், அந்த சொத்தையவன் கிரமமான பத்திரங்கள் மூலமாய் அனுபவிக்கிறானென்றும்,

40. ஒருபோஷகன், தர்மகர்த்தாமுதலானவன் தன் விசாரணையிலிருக்கின்ற சொத்தில் யெதையாவது யாருக்காவது விடகடமைப்பட்டிருந்து, அதைப்பெற்றுக்கொள்ளவேண்டியவனுடைய பாத்தியமானது பூர்த்தியாவதர்க்கு, அந்த சொத்து அவனுக்கு அந்தகாலத்தில் கிடைத்துமிருக்கவேண்டியிருந்தால், அந்தசொத்து அவனுக்கு அந்தகாலத்தில் விடப்பட்டுப்போச்சுதென்றும்,

41. ஒரு நிலமானது அதர்க்குடையவனுடைய சம்மதியின்பேரிலாவது, அவனதின்பேரில் சுவதந்தரபாத்தியம் கொண்டாடாமையினாலாவது, பொதுவாய் ஜனங்கள் அதை ஸ்மசான பூமியாக உபயோகப்படுத்திக்கொண்டு தடையன்றியில் 10 ஷ காலம் அனுபவித்துப்போட்டால், அந்தகாரியத்திர்க்காக அவனந்தபூமியை ஜனங்களுக்கு சமர்ப்பணம்செய்து விட்டானென்றும், ஊகிக்கப்படும்.

Presumption in favor of innocence.

§ 255. எந்தமனிதனும் குற்றம்செய்யவில்லையென்று ஊகிக்கப்படுவான். குற்றம்செய்ததாகச் சொல்லுகிறவன் ருசுப்படுத்தவேண்டும். ஒரு சுமாரும் குற்றம் கைதிபேரில் ருசுவாகிறவரைக்கும், குற்றம்செய்ததாக சொல்லப்படுகிற சங்கதிகளை யெதிர்க்கும்படி கைதியை அழைக்கக்கூடாது. ஆனால் குற்றத்தின் சுவபாவத்தையும், கிடைத்திருக்கின்ற ருசுவின் யோக்கியதையையும், அனுசரித்துச் சொல்லவேண்டியதெப்படியென்றால், குற்றமானது எவ்வளவு பெரிதாயும், குற்றம் நடந்திருக்குமாவென்கிற ஏஷியம் துர்பெலமாயு மிருக்கின்றதோ, அதர்க்குத்தக்கபடி அவன்பேரில் முதலில் உண்டாகிற குற்றஸ்தாபனம் அதிகபெலமாக யிரு

க்கவேண்டும். ஆனால் குற்றம் மெத்தவும் திருப்தியாய் ருசுவாகிவிட்டால் குற்றஞ்செய்யவில்லையென்கிற ஊகத்தையுபயோகிக்கக்கூடாது. (B-327-Stark 75-753.)

§ 256. ஒவ்வொரு மனிதனும் லா-ப்படிக்கி தான்செய்யவேண்டியகாரியங்களைச் செய்துவிட்டதாக எண்ணப்படுவான். ஜட்ஜிகளும்சூரிகளும் பப்ளிக்காரியங்களில் எதையும் நிமித்தமில்லாமலாவது, கூஷாத்திரமாயாவது செய்ததாக எண்ணப்படமாட்டார்கள். (B-329-B-L-M-847.) மோசமாவது, வஞ்சனையாவது, அக்கிரமமாவது நடப்பதாக ஊகிக்கப்படமாட்டாது. (B-L-M-668.) எந்தக்குழந்தையும் தர்மபத்னிகளின் வம்சமென்றும், வைப்பாட்டிவம்சம் அல்லவென்றும், எந்தமனிதனும் மதவிஷய ஞானமாவது, தைவபக்தியாவது இல்லாமலிருக்கவில்லையென்றும், எந்தமனிதனுடைய வாக்குமூலமும் நிஜமெனறும், (B-330-முதல் 333-வரைக்கும்) சொத்தையனுபவிப்பவன் பாத்தியத்துடன் அனுபவிப்பதாகவும் ஊகிக்கப்படும். (B-L-M-852) ஒரு ஆபீசைச்சார்ந்த யெல்லாக்காரியங்களும் கிரமமாகச் செய்யப்பட்டிருக்குதென்று ஊகிக்கப்படும். (N - 685 Stark 757.) Presumption in favor of right.

§ 257. ஒரு ஸ்தாவரசொத்தை யொருவன்தான் நேராகவாவது, தனக்காக குத்தகை, வாடகை, வாரம்முதலானதர்க்காக அன்னியர்மூலமாகவாவது அனுபவித்துவந்தால் அந்த சொத்தில் அவனுக்கு பரிபூர்ணமானபாத்தியமிருப்பதாக ஊகிக்கப்படும். (Stark 74.) அந்த அனுபவம் எத்தனைநீண்டதாகவும் நிருக்ஷேபகரமாயுமிருக்கின்றதோ அத்தனை அனுபோகஸ்தனுக்கு அதிலிருக்கும் பாத்தியம் விலையுயர்ந்ததாக விருக்கும். நீண்டகாலத்திய அனுபவவிஷயத்தில் அதர்க்காக ஆதியில் கிரமமான தெஸ்தவேசுமூலமாய், அந்தஸ்தாவரசொத்து அனுபோகஸ்தனுக்குக் கிடைத்துதென்றும், ஆனால் நாள்ச்சென்றுபோய்விட்டதால் அந்த ஆதரவு போக்கடிக்கப்பட்டுப் போச்சுதென்றும், ஆனத்துனல் அவனுடைய பாத்தியம் கொஞ்சம்கூடக் குறையமாட்டாதென்றும் ஊகிக்கப்படும். (B-347-349.) ஒரு ஸ்தாவரம் அந்தப்படி நீண்டநாள் அனுபவத்திலிருந்தும் மத்தியில் யெதாவது ஜோராவாரியினலாவது தப்பு நடவடிக்கையினு Presumption from posession.

லாவது அந்த நிலம் சுவல்பதினம் நீண்ட அனுபவக்கார னிடத்திலிருந்து வெளியில்போயிருந்தாலும் அது அவ னுடைய அனுபவத்தை அழிக்கமாட்டாது. (B-347-355.)

Presumption from posession of Highways by the Public.

§ 258. ஒருவனுடைய நிலத்தின்மேலே ஜனங்கள் நீண் டகாலம்வரைக்கும் வழியாக நடந்துகொண்டிருந்தார்களா னால், அந்த நிலத்தை அதின்சொந்தக்காரன் ஜனங்களுக்கு இனமாய் சமர்ப்பிவித்துப்போட்டதாக ஊகிக்கப்படுவான். அவன் அந்த நிலத்தை துரந்துபோட்டுவிட்டு அதில் ஜனங் கள் நடக்கும்படிவிட்டுவிடுவதினால், அதை ஜனங்களுக்குக் கொடுத்துவிட அவன் உத்தேசம்செய்ததாகவும் ஊகிக்கப் படுவான். ஆனால் சொந்தக்காரன்சொல்வதில் தனக்கு இஷ் டமானவரைக்கும் ஜனங்கள் நடக்கும்படியாயும் மற்றகால த்தில் கூடாதென்றும் தான் உத்தேசித்ததாக சொல்வானே யானால், அந்த உத்தேசத்தை உறுதிப்படுத்த கடைசி பட்ச த்தில் அவன் அந்தவழியை ஒருவருஷத்திர்க்கு ஒருதடவை ஒருதினமாவது கிரமபாத்தியத்துடன் அடைத்திருக்கவே ண்டும். இல்லாவிட்டால் கூடாது. ஒரு நிலத்தின் நடப்பு பாத்தியம் ஜனங்களுக்கு இருக்குதென்று சொல்லவேண்டு மானால் கடைசிபட்சம் ஆறுவருஷமாவது அதை ஜனங்கள் அனுபவித்திருக்கவேண்டும். (B-367.)

Posession of ways by a single Individual.

§ 259. ஒருவன் தன்னுடையவீட்டுக்காவது அன்னியா ளுடைய நிலங்களாற் சூழப்பட்டு மத்தியிலிருக்கின்ற வய லுக்காவது, அன்னியாளுடைய நிலத்தின்பேரிலேயே நட ந்துக்கொண்டிருக்கவேண்டிய ஜரூரிருந்து அந்தப்படி போ ய்க்கொண்டிருந்தால், அப்படி நடப்பதை நிலத்துக்கு உடையவன் தடுக்கக்கூடாது. ஏனென்றால், ஒரு நிலத் தை ஒருவன் மைற்றொருவனுக்கு விற்றால் எந்த வழி முதலானதுகள் இல்லாவிட்டால் அந்தக்கிரய சொத்தை வாங்கினவன் அனுபவிக்கக் கூடாதோ அப்படிப்பட்டது களையும் கூடவே கிரயம் செய்ததாக யெண்ணப்படுவா னென்று லா-இருக்கின்றது. (B-L-M- 426.) பிரகிருத விஷயத்தில் அந்த வழிநடைக்குடையவன் அந்த வழிநடப் புடன் அதுபோய்ச் சேருகிறநிலத்தை வித்ததற்கு சமான மானவன் யென்றறிய வேண்டியது. (B-368.)

§ 260. சுவபாவம் அல்லது காலசக்கிர கெதியிலிருந்து அநேகம் முக்கியமான ஊகங்கள்கிடைக்கும். அதுகள் தற்செயலாய் சம்பவிக்கின்ற ஊகங்களைவிட உயர்ந்ததுகளாகும். லா-வானது சுவபாவத்தின் வரிசை அல்லது காலசக்கிர கெதியின் வரிசையை மிகவும் அதிகமாய் மதிக்கின்றது. (N-702.) சுவபாவத்தின் கோசாரமென்பது எதென்றால், மழைக்காலம் கோடைக்காலம் முதலானருதுக்களின்மாறல், சூரியசந்திராதிகளுடைய கெதி, இதுமுதலானதுகளை லா-தான்தானே கவனிக்கும். எப்படியென்றால், A யென்பவன் ஒருதினத்தில் சூரியஉதயம்முதல் அஸ்வமானம்வரைக்கிமாகிய 200 மணிநேரம் வரைக்கிம் தான் B யெடத்தில் சேவித்ததாயும், மணி 1-க்கு ரூபாய் 1-வீதம் தனக்கு சம்பளம் ரூபாய் 200 வரவேணுமென்றும், வழக்கிடுகிறான். இந்த சங்கதியை அவன் சாட்சிகளைக்கொண்டு ருசுப்படுத்தக்கூடாது. ஒருநாள் உதயம் முதல் அஸ்தமானம்வரைக்கிம் 12-மணி நேரம்மட்டு முண்டென்கிற நிஜம், லா-வுக்கு கெணித சாஸ்திர புஸ்தகத்துனாலும், பிரதி தினத்தின் அனுபவத்துனாலும், நிச்சயமாய் தெரியும். ஆனதால், அந்த வாதி வழக்குப் பொய்யென்று ஊகித்துக்கொள்ளும். அப்படியே மனிதனுடைய உடல்கூர்களும் லா-வுக்கு தெரியுமானதால் தகுந்தவயசில் மனிதனுக்குப் பிரஜாவிருத்திசெய்கிற சக்தியும், விவேகம்முதலானதும், இருப்பதை லா-வே தெரிந்துகொள்ளும். இந்த நிமித்தத்தால் தான் ஒருமனிதன் சித்தசுவாதீனமில்லாமல்இருக்குறான் என்கிறகட்சியை சொல்லுகிறவன் ருசுப்படுத்துகிற வரைக்கிம், மனிதன் தகுந்த விவேகத்துடன்இருக்குறானென்றேலா-ஊகித்துக்கொள்ளும். மேலும் புருஷர்கள் 14-வயதுக்குள் ஸ்திரிசம்பாஷணஞ்செய்யத்தகாதவர்களென்றும், புருஷர்கள் 14-வயதுக்குள்ளும் ஸ்திரிகள் 12-வயதுக்குள்ளும் விவாகஞ்செய்துகொள்ளச் சம்மதிக்கக்கூடாதென்றும்லா-ஊகித்துக்கொள்ளும். * (B-380.)

Presumption from the course of Nature.

§ 261. ஒருமனிதன் சாமான்னியமாய் தன் குழந்தைகளிடத்தில் பட்சமாயிருப்பானென்பது சுவபாவத்திர்க்கடுத்ததாகையால் ஒருபிதாவாவது, மாதாவாவது, குழந்தைக்

Money paid to a child by parents, presumed a gift, not a loan.

* இந்தநூல் இங்கிலிஷ்காரர்கள் தவிரமற்றவர்களுக்குபயோகப்படுமென்று மெயனக்குத்தோற்றவில்லை.

கிப் பணம்கொடுத்தால் அது இனுமென்று நினைக்கப்படுமே யொழிய கடனென்று ஊகிக்கப்படமாட்டாது. (381-ஷி.)

Usage of trade.

§ 262. ஒருவிடத்திலிருந்து சரக்குகளை மைற்றொருவிடத்திர்க்கு கொண்டுபோகிறதாக சம்பளத்துக்கு ஒப்புக்கொண்டவன், அதுகளை அந்தவிடத்தில் கொண்டுபோய் ஒப்பிவிக்க கடமைப்பட்டிருக்கவேண்டும். தீவட்டிக்கொள்ளை முதலானதால் அந்தசரக்குகள் வழியில் போக்கடிக்கப்பட்டுப், போனதாக சொன்னாலும்கூட அந்தசரக்குகளின் விலையை உத்தரவாதம்செய்ய அந்தசம்பளக்காரன் பாத்தியப்படவேணும். ஆனால் அந்த நஷ்டம்தைவகிருத்தியத்தாலாவது, மகாராணியவர்களுடையயெதிரிகளாலாவது சம்பவித்திருந்தால், அந்த நஷ்டத்திற்கு அந்தசம்பளக்காரன் பாத்தியப்படவேண்டியதில்லை. பிசல், இடி, வெள்ளம், பூகம்பம் முதலானது தைவகிருத்தியமாம். எந்ததேசத்து ஜனங்கள், பிரிடிஷ் இராசாங்கத்தாருடன் வெளியறங்கமாய் யுத்தஞ்செய்கிறார்களோ, அவர்கள்தான் மகாராணியவர்களுடைய யெதிரிகளாவார்கள். (B-415 Stark-75-763.)

Presumption from the ordinary conduct of mankind and habits of society &c.

§ 263. பிறக்குடியாய் சாகுபடிசெய்ய விசேஷவியவஸ்தைகள் செய்துகொள்ளாமலே ஒப்புக்கொள்ளுகிறவன், "அசல் ஒப்பந்தம் கிரமமாய் சாகுபடிசெய்கிறேன்யென்றும், சாகுபடி யாரம்பிவிக்கவேண்டியகாலம் தேசவழக்கப்படியென்றும், உடையவன் சம்மதிக்கிறகாலம்வரைக்கும் சாகுபடிசெய்கிறேன்" யென்றும் சொன்னதர்க்கு சமமாவான். (B-387.)

§ 264. பிறக்குடியாக நிலத்தை சாகுபடி செய்ய ஒப்புக்கொண்டவன் செவ்வையாக செய்ய சம்மதித்தவனாவான். (N-705.)

§ 265. சேவுகத்திற்கு அமிருகிறவன் சேவிக்கவேண்டிய காலம்குறித்துக் கொள்ளாவிட்டால், தேசவழக்கப்படி உள்ளகாலம்வரையில் சேவிக்க சம்மதித்தவனாக யெண்ணப்படுவான். இந்த தேசத்தில் மாதக்கணக்காய் அமிருகிறவழக்கம். (N-706.)

§ 266. கூட்டுவியாபாரத்தில் எந்தக்கூட்டாளியின்பங்கு எவ்வளவு யென்கிறவியவஸ்தை ஏற்படாவிட்டால் எல்லா கூட்டாளிகளும்சமபாத்தியஸ்தர்களென்று ஊகிக்கப்படும். (B-391.)

§ 267. சபர்போன ஒரு கப்பல் என்னமாச்சுதென்கிற விபறம் ஒன்றும் யுக்தமானகாலத்திற்குள் வராவிட்டால், அது கடலுக்குள் முழுகிப் போச்சுதென்று ஊகிக்கப்படும். (N-701.)

§ 268. ஒரு குடியானவன் ஒரு குறித்தவருஷத்துக்கு குத்தகையை தீர்மானித்துக்கொண்டு கெடுகிடந்த பின்னும் யாதொரு புதுவியவஸ்த்தை செய்துகொள்ளாமல் நிலத்தை அனுபவித்தால்,தீர்மானமான வருஷத்தின் வீதப்படிக்கிகொடுக்கச் சம்மதித்தவனென்று ஊகிக்கப்படுவான். (B-387.)

§ 269. எந்த காரியமாவது ஒருவிதமாயிருப்பதாக ஒரு தடவை ருசுவாகிவிட்டால், அந்த காரியம் வேறைவிதமாகி விட்டுதென்று ருசுவாகிறவரைக்கும் அது ருசுவான முன் அந்தஸ்திலேயே யிருப்பதாக ஊகிக்கப்படும். (Stark 760.) வியபிசாரம் ருசுவாச்சுதானல், அந்த ஸ்திரியும் புருஷனும் ஒரேயெடத்தில் வசித்திருக்கிறவறையில், அந்த குற்றம் நடந்து கொண்டேயிருப்பதாக ஊகிக்கப்படும். (B-392.)

Presumption of the continuation of things in the state in which they have once existed.

§ 270. உயிருடனிருந்ததாக தெரியவந்த ஒருமனிதன் எறந்துபோனதாக ஊகிக்கப்படமாட்டான். ஆனல் ஒருவன் தேசாந்தரம்போய், யேழுவருஷம் வரைக்கும் அவனிருப்பிடம் தெரியாவிட்டால், அவன் யெறந்ததாக ஊகிக்கப்படும். இப்படிப்பட்ட ஊகம் இந்துக்கள் விஷயத்தில் 12 ஷ க்குப்பின்னும், மகமதின்விஷயத்தில் 90 ஷ க்குப்பின்னும் உண்டாகும். (N-706.)

Death not presumed.

§ 271. அநேகம்பேர் ஒரேகாலத்தில், கப்பல் ஒடைந்ததினலாவது, இடி, பூகம்பம், முதலானதாலாவது, செற்றுல், அதிலும் எவன்முதலில் செற்றுனென்கிற விவாதம்வந்துவிடுகிறபொழுது எவன் அதிகதுர்பலமுள்ளவனுகவிருந்தானே அவன்முதலில் செற்றுனென்று ஊகிக்கப்படும். (N-706.)

In common calamity, the weaker presumed to have died first.

§ 272. எவனும் தான் கொண்டுவரவேண்டிய ருசுவைக் கொண்டுவராவிட்டாலும், எதிரிகள் கொண்டுவருகிற ருசுவை வரவொட்டாமல் தடுத்து அழிம்புசெய்தாலும், அவன் கட்சிக்கிவிரோதமாய் யெல்லா ஊகங்களும் செய்யப்படும். (B-L-M-843.) ஒருவன் தன் நகையை விலைக்காக ஒரு வர்

Presumption against spoliation of Evidence.

த்தகனிடத்தில்கொடுத்தான். அவன் அதிலிருந்த நல்லறத்தினங்களை யெடுத்துக்கொண்டுவிட்டு நகையைவாங்கத்தனக்குச் சம்மதியில்லையென்று திருப்பிக்கொடுத்துவிட்டான், றத்தினங்களின் கிரயம்வரவேண்டுமென்று உடைமைக்காரன் செய்தவழக்கில், அந்த றத்தினங்கள் சுவல்பவிலைமட்டும் பொறுமென்று வர்த்தகன்சொன்னான். ஆகிலும் அதுகளை கோர்ட்டில்கொண்டுவராமல் அவன் வேறைவாதம்சொல்லுகிறவனாக்கும், அந்த றத்தினங்கள் மிகவும் விலையுயர்ந்ததுகளென்று கோர்ட்டார் ஊகிப்போமென்றார்கள். (B-398.)

§ 273. கப்பல், தோணிமுதலானதுகள் ஓடாத ஆர்களின்கீழ்பூமியும்,மகாமார்க்கங்களுடைய பூமியும் அதுகளுக்கு அடுத்தபக்கத்திய நிலக்காரர்களுக்குச் சொந்தமென்று ஊகிக்கப்படும். அந்த ஆர்களும் ரோட்டுகளும் ஆதியில்யேர்ப்பட்டபொழுது அந்த அடுத்தபக்கத்திய நிலக்காரர்களுடைய நிலத்திலிருந்து இந்தநிலங்கள் யெடுத்துக்கொள்ளப்பட்டிருக்குமென்கிற ஊகத்தின்பேரில் இந்தவிதியேர்ப்பட்டுது. (B-411.)

Sea worthyness of a ship presumed.

§ 274. எந்தக்கப்பலுக்காக ஒருவன் (Insurance) "இன்சூரன்ச்" கொடுக்கிறானோ அந்தக்கப்பல் கடலில் சபர்செய்ய யோக்கியதையுள்ளதாகவிருக்குதென்று கூடமாய் அவன் ஜாமீன்கொடுத்ததின்பேரில் அந்தக்கப்பல் சபர்போனதாக ஊகிக்கப்படும். (B-407.)

§ 275. சுவபாவம், அல்லது காலசக்கிரத்தின் கோசாரத்திலிருந்து உண்டாகிற ஊகங்கள, தற்செயலாய் சம்பவிக்கிற ஊகங்களைவிட அதிகபெலமுள்ளதாகவிருக்கும். ஒரு மரத்தின் துண்டை ஒருவன் திருடினதாக வந்த குற்றவிஷயத்தில், அந்த மரம் பத்துமனிதனால் கூட அசைக்கக்கூடியதல்லவென்று ருசுப்படுத்துவதினால் அந்த குற்றத்தை யெதிற்கலாம். ஒரு பெலசாலியான மனிதனுடைய சொத்துகளை ஒரு துற்பெலமான மனிதனாவது, ஒரு பெண்குட்டியாவது பறித்துக்கொண்டதாக வருகிறவழக்கிலும், மகா காமினியான ஒரு ஸ்திரியை ஒருகிழவனாவது ஒரு ரோகியாவது ஜோருவாரியாய் கெடுத்ததாக வருகிறவழக்கிலும் அப்படியே யெதிற்கலாம். (B-321.)

§ 276. எந்த ஊகங்கள் மனிதர்கள்செய்கிற காரியங்களை சித்தியாகும்படிசெய்யுமோ அதுகள் உத்தம ஊகங்களாம். (322-ஷே.) Presumption giving validity to acts are favoured.

§ 277. எந்தமனிதன் அவன்பேரில் ஒரு சிவில் வழக்காவது கிரிமினல் வழக்காவது வந்திருக்குதென்று தெரிந்தும்,அதற்கு பெதல்சொல்லும்படியான சமயம் லா-வினுல் அவனுக்குக் கொடுக்கப்பட்டும் இருக்க அதைப்பற்றி யாதொருபெதலும் சொல்லாமல் மவுனமாக விருக்கிருனே அவன் தன்பேரில் சொல்லிய தகாதாவை ஒப்புக் கொள்ளுகிருன். (N-740.) Silence gives consent.

§ 278. எந்த ஊகத்தை உபயோகப்படுத்திக் கொள்ளும் பொழுதும், பின் நடந்தகாரியங்களைக் கொண்டு முன் நடந்தகாரியங்களை ஊகிக்கவேண்டும். உ-ம். ஒரு ஸ்திரியும் புருஷனும் யேகயோகக்ஷேமமாயிருப்பதைக் கொண்டு அவர்களுக்கு கிரமமான விவாகம் நடந்திருக்குமென்று ஊகிப்பதாம். (N-697.) From the posterior we presume the prior.

§ 279. முன் நடந்த காரியங்களைக்கொண்டு பின் நடக்கும்காரியங்களை ஊகிக்கலாம். உ-ம். A-யை கொலைசெய்து போடுவேனென்று B-சொன்னுன். பின்னும் கொஞ்சம் தினத்துக்குள் A-கொலைசெய்யப்பட்டுக் கிடக்கிருன். இதினுல் A-யை B-கொலை செய்திருப்பானென்று ஊகிக்கலாம். (N-697.) எப்பொழுதும் இவ்விதஊகம் முதலிற்சொன்ன ஊகத்தைவிட துற்பெலமென்று லா-நினைக்கிறது யெப்படியென்ருல், B-இவ்விதமாக சபதம்கூறியதைக்கேட்டுக்கொண்டிருந்த B-யினுடைய சத்ருக்களாவது,வேறையாராவது A-யை கொலை செய்திருக்கலாம். மைற்றொரு பட்சத்தில் B-அந்தவார்த்தைகளை வேடிக்கையாகவாவது A-யின் மனதில் அறட்டிமட்டும் உண்டாகும்பொருட்டாவது சொல்லியிருக்கலாம். ஆகையால் வருங்காலத்தில் நடக்கப்போகிற காரியத்தை விசேஷமாய் நம்பக்கூடாது. From prior acts the posteriorones are presumed.

§ 280. யாதொரு சங்கதி அல்லது காரியத்தின் அடியையும் நுனியையும் ஒருவன் ருசுப்படுத்திவிட்டால் மத்தியில் இருக்கவேண்டியயாவத்தையும்இருப்பதாக ஊகிக்கப்படும். (N-697.) உ-ம். ஒருநிலம் 1810 ஹு முதல் 1860 ஹு On the extremes being proved the intermediate things are presumed.

வரைக்கும் மிருசுடன் உன் அனுபவத்திலிருப்பதாக சொல்லுகிற கட்சியை ருசுப்படுத்த 1860 ஷு த்தில் உனக்குக்கிடைத்த பட்டாகச்சாத்துகளையும் 1810 ஷு த்தில் கிடைத்த பட்டாகச்சாத்துகளையும் நீ தாக்கல்செய்துபோட்டால் மத்தியிலிருக்கிறவருஷங்களில் யெல்லாம் மிருசுடன் நிலத்தை நீ அனுபவித்ததாக ஊகிக்கப்படும்.

PART IV.—பார்ட். ச.

Onus Probandi or Burden of proof.—ருசுபொறு.

Burden of proof, defined.

§ 281. கோர்ட்டுகளில் விவாதத்தில் வருகிற ஒவ்வொரு சங்கதியும் கட்சியும் ருசுவின்மூலமாய் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதையும் (இதின் 6-வது பிரிவு) அந்த ருசுவை அங்கிகரித்து மதிப்பதில் நியாயாதிபதிகள் சரியாக நடக்கவேண்டிய விதிகளையும், எதுகளைக்கொண்டு சங்கதிகளையும் கட்சிகளையும் ருசுப்படுத்தவேண்டுமென்பதையும், இதர்க்கு முன்சொல்லியாகிவிட்டுது. ஆனல் அந்தசங்கதிகளையும் கட்சிகளையும் ருசுப்படுத்தவேண்டியவன் யார்யென்பதைமட்டும் இதுவரைக்கும் சொல்லவில்லை. அப்படிக்கி சங்கதிகளை ருசுப்படுத்தும்படி ஒருவன்பேரில்விழும் கடமைக்கு ருசுபொறுவென்றுபெயர்.

What is to be proved.

§ 282. இந்தபுஸ்தகத்தின் 7-8-9-வது பிரகரணங்களில் கண்டசாஸ்திரம் சட்டம் முதலானதுகளின் சங்கதிகள்தவிர மற்றகட்சிகளாகிய, கட்சிக்காரர்கள் ஆய்ந்தோய்ந்த ஆலோசனையுடன் செய்துகொள்ளுகிற வியாபாரங்களையும் திடீலென்று நடக்கின்ற நடவடிக்கை முதலான யெல்லா சீவில் அல்லதுகிறிமினல் வழக்குகளின் சகலகட்சிகளையும் கட்சிக்காரர்கள் ருசுப்படுத்தவேண்டும். (இதின் 6-11.)

Proof to be confined to the issue.

§ 283. எந்தவழக்கிலும் விவாதத்திர்க்கு முக்கியமான அம்சங்களைமட்டும் ருசுப்படுத்தவேண்டுமேயொழிய முக்கியமில்லாத சங்கதியைக்குறித்து ருசு அங்கிகரிக்கக்கூடாது. உ-ம். A-யை B-ஜோருவாரியாய் அடித்தானென்கிறவழக்கில், குற்றஞ்செய்யவில்லையென்று யெதிர்வாதஞ்செய்கிற

பிறதிவாதியானவன், வாதிதான் முதலில் ஜோருவாரிசெய் தானென்று ருசுப்படுத்தக்கூடாது. (Stark 617.)

§ 284. முக்கியமல்லாத பயிண்டுகளை ருசுப்படுத்தக்கூடாதென்று லா-யிருந்தாலும், பெந்தசங்கதியானது விவாதப்படுகிற முக்கியசங்கதியைக்குறித்து ஒருயுக்தமான ஊகத்தைக்கொடுக்கும்படி யிருக்குமோ அதைக்குறித்து ருசு அங்கிகரிக்கலாம். (Stark 618.)

What collateral facts, inadmissible.

§ 285. ஒருமுக்கியமான விவாதசங்கதியில் அங்கிகரிக்கக்கூடாத சார்பானசங்கதி யெதென்றால் யெதானது ஒருகிராமம், கோயில், ஜமிந்தாரிமுதலானதில்மட்டும் வழக்கமுள்ளதாகயிருக்குமோ அதானது, மற்றொருகோயில், முதலானதில் அதேவழக்கமுண்டென்பதின் உண்மையை ஸ்தாபிக்க நேருனசங்கதியாகமாட்டாது. சார்பானசங்கதியாகும் ஆனதால் இவ்விதசார்பானசங்கதி அங்கிகரிக்கப்படமாட்டாது. (Stark 619.)

Who is to begin to prove.

§ 286. எந்தகட்சிக்காரனனவன், தன்னுடைய யெதிரி ருசுப்படுத்தத்தப்பிப்போனாலும், தான் ருசுப்படுத்தாவிட்டால் தன்வழக்கை யெழந்துபோவானோ, அவன்தான் முதலில் ருசுப்படுத்த ஆரம்பிக்கவேண்டும். (N-589.) அல்லது உபயகட்சிக்காரர்களும் ருசுப்படுத்தாவிட்டால் யெவனுடைய கட்சிகெட்டுப்போமோ அவன் ருசுப்படுத்தவேண்டும். ஒருபொதுவான விதியாக யெந்தவழக்கிலும் வாதி ருசுப்படுத்தவேண்டும். (B-261.) அல்லது உறுதிச்சொல் கட்சியை யெவன் யெதார்த்தத்தில் சொல்லுகிறானோ அவன் ருசுப்படுத்தவேண்டுமேதவிர மறுப்புச்சொல் கட்சியைச்சொல்லுகிறவன் ருசுப்படுத்தவேண்டியதில்லை. (N-586.) அல்லது எந்த கட்சிக்காரனனவன் விவாதப்படுகிற சங்கதிகளை ருசுப்படுத்தச் சக்தியுள்ளவனுகத்தோற்றுகிறானோ அவன் ருசுப்படுத்தவேண்டியது. (Stark 599-590.)

§ 287. எந்த வழக்கிலும் ஒரு கட்சிக்காரன் ஒரு கட்சியைச்சொல்லுகிறான், அதை அவனுடைய யெதிரி ஒப்புக் கொண்டுவிட்டால் அந்த ஒப்புதல்மூலமாக தன்கட்சியை யவன் ருசுப்படுத்தி போடலாம், அவன் ஒப்புக்கொள்ளாவிட்டால் அந்தக்கட்சியை சாட்சி ஆதரவு ஸ்தாவரம் முதலான யெதாலாவது ருசுப்படுத்தவேவேணும். (N-588.)

18

ஆனலப்படி தன் யெதிரி ஒப்புதல்யென்கிற வார்த்தைக் கித்தப்பர்த்தம் வராமலிருக்கும்படி சொல்லுகிறதாவது, யெந்தவழக்கில் ஒரோவாதியும் ஒரோபிரதிவாதியுமாக வருகின்ருர்களோ அதென்றறியவேண்டியது. இல்லாவிட்டால் A-க்கி நிஜத்தில் B-யினிடத்திலிருந்து சொத்துவறவேணுமென்று செய்கிறவழக்கில் A- தன் மனசுப்படி பிரதி துவனிக்கும்படியான ஒரு இஷ்டனுகிய C-யையும் பிறதிவாதியாகச்சேத்து வழக்கு செய்வான். A-யின் கட்சியாவத்தையும் C-பப்பளிக்கு கோர்ட்டில் ஒப்புக்கொள்வான். அந்த ஒப்புதலினுலே B-க்கி யாதொரு, பொல்லாங்குமுண்டாகக்கூடாது. (இதின் 15.) ஆகையால் ஒருவனைப்பாற்கிலும் அதிகம்பேர் பிரதிவாதிகளாக யிருக்கிறவழக்கில் ஒரு பிரதிவாதியினுடைய ஒப்புதலைக்கொண்டு வாதியினுடைய யெந்த கட்சியும் ருசுவானதாக அங்கிகரிக்கக்கூடாது. அல்லது யெத்தனை பிரதிவாதிகளிருந்தாலும் ஒருவன் ஒப்புக்கொண்டால் அந்த ஒப்புதலை ஒப்புக்கொண்டவன் மட்டிலாவது விரோத ருசுவாக யேற்றுக்கொள்ளலாமா கூடாதாவென்கிற சந்தேகம்வந்தால் அந்த ஒப்புதலை அங்கிகரிப்பது அந்தந்த வழக்கின் சுவபாவத்துக்குத் தக்கபடி அந்த ஒப்புதலை ஒப்புக்கொண்டவன்மட்டில் நல்லருசுவாக அங்கிகரிக்கலாம். (இதின் 85.)

Rules regulating the burden of proof.

§ 288. ஒரு பொதுவான விதியாக யெந்தவழக்கையும் வாதிதான் ருசுப்படுத்வேணும். ஏனென்ருல், பிறருடைய சோலிக்கிப் போகாமலிருக்கிற ஒருவனைக் கோர்ட்டுமுன்பாக வாதிதான் கொண்டுவருகிருன். ஆனதால் அவன் சொல்லுகுற கட்சி நிஜமாகயிருக்கலாமென்கிற ஒரு அபிப்பிராயத்தைக் கோர்ட்டாருடைய மனதில் உண்டாக்கிற வரைக்கிம் பிரதிவாதி சொல்லுகிற சங்கதிகளை ருசுப்படுத்தும்படி அவனை அழைப்பது தர்மமேயல்லா. ஆனதால் பிரத்தியானை நியாயஸ்தலத்தில் கொண்டுவருகிறவன் தன் கட்சியின் பெலத்தின்பேரிலும் தன் பட்சத்திய ருசுவின் தெளிவின் பேரிலும் தன் வழக்கை யாதாறப்படுத்த வேணுமேதவிற தன் யெதிரியின் துற்பெலத்தின்பேரிலாவது ருசுக்குறவின் பேரிலாவது வழக்கு கொண்டுவரக்கூடாது. (B-261.)

§ 289. உறுதிச்சொல் கட்சியும் மருப்புசசொல் கட்சியும் காரியத்தில் உறுதிச்சொல் கட்சியாகவும் மருப்புச்சொல் கக்ஷியாகவும்யிருக்கவேண்டுமே யொழிய உருவத்தில் அப்படி யிருந்தால்அந்தப்பெயர்அதுகளுக்குவராது. ஒருவன்யெதார்த்தத்தில்ருசுபொளுவை நீக்கி கொள்வதற்காக தான்சொல்ல வேண்டிய உறுதிச்சொல்கட்சியை உருவத்தில்மருப்புச்சொல் கட்சியாகச் சொல்வான். அந்த சமயங்களில் மிகவும் அதிககெவனத்துடன் நிதானிக்கவேண்டும். யென் வண்டிக்கிசாயம்வைத்துக் கொடுப்பதாக ஒப்பந்தஞ்செய்தவன் அப்படி செய்யவில்லையென்று நான் ஒருவன்பேரில் பிராதுசெய்தால் இதில் ருசுவாகக் கூடாதவிதமான மருப்புச்சொல் கட்சியொன்றுமில்லை இருப்பதாகஉருவத்தில் தோற்றுது. ஆனல் இது காரியத்தில் உறுதிச்சொல் கட்சியே தவிறவேறில்லே. 1862 வூ ஜனவறி மீ 10-யில் சென்னபட்டணத்தில் A-யென்பவன் திருடினதாகவருகிற ஒருவழக்கில் அந்ததேதியில் அவன் ஷை யூரிலிருக்க வில்லையென்கிற எதிற்வாதம் வந்தால், அந்ததேதியில் அவன் வேறை யெடத்திலிருந்தான்யென்று ருசு செய்வது சாத்தியமாகையால் இது உருவத்தில் மருப்புச்சொல் கட்சியும் காரியத்தில் உறுதிச்சொல் கட்சியுமாம். (265 ஷை) மருப்புச்சொல்கட்சி சொல்லுகிறவனே ருசுப்படுத்தச்சொல்லக்கூடாதென்று சிலர் நினைப்பார்கள். உருவத்தில் அப்படியும் காரியத்தில் உறுதிச்சொல்லாயுமிருக்கிற கட்சியைசொல்லுகிற கட்சிக்காரன் ருசுப்படுத்தவேண்டும் (இதின் 56-வது பிரிவு N-588.)

§ 290. ருசுபொளு யெவன்பேரில் யிருக்குதென்பதை தீர்மானிக்கும்பொழுது கீழாக சொல்லுகிற சில சூத்திரங்களை யோசித்து அதுகளின்படி தீர்மானிக்கவேண்டும். அவைகளாவன, 1-விவாதசொத்தை அனுபவிக்கிறவனுடைய அந்தஸ்து நல்லது, 2- பிரதிவாதியின் அந்தஸ்து நல்லது, (N-588.) 3- யெந்தகட்சிக்காரன் காரியத்தில் ஒரு உறுதிச் சொல் கட்சியைச்சொல்லுகிறுனே அவன் அதை ருசுப்படுத்தவேண்டும். (B-266.) 4- ஒரு அகிருத்தியத்தைச் செய்கிறவனுக்கு விரோதமாய் யெல்லா ஊகங்களும் செய்யப்படும். (B-L-M-843.) 5- எதானது ஒருவனுடைய ஞானத்தில் விசேஷமாகயிருக்கின்றதோ, அல்லது யெதானது அவ

னுக்குத் தெரியுமென்று நினைக்கயெடமிருக்குதோ அதைச் சொல்லுகிறவன் அதை ருசுப்படுத்தவேண்டும். (Stark 590.) 6- யெதிர்க்கக்கூடிய லாவினுடையவும், சங்கதிகளுடையவும் ஊகங்களை கோர்ட்டார்செய்துகொண்டு அந்த ஊகங்களை யெதிர்க்கும்படி ஒரு கட்சிக்காரனுக்கு கோர்ட்டார் உத்தரவு கொடுக்கலாம். (B-267.)

ERRATA.—பிழைதிருத்தல்.

இந்தப்புஸ்தகத்தின் 6-வது பக்கம், 28-வது வரியில், 17-வது எழுத்துக்குப்பின் இருக்கின்ற (ஆனல் 6-வது) யென்கிறவிடத்தை (ஆனல் இதுகள்தவிர மற்றும் 6-வது) என்று படித்துக்கொள்ளவேண்டியது.

இதின் § 21-வது பிரகரணத்தினுடைய மார்ஜினில் (very thing) என்றிருக்கின்றது. அதை (every thing) என்று படித்துக்கொள்ளவேண்டும்.

இதின் 30-வது பக்கம் 23-வது வரியில் (Section 1.—பிரிவு க.) என்று போட்டிருப்பதை (CHAPTER III—அத்தியாயம் ௩.) என்று படித்துக்கொள்ளவேண்டியது.

இதின் 72-வது பக்கத்தில் 23-வது வரியின் மார்ஜீனில் யிருக்கிற (of) யென்கிற யெழுத்து இல்லையென்று நினைக்கவேண்டியது.

இதின் 71-72-வது பக்கங்களின் மார்ஜீனில் (prevelege) யென்று போட்டிருப்பதுகளை யெல்லாம் (privilege) யென்றுபடித்துக்கொள்ளவேண்டியது.

முற்றிற்று.